மதிவளர் மாலை

Checked 1981

ஒன்பதாம் வகுப்பு

பதிப்பாசிரியர் :
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
M.A., L.T., M.O.L. Ph.D.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை-1.

மதிவளர் மாலை

ஒன்பதாம் வகுப்பு

[திருத்திய பதிப்பு]

பதிப்பாசிரியர் :

டாக்டர் மா. இராசமாணிக்கனார்,
M.A., L.T., M.O.L., Ph.D.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை-1.

காபிரைட்]

[விலை ரூ. 2

முதற் பதிப்பு—1965
திருத்திய பதிப்பு—1966

Paper used 15·4 Kgs. D/D. White Printing

[Approved by the Text-Book Committee, Madras, for class use, Detailed Study, vide page 55, of the Supplement to Part II—Section 3 of the Fort St. George Gazette, dated 18-5-1966.]

Printed at Sree Ramaprasad Press, 56, Broadway, Madras-1.

முகவுரை

மதிவளர் மாலை என்னும் பெயர் கொண்ட இந்நூல் ஒன்பதாம் வகுப்பு மாணவர்கட்கு உரியது. இது கல்வித் துறையினர் அண்மையில் வெளியிட்டுள்ள (Syllabus, dated 7th July 1965) புதிய பாட இயலின்படி தொகுக்கப்பெற்றது.

செய்யுட் பகுதியில் ஒவ்வொரு பகுதியின் ஈற்றிலும் அருஞ்சொற் பொருள், இலக்கணக் குறிப்பு, கேள்விகள், பயிற்சி என்பன தரப் பட்டுள்ளன.

உரைநடைப் பகுதியில் பதினாறு பாடங்கள் பாடத்திட்டத்தை ஒட்டித் தரப்பட்டுள்ளன. எழுத்தாலும் பேச்சாலும் தமிழ்த் தொண்டு செய்துவருகின்ற புகழ்பெற்ற பேராசிரியப் பெருமக்களின் கட்டுரை கள் பல, உரைநடையில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடத் தின் ஈற்றிலும் அருஞ்சொற்பொருள், கேள்விகள், பயிற்சி என் பவை இடம் பெற்றுள்ளன.

சுருங்கக் கூறின், இத்தொகுதி நூல் ஒன்பதாம் வகுப்பு மாண வர்க்குத் தமிழ் அறிவையும், தமிழ் ஆர்வத்தையும் சிறந்த முறையில் ஊட்டவல்லது என்று கூறலாம். கல்வித் துறையினர் இதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு வேண்டுகிறேன்.

தங்கள் பாடல்களையும் உரைநடைப் பகுதிகளையும் இத்தொகுதி யில் சேர்த்துக்கொள்ள இசைவு தந்துள்ள தமிழ்ப் பெரியார்களுக்கு என் உளமார்ந்த நன்றி உரியது.

மா. இராசமாணிக்கனார்

உள்ளுறை

பா மாலை

எண்	பொருள்		பக்கம்
I.	**வாழ்த்து**		
1.	கடவுள் வாழ்த்து	...	1
2.	மொழி வாழ்த்து	...	1
3.	நாட்டு வாழ்த்து	...	2
II.	**அறவுரை**		
1.	திருக்குறள்	...	4
2.	சிறுபஞ்சமூலம்	...	13
3.	ஏலாதி	...	15
III.	**தொடர்நிலைச் செய்யுள்**		
1.	மணிமேகலை	...	18
2.	பெருங்கதை	...	24
3.	பெரிய புராணம்	...	33
4.	வில்லி பாரதம்	...	41
5.	பாஞ்சாலி சபதம்	...	50
IV.	**பலசுவை**		
1.	வருணனை	...	53
2.	சீட்டுக் கவி	...	55
3.	கலைசைச் சிலேடை வெண்பா	...	57
4.	சிறு நூல்கள் :		
	(1) நந்திக் கலம்பகம்	...	58
	(2) மீனாட்சியம்மை குறம்	...	59
	(3) காந்தி பிள்ளைத்தமிழ்	...	60
5.	வழிபாட்டுப் பாடல்கள்	...	62

உரை மாலை

எண்	பொருள்		பக்கம்
1.	கல் காட்டும் கவிஞர் —பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்	...	64
2.	பாண்டித்துரைத் தேவர் —வித்துவான் க. வெள்ளைவாரணர் அவர்கள்	...	72
3.	தமிழ் நாடகக் கலைஞர் —திரு. ஔவை. டி. கே. சண்முகம் அவர்கள்	...	78
4.	காவியத் தோற்றம் (சிலப்பதிகாரம்) —டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், M.A., L.T., M.O.L., Ph.D.	...	87
5.	பெருமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் —வித்துவான் ஆ. பூவராகம் பிள்ளை அவர்கள்		94
6.	நெடுநல்வாடை —திரு. ந. பாலுசாமி அவர்கள், M.A., M.Litt.	...	102
7.	ஔவையார்—அரசியல் தூதர் (நாடகம்) —திரு. சிவ. குப்புசாமி அவர்கள்	...	109
8.	மனோன்மணீயம் (உரையாடல்) —திருவாட்டி மா. ரா. தமிழரசி அவர்கள், M.A., B.T.	...	118
9.	எங்கள் சொற்பயிற்சி மன்றம் —திரு. சுப. அண்ணாமலை அவர்கள், M.A., M.Litt.	...	126
10.	செல்வமும் வறுமையும் —டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள், M.A., Ph.D., M.L.C.	...	135

11. தம்பிக்குக் கடிதம் ... 142

—டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள், M.A., M.O.L., Ph.D.

12. ஓவியக்கலை ... 148

—டாக்டர் மா. இராசமாணிக்கனுர் அவர்கள், M.A., L.T., M.O.L., Ph.D.

13. குடும்பக்கலை ... 156

—வித்துவான் து. கண்ணம்மாள் அவர்கள்

14. நாட்டு நலத் திட்டங்கள் ... 162

—திரு. மா. ரா. இளங்கோவன் அவர்கள், M.A.

15. ஆஸ்திரேலியாவில் கல்வி நிலை ... 173

—திரு. சு. இராமசாமி நாயடு அவர்கள்

16. சிறு சேமிப்புத் திட்டங்கள்* ... 180

—திரு. அ. ஞானசுந்தரம் அவர்கள், B.A., B.T.

---

*இக்கட்டுரைகள் அனைத்தும் இசைவு பெற்றுச் சேர்க்கப் பெற்றவையாகும்.

இசைவு பெற்றுப் பதிப்பிக்கப்படுபவை

பாடம்		இசைவளித்தோர்
	செய்யுள்	
1.	நாட்டு வாழ்த்து	கவிஞர் கதி. சுந்தரம் அவர்கள்
2.	ஆசிய ஜோதி	திரு. குமாரசாமிப் பிள்ளை அவர்கள், தேரூர்.
3.	வருணனை	கவிஞர் முடியரசன் அவர்கள்
4.	காந்தி பிள்ளைத்தமிழ்	திரு. இராய. சொ. அவர்கள்
	உரைநடை	
1.	கல் காட்டும் கவிஞர்	A. T. N. நாகலிங்கம் கம்பெனி, மதுரை.
2.	பாண்டித்துரைத் தேவர்	வித்துவான் க. வெள்ளை வாரணர் அவர்கள்
3.	தமிழ் நாடகக் கலைஞர்	திரு. ஔவை. டி. கே. சண்முகம் அவர்கள்
4.	காவியத் தோற்றம் (சிலப்பதிகாரம்)	டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், M.A., L.T., M.O.L., Ph.D.
5.	பெருமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்	வித்வான் ஆ. பூவராகம் பிள்ளை அவர்கள்
6.	நெடுநல்வாடை	திரு. ந. பாலுசாமி அவர்கள், M.A., M.Litt.
7.	ஔவையார்—அரசியல் தூதர் (நாடகம்)	திரு. சிவ. குப்புசாமி அவர்கள்
8.	மனோன்மணீயம் (உரையாடல்)	திருவாட்டி மா. ரா. தமிழரசி அவர்கள், M.A., B.T.
9.	எங்கள் சொற்பயிற்சி மன்றம்	திரு. சுப. அண்ணாமலை அவர்கள். M.A., M.Litt.
10.	செல்வமும் வறுமையும்	டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள், M.A.,Ph.D.,M.L.C.
11.	தம்பிக்குக் கடிதம்	டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், M.A.,M.O.L.,Ph.D.
12.	ஓவியக்கலை	டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், M.A., L.T., M.O.L., Ph.D.
13.	குடும்பக்கலை	வித்துவான் து. கண்ணம்மாள் அவர்கள்
14.	நாட்டு நலத் திட்டங்கள்	திரு. மா. ரா. இளங்கோவன் அவர்கள், M.A.
15.	ஆஸ்திரேலியாவில் கல்வி நிலை	வெள்ளையன் பதிப்புக் கழகம், கண்டனூர்.
16.	சிறு சேமிப்புத் திட்டங்கள்	திரு. அ. ஞானசுந்தரம் அவர்கள், B.A., B.T.

தேசீய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்;

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும் குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும் திராவிடத்தையும் ஒரிஸ்ஸாவையும் வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன;

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

திருவாசகம்

திருவாசகம் என்பது அழகிய வாசகம் எனப் பொருள்படும். மாணிக்க வாசகர் பாடிய பக்திப்பாடல்களின் தொகுப்பே திருவாசகம் என்பது. மாணிக்கவாசகர் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் முற் பகுதியில் வாழ்ந்தவர். இவர் பாடல்கள் எளியவை ; பக்திச்சுவை நிறைந்தவை. அவற்றுள் ஒன்றைக் கீழே காண்க.

வாஞகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனுகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வாஞகி நின்றுயை என்சொல்லி வாழ்த்துவனே !

2. மொழி வாழ்த்து

கீழ்வரும் பாடல் 'மனோன்மணீயம்' என்னும் நாடக நூலில் உள்ளது. அதனைப் பாடியவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை என்பவர். இவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவ சாத்திரப் பேராசிரியராய் இருந்தவர் ; ஏறத்தாழ 60 ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்தவர். இவர் சிறந்த தமிழறிஞர் ; ஆராய்ச்சி வல்லுநர்.

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

3. நாட்டு வாழ்த்து

கீழ்வரும் பாடலைப் பாடியவர் புலவர் கதி. சுந்தரம் என்பவர். இவர் மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்; கோடை நாற்பது, பொன்னித் துறைவன் என்னும் செய்யுள் நூல்களைப் பாடியவர்; சில நாடக நூல்களையும் எழுதியிருப்பவர்; சிறந்த கவிஞர்.

பொன்னான திருநாடே! இயற்கைச் செல்வம்
பொலிகின்ற வளநாடே! வெற்றி பெற்ற
மன்னரவர் மூவேந்தர் ஆட்சி யாலே
மண்ணுலகில் இணையின்றி வாழும் நாடே!
அன்பான தமிழ்நாடே! இளங்கோ போன்ற
அரும்புலவர் தமையீன்ற அருமை நாடே!
என்னுயிரே! நன்னாடே! உன்றன் இன்ப
இணைமலர்த்தாள் வணங்குகிறேன் அருள்க நன்றே!

அருஞ்சொற்பொருள்

1. வான்–ஆகாயம். வளி–காற்று. ஊன்–இறைச்சி, இறைச்சியாலாகிய உடல். கோன்–தலைவன். நின்றனை–நின்ற உன்னை.

2. நிலமடந்தை–நிலமாகிய பெண்; நிலமகள். எழில்–அழகு. வதனம்–முகம். பரதகண்டம் – இந்திய நாடு. பிறைநுதல்–சந்திரனுடைய பிறைபோன்று வளைந்த நெற்றி; தெக்கணத்திற்கு உவமையாம். நறுந்திலகம்–திராவிடநாடு. திலக வாசனை–தமிழ். அணங்கு–தெய்வப் பெண். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகள் பேசப்படும் தென்னாடு திராவிட நாடு என்று சொல்லப்படும். பிறைநுதல் – பிறை(போன்ற) நெற்றி, உவமைத் தொகை. நறுந்திலகம்–நறுமை (ஆகிய) திலகம்–பண்புத் தொகை.

3. இயற்கைச் செல்வம்–மலைவளம், காட்டுவளம், ஆற்று வளம், கனிவளம் முதலியன. பொலிகின்ற – விளங்குகின்ற. மூவேந்தர்–சேர, சோழ, பாண்டியர். மூவேந்தர்...........நாடே– முற்காலத்தில் சேர சோழ பாண்டியர் இமயம் வரையில் சென்று வெற்றி வீரராய்த் திரும்பித் தமிழகத்துக்குப் பெருமை தேடித் தந்தனர். அவ்வேந்தர் ஆட்சியின்போது தமிழகம் அயல் நாடுகளுடன் கடல் வாணிகம் செய்து அத்துறையில் இணையற்றிருந்தது. இத்தகைய பழைய வரலாற்றுச் சிறப்புக்களால் ‘இணையின்றி வாழும் நாடு’ எனப்பட்டது. இளங்கோ – சிலப்பதிகாரம் என்ற

காவியத்தின் ஆசிரியர். இவர் போன்ற அரும்புலவர் - கபிலர், நக்கீரர், பரணர், மதுரைக் கூலவாணிகன் சாத்தனுர், திருத்தக்க தேவர், சேக்கிழார், கம்பர் போன்ற பெரும் புலவர்கள். மலர்த்தாள்- மலர் (போன்ற) தாள் ; உவமைத் தொகை.

கேள்விகள்

1. மாணிக்கவாசகர் கடவுளை எவ்வாறு காண்கின்ருர் ?
2. தமிழ் அணங்கின் வதனம் முதலியன எவையாகக் கூறப் பட்டுள்ளன ?
3. “ இயற்கைச் செல்வம் பொலிகின்ற வளநாடு ”—இதன் பொருள் யாது ?
4. வெற்றி பெற்ற மன்னரவர் மூவேந்தர் ஆட்சியாலே மண்ணுலகில் இணையின்றி வாழும் நாடே ”—இதன் கருத்து யாது ?
5. இளங்கோ போன்ற அரும்புலவர் யாவர் ?

பயிற்சி

1. முதற் செய்யுளின் கருத்தினை உன் சொந்த நடையில் எழுதுக.

2. முதற்செய்யுளின் பொருளைப் பற்றி, நீ யாது கருதுகிருய் ?

3. தமிழ் நாட்டின் சிறப்பும் அந்நாடு பற்றிய உனது கடமையும் இவையெனக் கூறுக.

4. இளங்கோ அடிகளைப்பற்றி, ஆசிரியர் உதவி பெற்றும் பள்ளி நூல் நிலையத்திலுள்ள நூல்களின் துணையைக்கொண்டும் நாற்பது வரிகளுள் ஒரு கட்டுரை எழுதுக.

5. பிரித்துக் காட்டுக :—

மண்ணுகி, வளியாகி, அவரவர், கடலுடுத்த, நறுந்திலகம், எத்திசை, மண்ணுலகு, அரும்புலவர், நன்ருடு, மலர்த்தாள்.

6. சேர்த்துக் கூறுக :—

வான்+ஆகி, அ+திலகம், பொன்+ஆன, அதில்+சிறந்த, எழில்+ஒழுகும்.

II. அறவுரை

1. திருக்குறள்

திருக்குறள் நூல் இரண்டு அடிகளாலாகிய 1330பாக்களையுடையது; 133 அதிகாரங்களைக் கொண்டது. இந்நூற் கருத்துக்கள் உலக மக்கள் அனைவராலும் ஏற்கத்தக்கவை ஆதலால், இந்நூல் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதனை இயற்றிய திருவள்ளுவர் காலம் ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முன் என்னலாம்.

கடவுள் வாழ்த்து

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை இல. 1

வான் சிறப்பு

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது. 2

நீத்தார் பெருமை

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. 3

அறன் வலியுறுத்தல்

சிறப்பீனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு? 4

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். 5

இல்வாழ்க்கை

அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றில்
போஓய்ப் பெறுவ தெவன்? 6

வாழ்க்கைத் துணைநலம்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்? 7

சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. 8

புதல்வரைப் பெறுதல்

தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. 9

அன்புடைமை

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. 10

விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 11

இனியவை கூறல்

இன்சொலால் ஈரம் அளை இப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 12

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 13

செய்ந்நன்றி அறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது. 14

நடுவு நிலைமை

கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின். 15

அடக்கமுடைமை

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூங் கில்லை உயிர்க்கு. 16

எல்லார்க்கு நன்றும் பணிதல் அவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. 17

பொறையுடைமை

ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 18

அழுக்காறுமை

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து. 19

வெஃகாமை

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 20

ஈகை

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள. 21

ஒப்புரவறிதல்

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 22

புகழ்

ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில். 23

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். 24

புலான் மறுத்தல்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். 25

தவம்

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 26

கூடாவொழுக்கம்

மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்தது ஒழித்து விடின். 27

வாய்மை

வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை இலாத சொலல். 28

வெகுளாமை

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 29

இன்னா செய்யாமை

நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 30

நிலையாமை

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. 31

அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 32

மெய்யுணர்தல்

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். 33

கல்லாமை

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 34

ஊழ்

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்? 35

இறைமாட்சி

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம். 36

கல்வி

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 37

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 38

கல்லாமை

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். 39

கேள்வி

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது. 40

அறிவுடைமை

எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. 41

பெரியாரைத் துணைக்கோடல்

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. 42

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். 43

தெரிந்து செயல்வகை

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். 44

நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. 45

வலியறிதல்

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும். 46

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. 47

காலமறிதல்

அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின். 48

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. 49

இடனறிதல்

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின். 50

அருஞ்சொற்பொருள்

1. வேண்டுதல் - விரும்புதல். வேண்டாமை - விரும்பாமை. இலான் - இல்லாதவன், இறைவன், வினையாலணையும் பெயர். யாண்டும்-எக்காலத்தும். இடும்பை-துன்பம்; பிறவித் துன்பங்கள்.

2. விசும்பு - ஆகாயம், இங்கு மேகத்தைக் குறித்தது, ஆகு பெயர். காண்பு-காணுதல், தொழிற்பெயர்.

3. இருமைவகை-துன்ப இன்பக் கூறுபாடுகள். அறம் - துறவறம். பிறங்கிற்று - உயர்ந்தது. பூண்டார் - வினையாலணையும் பெயர்.

4. சிறப்பு - வீடுபேறு. ஊங்கு - விட. எவன்-யாது. ஆக்கம்-மேன்மேல் உயர்தல்.

5. ஒல்லும் - இயலும். அறவினை - அறமாகிய நல்வினை. ஓவாது - ஒழியாது.

6. அறத்து ஆற்றின் - அறத்தின் வழியே. ஆற்றின் - செலுத்தினல். அறத்தாறு என்பது, பழியஞ்சிப் பகுத்துண்டலும் அன்புடைமையும் ஆகும்.

7. பெருந்தக்க - மேம்பட்ட. திண்மை - கலங்கா நிலைமை.

8. சிறை - சிறையால். காப்பு-காவல். எவன் செய்யும்-என்ன பயனைத் தரும். நிறைகாக்கும் காப்பு - நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்தல். தலை-சிறந்தது.

9. மன்னுயிர் - பொருந்திய உயிர்கள். இனிது - தம்மிலும் இனிதாம்.

10. சார்பு - துணை. மறம் - வீரம். அஃதே - அவ்வன்பே.

11. இல் இருந்து - வீட்டில் இருந்து. ஓம்பி - பொருள்களைப் பாதுகாத்து. விருந்து-விருந்தினர், பண்பாகுபெயர். வேளாண்மை-உதவி.

12. ஈரம்-அன்பு. அளை இ - கலந்து, அளபெடை, (சொல்லிசை அளபெடை). படிறு - வஞ்சனை. செம்பொருள் - அறம்.

13. அல்லவை-பாவங்கள். நல்லவை - நன்மை பயக்கும் சொற்கள். நாடி - ஆராய்ந்து.

14. ஆற்றல் - கைம்மாறாகக் கொடுத்தல். அரிது - ஒத்தல் அரிது.

15. நடுவு - நடுவு நிற்றல். ஒரீஇ - ஒழிந்து, சொல்லிசை அளபெடை. அல்ல-நடுவல்லாதவை. கெடுவல் - கெடக்கடவேன், தன்மை ஒருமை வினைமுற்று. அறிக-வியங்கோள் வினைமுற்று.

16. காக்க-வியங்கோள் வினைமுற்று. பொருளா-உறுதிப் பொருளாகக்கொண்டு. ஆக்கம் - செல்வம்.

17. பணிதல் - அடக்கமுடைமை. தகைத்து - சிறப்பினையுடையது.

18. ஒறுத்தாரை-தண்டித்தவரை. ஒன்றாக - ஒரு பொருளாக. வையார் - கருதார்.

19. அல்லவை - அறங்கள் அல்லாதவை. இழுக்காறு - தீய நெறி. ஏதம் - துன்பம். படுபாக்கு - உண்டாதல்.

20. அஃகாமை - சுருங்காமைக் காரணம். வெஃகாமை - வேண்டாமை.

21. இலன் - வறியவன். எவ்வம் - இளிவரவு. உரையாமை-பிறரிடம் சொல்லாமை. குலன் - நற்குடி.

22. ஒப்புரவு - உலக நடையினை அறிதல். கேடு - பொருள் கேடு. விற்று - விற்றாயினும். கோள் தக்கது உடைத்து-கொள்ளும் தகுதியுடையது.

23. ஒன்றா - தனக்கு இணையில்லாது ஓங்கிய. பொன்றாது - இறவாது.

24. இசை - புகழ். வசை - குற்றம். பெறுஅ-செய்யுளிசை அளபெடை.

25. ஊன் - உடம்பு. ஆளும் - ஆள்வான், 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று ஆண்பாலுக்கு வந்தது.

26. எய்தலால் - பெறுதலால். செய்தவம் - வினைத்தொகை. ஈண்டு - இப்பிறவியில்.

27. மழித்தல்-மொட்டையடித்தல். நீட்டல்-மயிர் வளர்த்தல். உலகம் - உயர்ந்தோர், இடவாகுபெயர். பழித்தது - தவறென்று கூறியது.

28. இலாத - பயவாத சொற்கள்.

29. சினம் காக்க - கோபம் வராமல் காப்பாற்றுக.

30. நோய் - துன்பம்.

31. நெருநல் - நேற்று. பெருமை - நிலையாமை மிகுதி.

32. மெய்ப்பொருள்-மெய்யாய பயன். காண்பது-காணவல்லது.

33. காமம்-விருப்பம். வெகுளி-வெறுப்பு. மயக்கம்-அறியாமை. நாமம் - பெயர். நோய் - வினைப்பயன்கள்.

34. தகைமை - தன்னை உயர்வாக மதிக்கும் மதிப்பு. சொல்லாட - கற்றவன் உரையாட. சோர்வுபடும் - கெடும்.

35. நன்று - நல்வினை. நல்லவாக் காண்பவர் - இவை நல்லவை என்று அநுபவிப்பவர். அன்றுங்கால்-பிற தீவினை விளையும்பொழுது. அல்லல்படுவது - துன்பப்படுவது. எவன் - யாது கருதி.

36. காட்சிக்கு - காண்பதற்கு. மீக்கூறும் - உயர்த்துக்கூறும்.

37. எண் - கணக்கு. எழுத்து - இலக்கியம். என்ப - என்பர், பலர்பால் வினைமுற்று.

38. உவப்ப-மகிழும்படி. தலைக்கூடி-சேர்ந்து. உள்ளப்பிரிதல்-மீண்டும் எப்பொழுது சேருவோம் என்று எண்ணுமாறு பிரிதல். புலவர் - கற்றறிந்தார்.

39. இலங்கு - விளங்கிய. ஏனையவர் - கல்லாதவர்.

40. நுணங்கிய-நுட்பமான. வாயினர்-மொழியினை உடையவர்.

41. எவ்வது - எவ்வாறு. அவ்வது - அவ்வழியில். உறைவது-ஒழுகுவது.

42. வன்மை - வலிமை. தமர் - நெருக்கமானவர், தம்மவர்.

43. இடிப்பாரை - இடித்து அறிவுரை கூறுபவரை. இல்லாத - தனக்குத் துணையாகப் பெறாத. ஏமரா - காவலற்ற. கெடும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று ஆண்பாலுக்கு வந்தது.

44. ஆக்கம் - ஊதியம். ஊக்கார் - மேற்கொள்ளார், பலர்பால் வினைமுற்று.

45. ஆற்றல் - செய்தல், அவரவர்-அடுக்குத்தொடர். பண்பு-குணங்கள். ஆற்றுக்கடை - குணங்களுக்குப் பொருந்தச் செய்யாவிடின்.

46. ஏறினர்-வினையாலணையும் பெயர். அஃது-நுனியின் அளவு. இறந்து - கடந்து. ஊக்கின் - மேலும் செல்ல முயல்வாராகில்.

47. ஆகுஆறு-பொருள் வருகின்ற நெறியின் அளவு. இட்டிது-சிறிது. போகுஆறு-போகின்ற நெறியின் அளவு. அகலாக்கடை - அதனில் பெருகாதாயின்.

48. அருவினை - செயற்கரிய செயல். கருவியால் - செயலை முடித்தற்கு வேண்டும் கருவிகளுடன்.

49. கூம்பும் பருவம் - வினைமேல் செல்லாதிருக்கும் காலம். சீர்த்த இடத்து - வினைமேற் செல்லும் காலம் வாய்த்த பொழுது. அதன் குத்து ஒக்க - கொக்குச் செய்து முடிப்பதுபோலத் தப்பாமல் செய்து முடிக்க.

50. எஞ்சாமை - குறையாது. இடத்தான் - இடத்தோடு பொருந்த. அஞ்சாமை மனத்திண்மை.

கேள்விகள்

1. வள்ளுவர் அறத்தை எங்ஙனம் வலியுறுத்தியுள்ளார் ?
2. அடக்கமுடைமைபற்றி வள்ளுவர் கருத்து யாது ?
3. திருவள்ளுவர் ஈகையைப்பற்றி யாது கூறியுள்ளார் ?
4. புகழைப்பற்றித் திருவள்ளுவர் கருத்து யாது ?
5. பெரியாரைத் துணைக்கோடல் தேவையா ?
6. தெரிந்து செயல்வகைபற்றி வள்ளுவர் யாது கூறியுள்ளார்?
7. வலியறிதல்பற்றி வள்ளுவர் கருத்து யாது ?
8. காலமறிதல் என்னும் தலைப்பில் கூறப்பட்டுள்ள செய்தி யாது ?

பயிற்சி

1. விளக்கவுரை தருக:—நீத்தார், வாழ்க்கைத் துணைநலம், வெஃகாமை, ஒப்புரவறிதல், வாய்மை, ஊழ், கேள்வி.

2. எதிர்ச்சொல் கூறுக :—வேண்டுதல், இலான், இல, அறம், ஆக்கம், இனிது, கேடு, வசை, தீமை.

3. உங்கள் பாடப் பகுதியிலிருந்து வினையாலணையும் பெயர், செய்யுளிசை, இன்னிசை, சொல்லிசை - அளபெடைகள், பலர்பால், பலவின்பால்-வினைமுற்றுக்கள், செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்று—இவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

4. பின்வருவன எச்சந்தர்ப்பங்களில் வள்ளுவரால் கூறப் பட்டன என்பதை விளக்கி எழுதுக :—மழித்தலும் நீட்டலும், பசும் புல், சிறை, பணிதல், நெருநல், புலவர், பெரியார்.

2. சிறுபஞ்சமூலம்

சிறுமை + பஞ்சம் = சிறுபஞ்சம். பஞ்சம் + மூலம் = பஞ்சமூலம். மருந்தாகப் பயன்படும் ஐந்து சிறிய வேர்கள் என்பது பொருள். சிறுவழுதுணை வேர், நெருஞ்சி வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், கண்டங்கத்திரி வேர் என்னும் ஐந்தும் சிறுபஞ்சமூலம் எனப் படுவன. இவை ஐந்தும் உடல் நோயைப் போக்கப் பயன்படுதல் போல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்பட்டுள்ள ஐந்து ஐந்து கருத்துக்களும் மனநோயைப் போக்கி அறிவு நலம் தருவன. இக்காரணம்பற்றியே இந்நூல் சிறுபஞ்சமூலம் என்னும் பெயரைப் பெற்றது. இந்நூலில் 97 செய்யுட்கள் உள்ளன. இதன் ஆசிரியர் காரியாசான்; சமண சமயத்தினர்; கி. பி. 750க்கு முற்பட்டவர் என அறிஞர் கருதுகின்றனர்.

இதற்கு இது கூற்றம்

சிலம்பிக்குத் தன்சினை கூற்றம்நீள் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான்—வலம்படா
மாவிற்குக் கூற்றமாம் ஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை. 1

நகைப்புக்கு இடமாவன

நாணிலான் சால்பும் நடையிலான் நன்ஞானும்
ஊணிலான் செய்யும் உதாரதையும்—ஏணிலான்
சேவகமும் செந்தமிழ் தேற்றான் கவிசெயலும்
நாவகமே நாடின் நகை. 2

பெருமை-சிறுமை-நன்று

பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல்—இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று. 3

தேவர் முதலியோர்

தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்
பூதரே முன்பொருள் செய்யாதார்—ஆதரே
துன்ப மிலேம்பண்டு யாமே வனப்புடையேம்
என்பார் இருகால் எருது. 4

ஊனுடம்பைக் கொள்ளாதவன்

கள்ளான்சூ தென்றும் கழுமான் கரியாரை
நள்ளான் உயிரிரங்க நாவாடான்—நள்ளானாய் [றுந்
ஊன்மறுத்துக் கொள்ளானேல் ஊனுடம் பெஞ்ஞான்
தான்மறுத்துக் கொள்ளான் தளர்ந்து. 5

காயாமரமும் நாருதவித்தும் நன்றறியார் முதலியோரும்

பூத்தாலுங் காயா மரமுமுள நன்றறியார்
மூத்தாலும் மூவார்நூல் தேற்றாதார்—பாத்தி
புதைத்தாலும் நாருத வித்துள பேதைக்
குரைத்தாலுஞ் செல்லா துணர்வு. 6

அருஞ்சொற்பொருள்

1. சிலம்பி-சிலந்திப்பூச்சி. சினை-முட்டை. கோடு-கொம்பு. விலங்கு-கொம்புள்ள விலங்கு. வலம்-வெற்றி. படா-உண்டாகாத. மா - கவரிமா. ஞெண்டு - நண்டு. பார்ப்பு - குஞ்சுகள். வசை - பழிமொழிகள்.

2. நாண்-நாணம். சால்பு-அமைதி. நடை-நல்ல ஒழுக்கம். ஊண் - உணவு. உதாரதை - ஈகை. ஏண்-வலிமை. சேவகம் - வீரத்தொழில். அகம்-இடம். நாடின்-ஆராயின். நகை-சிரிப்புக்கு இடமாகும்.

3. பிழைத்தல் - தனக்குப் பிறன் செய்த பிழை. இழைத்த (முன்னது) - பிறர் செய்த. இழைத்த (பின்னது) - தான் செய்த. பகை - பிழைகள். நகைகெட - ஏளனம் செய்து நகைப்பது நீங்க.

4. கற்றவர் - அறிவு நூல்களைப் படித்தவர். தேவர்-தேவரை ஒப்பவர் ஆவர். பூதர்-பூத பசாசுகள். முன்-(முதுமை வருவதற்கு) முன்பே. செய்யாதார் - தேடி வையாதவர். ஆதர் - அறிவில்லாதவர். வனப்பு - அழகு.

5. கள்ளான் - பிறர் பொருளைக் களவு செய்யாதவன். கழுமான் - கலவாதவன். கரியார் - கீழ்மக்கள். நள்ளான் - நட்புக் கொள்ளாதவன். நள்ளான் - பொருந்தாதவன். மறுத்து - மீட்டும். தளர்ந்து - ஒழுக்கம் தளர்ந்து. கொள்ளான் - கொடுக்கமாட்டான்.

6. நன்று - நன்மை. மூவார் - அறிவினால் முதிரார். நூல் - அறிவு நூல். நாருத - முளைக்காத. உணர்வு - அறிவு. செல்லாது - தோன்றாது.

கேள்விகள்

1. சிலம்பி முதலியவற்றிற்கு எவை கூற்றமாகும்?
2. நகைப்புக்கு இடமாவன யாவை?
3. எது பெருமையைத் தருவது? சிறுமையைத் தருவது எது?
4. எவர் தேவர்? எவர் பூதர்? எவர் ஆதர்?
5. எவன் மீட்டும் பிறக்கமாட்டான்?
6. காயாமரம், நாருத வித்து—இவை எவற்றை விளக்க வந்தவை?

பயிற்சி

1. கீழ்வருவனவற்றிற்கு எதிர்ச் சொல் கூறுக:—

இலான், பெருமை, பகை, நல்லார், கற்றவர், என்பார், கொள்ளான்.

2. நாரூத (வித்து) - இஃது எதிர்மறைப் பெயரெச்சம்.

நாரு (வித்து) - இதுவும் எதிர்மறைப் பெயரெச்சம். ஆயினும், இதனில் முன்னதைப்போல் ஈற்று எழுத்து (த) இல்லை. அதனால் இஃது ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும்.

ஓடாத (மாடு) - எதிர்மறைப் பெயரெச்சம்.

ஓடா (மாடு) - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். இந்த இருவகைப் பெயரெச்சங்களையும் இச்செய்யுட்களிலிருந்து எடுத்துக் காட்டுக.

3. இந்த ஆறு பாக்களின் திரண்ட கருத்தை 25 வரிகளில் எழுதிக் காட்டுக.

3. ஏலாதி

ஏலம்+ஆதி=ஏலாதி. ஏலம் முதலான ஆறு பொருள்களைக் கொண்டு செய்யப்பட்ட மருந்து உடலுக்கு நன்மை தருதல்போல இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்படும் அவ்வாறு கருத்துக்கள் உள்ளத்திற்கு நன்மை தருவன. ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு என்னும் ஆறுமே ஏலாதி எனப்படுவன. இந்நூலின் செய்யுட்கள் எண்பது. ஆசிரியர் கணி மேதையார்; சமண சமயத்தினர்; காலம் கி. பி. எட்டாம் நூற்றுண்டு என்பது அறிஞர் கருத்து.

விண்ணவர்க்கும் மேம்பட்டவன்

கொலைபுரியான் கொல்லான் புலான்மயங்கான் கூர்த்த
அலைபுரியான் வஞ்சியான் யாதும்—நிலைதிரியான்
மண்ணவர்க்கு மன்றி மதுமலிபூங் கோதாய்
விண்ணவர்க்கு மேலாய் விடும். 1

பல்லுயிர்க்கும் தாய்போன்றவன்

நிறையுடைமை நீர்மை யுடைமை கொடையே
பொறையுடைமை பொய்ம்மை புலாற்கண்—மறையுடைமை
வேயன்னதோளாய் இவையுடையான் பல்லுயிர்க்கும்
தாயன்னன் என்னத் தகும். 2

தேவர்க்கு விருந்தினன்

இன்சொல் அளாவல் இடமினிதூண் யாவர்க்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல்—மென்சொல்
முருந்தேய்க்கு முட்போல் எயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து. 3

அறிவு நூல்கள் தேவை இல்லாதவன்

பொய்யான் புலாலொடு கட்போக்கித் தீயன
செய்யான் சிறியார் இனஞ்சேரான்—வையான்
கயலியலுண் கண்ணாய் கருதுங்கால் என்றும்
அயல அயலவாம் நூல். 4

சான்றோர்—கீழ்மகன் இயல்புகள்

மையேர் தடங்கண் மயிலன்னாய் சாயலே
மெய்யே உணர்ந்தார் மிகவுரைப்பர்—பொய்யே
குறளை கடுஞ்சொற் பயனிலசொல் நான்கும்
மறலையின் வாயினவா மற்று. 5

தேவாதி தேவன்

உரையான் குலன்குடிமை ஊனம் பிறரை
உரையான் பொருளொடுவாழ் வாயு—உரையானாய்ப்
பூவாதி வண்டுதேர்ந் துண்குழலாய் ஈத்துண்பான்
தேவாதி தேவனாந் தேறு. 6

அருஞ்சொற்பொருள்

1. மது - தேன். மலி - நிரம்பிய. கோதை-மாலை. மயங்கான்- அறிவு கலங்கி உண்ணான். கூர்த்த - மிக்க. அலை - பிறரை வருத்தும் தொழில். யாதும் - சிறிதும். ஆய்விடும் - ஆவான், 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

2. நிறை - மன அடக்கம். நீர்மை - நல்ல இயல்பு. கொடை - பிறருக்குக் கொடுத்தல். பொறை - பிறர் தனக்குச் செய்யும் தீங்கினைப் பொறுத்தல். புலால்கண் - ஊன் உண்ணுதல். மறை - மறுத்தல். அன்னன் - ஒத்தவன்.

3. அளாவல் - உள்ளம் கலந்த உறவு. இடம் - தங்குமிடம். இனிது - ஆடை அணி முதலிய பொருள்கள். ஊண் - உணவு. மென்சொல் - பணிவு மொழி. விருந்து - விருந்தினனாய்.

4. உண் கண் - மை அணிந்த கண்கள். சிறியார் - கீழ்மக்கள். நூல் - அறிவு நூல்கள். அயல அயல - தேவையில்லை.

5. மையோர் - மை தீட்டிய. தடம் - பெரிய. உணர்ந்தார் - சான்றோர். சாயல் - மென்மையான நற்சொற்கள். குறளை - புறம் கூறுதல். மறலை - கீழ்மகன்.

6. ஆதி - முதலியவற்றை. தேர்ந்து - ஆராய்ந்து. குழல் - கூந்தல். உரையான் - பெருமையாகப் பேசாமல். பிறரை - குலத்தாலும் குடியாலும் உயர்வு இல்லாத மற்றவரை. ஊனம் - குற்றம். ஆயு - வாழ்நாள் முழுமையும். தேவாதி தேவன் - தேவர்கள் தலைவன்.

கேள்விகள்

1. எவன் தேவர்க்கும் மேம்பட்டவன் ஆவன்?
2. பல உயிர்கட்கும் தாயை ஒப்பவன் யாவன்?
3. தேவர்கள் எவனை விருந்தினனாய் விரைந்து ஏற்றுக் கொள்வர்?
4. எவனுக்கு அறிவு நூல்கள் தேவையில்லை?
5. கீழ்மகன் வாயில் வருவன யாவை?
6. எவன் தேவாதி தேவனாய் விளங்குவான்?

பயிற்சி

1. கோதாய் - மாலையை உடையவளே எனப் பொருள்படுவதால் இது விளி ஏற்ற பெயராகிறது; எட்டாம் வேற்றுமை. கோதை-மாலை. இது முதல் வேற்றுமை. இப்பாடப் பகுதியில் உள்ள பிற செய்யுட்களில் வந்துள்ள விளி வேற்றுமைப் பெயர்களை எழுதி, அவற்றுக்குரிய முதல் வேற்றுமைப் பெயர்களை எழுதுக.

2. புரியான் - செய்யான். புரிவான் - செய்வான். புரிவான் என்பது தொழில் நிகழ்ச்சியைக் குறிக்கும் வினைமுற்று. ஆதலால் இது உடன்பாட்டு வினைமுற்று எனப்படும். புரியான் என்பது செயல் நிகழாமையைக் குறிக்கும் வினைமுற்று. இது எதிர்மறை வினைமுற்று எனப்படும். இவ்வாறு பிறசெய்யுட்களிலும் வந்துள்ள உடன்பாட்டு வினைகளையும் எதிர்மறை வினைகளையும் எடுத்துக் கூறுக.

3. சேர்த்துக் கூறுக:—பூ + கோதாய், நிறை + உடைமை, பல் + உயிர், முருந்து + ஏய்க்கும், இனம் + சேரான்.

4. பிரித்துக் கூறுக:—மறையுடைமை, தாயன்னன், வன்சொல், விருந்தேற்பர், கட்போக்கி, தடங்கண், கடுஞ்சொல்.

III. தொடர்நிலைச் செய்யுள்

1. மணிமேகலை

பாத்திரம் பெற்ற காதை

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை. இவளுடைய வரலாற்றைக் கூறும் செய்யுள் நூல் மணிமேகலை என்பது. இஃது ஐம்பெருங் காவியங்களுள் ஒன்று. இதன் காலம் கி. பி. 2ஆம் நூற்றாண்டு. இது பௌத்த சமய நூல். இதனைச் செய்தவர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்பவராவர்.

மணிமேகலை என்ற பெண் மணிமேகலா தெய்வத்தால் மணிபல்லவம் என்ற தீவிற்குக் கொண்டுசெல்லப்பட்டாள்; அத்தீவில் தீவதிலகை என்ற பெண்மணியைக் கண்டு பேசியது, அமுதசுரபி என்ற அட்சய பாத்திரத்தைப் பெற்றது, புத்த பீடிகையை வணங்கியது, பிறருக்கு உணவு வழங்கலின் சிறப்பை அறிந்தது முதலிய செய்திகள் இக் காதையில் கூறப்பட்டுள்ளன.

மணிபல்லவத்தில் மணிமேகலை

மணிமே கலாதெய்வம் நீங்கிய பின்னர்
மணிபல் லவத்திடை மணிமே கலைதான்
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையுந்
தண்மலர்ப் பொய்கையுந் தாழ்ந்தனள் நோக்கிக்
காவதந் திரியக் கடவுட் கோலத்துத்
தீவ திலகை செவ்வனந் தோன்றிக்
"கலங்கவிழ் மகளிரின் வந்தீங் கெய்திய
இலங்குதொடி நல்லாய், யார்நீ?" என்றலும்,

மணிமேகலை தன் வரலாறு கூறல்

"எப்பிறப் பகத்துள் யார்நீ யென்றது
பொற்கொடி யன்னாய், பொருந்திக் கேளாய்;
போய பிறவியிற் பூமியங் கிழவன்
இராகுலன் மனையான்; இலக்குமி யென்பேர்;
ஆய பிறவியில் ஆடலங் கணிகை

மாதவி யீன்ற மணிமே கலையான் ;
என்பெயர்த் தெய்வம் ஈங்கெனைக் கொணரவிம்
மன்பெரும் பீடிகை யென்பிறப் புணர்ந்தேன்
ஈங்கென் வரவிதீங் கெய்திய பயனிது ;
பூங்கொடி யன்னாய், யார் நீ ?" யென்றலும்

தீவதிலகை தன் வரலாறு உரைத்தல்

ஆயிழை தன்பிறப் பறிந்தமை அறிந்த
தீவ திலகை செவ்வன முரைக்கும் ;
"ஈங்கிதன் அயலகத் திரத்தின தீவத்
தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை
அறவியங் கிழவோன் அடியிணை யாகிய
பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய் ஆங்குள தாதலின்
தொழுதுவலங் கொண்டு வந்தேன் ; ஈங்குப்
பழுதில் காட்சியிந் நன்மணிப் பீடிகை
தேவர்கோன் ஏவலிற் காவல் பூண்டேன் ;
தீவ திலகை யென்பெயர் ; இதுகேள் ;
தரும தலைவன் தலைமையின் உரைத்த
பெருமைசால் நல்லறம் பிறழா நோன்பினர்
கண்டுகை தொழுவோர் கண்டதற் பின்னர்ப்
பண்டைப் பிறவியர் ஆகுவர் ; பைந்தொடி,
அரியர் உலகத் தாங்கவர்க் கறமொழி
உரிய துலகத் தொருதலை யாக ;
ஆங்ஙன மாகிய அணியிழை, யிதுகேள் ;"

தீவதிலகை பாத்திரம்பற்றிக் கூறல்

"ஈங்கிப் பெரும்பெயர்ப் பீடிகை முன்னது
மாமலர்க் குவளையு நெய்தலு மயங்கிய
கோமுகி யென்னுங் கொழுநீர் இலஞ்சி
இருதிள வேனிலில் எரிகதிர் இடபத்
தொருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவையிற்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்
ஆபுத் திரன்கை யமுத சுரபியெனும்

மாபெரும் பாத்திரம், மடக்கொடி, கேளாய்;
அந்நாள் இந்நாள் அப்பொழு திப்பொழுது
நின்னாங்கு வருவது போலு, நேரிழை,
ஆங்கதிற் பெய்த ஆருயிர் மருந்து
வாங்குநர் கையகம் வருத்துதல் அல்லது
தான்றொலை வில்லாத் தகைமைய தாகும்;
நறுமலர்க் கோதை, நின்னூர் ஆங்கண்
அறவணன் றன்பாற் கேட்குவை யிதன்றிறம்”

மணிமேகலை பாத்திரம் பெறுதல்

என்றவள் உரைத்தலும் இளங்கொடி விரும்பி
மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கித்
தீவ திலகை தன்னொடுங் கூடிக்
கோமுகி வலம்செய்து கொள்கையின் நிற்றலும்,
எழுந்துவலம் புரிந்த இளங்கொடி செங்கையில்
தொழுந்தகை மரபிற் பாத்திரம் புகுதலும்,
பாத்திரம் பெற்ற பைந்தொடி மடவாள்
மாத்திரை யின்றி மனமகிழ் வெய்தி,

மணிமேகலை புத்த பீடிகையைத் தொழுதல்

“மாரனை வெல்லும் வீர, நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய், நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய், நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய், நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய், நின்னடி
கண்பிறர்க் களிக்கும் கண்ணோய், நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய், நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய், நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய், நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய், நின்னடி
வணங்குதல் அல்லது வாழ்த்தலென் னாவிற்
கடங்கா” தென்ற வாயிழை முன்னர்ப்
போதி நீழற் பொருந்தித் தோன்றும்
நாதன் பாதம் நவைகெட ஏத்தித்
தீவ திலகை சேயிழைக் குரைக்கும்

தீவதிலகை பசியின் கொடுமையை எடுத்துக் கூறுதல்

"குடிப்பிறப் பழிக்கும், விழுப்பங் கொல்லும்,
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்,
நாணணி களையும், மாணெழில் சிதைக்கும்,
பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொ லளவைக் கென்னா நிமிராது;
புன்மரம் புகையப் புகையழற் பொங்கி
மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலின்
அரசுதலை நீங்கிய அருமறை யந்தணன்
இருநில மருங்கின் யாங்கணுந் திரிவோன்
அரும்பசி களைய ஆற்றுவது காணான்
திருந்தா நாயூன் தின்னுத லுறுவோன்
இந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
மழைவளந் தருதலின் மன்னுயிர் ஓங்கிப்
பிழையா விளையுளும் பெருகிய தன்றோ!
ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை;
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;
உயிர்க்கொடை பூண்ட வுரவோ யாகிக்
கயக்கறு நல்லறங் கண்டனை" யென்றலும்,

... ...

மணிமேகலை புகார் ஏகுதல்

"அறம்கரி யாக அருள்சுரந் தூட்டும்
சிறந்தோர்க் கல்லது செவ்வனம் சுரவா
தாங்கன மாயினை அதன்பயன் அறிந்தனை
ஈங்குநின் றெழுவாய்" என்றவள் உரைப்பத்
தீவ திலகை தன்னடி வணங்கி
மாபெரும் பாத்திரம் மலர்க்கையின் ஏந்திக்
கோமகன் பீடிகை தொழுதுவலங் கொண்டு
வானூ டெழுந்து மணிமேகலைதான்

[புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினம் அடைந்தாள்; அமுத சுரபியின் பெருமையை மாதவிக்கும், சுதமதிக்கும் உரைத்தாள். அவ்விருவரும் அமுத சுரபியைத் தொழுதனர்.]

அறவண அடிகளைத் தொழப் போதல்

தொழுதனர் ஏத்திய தூமொழி யாரொடும்
"பழுதறு மாதவன் பாதம் படர்கேம்
எழுகெ"ன எழுந்தனள் இளங்கொடி தானென். 109

அருஞ்சொற்பொருள்

வரி 1-10: தண்மை - குளிர்ச்சி. தாழ்ந்தனள்-தாழ்ந்து, முற்றெச்சம். கடவுட்கோலம்-தெய்வ வேடம். தீவதிலகை-இந்திரன் ஏவலால் புத்ததேவரது பாத பீடிகையைப் பாதுகாத்துக்கொண்டு மணிபல்லவத் தீவில் இருந்தவள். கலம்-கப்பல். தொடி-வளை.

வரி 11-20: கிழவன்-உரியவன். மனை-மனைவி. ஆய பிறவி-இப்பிறவி. பயன் இது-பழம் பிறப்பு உணர்ந்தது. ஆயிழை-மணிமேகலை; அன்மொழித்தொகை. உரைக்கும்-சொல்வாள்; 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று; பெண்பாலுக்கு வந்தது.

வரி 21-30: இதன்-இந்த மணிபல்லவத் தீவின். சமந்தத்து-சமந்தம் என்னும் மலையினது. அறவியங் கிழவோன்-அறத்திலே நிற்கும் உரிமையுள்ள மனிதன். விடூஉம்-இன்னிசை அளபெடை. அறவி நாவாய்-அறத்திலே நிற்கும் கப்பல். தேவர்கோன்-இந்திரன். தருமதலைவன்-புத்தன்.

வரி 31-40: பிறவியர் ஆகுவர்-பிறப்பை உணர்வர். பைந்தொடி-பசிய வளையல் (அணிந்தவளே), அன்மொழித் தொகை. அரியர்-பெறுதற்கரியர். அறமொழி-தருமபதம். ஒருதலை-உறுதி. ஆங்ஙனம் ஆகிய-அத்தன்மையை உடையை ஆகிய. அணியிழை-மணிமேகலை, அன்மொழித்தொகை. பெயர்-புகழ். மயங்கிய-கலந்த. இலஞ்சி-பொய்கை. இருது இளவேனில்-இளவேனில் பருவம், சித்திரை, வைகாசி மாதங்கள். கதிர் எரி இடபத்து-சூரியன் நன்றாகக் காயும் வைகாசி மாதத்து.

வரி 41-50: ஒருபதின் ... சென்றபின் - இருபத்தேழு நட்சத்திரங்களுள் கார்த்திகை முதலாகிய 13 நட்சத்திரங்கள் சென்ற பின்பு. மீனத்திடை ... அகவையின் - நட்சத்திரங்களுள் நடுவில் நிற்றலை உடையதான விசாக நட்சத்திரத்தின். போதி-அரசமரம், பௌத்தருக்குச் சிறந்த மரம். ஆபுத்திரன்-பசுவினால் வளர்க்கப் பட்டவன்; அருள் உள்ளம் கொண்ட பெரியோன். மடக்கொடி-மணிமேகலை. கொடி - உவமையாகு பெயர். நின்னுங்கு-நின்

கையிடத்து. நேரிழை-மணிமேகலை, அன்மொழித்தொகை. ஆருயிர் மருந்து-சோறு. தான்-அன்னம். தொலைவு-முடிவு.

வரி 51-60 : நறுமலர்க் கோதை-மணிமேகலை, அன்மொழித் தொகை. அறவணன்-அறவண அடிகள், பௌத்த சமயப்பெரியார். அவள்-தீவதிலகை. இளங்கொடி-மணிமேகலை. கொடி-உவமை ஆகுபெயர். தொழுதனள்-கைகுவித்து, முற்றெச்சம். கொள்கை-நியமம். பைந்தொடி மடவாள்-மணிமேகலை. மாத்திரை-அளவு.

வரி 61-70 : மாரன்-மன்மதன். தீ நெறிக் கடும்பகை-காமம் முதலியன. அறம்-புண்ணியம். துறக்கம்-சுவர்க்கம். வேண்டா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். தொல்லோய்-பழைமையான வனே. எண்-எண்ணங்கள். பிறக்கு-பின்னே. இறந்தோய்-மேற்பட்ட நிலையில் சென்றவனே. கண்-அறிவு. தீமொழி-பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்பன. வாய்மொழி-சத்தியம். உரகர்-நாகர்.

வரி 71-80 : ஆயிழை-மணிமேகலை. நவை-குற்றம். விழுப்பம்-சிறப்பு. புணை-தெப்பம். நாண்-நாணம். அது-பசி.

வரி 81-90 : இசை-புகழ். அளவைக்கு-அளத்தற்கு. விசுவா மித்திரன் கோடையில் நாயூன் தின்ன முயன்றதைத் தீவதிலகை கூறினாள். அந்தணன்-விசுவாமித்திரன். இந்திர சிறப்பு-பலியிடுதல், உண்பதற்கு முன்பு இதனைச் செய்ய வேண்டும் என்பது விதி.

வரி 91-100 : ஆற்றுநர்-செல்வர். ஆற்றுமாக்கள்-வறியவர். மேற்று-மேலது. மண்திணிஞாலம்-அணுக்கள் செறிந்த நிலவுலகம். உரவோய்-வலிய அறிவினை உடையாய். கயக்கறு-கலங்குதல் அற்ற. கரி-சான்று.

வரி 101-109 : அவள் - தீவதிலகை. கோமகன் - புத்தன். தூமொழியார்-மாதவியும் சுதமதியும். பழுது-குற்றம். மாதவன்-அறவண அடிகள். படர்கேம்-செல்லுவோம், தன்மைப் பன்மை வினைமுற்று.

கேள்விகள்

1. தீவதிலகை யாவள் ?
2. 'நீ யார் ?' என்று கேட்ட தீவதிலகைக்கு மணிமேகலை கூறிய பதில் யாது ?
3. புத்த பீடிகையின் சிறப்பு யாது ?
4. தீவதிலகை அமுதசுரபியைப்பற்றி யாது கூறினாள் ?
5. சோற்றை 'ஆருயிர் மருந்து' என்பது எவ்வாறு பொருந்தும் ?

6. மணிமேகலை யாது கூறிப் புத்த பீடிகையை வணங்கினாள்?
7. பசிப்பிணி என்னும் பாவியின் கொடுமைகள் யாவை?
8. விசுவாமித்திரன் கூறப்பெற்ற சந்தர்ப்பம் யாது?
9. தீவதிலகை இறுதியில் மணிமேகலைக்குக் கூறிய நல்லுரைகள் யாவை?

பயிற்சி

1. கீழ்வருவனவற்றை வாக்கியங்களிற் பயன்படுத்துக:—பொற்கொடி, பூங்கொடி, அடியிணை, வலங்கொண்டு, பெருமைசால், அறமொழி.

2. பிரித்துக் காட்டுக:—தண்மலர், ஈங்கெனை, ஓங்குயர், பைந்தொடி, அந்நாள், இளங்கொடி, கடும்பகை.

3. சேர்த்துக் கூறுக:—குடி+பிறப்பு, இசை+சொல், பசி+பிணி, மெய்+நெறி, உயிர்+கொடை, தன்+அடி.

4. இப்பாடப் பகுதியில், தீவதிலகை கூறிய செய்திகளைத் தொகுத்து இருபத்தைந்து வரிகளில் எழுதுக.

5. ஆபுத்திரன் வரலாற்றை (ஆசிரியரிடம் கேட்டு) இருபது வரிகளில் எழுதுக.

2. பெருங்கதை

உதயணன் வரலாறு முதலில் பைசாசமொழியில் எழுதப்பட்டது; பின்னர்க் கி. பி. ஆறும் நூற்றாண்டில் துர்விநீதன் என்னும் கங்க அரசனால் வடமொழியில் எழுதப்பட்டது. இவ்வடமொழி நூலைப் பின்பற்றியே கொங்குவேளிர் என்பவர் தமிழில் பெருங்கதையைப் பாடினார். இவர் காலம் கி.பி. 7 அல்லது 8ஆம் நூற்றாண்டு என்னலாம். இந்நூலில் 6 காண்டங்கள் உள்ளன. ஒவ்வொரு காண்டத்திலும் பல காதைகள் உள்ளன. இங்குள்ள பாடப் பகுதி முதற் காண்டமாகிய உஞ்சைக் காண்டத்தில் உள்ளது.

[வட நாட்டில் உஞ்சை (உச்சைனி)நகரத்தின் அரசன் பிரச்சோதனன். இவனுக்கு அடங்கிய அரசர் பலர். அவருள் உதயணன் ஒருவன். அவன் தன் தாய்மாமன் நாட்டையும், தனது நாட்டையும் ஆண்டு வந்தான்; ஆனால், பேரரசனான பிரச்சோதனனுக்குக் கப்பம் கட்டவில்லை. அதனால் வெகுண்ட பேரரசன் உதயணனைச் சூழ்ச்சியால் சிறைப்படுத்தினான். உதயணன் அமைச்சனான யூகி என்பவ

னது சூழ்ச்சியால் பேரரசனது பட்டத்து யானை வெறிகொண்டது. உதயணன் அவ்யானையை யாழிசையால் அடக்கினன்; அவனது வேண்டுகோளின்படி அவன் புதல்வர்க்குப் போர்ப் பயிற்சியையும், மகளான வாசவதத்தைக்கு யாழ் வித்தையையும் கற்பித்து வரலானன். உதயணனும் வாசவதத்தையும் காதல் கொண்டனர்.

யூகி தன் வீரரையும் பெண்டிர் சிலரையும் உச்சைனியில் பல வேலைகளில் சென்று சேரும்படி ஏவினன். அவர்கள் அவ்வாறே பகைவன் நகரத்தில் பணிபுரிந்து வந்தனர். மன்னன் ஆண்டு தோறும் இருபத்தொருநாள்வரையில் நீரணிவிழாக் கொண்டாடுதல் வழக்கம். அவன் அவ்வழக்கப்படி விழாக் கொண்டாட ஏற்பாடு செய்தான். அப்பொழுது யூகியால் முன்பு அனுப்பப்பட்ட மகளிர் வீடுகட்குத் தீ வைக்கவேண்டும், அப்போது உண்டாகும் குழப்பத்தில் உதயணன் வாசவதத்தையை யானைமீது ஏற்றிக்கொண்டு தப்பவேண்டும், பகைவர் எதிர்ப்பின் யூகியின் வீரர்கள் அவர்களை எதிர்த்துப் போர் புரிய வேண்டும் என்பது யூகியின் திட்டம். இப் பாடப் பகுதி, இத்திட்டத்தையும் இது நிறைவேற்றப்பட்டதையும் தெரிவிக்கிறது.]

யூகி சொல்லியதை
உதயணனுக்கு வயந்தகன் கூறுதல்

பாகியல் உள்ளத்துப் படிமந் தாங்கிய
யூகி சூழ்ந்த வுரைப்பருஞ் சூழ்ச்சி
வாய்திறந் தின்றிது கோமகற் குரையெனக்
கூறினன் "அருளிக் குறிப்பிற் கேண்மதி;
செறுநர் சிறையகப் பட்டன னெயினும்
உறுவலி நாகத் தொற்றிடம் பார்த்தல்
அறைகடன் ஞாலத் திறைகடன் ஆதலின்
நம்மை யெள்ளிய வெம்மை வேந்தன்
சூழ்ச்சி வெள்ளத் தாழ்ச்சி யெய்தி
ஒன்ற தோருந் துன்னினர் ஆடும்
நெடுநீர் விழவிற் படைபிடித் தோரைக்
கடிமுறை கடிவ தல்ல தில்லெனா
இடுமணி யானை யெருத்தம் ஏற்றி
அடன்முர சறைந்தமை யறிந்தனம் ஆதலின்
உத்தரா பதத்தும் ஒப்புமை யில்லாப்
பத்திரா பதியைப் பண்ணமைத் தியற்றித்
தான்மேற் கொண்ட தன்மையன் ஆதலின்

நூன்மேற் சூழ்ந்த நுனிப்பில் வழாமைச்
செருவடு வேந்தனும் பெருநடுக் கெய்தத்
தொகைகொள் மாடத் தகநகர் வரைப்பின்
நகைகொள் முறுவல் நந்நாட் டாட்டியர்
புகையெரி பொத்திய புணர்ப்புவகை யுண்மையின்
ஊர்வயிற் கம்பலை யல்ல தொருவரும்
நீர்வயிற் கம்பலை நினைக்குநர் இல்லை
இல்லை யாதலின் வெல்சமம் பெருக்கி
வேந்தற் கோடல் வியனொடு கெடுத்தல்
ஆங்கவன் மகளை யருஞ்சிறை வௌவுதல்
மூன்றினுள் ஒன்றே காய்ந்தவர் கடுந்தொழில்
தோன்றக் கூறிய மூன்றி னுள்ளும்
முன்னைய இரண்டும் முடியா மற்றவன்
அரும்பெறன் மடமகள் அமிழ்துபடு தீஞ்சொல்
ஏசுவ தில்லா எழில்படு காரிகை
வாசவ தத்தைக்கு வலத்த னாகிச்
செந்தீ வெம்புகை யிம்பர்த் தோன்றலும்
அந்தீங் கிளவியை யாண்மையிற் பற்றிக்
காற்பிடி தன்னொ டேற்றுக ஏற்றலும்
வேற்படை யிளையர் நாற்பெருந் திசையும்
வாழ்க வுதயணன் வலிக்கநங் கேளெனப்
பாழினு முழையினுங் காழில் பொத்தினும்
ஒளித்த வெம்படை வெளிப்பட ஏந்தி
மலைக்குநர் உளரெனின் விலக்குந ராகித்
தொலைக்கு நம்படை துணிந்திது கருதுக
இமைத்தோர் காணா இயற்கைத் தாக
அமைக்கப் பட்ட அணிநடை மடப்பிடி
நண்ணா மன்னன் நாடுதலை மணந்த
ஐந்நூற் றேருதல் ஆற்றா தாயினும்
முந்நூற் றெழுபது முப்பதும் ஓடி
வீழினும் வீழ்க வேதனை யில்லைக்
கூழினும் உடையினுங் குறிப்பின ராகிய
நாட்டுப்புற மாக்களும் வேட்டுவத் தலைவரும்
குறும்பருங் குழீஇய குன்றுடைப் பெருநா

டறிந்தோர்க் காயினும் அணுகுதற் கரிய
அரிய வாயினும் உரியவை போல
இயற்றினன் பண்டே கவற்சி நீங்கி
இன்னன் என்று தன்னறி வுறீஇப்பின்
குற்றப் படினும் அற்றம் ஓம்பிப்
போதத்தின் அகன்று சாதத்தின் வழிநின்
றடுகளிக் குரவைசேர் ஆர்கலி யாளர்
நடுகற் படப்பை யிடுகற் சீறூர்
கண்கூட் டிருந்த ஐம்பதிற் றிரட்டிப்
புல்பரந்து கிடந்த கல்லதர் கடந்தபின்
தமரன் மாக்களைத் தருக்கி னூறும்
அமரடு நோன்றாள் நமருளர் அவ்வயின்
இன்னவை பிறவுந் தன்மனத் தடக்கித்
தானவண் ஒழிக மானவன் நகரில்
இழுக்குடைத் தென்னும் எண்ணமுண் டாயினும்
வழுக்குடைத் ததனை வலித்தல் நீங்குக
யாவை யாயினும் யான்றுணி கருமம்
தீய தின்மை தெளிகவெம் பெருமகன்
யூகி யென்னும் உரைபரந் தோடப்
புல்வா யினத்திற் புலிபுக் காங்குக்
கொல்வாள் வீசிக் கூற்றுத்தலை பனிப்ப
வெல்போர் வேந்தன் வீரரைச் சவட்டி
எய்தப் போதுவல் ஏதம் ஆயினும்
ஐயம் இன்றி யான்றுணி கருமம்
செய்யா னாயின் வையம் இழக்கும்
மையல் யானை மன்னவன் றானென
இயைந்த தோழன் எண்ணிய கருமம்
வயந்தக குமரன் வத்தவற் குரைப்ப...

[அது கேட்ட உதயணன் யூகியின் சொற்படி நடப்பதாகக் கூறித் தான் ஏறியிருந்த யானையை நடத்திச்சென்று வாசவதத்தை நீராடும் பெருந்துறையை அடைந்தான். அப்போது மாறுவேடத்தில் இருந்த யூகியின் வீரர் "உதயணனும் யூகியும் வாழ்க" என்று கூவிக்கொண்டே வாளை வீசிக் குழப்பத்தை உண்டாக்கினர். யூகியால் அனுப்பப்பட்ட மகளிர் வீடுகட்குத் தீ வைத்தனர். எங்கும்

குழப்பமே காணப்பட்டது. பிரச்சோதனன் வாசவதத்தையைக் காக்கும்படி தன் ஏவலர் வாயிலாக உதயணனுக்கு வேண்டுகோள் விடுத்தான்.]

காவலர் உதயணனிடம் உரைத்தல்

"காவல் மாக்களுங் காஞ்சுகி முதியரும்
ஏவல் இளையரும் எதிரெழுந் தோடி
மாடமும் கடையும் மதிற்புறச் சேரியும்
ஓடெரி கவரலின் ஊர்புகல் ஆகாது
வையமுஞ் சிவிகையுங் கைபுனை யூர்தியும்
காற்றுப்பொறி கலக்க வீற்றுவீற் றாயின
போக்கிடம் எங்கட்குப் புணர்க்க லாகா
தாக்கிடம் எமக்குமுண் டாக அருளி
ஆய்ந்த நல்யாழ்த் தீஞ்சுவை யுணர்ந்தநின்
மாணாக் கியையெம் மன்னவன் அருளால்
இரும்பிடி நின்னோ டொருங்குடன் ஏற்றிக்
கொடுக்குவ வேண்டு"மென் றெடுத்தெடுத் தேத்தி
அருந்திறற் காவலர் அச்சம் எய்திப்
பெருந்திறன் மன்னற்குப் பணிந்தனர் உரைப்ப,

உதயணன் செயல்

எவ்வா யமரும் இன்மொழிக் கிளவி
அவ்வாய் மங்கலம் ஆகென விரும்பிக்
கவ்வையும் பெருகிற் றுய்தலு மரிதே
இவ்வழி மற்றிவண் நிற்றலும் ஏதம்
வருக ஈண்டென வத்தவன் வலிப்பத்
தவாஅக் காதலொடு தகையாழ் காட்டும்
உவாத்தி யாதலின் உறுதியும் அதுவெனச்
செய்கையின் அறியாச் சிதைவிற் றாகிக்
கௌவை யெரியுங் காற்றினொ டெழுந்த
தரிமான் அன்ன நம் பெருமாற் சேரத்
திருமா நுதலியைத் தீதொடு வாரா
துதயண குமரன் ஒருபிடி யேற்றிப்
போவது பொருளெனக் காவலர் இரப்பப்
பெரியோர்க் குதவிய சிறுநன் றேய்ப்பக்

கரவாது பெருகிக் கையிகந்து விளங்கும்
உள்ளத் துவகை தெள்ளிதின் அடக்கி
மதர்வை வண்டொடு சுரும்புமணந் தாடும்
குயில்பூங் கோதையொடு குழற்குரல் வணரும்
கயிலெருத் திறைஞ்சிக் கானிலங் கிளைஇ
உருகு நெஞ்சத் துதயண குமரனைப்
பருகும் வேட்கையள் பையுள் கூர
நிறையும் நாணும் நிரந்துமுன் விலங்க
நெஞ்சு நேர்ந்தும் வாய்நேர்ந் துரையா
அஞ்சில் ஓதியை நெஞ்சு வலியுறப்
பயிற்சி நோக்கி னியற்கையிற் றிரியாக்
காஞ்சன மாலை கையிசைத் தொருங்கே
ஏந்தினள் ஏற்ற இரும்பிடி யிரீஇ
முடியா வாள்வினை முடித்தனம் இன்றென
வடியோர் தடங்கண் வாளென மிளிரும்
கொடியேர் சாயலைக் குடங்கையிற் றழீஇப்
பிடியேற் றினனாற் பெருந்தகை யுவந்தென்.

அருஞ்சொற்பொருள்

வயந்தகன் – இவன் உதயணன் அமைச்சருள் ஒருவன். அவனுடைய உயிர்த்தோழன்; அந்தணன்; அவனது குறிப்பறிந்து நடந்து மதிப்புப் பெற்றவன்.

வரி 1-10. பாகு+இயல் - பகுத்து அறிதல் பொருந்திய. படிமம் - தவவேடம். யூகி - உதயணன் அமைச்சன். கோமகன் - உதயணன். கேண்மதி - கேட்டருள்க. செருநர் - பகைவர். நாகம் - யானை. உறுவலி - வினைத்தொகை. வலிவுறு - வலிமை பொருந்திய. ஒற்றிடம்-அறியும் இடம். அறைகடல் - வினைத்தொகை. ஞாலம் - உலகம். இறை-அரசன். எள்ளிய-பரிகசித்த. வெம்மை வேந்தன் - கொடிய அரசன், பிரச்சோதனன். சூழ்ச்சி - ஆலோசனை. ஒன்னாதோர் - பொருந்தாதவர், பகைவர். துன்னினர் – நெருங்கியவராய். ஆடும் - நீராடும்.

வரி 11-20. நெடுநீர் - நெடுமை+நீர்-பண்புத்தொகை. எருத்தம் - கழுத்து. உத்தராபதம்-வடநாடு. பத்திராபதி-பிரச்சோதனனுக்கு உரிய ஒரு பெண்யானை; உதயணன் நீர்விழாவில் இதன்மீது ஊர்ந்து சென்றான். நூல்மேல் சூழ்ந்த - நூலில் கூறியபடி ஆராய்ந்த,

செரு - போர். வேந்தன் - பிரச்சோதனன். அகநகர் வரைப்பில் - உச்சைனியின் உள்ளிடத்தில்.

வரி 21-30. முறுவல் - புன்சிரிப்பு. நந்நாட்டாட்டியர் - நம் நாட்டு ஆட்டியர் - நம்முடைய நாட்டிலிருந்து வருவிக்கப்பட்ட கள்ள மகளிர். புணர்ப்புவகை - யான் (யூகி) செய்திருக்கும் விதம். கம்பலை - ஓசை. சமம்-போர். வேந்தன்-பிரச்சோதனன். கோடல் - சிறைப்படுத்திக்கொள்ளுதல். வியன் - பெரிய. காய்ந்தவர் - பகைத் தவர். கடுந்தொழில்-கடுமை+தொழில் - பண்புத்தொகை. மூன்று-கோடல், கெடுத்தல், வெளவுதல்.

வரி 31-40. காரிகை - பெண். இம்பர்-இவ்விடம். அம்பர் - அவ்விடம். அம்தீங்கிளவி - அழகிய இனிய சொற்களைப் பேசும் வாசவதத்தை. காற்பிடி - கால்+பிடி - காற்றைப் போலச் செல்லுவதில் சிறந்த பெண்யானை, பத்திராபதி. ஏற்றுக - வியங்கோள் வினைமுற்று. வேற்படையினையர் - போர் செய்வதற்கென்று யூகியால் அனுப்பப்பட்டு மாறுவேடத்திலிருந்த வீரர்கள். கேள் - உறவினர். பாழ் - பாழ்பட்ட இடங்கள். முழை - குகை. காழ் - வயிரம். பொத்து - மரப்பொந்து. வெம்படை - வெம்மை+படை, பண்புத் தொகை.

வரி 41 - 50. மலைக்குநர் - போர் செய்பவர். நண்ணு மன்னன்-பிரச்சோதனன். ஐந்நூறு - அக்காலத்திலிருந்த காதம், யோசனை முதலிய நீட்டலளவைகளுள் ஒன்றனைக் குறிப்பதாகலாம். கூழ் - உணவு. குறிப்பினர் - கருத்துடையவர்.

வரி 51 - 60. குறும்பர் - குறுநில மன்னர். குழீஇய-குழுமிய-சேர்ந்த. குழீஇய-சொல் சிதைந்து அளபெடுத்தது, சொல்லிசை அளபெடை. இயற்றினன்-அமைத்து வைத்துள்ளேன், தன்மை ஒருமை வினைமுற்று. இன்னன்-இன்னவன். அறிவுறீஇ-தெரிவித்து. உறீஇ-சொல்லிசை அளபெடை. அற்றம் - சோர்வு. ஓம்பி - ஒழித்து. போதம்-அறிவு. சாதம்-பிறப்பு. அடுகளி......சீறூர் - பிரச்சோதனன் நாட்டு எல்லை அருகில் இருக்கும் மலைநாட்டார் முழக்கமிட்டுக் கொண்டு குரவையாடுவர். குரவை - முல்லை அல்லது குறிஞ்சி நில மகளிர் தம்முட் கைகோத்தாடும் கூத்துவகை; ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை. அங்கு, நட்ட கற்களை எல்லைகளாகக்கொண்ட தோட்டங்களைக்கொண்ட சீறூர்கள் இருக்கும். சீறூர் - சிற்றூர். கூட்டு-கொள்ளை. கண்கூட்டு இருந்த - கருதப்படுகின்ற கொள்ளையுடன் இருந்த.

வரி 61 - 70. கல் அதர்-கற்கள் கிடக்கின்ற வழி. தமரன்-தமர்+அல்-தமரல்-தம்மவரல்லாத. நூறும்-அழிக்கும். நமர் - நம்மவர். அவ்வயின் - அவ்விடத்தில். அவண் - அவ்விடம். மானவன்-பிரச்

சோதனன். நகர் - உச்சையினி. வலித்தல் - மேற்கொள்ளுதல். யான் - யூகி. தெளிக-வியங்கோள் வினைமுற்று. எம்பெருமகன் - உதயணன்.

வரி 71 - 80. புல்வாய் - மான். இனம்-கூட்டம். கொல்வாள் - வினைத்தொகை. பனிப்ப - நடுங்க. வேந்தன் - பிரச்சோதனன். வெல்போர் - வினைத்தொகை. சவட்டி - அழித்து. இழக்கும் - இழப்பான், 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று. மன்னவன் - உதயணன். கருமம் - செயல். வத்தவன்-வத்தவநாட்டு மன்னனான உதயணன். காஞ்சுகி முதியர்-சட்டையிட்ட முதியவர்; இப்பெரியோர் அரசனுடனே இருந்து அறிவுரை கூறுவோர்.

வரி 81 - 90. சேரி - பழைய ஊரைச் சேர்ந்த பகுதி. புறச்சேரி-ஊருக்கு வெளியில் அமைந்த மக்கள் வாழிடம். வையம் - ஒருவகை வண்டி. சிவிகை - பல்லக்கு. கைபுனை - அலங்கரிக்கப்பட்ட. ஊர்தி - வாகனம். வீறு - வேறு. மாணுக்கி × மாணுக்கன். இரு - பெரிய.

வரி 91 - 100. கொடுக்குவ - பாதுகாத்து அளித்தல். எடுத்தெடுத்து - அடுக்குத்தொடர். திறல் - வலிமை. மன்னன் - உதயணன். பணிந்தனர் - பணிந்தவராய், முற்றெச்சம்; வினைமுற்று வினையெச்சப் பொருளில் வந்துள்ளமை அறிக. கவ்வை - முழக்கம். உய்தல் - பிழைத்தல். ஏதம் - குற்றம். வருக - வியங்கோள் வினைமுற்று. வலிப்ப - துணிந்து கூற. தவா - குறையாத. உவாத்தி - ஆசிரியன். உறுதி - செய்யத்தகுவது.

வரி 101 - 110. நம்பெருமான் - பிரச்சோதனன். சேர - அடையும்படி. திருமாநுதலி - அழகிய சிறந்த நெற்றியை உடையவள், வாசவதத்தை. இரப்ப - வேண்ட. கரவாது - ஒளியாது. மதர்வை-மயக்கம்.

வரி 111 - 120. குயில்......வணரும் - வல்லோனால் தொடுக்கப்பட்ட பூமாலையோடு கூந்தற் கொத்து வளைந்து கிடக்கின்ற. கயில் - அணிகலையுடைய. எருத்து - கழுத்து. பையுள் - துன்பம். கூர-பொருந்த. நிறை - மனவுறுதி. நிரந்து - வரிசையுற்று. விலங்க - தடுக்க. அஞ்சில் - அம் + சில் - அழகிய சிலவாகிய. ஓதி - கூந்தலையுடையாள், வாசவதத்தை. திரியா-வேறுபடுத்தி. காஞ்சனமாலை-வாசவதத்தையின் உயிர்த்தோழி. இரீஇ - இருத்தி, அமரச்செய்து; சொல்லிசை அளபெடை.

வரி 121 - 124. வடி - மாவடுவின் பிளப்பு. ஏர் - ஒத்த. சாயல் - சாயலையுடைய வாசவதத்தை. குடங்கையின் - வளைந்த கையினால். தழீஇ - தழுவி, சொல்லிசை அளபெடை. பெருந்தகை-உதயணன்.

கேள்விகள்

1. நீரணி விழா என்பது யாது?
2. யூகி வயந்தகன் வாயிலாக உதயணனுக்குச் சொல்லி யனுப்பிய செய்தி யாது?
3. "தோன்றக் கூறிய மூன்றின் உள்ளும்"— மூன்று யாவை?
4. காவலர் உதயணனிடம் யாது கூறினர்?
5. உதயணன் யூகியின் யோசனைப்படி என்ன செய்தான்?
6. இப்பாடத்தில் வாசவதத்தையைக் குறிக்கும் சொற்களும் சொற்றொடர்களும் யாவை?
7. இப்பாடத்தில் உதயணனைக் குறிக்கும் சொற்களும் சொற்றொடர்களும் யாவை?

பயிற்சி

1. இப்பாடப் பகுதிகொண்டு யூகியைப்பற்றி ஒரு சிறுகட்டுரை வரைக.

2. கீழ்வருவனவற்றை வாக்கியங்களில் பயன்படுத்துக:— சூழ்ச்சி, ஞாலம், கம்பலை, காரிகை, குறும்பர், படப்பை, தீஞ்சுவை, உவாத்தி, கரவாது, நிரந்து.

3. இப்பாடச் செய்தியை உதயணன் நமக்குக் கூறுவது போலக் கூறுக.

4. பிரித்துக் காட்டுக:—கோமகற்கு, ஞாலத்திறை, பண்ணமைத்தியற்றி, பெருநடுக்கு, நந்நாட்டாட்டியர், வியனுடு, அருஞ்சிறை, கடுந்தொழில்.

5. சேர்த்துக் கூறுக:—பெருமை+திசை, வெம்மை+படை, விலக்குநர்+ஆகி, மடம்+பிடி, நாடு+புறம், தன்+அறிவு, கல்+அதர், உண்டு+ஆயினும், எழுந்து + ஓடி, எடுத்து+எடுத்து, நேர்ந்து+உரையா, குடம்+கை.

3. பெரிய புராணம்

மநுநீதிச் சோழன்

பெரிய புராணம் என்பது 63 நாயன்மார்களின் வரலாறுகளைக் கூறும் பெருங்காவியம். இதனைச் செய்தவர் சேக்கிழார். இவர் இரண்டாங் குலோத்துங்க சோழனது முதல் அமைச்சர்; கி. பி. 12ஆம் நூற்றாண்டினர்; பெரும் புலவர்; சைவ சமயப் பெரியார். இவர் சென்னையை அடுத்த குன்றத்தூரில் வாழ்ந்தவர்.

நகரச் சிறப்பு

சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர். 1

மநுநீதிச் சோழன்

அன்ன தொல்நக ருக்கர சாயினான்
துன்னு செங்கதி ரோன்வழித் தோன்றினான்
மன்னு சீர்அந பாயன் வழிமுதல்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே. 2

[இம்மன்னன் மகன் வீதிவிடங்கன் என்பவன். அவன் அரசனுக்குரிய பலவகைத் துறைகளில் பயிற்சி பெற்றவன். அவன் ஒருநாள் திருவாரூரில் உள்ள சிவபெருமான் திருக்கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபட விரும்பினான்.]

வீதிவிடங்கன் தேர்மீது செல்லுதல்

திங்கள்வெண் கவிகை மன்னன் திருவளர் கோயில் நின்று
மங்குல்தோய் மாட வீதி மன்னிளங் குமரர் சூழக்
கொங்கலர் மாலை தாழ்ந்த குங்குமக் குவவுத் தோளான்
பொங்கிய தானை சூழத் தேர்மிசைப் பொலிந்து போந்தான்.

பரசுவந் தியர்முன் சூதர் மாகதர் ஒருபால் பாங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வளை ஒருபால் மிக்க
முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங்கொலி ஒருபால் வென்றி
அரசிளங் குமரன் போதும் அணிமணி மாட வீதி.

பசுக் கன்றின் செயல்

தனிப்பெருந் தருமந் தானோர் தயாவின்றித் தானை மன்னன்
பனிப்பில்சிந் தையினில் உண்மைப் பான்மைசோ தித்தால் என்ன
மனித்தர்தன் வரவு காணா வண்ணமோர் வண்ணம் நல்லான்
புனிற்றிளங் கன்று துள்ளிப் போந்ததம் மறுகி னூடே. 5

அம்புனிற் றாவின் கன்றோர் அபாயத்தின் ஊடு போகிச்
செம்பொனின் தேர்க்கால் மீது விசையினால் செல்லப் பட்டே
உம்பரி னடையக் கண்டங் குருகுதாய் அலமந் தோடி
வெம்பிடும் அலறும் சோரும் மெய்ந்நடுக் குற்று வீழும். 6

[பசுக் கன்று தனது தேர் உருளையில் அகப்பட்டு மடிந்ததை அறிந்த வீதிவிடங்கன் தேரிலிருந்து இறங்கி, இறந்த கன்றையும் அலறிய தாய்ப் பசுவையும் கண்டு மனம் துடித்தான்; தன்னை நொந்துகொண்டான்; அக்குற்றத்தைப் போக்கக் கழுவாய் இருப்பின், தன் தந்தைக்குத் தெரியாமலே அதனைச் செய்யலாம் என்று எண்ணி, மறையவர் அறிவுரையைக் கேட்கச் சென்றான்.]

தாய்ப் பசுவின் செயல்

தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்தஆத் தரியா தாகி
முன்னெருப் புயிர்த்து விம்மி முகத்தினில் கண்ணீர் வார
மன்னுயிர் காக்குஞ் செங்கோல் மனுவின்பொன் கோயில் வாயில்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினால் புடைத்த தன்றே. 7

[மன்னன் ஆராய்ச்சிமணியின் ஓசை கேட்டுத் திடுக்கிட்டான். அப்பொழுது காவலர் ஓடி வந்து, பசு மணி அசைத்தமையைக் கூறினர். மன்னன் வெளியில் வந்து பசுவை நோக்கினான். அப்பொழுது அமைச்சன் ஒருவன் அப்பசுவின் துயர்க்கு உரிய நிகழ்ச்சியைக் கூறினான். அது கேட்ட அரசன் திடுக்கிட்டான். அவன் மனம் வேதனைப்பட்டது.]

அரசனது வருத்த நிலை

மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தில் நீடும்
என்னெறி நன்றால் என்னும் என்செய்தால் தீரும் என்னும்
தன்னிளங் கன்று காணுத் தாய்முகங் கண்டு சோரும்
அந்நிலை அரச னுற்ற துயரமோர் அளவிற் றன்றால். 8

அமைச்சர் யோசனை

மந்திரிகள் அதுகண்டு மன்னவனை அடிவணங்கிச்
"சிந்தைதளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றால்
கொந்தலர்தார் மைந்தனைமுன் கோவதைசெய் தார்க்குமுறை
அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம்"என்றார்.

மன்னன் மறுப்புரை

"வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை இழந்தலறுங் கோவுறுநோய் மருந்தாமோ
இழக்கின்றேன் மைந்தனைஎன் றெல்லீருஞ் சொல்லியஇச்
சழக்கின்று நானிசைந்தால் தருமந்தான் சலியாதோ? 10

"மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ? 11

"என்மகன்செய் பாதகத்துக்கிருந்தவங்கள்செய இசைந்தே
அன்னியன் ஓர் உயிர்கொன்றால் அவனைக்கொல் வேனுனல்
தொன்மனுநூல் தொடைமனுவால் துடைப்புண்ட தெனும்வார்த்தை
மன்னுலகில் பெறமொழிந்தீர் மந்திரிகள் வழக்கெ"ன்றான்.

அமைச்சர் மறுமொழி

என்றரசன் இகழ்ந்துரைப்ப எதிர்நின்ற மதிஅமைச்சர்
"நின்றநெறி உலகின்கண் இதுபோல்முன் நிகழ்ந்ததால்
பொன்றுவித்தல் மரபன்று மறைமொழிந்த அறம்புரிதல்
தொன்றுதொடு நெறியன்றே தொல்நிலங்கா வல"என்றார்.

அரசன் எதிர்ப்புரை

அவ்வண்ணம் தொழுதுரைத்த அமைச்சர்களை
முகம்நோக்கி
மெய்வண்ணந் தெரிந்துணர்ந்த மனுவென்னும்
விறல்வேந்தன்
"இவ்வண்ணம் பழுதுரைத்தீர்" என்றெரியின்
இடைத்தோய்ந்த
செவ்வண்ணக் கமலம்போல் முகம்புலர்ந்து
செயிர்த்துரைப்பான். 14

அவ்வுரையில் வருநெறிகள் அவைநிற்க அறநெறியின்
செவ்வியஉண் மைத்திறம்நீர் சிந்தைசெயா துரைக்கின்றீர்
எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித் தாம்இடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி எறிந்துவிழுந் ததுவிளம்பீர்.

போற்றிசைத்துப் புரந்தரன்மால் அயன்முதலோர்
புகழ்ந்திறைஞ்ச
வீற்றிருந்த பெருமானுர் மேவியுறை திருவாரூர்த்
தோற்றமுடை உயிர்கொன்றுன் ஆதலினுல்
துணிபொருள்தான்
ஆற்றவுமற் றவற்கொல்லும் அதுவேயாம் எனநினைமின்.

மன்னன் முடிவு

எனமொழிந்து மற்றிதனுக் கினியிதுவே செயல்இவ்வான்
மனமழியுந் துயரகற்ற மாட்டாதேன் வருந்துமிது
தனதுறுபே ரிடர்யானும் தாங்குவதே தருமம்என
அநகனரும் பொருள்துணிந்தான் அமைச்சரும்அஞ்
சினரகன்றுர். 17

செயற்கரிய செயல்

மன்னவன்தன் மைந்தனையங் கழைத்தொருமந் திரிதன்னை
முன்னிவனை அவ்வீதி முரண்தேர்க்கால் ஊர்கஎன
அன்னவனும் அதுசெய்யா தகன்றுதன்னு ருயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறுகணைந்தான்.

ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்? 19

இறைவன் காட்சியும் அருளும்

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ
மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்.

சடைமருங்கில் இளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையுமுன் கண்டரசன்
போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற்
கருள்கொடுத்தான். 21

அந்நிலையே உயிர்பிரிந்த ஆன்கன்று மவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியு முடனெழலும்
இன்னபரி சானென் றறிந்திலன்வேந் தனும்யார்க்கும்
முன்னவனே முன்நின்றால் முடியாத பொருளுளதோ? 22

அருஞ்சொற்பொருள்

1. சொன்ன - முன்பு சொல்லப்பட்ட. நாட்டிடை - சோழ நாட்டில். தொன்மையில் மிக்கது-மிக்க பழமை வாய்ந்தது. மன்னு-நிலைபெற்ற. மாமலராள்-இலக்குமி. வன்னி-வன்னித்தழை. ஆறு-கங்கை. பொதி-வைத்துள்ள.

2. அன்ன-மேலே சொல்லப்பட்ட சிறப்புப் பொருந்திய. அரசு-அரசன். துன்னு-நெருங்கிய. கதிரோன் வழி-சூரியனது மரபு. அநபாயன்-சோழன், இரண்டாம் குலோத்துங்கன்: சேக்கிழார் காலத்தவன். வழிமுதல்-வழியில் முன்னவன். மின்னு-விளங்குகின்ற.

3. கவிகை-குடை. மன்னன்-மனுநீதிச் சோழன். மங்குல்-மேகங்கள். தோய்-படியும். தோய்மாடம்-வினைத்தொகை. கொங்கு-

மணம். குங்குமம்-கலவைச் சாந்து. குவவு-திரட்சி. தானை-சேனை. பொலிந்து-காட்சி பெற.

4. பரசு-புகழ் பாடிக்கொண்டுவரும். வந்தியர்-அரசர் புகழைப் பாடுவோர், பாணர். சூதர்-அரசர் முன்பு நின்று ஏத்துவோர்; அரசனைத் துயிலெழுப்பும்போது பாடுவோர். மாகதர்-அரசனுடைய வீரச் செயல்களைப் புகழ்ந்து பாடுவோர்; இவர்கள் இருந்து ஏத்துவோர். பாங்கர்-பக்கம். விரை-வாசனை. குழலார்-கூந்தலையுடைய பெண்கள். விரை...வெள் வளை-இவ்விளவரசன் போன்ற நாயகனை நாம் அடைவோமோ என்று மனம் வருந்த, மேனி இளைத்துக் கை வளையல்கள் நிலத்தில் விழும் என்பது பொருள். ஆர்ப்ப-ஒலிக்க. முழங்கொலி-வினைத்தொகை. போதும்-செல்லும்.

5. தனி-ஒப்பற்ற. தருமம்-அறக்கடவுள். பனிப்பில்-பனிப்பு+ இல்-அசையாத. மனித்தர்-மனிதர். காணு-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். வண்ணம்-அழகும் உருவமும். நல்லான்—நல்+ஆன்-நல்ல பசு. புனிற்றிளம்-மிக்க இளமையுடைய. புனிறு-ஈன்றணிமை. மறுகின் ஊடு-தெருவுக்குள்ளே.

6. உம்பரின் அடைதல்-இறத்தல், அமங்கலம் மங்கலமாகக் கூறப்பட்டது. உருகுதாய்-வினைத்தொகை. அலமந்து-துன்புற்று.

7. வீய-இறந்துபட. நெருப்பு உயிர்த்து-நெருப்பு வீசுதல் போலப் பெருமூச்சுவிட்டு. செங்கோல்-செம்மை+கோல், பண்புத் தொகை. பொன்-அழகிய. கோயில்-அரண்மனை. புடைத்தது-அடித்தது.

8. மன்-நிலைபெற்ற. புரந்து-காத்து. கடிந்து-நீக்கி. என்னும்-என்பான், 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று. இளங் கன்று-பண்புத் தொகை. காணு(த்தாய்)-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

9. கொந்து-கொத்து. நிறுத்தல்-நிற்பித்தல். தீர்வு-கழுவாய், பிராயச்சித்தம்.

10. வழக்கு-செய்யத் தகுவது என்று மேல் செய்யுளில் சொன்னதே தக்கது. குழ-இளமையான, உரிச்சொல். குழக்கன்று-இளமை பொருந்திய கன்று. கோ-பசு. உறுநோய்-வினைத்தொகை. சழக்கு-தீமை. தருமம்-அறக்கடவுள்.

11. காவலன்-நாட்டைக் காப்பவன், அரசன். காலை-பொழுது. பரிசனம்-அரசாங்க அலுவலர்.

12. தொடைமனு-அதே மரபில் அதே பெயருடன் பின்வந்த மனு. துடைப்புண்டது-அழிக்கப்பெற்றது.

13. மரபு-வழக்கம். மறை......புரிதல்-வேதத்தில் விதித்தபடி கழுவாய் வகுத்தல். தொன்றுதொடு-முற்காலந்தொட்டு வழங்கி வரும்.

14. மெய்வண்ணம்-உண்மையின் தன்மை. விறல்-வலிமை. பழுது-பழுதாகும் வகை. புலர்ந்து-சிவந்து. செயிர்த்து-கோபித்து.

15. அவ்வுரையில்-நீங்கள் சொன்ன அவ்வுரைகளின்படி. பெற்றம்-பசு. இப்பெற்றி-இத்தகைய. இடர்-துன்பம். வெவ்வுயிர்த்து-பெருமூச்செறிந்து. விளம்பீர்-சொல்லுங்கள்.

16. போற்றிசைத்தல்-துதித்தல். புரந்தரன்-இந்திரன். அயன்-பிரமன். மால்-திருமால். மேவி-பொருந்தி. உறை-வாழ்கின்ற. துணி பொருள்-துணியப்படும் பொருள், வினைத்தொகை.

17. இவ்வான்-இப்பசு. கருமம்-செய்பொருள். அநகன்-அரசன். அரும்பொருள்-செய்வதற்கு அரிய செயல்.

18. முரண்-முன் செய்த பாவத்திற்கு முரணாக. தேர்க்கால்-தேர்க்காலின் கீழே கிடத்தி. ஊர்க-அவன்மேல் தேரைச் செலுத்துக. அன்னவன்-அந்த அமைச்சன். மறுகு-தெரு.

19. உணரான் - உணராதவனாகி, முற்றெச்சம்; வினைமுற்று வினையெச்சப் பொருளில் வந்தது. கடன்-கடமை. மருமம்-மார்பு. ஆழி-சக்கரம். உற-பொருந்தும்படி. அருமந்த-அருமருந்து போன்ற. அரிதோ-செய்வதற்கு அரியதோ.

20. அளி-கருணை. தண்ணளி-குளிர்ந்த கருணை. தரியாது-பொறாது. அண்ணல்-பெருமை பொருந்திய சோழமன்னன். மழ-இளமை, உரிச்சொல். மழவிடை - இளமை பொருந்திய எருது. விடங்கன்-அழகன்.

21. நுதல்-நெற்றி. புடை-பக்கம்.

22. மன்னுரிமை-அரசனது உரிமை. தனிக்கன்று-ஒப்பற்ற மகன். இன்ன பரிசு ஆனான் - தான் இன்ன தன்மையை அடைந்தான். யார்க்கும்-எல்லார்க்கும். முன்னவனே-முன்னவனாகிய இறைவனே. உளதோ - ஓகாரம் எதிர்மறை; இல்லையென்றபடி.

கேள்விகள்

1. திருவாரூர் எத்தகைய சிறப்புடையது ?
2. வீதிவிடங்கன் தேர்மீது சென்றபோது மாடவீதிக் காட்சி எப்படியிருந்தது ?
3. கன்றை இழந்த தாய்ப்பசுவின் தவிப்பினைப் புலப்படுத்துக.

4. வீதிவிடங்கன் செய்த குற்றத்தைப் போக்க அமைச்சர் கூறிய யோசனை யாது?

5. மன்னன் அமைச்சர் கூறிய யோசனையை யாது கூறி மறுத்தான்?

6. தம் யோசனையை மறுத்துக் கூறிய மன்னனை நோக்கி அமைச்சர் கூறிய மறுமொழி யாது?

7. அமைச்சர் கூறிய மறுமொழி பொருத்தமன்று என்பதை அரசன் எவ்வாறு விளக்கினான்?

8. (1) "அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்."

(2) "முன்னவனே முன்நின்றால் முடியாத
பொருளுளதோ."—இடம் சுட்டி விளக்குக.

பயிற்சி

1. மாமலராள், தொன்மனு, வந்தியர், சூதர், மாகதர், வீதி விடங்கப் பெருமான்—இவர்களைப்பற்றிக் குறிப்பு வரைக.

2. பிரித்துக் காட்டுக :—செஞ்சடை, முழங்கொலி, நறுங்குழல், பெருந்தருமம், செங்கோல், கொந்தலர், சழக்கின்று, இகழ்ந்துரைப்ப, பழுதுரைத்தீர், இளம்பிறை.

3. சேர்த்துக் கூறுக :—இளமை+கன்று, மெய்+நடுக்கம், மன்+உயிர், அறம்+காப்பான், மரபு+அன்று, அ+வீதி, எ+மருங்கு, அ+அரசன்.

4. கழுவாய்பற்றி அரசனுக்கும் அமைச்சருக்கும் இடையில் நிகழ்ந்தவற்றை உரையாடல் முறையில் எழுதிக் காட்டுக.

5. இப்பாடப் பொருள்பற்றி நாற்பது வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

4. வில்லிபாரதம்

வில்லி - வில்லிபுத்தூராழ்வார். பாரதம் - பரதன் மரபினரான கௌரவர், பாண்டவர் வரலாற்றைக் கூறும் காவியம். இஃது ஏறத்தாழ நாலாயிரம் செய்யுட்களை உடையது. வில்லிபுத்தூராழ்வார் நடுநாட்டைச் சேர்ந்த சனியூரினர்; வைணவப் பிராமணர்; வடமொழியிலும் தென்மொழியிலும் நிறைந்த புலமை பெற்றவர்; வரபதியாட்கொண்டான் என்னும் சிற்றரசனால் ஆதரிக்கப்பெற்றவர்; அவனது வேண்டுகோளின்மீது பாரதத்தைத் தமிழிற் பாடினவர். இவர் 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

துருபதன் பாஞ்சால நாட்டு அரசன். அவன் மகள் திரௌபதி. அருச்சுனன் ஒருகாலத்தில் துருபதனை வென்றான். துருபதன் தன்னை வென்ற வீரனுக்கே தன் மகளைக் கொடுக்க விரும்பினான். அவன் வீரத்தையறிந்த திரௌபதியும் அவனையே மணக்க விரும்பினாள். ஆயினும், அக்கால வழக்கப்படி அரசர் அனைவரும் சுயம்வர நாளன்று சுயம்வர மண்டபத்திற்கு வந்திருந்தனர். அம்மண்டபத்தில் ஓர் இயந்திரம் நிறுத்தப்பட்டது. அதன்மீது ஒரு சக்கரம் சுழன்றுகொண்டேயிருந்தது. அதன்நடுவில் ஒரு குறி சுற்றிக்கொண்டிருந்தது. அக்குறியை அம்பெய்து வீழ்த்துபவனே திரௌபதியை மணத்தற்கு உரியவனாவன். இம்முயற்சியில் பலர் தோற்றனர். பிராமண வேடத்தில் சென்றிருந்த அருச்சுனன் ஒருவனே வெற்றி பெற்றான். இப்பகுதியில் இதுபற்றிய விவரங்களைக் காணலாம்.

[பாண்டவரும் தாயான குந்தியும் பிராமண வேடத்தில் பிராமணர் சிலருடன் வேத்திரகீயம் என்ற ஊரிலிருந்து பாஞ்சாலத் தலைநகருக்கு நடந்து வந்தனர். அவர்கள் வந்த வழியில் காலையில் தென்றல் வீசியது; பல நல்ல நிமித்தங்கள் எதிர்ப்பட்டன.]

காலையில் தென்றல்

குன்றமுங் கொடிய கானுங் கூரிருட் கங்குல் நீங்கி
நன்றுநன் றுதவ வந்தீர் நடந்துநீர் இளைத்தீர் போலும்
என்றுகொண் டுவகை யோடும் இன்மலர்க் கழுநீர் வாச
மன்றலந் தென்றல் வீசி வழிவிடாய் தணித்த தன்றே. 1

நல்ல நிமித்தங்கள்

வெறிபடு முளரி மொக்குள் விரிபதன் நோக்கிச் சுற்றும்
பொறிவரி வண்டின் ஈட்டம் புறத்திருந் திரங்க [வண்டொன்
றிறகரால் வீசி யுள்புக் கின்மது நுகர்தல் கண்டு
நெறியினன் னிமித்த மாக நெஞ்சுற நினைந்து சென்றார். 2

வண்டுறை மருங்கின் ஆங்கோர் மாங்கனி வீழ்தல் கண்டே
தண்டுறை மீன்கள் எல்லாந் தத்தமக் கிரையென் றெய்த
விண்டுறை கிழிய வோடி வென்றெருரு வாளை தன்வாய்க்
கொண்டுறை வலிமை நோக்கிக் குறிப்பினுல் உவகை
[கூர்ந்தார். 3

மாக்குரல் அளக வல்லி வதுவையின் அழகு காணத்
தாக்குரல் அடிகொள் யானைத் தரணிபர் எவரும் வந்தார்
வீக்குநன் மிளிர்பொற் பூணீர் விரைவுடன் வம்மின் என்று
கூக்குரல் விளிப்ப போலுங் கோகிலக் குரலுங் கேட்டார்.4

நீடுதல் இல்லை யின்றே நிருபதி கன்னி மன்றல்
கூடுதல் இவர்க்குண் டாகுங் கொற்றவர் குறைபொ ருதே
ஓடுதல் உண்மை என்னுத் தோகைகள் ஓகை யோடும்
ஆடுதல் நோக்கி நோக்கி அகமகிழ்ந் தேகி ஞரே. 5

பூவெலாஞ் சுரும்பு மொய்ப்பப் புனலெலாம் புள்ளு வைக
காவெலாந் துணையின் மேவ மரனெலாம் வல்லி புல்ல
ஏவெலாம் பயின்ற விற்கை யேற்றிளஞ் சிங்கம் போல்வார்
காவெலா மருங்கு தோறுங் கண்டுகண் களித்து நின்ருர்.6

திரௌபதி நிலைமை

ஆதியிற் குந்தி மைந்தர் ஐவர்க்கும் உரிய ளாம்என்
ருேதிய விதியி னுனெஞ் சுலப்புரு வுவகை கூர்வாள்
சோதிடம் பொய்யா தென்றுந் தோன்றுவர் உரியோர்
[என்றுந்
தாதியர் தேற்றத் தேற்றத் தன்மனத் தளர்வு தீர்வாள்.7

சூட்டிய தொடையன் மாலைத் தோழியர் வைக ருேறும்
தீட்டிய படங்க ளுந்தஞ் சிந்தையும் பொலிவு கொள்ளக்
கோட்டிய சிலையி னேடுங் கொடிமணித் தேரி னேடும்
காட்டிய கோல மன்றிப் பிறிதொன் றுங் காண்கி லாதாள்.8

ஆண்டெரிப் பிறந்த போதே அன்பினுல் எந்தை நேர்ந்த
பூண்டெரி மார்ப னின்றிப் பொன்னவை பொலியத்
[தோன்றி
ஈண்டெரி முன்னர் மன்னர் இழிவுற வேட்டி லானேல்
மீண்டெரி புகுவன் என்னும் எண்ணமே விளையு நீராள்.9

[சுயம்வர மண்டபத்தில் அரசர்கள் முன்னிலையில் இயந்திரமும் விற்களும் அம்புகளும் வைக்கப்பட்டன. திரௌபதியும் மணமாலையுடன் சுயம்வர மண்டபத்திற் புகுந்தாள்.]

திருஷ்டத்யும்நன் கூற்று

சிலையிது சிலீமு கங்க ளிவைகடுந் திரிகை வேகத்
திலைமுகத் துழலு கின்ற எந்திரத் திகிரி நாப்பண்
நிலையிலா இலக்கு மஃதே நெஞ்சுற யாவன் எய்தான்
கலைவலீர் அவற்கே இந்தக் கன்னியும் உரியள்
[என்றான். 10

செவிலித்தாயர் திரௌபதிக்கு அரசர்களைப்பற்றிக் கூறுதல்

திருந்தார் மன்றற் குழலணங்கின்
செவிலித் தாயர் கடல்கடைந்து
வருந்தா அமுதம் நிகர்வாளை மயில்போற்
கொண்டு மன்னவைபுக்
கிருந்தார் இருந்த காவலரை
இன்னோர் இன்னோர் இவரென்று
முருந்தார் பவளத் துவரிதழ்வாய்
முகிழ்வாள் நகைக்கு மொழிகின்றார். 11

உலைவந் த்யருஞ் சூன்மந்திக்
குருகா நிலங்கீண் டுதவுகுலக்
கலைவன் பலவின் சுளைகீறிக்
களிப்போ டளிக்குங் காந்தாரத்
தலைவன் சகுனி யிவன்கண்டாய்
தக்கோர் ஆடாச் சூதுக்கும்
நிலைவஞ் சனைக்குந் தரணிபரில்
யாரே யிவற்கு நிகரென்றார். 12

பெண்மைக் கிரதி யெனவந்த
பெண்ணா ரமுதே பேருலகில்
உண்மைக் கிவனே வலிக்கிவனே
யுறவுக் கிவனே யுரைக்கிவனே

திண்மைக் கிவனே நெறிக்கிவனே
தேசுக் கிவனே சிலைக்கிவனே
வண்மைக் கிவனே கன்னனெனு
மன்னன் கண்டாய் மற்றிவனே. 13

[செவிலித்தாய்மார் திரௌபதிக்கு அங்கு வந்திருந்த அரசர்களைப்பற்றி அறிவித்த பின்பு, மன்னர் ஒவ்வொருவரும் வில்லை வளைத்து அம்பு எய்து இலக்கை வீழ்த்த முயன்றனர்.]

மன்னர் முயற்சியும் தோல்வியும்

பலருமுடன் அகங்கரித்து மேரு சாரப்
பாரவரி சிலையினிலை பார்த்து மீண்டார்
பலருமொரு கையிற்பிடிக்க அடங்கா வில்லின்
பருமைதனைக் குறித்துமனம் பதைக்கப் போனார்
பலருமலர்க் கைப்படுத்திப் பெயர்க்க மாட்டார்
பணைத்தோள்நொந் தமையுமெனப் பயந்து நின்றார்
பலருமெடுத் தணிமணிநாண் பூட்ட வாராப்
பரிசொடுமற் றதன்வலிமை பகர்ந்தே விட்டார். 14

வல்லியம்போல் நடந்துதனு இருகை யாலும்
வாரியெடுத் தெதிர்நிறுத்தி மல்லல் வாகுச்
சல்லியனும் நாணேற்ற முடியா தந்தத்
தனுவுடனே தன்றனுவுந் தகர வீழ்ந்தான்
வில்லியரின் முன்னெண்ணத் தக்க வின்மை
வேந்தடுபோர்ப் *பகதத்தன்* வில்வே தத்தில்
சொல்லியவா றெடுத்தூன்றி மற்றைக் கையாற்
றுெல்வலிநா ணியுமெடுத்துத் தோளுஞ் சோர்ந்தான். 15

பூகதனு கியவன்றே பகைவ ரெல்லாம்
போற்றவளர்ந் துலகாளப் புனைந்த மௌலி
மாகதனும் வில்லெடுத்து வரிநாண் வில்லின்
மார்பளவும் போக்கினான் வன்போர் *நீலன்*
சாகதனென் றவைதுதிக்க நெடுநாண் கொற்றத்
தனுவொருசா ணெனக்கொணர்ந்தான் சாணே யல்ல
வேகதனு நால்விரலென் றுரைக்க நாணி
வீக்கினான் வலம்புரித்தார் வேந்தர் வேந்தே. 16

கலைவருத்த மறக்கற்ற கன்னன் என்னுங்
கழற்காளை யரனிருந்த கயிலை யென்னும்
மலைவருத்த மறவெடுத்த நிருதன் என்ன
மன்னவையின் வலியுடனே வந்து தோன்றி
நிலைவருத்த மறநின்று பரிய கோல
நீள்வரிநாண் மயிர்க்கிடைக்கீழ் நின்ற தென்னச்
சிலைவருத்த மறவளைத்து வளைந்த வண்ணச்
சிலைக்காறன் முடித்தலையைச் சிந்த வீழ்ந்தான். 17

மறையவன் வேடத்தில் இருந்த அருச்சுனன் செயல்

மன்மரபிற் பிறந்திருதோள் வலியால் இந்த
மண்ணுளு மவர்க்கன்றி மறைநூல் வாணர்
தொன்மரபிற் பிறந்தவரும் இலக்கு வீழ்த்தாற்
சூட்டுமோ தொடையலிளந் தோகை யென்னத்
தன்மரபுக் கணிதிலக மான வீரன்
தகவன்றே மன்றலுக்குத் தாழ்வோ வென்றான்
வின்மரபிற் சிறந்தநெடு வில்லை யீசன்
மேருகிரி யெடுத்ததென விரைவிற் கொண்டான். 18

அருச்சுனன் வெற்றி

கிளர்மகுட வயவேந்தர் நாண்கள் எல்லாங்
கீழாகத் தனிநெடுநாண் கிளர வேற்றித்
தளர்வறுசா யகந்தொடுத்துக் கற்றோர் யாருந்
தனுநூலுக் காசிரியன் தானே யென்ன
உளர்திகிரிச் சுழலிலக்கை யவையோர் தங்கள்
ஊக்கமுடன் விழவெய்தான் உரவுத் தோளான்
வளருமறுந் தவவேள்வி முனிவர் ஆர்த்தார்
வாசநறு மலர்சொரிந்து வானோர் ஆர்த்தார். 19

திரௌபதி மணமாலை சூட்டல்

தாஞ்சாரற் கரியதனு வளைத்தா னென்று
தரணிபர்தம் முகங்கருகத் தனுவி னோடும்
பூஞ்சாரன் மணிநீல கிரிபோல் நின்ற
பூசுரனை யிவனவனே போன்மென் றெண்ணிப்

பாஞ்சாலர் பதிகன்னி யிருதன் செங்கட்
பங்கயத்தாற் பாங்காகப் பரிந்து நோக்கித்
தேஞ்சார நறுங்கழுநீர்ச் செய்ய தாமஞ்
செம்மணிகா லருவியெனச் சேர்த்தி னளே. 20

அருச்சுனன் துணைவருடனும் திரௌபதியுடனும்
மணமண்டபத்தை விட்டு வெளியேறுதல்

அந்தரதுந் துபிமுழங்கச் சங்கம் ஆர்ப்ப
ஆனகதுந் துபிபுதல்வன் ஆதி யாக
வந்திருந்த பேரவையை மதியா னாகி
மாலையிடு பசுஞ்செம்பொன் மாலை யோடும்
சந்திரனும் உரோகிணியும் என்ன முன்னர்த்
தான்வளைத்த தடஞ்சிலைகைத் தலத்தில் ஏந்தி
இந்திரசூ னுவுமெழுந்தாங் கேக லுற்றான்
இருபுறமுந் துணைவர்வர இணையி லாதான். 21

அருஞ்சொற்பொருள்

1. கழுநீர் - செங்கழுநீர் மலர்கள். வழிவிடாய் - வழிநடை வருத்தம். தென்றல் - தெற்கிலிருந்து வீசும் மெல்லிய காற்று. இச்செய்யுளில் தற்குறிப்பேற்ற அணி அமைந்துள்ளது.

2. வெறி - தேன். படு - பொருந்திய. முளரி - தாமரை. மொக்குள் - அரும்பு. விரிபதன் - மலரும் சமயம். பொறி - உடற் புள்ளிகள். வரி - இசைப்பாட்டு. ஈட்டம் - கூட்டம். இரங்க - ஆரவாரிக்க. வீசி - (தாமரை அரும்புகளின் இதழ்களை) நெகிழ்த்து. நிமித்தம் - சகுனம்.

3. வண்டுறை = வண் + துறை; செழிப்பான நீர்த்துறை. மருங்கு - ஓரம். தண்டுறை = தண் + துறை. தண் - குளிர்ச்சியான. விண்டுறை = விண்டு + உறை. விண்டு - நீர் பிரிந்து.

4. மா - கரிய. குரல் அளகம் - ஒருபொருட் பன்மொழி; பெண்ணின் தலைமுடி. வல்லி - பூங்கொடிபோன்ற திரௌபதி, உவமையாகுபெயர். வதுவை - திருமணம். வீக்கும் - தரித்த. மிளிர் - விளங்குகின்ற. பூண் - நகை. விளிப்ப - அழைப்பன. இச்செய்யுளில் தற்குறிப்பேற்ற அணி அமைந்துள்ளது.

5. நிருபதி - அரசன். கன்னி - மணமாகாதவள். கொற்றம் - வெற்றி. கொற்றவர் - அரசர். குறை - அவமானம். என்ன - என்று கருதி, 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

தோகை - மயில். ஓகை - உவகை - மகிழ்ச்சி. நோக்கி நோக்கி- அடுக்குத் தொடர். இச்செய்யுளில் தற்குறிப்பேற்ற அணி அமைந் துள்ளது.

6. சுரும்பு - வண்டு. புள்ளு - பறவைகள். வைக - தங்க. மா - விலங்குகள். மேவ - பொருந்த. வல்லி - கொடிகள். ஏ-அம்பு.

7. உலப்பு உறு - நீக்கமிலாத. கூர்வாள் - மிகுபவள். சோதி டம் - (பாண்டவர் அரக்கு மாளிகையில் இறக்கவில்லை என்று) சோதிடம் கொண்டு ஆராய்ந்து கூறியது. உரியோர் - பாண்டவர். தேற்றத் தேற்ற - அடுக்குத் தொடர்.

8. தொடையல் - தொடுக்கப்பட்ட மாலை. வைகல் - நாள். சிந்தை - உள்ளக் கருத்துக்கள். கோட்டிய - வளைத்த. கோலம் - அருச்சுனனது வடிவம்.

9. ஆண்டு - அக்காலத்தில். எரி - யாகத் தீயில். எந்தை - என் அப்பன். பூண் - நகை. பொன் - அழகிய. அவை - சுயம் வர சபை. இழிவு - அவமானம். உற - அடைந்த. வேட்டல் - மணத்தல்.

10. சிலை - வில். இது - இதோ இருக்கிறது. சிலீமுகம் - அம்பு. கடும் - முறுக்கிவிட்ட விசையையுடைய. திரிகை - குயவ னது சக்கரத்தின். வேகத்து - வேகம்போன்ற வேகத்தோடு. இலை முகத்து - ஆர்களின் நுனி அமைந்த விளிம்பின் சூட்டையுடைய தாய். உழலுகின்ற - சுழலுகின்ற. எந்திரம் திகிரி - சக்கர வடிவ மான எந்திரத்தின். நாப்பண் - நடுவில். இலக்கு - குறி.

11. அணங்கு - திரௌபதி. மன் - மன்னர். அவை - சுயம் வர மண்டபம். புக்கு - நுழைந்து, புகு - பகுதி, ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது. முருந்து - மயில் இறகின் அடிக்குருத்து. முகிழ் - முல்லை அரும்பு. வாள்-ஒள்ளிய. நகை - பற்களையுடையவள்.

12. உலைவந்து - மெலிந்து. அயரும் - தளர்கின்ற. உருகா - மனம் உருகி, 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். குலம் கலை - உயர்ந்த சாதி ஆண் குரங்கு. கீண்டி - தோண்டி. ஆடா - ஆடாத, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். தரணிபர் - அரசர்.

13. பெண்மை - பெண்தன்மை. வந்த - தோன்றிய. உரை- புகழ். திண்மை - கலங்காத நெஞ்சுறுதி. நெறி - நல்லொழுக்கம். தேசு - ஒளி. சிலை - வில் தொழில். வண்மை - கொடை.

14. பலர் - அரசர் பலர். உடன் - ஒருசேர. மேருசார் - மேரு மலையை ஒத்த. வரிசிலை - கட்டமைந்த வில். பதைக்க - திடுக்கிட. படுத்தி - பிடித்து. பணைத்தோள் - பருத்த தோள்கள்.

15. வல்லியம் - புலி. வில்லியர்-வில் வீரர். வேந்து-அரசர்கள். அடு - அழிக்கின்ற. தொல்வலி - முதிர்ந்த வலிமை.

16. பூ - பூமி. கதன் - அடைந்தவன் (நிலத்தில் பிறந்த பொழுதே). மௌலி - அரசமுடி. மாகதன் - மகதநாட்டு மன்னன், சராசந்தன். வரிநாண்-நீண்டநாண். நீலன்-நீலனென்னும் அரசன். சாகதன் - அருஞ்செயல் செய்ய வல்லவன். ஒரு சாண் என - ஒரு சாண் தூரத்தில் உள்ளது என்ற அளவும். வலல்புரித்தார் - நந்தியா வட்டப்பூ மாலை.

17. கலை - நூல்கள். கழல் - வீரச் சதங்கை. காளை - இளவீரன், உவமையாகுபெயர். நிருதன் - அரக்கன், இராவணன். நிலை-வில் வீரர்க்குரிய நிலையில். பரிய - பருத்த. கோலம்-அழகு. நீள்வரி - நீண்ட முறுக்குள்ள. வண்ணம் - அழகிய.

18. மன் மரபு - அரச மரபு. மறைநூல் வாணர் - வேதியர். தோகை - மயில்போன்ற சாயலுள்ள திரௌபதி. தொடையல் - சுயம்வர மாலை. தன் மரபு - தான் பிறந்த சந்திர குலம். வில் மரபில்-வில்லின் இனங்களில்.

19. வய - வலிமையுடைய. சாயகம் - அம்பு. உளர்-சுழலுகிற. திகிரி - எந்திரச் சக்கரம்.

20. சாரற்கு - அருகில் செல்லுதற்கு. என்று - என்ற காரணத்தால். பூ சாரல் - பொலிவுள்ள சாரல்களையுடைய. மணி - அழகிய. பூசுரன் - அந்தணன். இவன் அவன் - இவன் அந்த அருச்சுனன். பங்கயம் - தாமரை. செங்கண் - பண்புத்தொகை. பாங்காக-நன்றாக. தேம் - இனிய. சாரம் - தேன். நறு - மணம் வீசுகிற. செய்ய - சிவந்த. தாமம் - மாலை.

21. துந்துபி - துந்துபி வாத்தியம். இந்திர சூனு - இந்திரன் மகனான அருச்சுனன். ஆனகதுந்துபி - வசுதேவன். புதல்வன் - பலராமன். பசு செம்பொன் மாலை - பசிய சிறந்த பொன்னாலாகிய மாலைபோல் விளங்கும் திரௌபதி. துணைவர் - உடன் பிறந்தவர். ஏகல் - செல்லுதல்.

கேள்விகள்

1. தென்றல் வீசியதுபற்றி ஆசிரியர் கூறியது யாது?
2. பாண்டவர் எவற்றை நல்ல நிமித்தங்களாக எண்ணினர்?
3. சுயம்வர மண்டபத்திற்குச் செல்லுமுன் திரௌபதியின் மன நிலைமைபற்றி ஆசிரியர் கூறுவது யாது?

4. திருஷ்டத்யும்நன் சுயம்வர மண்டபத்தில் கூறிய நிபந்தனை யாது?

5. செவிலித்தாயர் திரௌபதிக்குச் சகுனியைப்பற்றி யாது கூறினர்?

6. அத்தாய்மார் கன்னனைப்பற்றி யாது கூறினர்?

7. குறியை வீழ்த்த மன்னர் மேற்கொண்ட முயற்சியைப்பற்றி ஆசிரியர் கூறுவது யாது?

8. சல்லியன், பகதத்தன், மாகதன், நீலன், கன்னன் ஆகிய ஐவரும் இலக்கு வீழ்த்த மேற்கொண்ட முயற்சியையும் முடிவையும் கூறுக.

9. மறையவர் வேடத்திலிருந்த அருச்சுனன் கேட்ட கேள்வி யாது? அதற்குப் பாஞ்சால நாட்டு இளவரசன் அளித்த பதில் யாது?

10. அருச்சுனன் இலக்கினை வீழ்த்தி வெற்றி பெற்றதை ஆசிரியர் எங்ஙனம் பாராட்டுகிறார்?

11. "இவன் அவனே போன்ம்"—இடம் சுட்டி விளக்குக.

12. "சந்திரனும் உரோகிணியும் என்ன"—இவ்வுவமை எதனை விளக்க வந்தது?

பயிற்சி

1. பாண்டவர்க்கு எதிர்ப்பட்ட நல்ல நிமித்தங்கள்பற்றிச்]சிறு கட்டுரை வரைக.

2. இலக்கு வீழ்த்த மன்னர் மேற்கொண்ட முயற்சியையும் அதன் முடிவையும் விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

3. இப்பாடப் பகுதியிலுள்ள செய்யுட்களின் திரண்ட கருத்தினை நாற்பது வரிகளுள் ஒரு கட்டுரையாக வரைக.

4. இயல்பாக நிகழும் ஒரு நிகழ்ச்சியின்மீது கவி தன் குறிப்பை (கருத்தை) ஏற்றிக் கூறுதல் தற்குறிப்பேற்ற அணி எனப்படும். இப்பாடப் பகுதியில் இவ்வணி அமைந்துள்ள இடங்களை விளக்கிக் காட்டுக.

5. இவ்விருபத்தொரு பாடல்களையும் படித்து, 'வில்லிபுத்தூர் ஆழ்வாரின் செய்யுள் நலம்' என்னும் தலைப்பில் இவர் செய்யுட்களைப் பாராட்டி ஒரு கட்டுரை எழுதுக.

5. பாஞ்சாலி சபதம்

பாஞ்சாலநாட்டு மன்னன் மகளான திரௌபதி 'பாஞ்சாலி' எனப் பெயர் பெற்றாள். அவள் தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்ற பாண்டவர் ஐவருக்கும் மனைவி யாவாள். அவள், பாண்டவரின் பங்காளிகளான துரியோதனனாதியரால் அவையில் பலர் முன்னிலையில் துன்புறுத்தப்பட்டமையின், மனம் நொந்து, சபதம் செய்தாள். அந்நிகழ்ச்சியைக் கூறும் இத்தொடர்நிலைச் செய்யுள் 'பாஞ்சாலி சபதம்' எனப் பெயர் பெற்றது.

பாஞ்சாலி சபதம் என்பது, கவியரசர் சி. சுப்பிரமணிய பாரதியார் பாடிய தொடர் நிலைச் செய்யுட்களில் ஒன்றாகும். பாரதியார் சிறந்த கவிஞர்; நாட்டுப்பற்று மிக்கவர்; திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரத்தினர்; அவர் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகட்கு முன்பு காலமானவர்.

[சகுனியும் தருமனும் ஆடிய சூதாட்டத்தைக் கண்ட விதுரன் மனம் வருந்திச் சூதாட்டத்தை நிறுத்தும்படி தன் தமையனும் துரியோதனனுக்குத் தந்தையுமான திருதராட்டிரனை வேண்டினான். உடனே துரியோதனன் சினம் கொண்டு, தன் சிற்றப்பனை விதுரனை இழித்துப் பேசினான். அப்பேச்சைக் கேட்ட விதுரன் கீழ்வருமாறு கூறினான்.]

விதுரன் பேச்சு

"நன்றாகு நெறியறியா மன்ன னங்கு
நான்குதிசை யரசர்சபை நடுவே, தன்னைக்
கொன்றாலு மொப்பாக வடுச்சொற் கூறிக்
குமைவதனி லணுவளவுங் குழப்ப மெய்தான்;
சென்றாலு மிருந்தாலு மினியென் னேடா?

செய்கைநெறி யறியாத சிறியாய், நின்னைப்
பொன்றாத வழிசெய்ய முயன்று பார்த்தேன்;
பொல்லாத விதியென்னைப் புறங்கண் டானால்!
கடுஞ்சொற்கள் பொறுக்காத மென்மைக் காதும்
கருங்கல்லில் விடந்தோய்ந்த நெஞ்சுங்
கொண்டோர்

படுஞ்செய்தி தோன்றுமுனே படுவர் கண்டாய்
பால்போலுந் தேன்போலு மினிய சொல்லோர்
இடும்பைக்கு வழிசொல்வார் ; நன்மை காண்பார்
இளகுமொழி கூறுரென நினைத்தே தானும்
நெடும்பச்சை மரம்போல வளர்ந்து விட்டாய்
நினக்கெவருங் கூறியவ ரில்லை கொல்லோ ?"

அருஞ்சொற்பொருள்

வரி 1-16 : மன்னன்-துரியோதனன். வடு-குற்றம். குமைவது-வருந்துவது. எய்தான்-அடையான். பொன்றுத-அழியாத. படுவர்-அழிவர். இடும்பை-துன்பம்.

கேள்விகள்

1. தன்மீது சினம் கொண்டு பேசிய துரியோதனனை நோக்கி விதுரன் கூறியவை யாவை?

2. விதுரன் கூற்றிலிருந்து அவனைப்பற்றி அறியத்தகுவன யாவை?

பயிற்சி

1. விதுரன் கூறியவற்றை உங்கள் சொந்த நடையில் அமைத்து எழுதுக.

2. பொருள் கூறுக :—நெறி, வடுச்சொல், குமைவது, ஏடா, பொன்றுத, கண்டாய், சிறியாய்.

3. பின்வருவனவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக :—கடுஞ்சொல், இடும்பை, ஆகுநெறி, பொன்றுத, விதி, மென்மை, இனிய.

4. பிரித்துக் காட்டுக :—நெறியறியா, மன்னனங்கு, திசையரசர், வடுச்சொல், அணுவளவும், குழப்பமெய்தான், கடுஞ்சொல், கருங்கல், நினக்கெவரும், கூறியவரில்லை.

5. அறியாத மன்னன் – 'அறியாத' என்பது எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும்.

அறியா மன்னன் – 'அறியா' என்பது 'அறியாத' என்பதில் உள்ள ஈறு (கடை எழுத்துக்) கெட்டு வந்தது ; ஆதலால் 'அறியா' என்பது ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும்.

ஓடாக் குதிரை—'ஓடா'—ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

இவ்வாறு எதிர்மறைப் பெயரெச்சத்துக்கு எட்டு எடுத்துக் காட்டுக்களும், ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்துக்கு எட்டு எடுத்துக்காட்டுக்களும் தருக.

6. இப்பாடப் பகுதியில் உள்ள எதிர்மறைப் பெயரெச்சங்களைக் காட்டுக; அவற்றை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்களாக மாற்றுக.

IV. பலசுவை

1. வருணனை

பின்வரும் பாடல்கள் 'முடியரசன் கவிதைகள்' என்னும் செய்யுள் நூலிலிருந்து எடுக்கப்பெற்றவை. கவிஞர் முடியரசன் உயர். நிலைப் பள்ளித் தமிழாசிரியர்; காரைக்குடியினர்; சிறந்த கவிஞர்; தமிழ்ப் பற்றும் நாட்டுப்பற்றும் மிக்கவர்; சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர்.

அழகின் சிரிப்பு

வெம்புலியின் பாய்ச்சல்தனில், வீரன் ஏந்தும்
வேல்நுனியில், தோள்வலியில், படம்விரித்து
வெம்பிஎழும் நாகத்தின் ஆட்டந் தன்னில்,
விரிகொம்பு மான்விழியில் தேனை உண்ணத்
தும்பிஎழுந் தார்க்கின்ற முல்லைக் காட்டில்,
தோகைவிரித் தாடுகின்ற மயிலி டத்தில்,
செம்பவழக் கொடிக்கடலின் அலைக்கூட் டத்தில்
சேர்ந்திருக்கும் அழகெல்லாம் சிரிக்கக்
கண்டேன். 1

எழில்

விண்முட்டும் கோபுரத்தில், அங்குச் சார்ந்து
வினைவல்லான் அமைத்தசுதைப் பாவை தன்னில்
கண்ணெட்டும் போதாதோ எனுமா றுங்குக்
கற்றச்சன் வடித்தகருங் கல்லின் சிற்பம்,
பண்ணெட்டும் யாழேந்தும் கல்விப் பாவை
பரிந்துநடம் புரிந்தருளும் தோற்றந் தன்னை
எண்ணட்டும் இங்கிருந்தே என்ற நோக்கில்
எழுப்புகலைக் கூடத்தில் எழிலைக் கண்டேன். 2

காற்று

பணிவோர்க்குக் காப்பளித்துப் பணியாரை
வேரறுப்பர் பண்டை எங்கள்
அணிசேர்க்கும் முடியரசர்; பெருவளியும்
அடிக்குங்கால் ஆற்றின் நாணற்

பணிவேற்றுக் கொண்டங்குத் தலைநிமிர்ந்த
பனைதென்னை மரங்கள் யாவும்
அணிவேரற் றடிவீழச் செய்திடுமால்;
ஆருக்கும் பணிதல் நன்றாம். 3

ஆறு

உருக்குலைய உழைத்துழைத்துச் செல்வம் இல்லா
உழைப்பாளர் வாழ்வினைப்போல் வறண்டு தோன்றும்
பெருக்கில்லாக் காட்டாறு காண்பாய்! ஈகை
பேணாத பெருஞ்செல்வர், மிடியால் வாடி
இருப்பவர்க்குப் பயனில்லா தொழிதல் போல
எரிகதிரால் வதைந்தவர்க்கு நிழலொன் றீயா
திருக்குமரம் கரைகளிற்காண்! வறுமை யுற்றோன்
இளமையைப்போல் வதங்குசெடி கொடிகள்
காண்பாய்! 4

கிளர்ச்சிசெயும் தொண்டர்களின் உணர்ச்சி வெள்ளம்
கெடுவழியில் செல்லாமல் தடுத்து நன்கு
வளர்ச்சிபெறச் செய்கின்ற தலைவன் போல
வருவெள்ளப் பெருக்கனைத்தும் பாழ்ப டாமல்
அளப்பரிய நன்மைசெயத் தடுத்து நிற்கும்
அணைக்கட்டின் அழகைப்பார்! மனிதன் ஆற்றல்
விளக்குகிற செயலதுவாம்; இயற்கை எல்லாம்
வென்றாளும் மனிதர்திறம் என்னே! என்னே! 5

கடல்

கற்றுணர்ந்த சான்றோரின் உள்ளம்போல்
கடலேநீ ஆழம் கொண்ட
பெற்றியுணர்ந் தாழியென்றார்; யாதும்மூர்
பிறரெல்லாம் கேளிர் என்ற
பற்றுடைய தமிழினத்தார் பரந்தமனப்
பான்மையெனப் பரந்து நிற்கும்
ஒற்றுமையைக் கண்டன்றோ என்முன்னோர்
உனைப்பரவை என்று சொன்னார். 6

அருஞ்சொற்பொருள்

1. விரிகொம்பு-வினைத்தொகை. 2. எழில்-அழகு. சுதை-சுண்ணும்பு. கல்விப்பாவை-கலைமகள். 3. வளி-காற்று. 4. மிடி-வறுமை. 5. கெடுவழி-வினைத்தொகை. 6. பெற்றி-தன்மை. பரவை-பரவியிருப்பது ; கடல்.

கேள்விகள்

1. ஆசிரியர் எவ்வெவற்றில் அழகு சிரிக்கக் கண்டார்?
2. ஆசிரியர் எங்கெங்கு எழிலைக் கண்டார்?
3. "ஆருக்கும் பணிதல் நன்ரும்,"—இது கூறப்பெற்ற சந்தர்ப்பம் யாது?
4. ஆசிரியர் ஆற்றைப்பற்றிக் கூறுவன யாவை?
5. கடலுக்கு ஆழி, பரவை என்னும் பெயர்கள் எவ்வாறு வந்தன என்று ஆசிரியர் கூறுகிருர்?

பயிற்சி

1. பிரித்துக் காட்டுக :—வெம்புலி, செம்பவழம், கண்ணெட்டு, கற்றச்சன், கருங்கல், பண்ணெட்டும், காப்பளித்து, வேரற்று, உருக்குலைய, காட்டாறு.

2. சேர்த்துக் கூறுக :—கண்டு+அன்ரே, பற்று+உடைய, உழைத்து+உழைத்து, விரித்து+ஆடுகின்ற, சேர்ந்து+இருக்கும், கலை+கூடம், கல்வி+பாவை.

3. இலக்கணக் குறிப்பு எழுதுக :—வெம்புலி, விரிகொம்பு, என்ற, கண்டேன், யாவும், வீழ, வறுமை, பணிதல், என்ருர்.

4. இப்பகுதியில் ஒவ்வொரு தலைப்பின் கீழும் உள்ள பாட்டின் பொருளை உன் சொந்த வாக்கியங்களில் எழுதிக் காட்டுக.

2. சீட்டுக்கவி

சீட்டுக்கவி—ஒருவருக்கு ஒரு புலவர் தம் பெருமையும் தேவையும் விளங்க எழுதி விடுக்கும் பாட்டு. சீட்டுக்கவி பாடுதலில் அந்தகக்கவி வீரராகவ முதலியார் பெயர் பெற்றவர். இவர் சிறந்த புலவர் ; திருக்கழுக்குன்றத்து மாலை, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருவாரூர் உலா முதலிய நூல்களைப் பாடிப் புகழ் பெற்றவர் ; 17ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்.

குதிரை வேண்டிக் குலசேகரற்கு விடுத்த சீட்டுக்கவி

ஏடா யிரம்கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்தவிரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் ***கவிவீர
ராகவன்*** விடுக்கும்ஓலை ;
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழியனெதிர் கொண்டுகாண்க :
பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
பற்றிக் கொலாத கோணம்
பறவாத கொக்(கு)அனற் பண்ணுத கோடைஐம்
படையில் தொடாத குந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாதசடிலம்
சொன்னசொல் சொல்லாத கிள்ளையொன் றெங்குந்
துதிக்கவர விடல்வேண்டுமே.

அருஞ்சொற்பொருள்

முதல் இரண்டு அடிகளும் முதலியார் அந்தகர் (குருடர்) என்பதையும் நினைவாற்றல் மிக்கவர் என்பதையும் உணர்த்துவன. விரகன்-வல்லவன். சேடன்-பாம்பு. சேட+அதிபன்=பாம்புகட்குத் தலைவன்; ஆதிசேடன், வடமொழித்தொடர். புரந்து-காத்து. தாகம்-குடிகளது துன்பம். பாடாத கந்தருவம்......கிள்ளை-இவை குதிரைக்கு வெளிப்படை. கந்தருவம், கந்துகம், கோணம், கொக்கு, கோடை, குந்தகம், பாடலம், மா, சடிலம், கிள்ளை என்பன 'குதிரை' எனப் பொருள் படுமாறு அடைமொழி தந்து பிற பொருள்களினின்று பிரித்துக் காட்டிய திறம் காண்க. கந்தருவம்-(வண்டு), குதிரை. கந்துகம்-(பந்து), குதிரை. கோணம்-(பற்றிக் கொல்லும் யந்திரப் பொறி), குதிரை. கொக்கு-(ஒருவகைப் பறவை), குதிரை. கோடை-(கோடைகாலம்), குதிரை. ஐம்படை-சங்கு, சக்கரம், கதை, வில், வாள். குந்தம்-(ஈட்டி), குதிரை. பாடலம்-(ஒரு வகைப்பூ), குதிரை. மா-(மாமரம்), குதிரை. சடிலம்-(சடை), குதிரை. சொன்ன-உடன்பாட்டுப் பெயரெச்சம். சொல்லாத-எதிர்மறைப் பெயரெச்சம்.

கேள்விகள்

1. சீட்டுக்கவி என்பது யாது?
2. அதனில் கூறப்பெறும் செய்திகள் யாவை?
3. குதிரையைக் குறிக்கும் பல்வேறு பெயர்கள் யாவை?
4. கவிஞர் யாருக்குச் சீட்டுக்கவி வரைந்தனுப்பினர்?
5. கவிஞர் வேண்டுகோள் யாது?

பயிற்சி

1. வாக்கியங்களிற் பயன்படுத்துக :—விரகன், எதிரிலா, புரந்து, சொன்னசொல், சொல்லாத.

2. பாடும் (கந்தருவம்) - உடன்பாட்டுப் பெயரெச்சம்.
பாடாத (கந்தருவம்) - எதிர்மறைப் பெயரெச்சம். இப் பாடலில் வந்துள்ள எதிர்மறைப் பெயரெச்சங்களைக் கூறுக.

3. கலைசைச் சிலேடை வெண்பா

கலைசை - (தொண்டை நாட்டில் உள்ள) தொட்டிக்கலை என்னும் ஊர்ப் பெயரின் மரூஉ. அவ்வூரைப்பற்றிய சிலேடை வெண்பா ; சிலேடை – இரு பொருள்படப் பாடுதல்.

இந்நூலின் ஆசிரியர் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் ; 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர்.

சேலார் செழுந்தடத்தில் செந்தா மரையினிற்றேன்
காலாறு பாயும் கலைசையே—சூலேறு
பாணியார் வேணியார் பாகீ ரதியென்னும்
பாணியார் வேணியார் பற்று. 1

புண்ணியமெய்ப் பண்ணவரும் பொன்னனையார் [பூங்குழலும்
கண்ணிவா சஞ்செய் கலைசையே—எண்ணியொரு
மன்னுக மத்தினன் வாரிகடைந் தோர்க்கிரங்கும்
மன்னுக மத்தினன் வாழ்வு. 2

அருஞ்சொற்பொருள்

1. சேல் ஆர் - கெண்டை மீன்கள் பொருந்திய. கால்-வாய்க் கால். ஆறு - வழி. காலாறு - ஆறு கால்களையுடைய வண்டு. சூல் - சூலப்படை. ஏறு - தாங்கிய. பாணியார் - கையினர். வேணி ஆர்

பாகீரதி என்னும் பாணி ஆர் வேணியார் - ஆகாயத்தில் தங்கிய பாகீரதி என்னும் நீரையும் ஆத்தி மாலையையும் உடைய சடையினர். பற்று - இடம்.

2. புண்ணியம் - நன்மை. மெய் பண்ணவர் - உண்மைத் தேவர்கள். கண்ணி - நினைத்து, மதித்து. வாசம் செய்-தாம் வாசம் செய்யும். கள்+நிவாசம் செய் - தேன் பொருந்தியிருக்கும். மன்+நாகம்+மத்தினன் - வலிமை பொருந்திய மந்தரமலை என்னும் மத்தினல். வாரி - பாற்கடல். இரங்கும் - (விடத்தை உண்டு) அருள் செய்யும். மன் ஆகமத்தினன் - நிலைபெற்ற ஆகம நூல்களைத் தந்தருளிய சிவன். வாழ்வு - வாழும் இடம்.

பயிற்சி

1. "சேலார் செழுந்தடத்தில்............கலைசையே"—இவ்வரிகட்குச் சிலேடைப் பொருள் கூறுக.

2. "சூலேறு பாணியார்......பற்று"—பதம் பிரித்துப் பொருள் தருக.

3. "வேணியார் பாகீரதியென்னும் பாணியார் வேணியார்"- இதில் அமைந்த வரலாற்றைத் தெரிவிக்க.

4. "புண்ணியமெய்ப் பண்ணவரும்..............கலைசையே"- இவ்வரிகட்குச் சிலேடைப் பொருள் தருக.

5. "எண்ணியொரு...........வாழ்வு"-சொற்களைப் பிரித்துப் பொருள் கூறுக.

4. சிறு நூல்கள்

(1) நந்திக் கலம்பகம்

நந்தி - மூன்றும் நந்திவர்ம பல்லவன்; காலம் - கி.பி. 9ஆம் நூற்றாண்டு. இது இவன்மீது பாடப்பட்ட கலம்பகம். இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இன்றுள்ள கலம்பக நூல்களுள் காலத்தால் முற்பட்டது இதுவேயாகும்.

தன் கணவனுடைய ஆசைநாயகியர் வீட்டில் தங்கி இரவு முழுவதும் பாடிக்கொண்டிருந்த பாணனை மறுநாட் காலையிற் கண்ட தலைவி, அவன் தன் கணவனது தவறான ஒழுக்கத்துக்குத் துணையாக நிற்றலை மறைமுகமாகக் கண்டித்து அவனை வெட்கும்படி செய்தலைக் கீழ்வரும் செய்யுள் உணர்த்துகிறது; நகைச் சுவை மிக்கது.

ஈட்டு புகழ்நந்தி பாண ! நீ எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவும்—காட்டிலழும்
பேயென்ருள் அன்னை ; பிறர்நரியென் ருர்;தோழி
நாயென்ருள் ; நீயென்றேன் நான்.

(2) மீனுட்சி யம்மை குறம்

இதனைச் செய்தவர் குமரகுருபரசுவாமிகள் ; பல பிரபந்தங்களைப் பாடியவர் ; காசி மடத்தைத் தோற்றுவித்தவர் ; 17ஆம் நூற்ருண்டினர்.

குறக்குடியின் இயல்பு

குறத்தி மீனுட்சியம்மையிடம் தன் இனத்தவர் தொழில்களைக் கூறுதல்.

கொழுங்கொடியின் விழுந்தவல்லிக்
கிழங்குகல்லி எடுப்போம் ;
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம் ;
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம் ;
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம் ;
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தயரக் கொடுப்போம் ;
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலிற்கண் படுப்போம் ;
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம் ;
எங்கள்குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண் அம்மே !

அருஞ்சொற்பொருள்

1. நந்தி பாண – நந்தியின் பாணனே. எங்கையர் – என் தங்கையர். விடிவு அளவும் – பொழுது விடியும் வரையும்.

2. கல்லி – தோண்டி. தேறல் – தேன். வாய்மடுப்போம் – அருந்துவோம். விருந்து அயர – விருந்தினர் அருந்த. பாயல் – பாய்.

கண்படுதல் - தூங்குதல். கயற்கணி - கயல்மீன்போன்ற கண்களை யுடையவள்; மீனாட்சி அம்மை. வினை - பழைய வினைகள். கணி - கண்ணி என்பதன் இடைக்குறை.

கேள்விகள்

1. பாணன் பாடிய பாட்டைக் கேட்டு யார் யார் என்னென்ன கூறினர்? ஏன்?
2. "எங்கள் குறக்குடிக்கு அடுத்த செயல்கள் இவை" எனக் குறத்தி எவற்றைக் கூறினாள்?
3. கலம்பகம் என்பதன் பொருள் யாது?
4. குறம் என்பது யாது?

பயிற்சி

1. கீழ் வருவனவற்றிற்கு இலக்கணக் குறிப்பு எழுதுக:— ஈட்டுபுகழ், என்றேன், என்றாள், என்றார், எடுப்போம், கொழுங் கொடி, எழுந்து, பிழிந்த.

2. பிரித்துக் காட்டுக:—விடிவளவும், பேயென்றார், கொழுங் கொடி, விருந்தயர, செழுந்தினை, கயற்கணி.

3. சேர்த்துக் கூறுக:—புலி + தோல், வல்லி + கிழங்கு, கொழுமை + சாறு, முல்லை + கொடி.

4. கீழ்வருவனவற்றை வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:- நறுந்தேன், கயற்கண், தேறல், கொழுஞ்சாறு, விடிவளவும்.

5. குறக்குடியின் இயல்பை உன் சொந்த வாக்கியங்களில் எழுதுக.

(3) காந்தி பிள்ளைத்தமிழ்

காந்தி - காந்தியடிகள். பிள்ளைத்தமிழ் - தேவர், அரசர், பெரு மக்கள் இவருள் ஒருவரைப் பிள்ளைப்பருவத்தினராக அமைத்து, பிள்ளைப்பருவங்களாகிய பத்துப் பருவங்கள் அமைத்து, நூறு செய் யுட்களால் பாடப்பெற்ற சிறு நூல். பாட்டுடைத் தலைவனை அல்லது தலைவியைப் பொறுத்து நூல் ஆண்பால் பிள்ளைத்தமிழ் அல்லது பெண்பால் பிள்ளைத்தமிழ் எனப் பெயர் பெறும்.

ஆண்பால் பிள்ளைத்தமிழில் (1) காப்பு, (2) செங்கீரை, (3) தால், (4) சப்பாணி, (5) முத்தம், (6) வருகை, (7) அம்புலி, (8) சிற்றில், (9) சிறுபறை, (10) சிறுதேர் எனப் பத்துப் பருவங்கள் வரும். பெண்பால் பிள்ளைத்தமிழில் மேற்சொல்லப்பெற்ற முதல் ஏழு

பருவங்களும் (8) அம்மானை, (9) நீராடல், (10) ஊசல் என்னும் மூன்று பருவங்களும் வரும்.

காந்தி பிள்ளைத்தமிழைப் பாடியவர் அமராவதி புதூர், இராய. சொக்கலிங்கம் அவர்கள்; சிறந்த புலமை உடையவர்; காந்தி இருபா இருபஃது முதலிய செய்யுள் நூல்களைப் பாடியவர்; சிறந்த எழுத்தாளர். இவர் இப்பொழுதும் தமிழ்த் தொண்டு செய்து வருகின்றார்.

வருகைப் பருவம்

வருகை - குழந்தை பிறந்த பன்னிரண்டாம் மாதத்தில் குழந்தையை வருமாறு அழைத்தல்.

செந்நெல் விளையுந் திருநாடு
 செழிக்க, உலகம் தீநெறியில்
செல்லா துய்யச், சிறுமையெலாம்
 சென்று தேய, அறந்தழைக்க,
மன்னர் செங்கோல் வழுவாது
 மாண்பிற் செல்ல, மதுவருந்தும்
மடமை ஒழிய, மக்கள்தமை
 மதியா தொதுக்கும் மருளகல,
இன்னல் நல்கும் சாதிமத
 இறுமாப் பேக, என்னனையார்
இதயங் களிக்க விளையாட
 இம்மா நிலத்திற் பிறந்தருளும்
கன்னல் அனைய திருமொழிசேர்
 காந்தி! வருக வருகவே;
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
 கணவா! வருக வருகவே.

அருஞ்சொற்பொருள்

திருநாடு - இந்தியா. உய்ய - நலனடைய. வழுவாது - தவறாமல். மாண்பின் - சிறப்பு வழியில். மடமை - அறியாமை. மருள் - மயக்கம். இறுமாப்பு - கருவம். கன்னல் - கரும்பு. கஸ்தூரி - கஸ்தூரிபாய்; அடிகளின் மனைவியார்.

கேள்விகள்

1. பிள்ளைத்தமிழ் என்பது யாது?
2. ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய பத்துப் பருவங்கள் யாவை?

3. பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய சிறப்புப் பருவங்கள் யாவை?
4. வருகைப் பருவம் என்பதை விளக்குக.
5. இம்மாநிலத்திற் பிறந்தருளியதற்கு ஆசிரியர் காட்டும் காரணங்கள் யாவை?

5. வழிபாட்டுப் பாடல்கள்

தேவாரம்

இப்பாடல் திருநாவுக்கரசர் பாடியது. இவர் சைவ சமய குரவர்; கி.பி. 7ஆம் நூற்றுண்டினர். இவர் தில்லைக் கூத்தப் பெருமானைக் கண்டு வியந்து பாடிய பாட்டு இது.

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற்
 குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
 பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும்
 காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த
 மாநிலத்தே.

நாச்சியார் திருமொழி

நாச்சியார் – ஆண்டாள்; கி.பி. 8 அல்லது 9ஆம் நூற்றுண்டினர்; பெரியாழ்வார் மகளார்; ஸ்ரீவில்லிபுத்தூரினர்.

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.

திருஅருட்பா

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்ருக் கூட்டிச்
 சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசுப்பாலும் தெங்கின்
 தனிப்பாலும் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி

இனித்தநறு நெய்யளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுதெள் ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கலணிந் தருளே.

அருஞ்சொற்பொருள்

1. குனித்த - வளைந்த, பெயரெச்சம். கொவ்வை - கொவ்வைப்பழம், செந்நிறம் உடையது. பனித்த - குளிர்ச்சியுள்ள. வெண்ணீறு - விபூதி. இனித்தம் - இனிமை. பொன் - அழகிய.

2. நாறுமோ-மணக்குமோ. மருப்பு-தந்தம். ஒசித்த-ஒடித்த.

3. முக்கனி - மா, பலா, வாழை. தெங்கு - தென்னை. தீம் பருப்பு - முந்திரிப்பருப்பு, வாதுமைப்பருப்பு முதலியன. இடி - தூள். விரவி - கலந்து. அளைந்து - கலந்து, பிசைந்து. அனித்தம் அற - நிலைபெறுதல் இல்லாமை நீங்க. பொதுவில் = பொது + இல் - அம்பலம். அடி மலர் - பாதமாகிய மலர்; உருவகம். அலங்கல்-மாலை.

கேள்விகள்

1. ஏன் மனித்தப் பிறவி வேண்டும் என்று திருநாவுக்கரசர் கூறுகிறார்?
2. ஆண்டாள் வெண்சங்கைப் பார்த்துக் கேட்பன யாவை?
3. 'சுவைக் கட்டி' எங்ஙனம் செய்யப்படும்?

பயிற்சி

1. இப்பகுதியிலுள்ள ஒவ்வொரு செய்யுளின் திரண்ட கருத்தையும் எழுதிக் காட்டுக.

2. பிரித்துக் காட்டுக:-வெண்ணீறு, செவ்வாய், பொற்பாதம், கமலப்பூ, வாய்ச்சுவை, விருப்புற்று, பசுப்பால், இளஞ்சூடு, சொல்லணி.

3. சேர்த்துக் கூறுக:— குமிழ் + சிரிப்பு, காண + பெற்றால், பவளம் + செவ்வாய், விருப்பு + உற்று, சொல் + ஆழி, தனி + தனி, வடித்து + ஒன்றாய், பொது + இல்.

1. கல் காட்டும் கவிஞர்

பேராசிரியர் ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்

[இக்கட்டுரை "நந்தா விளக்கு" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது. இதன் ஆசிரியர் மதுரை தியாகராசர் கல்லூரியில் துணைத் தமிழ்ப் பேராசிரியராய் இருக்கின்றனர். புறநானூறு முதலிய பழந்தமிழ் நூல்களின் உரையாசிரியர்; சிறந்த ஆராய்ச்சியாளர்; சொற்பொழிவு ஆற்றுவதிலும் வல்லவர்.]

கல்வெட்டுக்கள்

சோழநாட்டில் இடைக்காலத்தே விசயாலயன் வழி வந்த சோழவேந்தர் ஆட்சி செய்தனர். இவருடைய ஆட்சிக் குறிப்புக்களை ஓரளவு உணர்ந்துகொள்ளத்தக்க வகையில் அவர்கள் கல்வெட்டுக்கள் அமைந்திருக்கின்றன. வேந்தர்களின் அரசியல் செய்திகளும், நீதி வழங்கும் முறைகளும், கோவில்களின் இயல்புகளும், அவற்றிற்கும் மக்கள் வாழ்க்கைக்கும் இருந்த தொடர்புகளும், பிறவும் அக்கல்வெட்டுக்களில் புலனாகின்றன. அரசியல், நீதி, வாணிகம், இலக்கியம், கூத்து ஆகியவற்றின் சிறப்புக்களும் அவற்றால் விளக்கமுறுகின்றன. இடைக்காலத்தில் வாழ்ந்த சிறப்புடைய தலைவர்கள், வணிகர்கள், சமயத் தலைவர்கள், புலவர்கள் முதலியோர் பலருடைய வரலாறுகளை அக்கல்வெட்டுக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

உறத்தூர்

புதுக்கோட்டைக்கு அண்மையில் ஓடும் வெள்ளாறு சோழநாட்டுத் தென்னெல்லை என்பர். அதன் வடகரைப் பகுதி சோழநாட்டுக்கும், தென்கரைப் பகுதி பாண்டி நாட்டுக்கும் உரியன. வெள்ளாற்றின் இரு மருங்கும் சேர்ந்த பகுதி சங்க காலத்தில் கோனாடு எனப் பெயர் கொண்டு விளங்கிற்று.

கோனாட்டின் வடபகுதியில் இருந்த ஊர்களுள் உறத்தூர் என்பது ஒன்று. அதனைத் தலைமையாகக்

கொண்டு தோன்றிய சிறுநாடு உறத்தூர்க் கூற்றம் என்று வழங்கிற்று. அக்கூற்றத்தில் அடங்கிய ஊர்களில் பையூர் என்பது சிறப்புடைய ஊராகும். அவ்வூரில் திருமறைக் காட்டினின்றும் ஒரு குடியினர் போந்து செல்வச் சிறப்புற்றிருந்தனர்.

திருச்சிற்றம்பலமுடையான்

கி. பி. 1133ஆம் ஆண்டு முதல் 1150ஆம் ஆண்டு வரை சோழநாட்டை ஆட்சிபுரிந்தவன் சோழன் இரண்டாம் குலோத்துங்கனுவன். அவனது ஆட்சியில் இந்த உறத்தூர்க் கூற்றம் இருந்துவந்தது. நல்ல நீர்வளமும் நிலவளமும் பெற்றிருந்தமையால், இவ்வூர்க்கண் போந்து தங்கிய திருமறைக் காட்டுச் செல்வக் குடியினர் நிலை பெற்று வாழ்ந்துவருவாராயினர். அக்குடியில் அந்நாளில் ***திருச்சிற்றம்பலமுடையான்*** என்பவர் மேன்மையுற்றுத் திகழ்ந்தார். பெருமுயற்சியால் மிக்க பொருளை யீட்டி, மேனிலையில் வாழ்ந்த அவர்க்கு ***வேதவனமுடையான்*** என்றொரு மகன் பிறந்து திருந்திய கல்வி கற்றுச் சிறந்து விளங்கினுன்.

வேதவனமுடையான்

வேதவனமுடையான் இளமையிலேயே செந்தமிழ் வல்ல சான்றோர் கூட்டத்தில் பெருவிருப்பம் கொண்டிருந்தான்; பண்டை வள்ளல்களின் வரலாறுகளையும் அவர்களைப் பாராட்டிப் பாடிய பாவலர்களின் பாநலங்களையும் கேட்டு இன்புற்றுவந்தான். அவன்பால் திருநின்ற செல்வமும் செந்தமிழ்க் கல்வியும் சேர்ந்து சிறந்தன. அதனுல் புலவர் பாடும் புகழ்மேல் அவற்குப் பெருவேட்கை உண்டாயிற்று. அவனது கருத்து நிறைவுறும் வகையில் அவனது பெருஞ்செல்வம் துணை புரிந்தது; காலமும் நன்கு வாய்த்திருந்தது. வளவிய தமிழ்ப் புலவர் அவனது பையூர்க்கு வந்தவண்ணம் இருந்தனர். அவர்தம் செந்தமிழ்ப் பாட்டுக்கள் பையூரைச் சிறப்பித்துக்கொண்டிருந்தன. ஒரூரில் வாழும் செல்வத் தலைவர் எவ்வழியில் தமது காலத்தைக் கழிக்கக் கருது

கின்றாரோ, அவ்வழியிலே அவ்வூரவரும் செல்லக் கருதுவர். "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே," என்றதற்கேற்பப் பாவல்ல தமிழறிஞர் பலர்க்கும் பையூர் பண்புடை உறையூராயிற்று.

தொண்டை நாட்டைச் சேர்ந்த களத்தூர்க் கோட்டத்து மருதத்தூரில் அந்நாளில் குன்றன் *திருச்சிற்றம் பலமுடையான்* என்ற புலவர் வாழ்ந்துவந்தார். அவர் இனிய வெண்பாக்களை மிக்க விரைவாகப் பாடும் வீறு கொண்டு விளங்கினார்.

புலவரும் புரவலனும்

திருச்சிற்றம்பலப் புலவர் தென்னாடு சென்று காண வேண்டுமென்ற விருப்பம் கொண்டார். சேக்கிழார், சயங் கொண்டார், கம்பர், ஒட்டக்கூத்தர் என்ற பெரும் புலவர் வரிசையில் இடம் பெறுமையால், அவர் தாமாக நடந்து சென்று தமிழ்நாட்டைக் காண வேண்டியவரானார். அவ் வாறு வருபவர் காவிரித் தென்கரை நாட்டைக் கடந்து உறத்தூர்க் கூற்றத்துப் பையூருக்கு வந்து சேர்ந்தார். அங்கே அவரை வேதவனமுடையான் கண்டு இனிது வரவேற்று ஏற்ற சிறப்புக்களைச் செய்தான். அவரு டைய இனிய பண்பும் இயற்றமிழ்ப் புலமையும் கண்ட வேதவனத்துக்கு அவர்பால் அன்புண்டாயிற்று. புலவர் பெயரும் தன் தந்தை பெயரும் ஒத்திருப்பது பற்றி உவகையுற்று, அவரைத் தந்தையினும் மிக்க தகவுடன் அன்பு செய்து, அவரைத் தன் மனையிலே இருந்து வருமாறும் விரும்பினான்.

புலவர் அவை

தூய அன்பு வலையிற் சிக்குண்ட புலவர்க்கு வேத வனத்தைப் பிரியமாட்டாத பேரன்பு உண்டாயிற்று. ஆகவே, அவர் பையூரில் இருந்துகொண்டு வேதவன முடையானைக் காணவரும் பாவலர்களின் பாநலம் கண்டு இன்புற்றிருப்பாராயினர். ஒரு நாள் பையூருக்கு வந்த புலவர்களோடு இன்புறச் சொல்லாடிக்கொண்டு இருக் கையில், வந்த புலவர் ஒருவர் தம்மை ஆதரித்த செல்வர்

ஒருவர் ஊரைச் சிறப்பித்துத் தாம் பாடிய பாட்டொன்றைப் பாடிக் காட்டினர். கேட்ட ஏனைப் புலவரும் பிறரும் "கரகம்பிதத்துடன் சிரகம்பிதமும்" செய்தனர். அனைவருடைய மனமும் முகமும் மகிழ்ச்சியால் மலர்ந்து விளங்கின. வேதவனமுடையானும் அவ்வாறு மகிழ்ந்தானாயினும், அவனை அறியாத வகையில் முகத்தில் விளர்ப்பொன்று தோன்றி மறைந்தது. அதனைப் பாவலர் பலரும் கண்டிலர்; திருச்சிற்றம்பலப் புலவர் மாத்திரம் அதனைச் செம்மையாகக் கண்டுவிட்டார்.

புலவரது புலமைக்கண், அவன் உள்ளத்தில் நிகழும் நினைவுகளை முகத்தின் வழியாக ஊடுருவி நோக்கிற்று. அத்தகைய பாட்டொன்று தனது ஊர் மேல் ஏழ வேண்டுமென்ற வேட்கையொன்று தோன்றி வேதவனத்தின் உள்ளக்கிழியில் விஞ்சி நின்றது. "முகத்தின் முதுக் குறைந்ததுண்டோ, உவப்பினும் காயினும் தான் முந்துறும்" என்பது அவர் அறியாததன்று. உடனே, அவர் ஏனைப் பாவலர் கொண்ட மகிழ்ச்சி அடங்குமுன்பே வேறு சிலரையும் அவ்வாறு பாடிக்காட்டுமாறு கேட்டார். அவரவரும் தாந்தாம் பாடிய பாட்டுக்களைப் பாடிக் காட்டிக் கூடியிருந்த அவையினருக்கு இன்பமளித்தனர்.

இறுதியில் திருச்சிற்றம்பலப் புலவர் பாடவேண்டிய முறை வந்தது. அவையினர் அவரது பாட்டைக் கேட்க விரும்பியிருந்தனர். வேதவனமுடையானுக்கும் அவர் பாட்டைக் கேட்டற்கண் விருப்பம் மிக்குற்றது. மிகவும் ஆன்றவிந்தடங்கிய முறையில் என்பும் உருகத்தக்க இனிய இசையுடன்,

"வாளை வயிறு நிறைய மடற்கமுகம்
பாளைபசுந் தேனொழுகும் பையூரே—நாளையென்று
செப்பாத வாய்மையான் வேதன் திருமனுநூல்
ஒப்பான்எங் கோமான்தன் ஊர்"

என்று பாடிக் காட்டினர். பாவலர் கூடியிருந்த அத் தமிழ்ப் பேரவை முற்றும், அப்பாட்டு வழங்கிய சுவையிற் படிந்து இன்பமுற்றது. பின்பு, புலவர் உள்ளங்கள் அதன் பொருள் நலத்தைத் துய்த்துத் துள்ளி விளையாடின.

"நாளை என்று செப்பாத வாய்மையான்" என்றது, இன்றே அவன் பரிசில் நல்குவன் என்றும், தாம் அதனைப் பெற்று இன்புறலாமென்றும் வந்திருந்த பாவலர் உள்ளத்தில் ஊக்கம் எழுவித்தது. பாவலர் பலராகிய வழி, அவரவர் வரிசையறிந்து நல்குவதொன்றே அவர்கட்கு உண்மையில் ஊக்கமும் உவகையும் தரவல்லது. வரிசையறிந்து நல்கும் கொடை வள்ளல்களையே பண்டை நாளைப் புலவர் பாராட்டிப் பாடினர்.

வேதவனமுடையான் வரிசையறியும் மதிநுட்பமும், வரிசையறிந்து ஈதலிற் கைவண்மையும் நன்கு உடையன் என்பது தோன்றவே, "திருமனுநூல் ஒப்பான்" என்ற தொடர் நிற்பது, அப்புலவர்கள் பேரூக்கம் கொள்வதற்கும் ஏதுவாயிற்று. மனுநூல் மக்களது சாதி சமுதாயப் பிரிவும் வரிசையும் கூறுவது; அதனை ஒப்பவன் எனவே, வேதவனமுடையான் அவரவரையும் வரிசை அறிந்து சிறப்பிக்கும் மாண்புடையான் என்பது, புலவர்களின் புலமையுள்ளத்தில் இனிது புலனாயிற்று. ஒவ்வொரு சொல்லும் பொருள் நிரம்பி இனிமையும் ஆழமும் பொருந்தியிருப்பது புலவர்கட்குப் பேரின்பத்தைப் பெருக்கி நின்றது.

இப்பாட்டைக் கேட்டுப் பேரின்பம் எய்தி மகிழ்ந்த புலவர்கள், "வாளை வயிறு நிறைய மடற்கமுகம் பாளை பசுந்தேன் ஒழுகும் பையூர்" என நின்ற முதல் இரண்டடிகளின் சொற்பொருளை எண்ணி இன்புறுகையில், அதன்கண் வேறு குறிப்பும் உள்ளுறுத்தப்பட்டிருக்குமென எண்ணினர். அதனைப் புலவர் திருச்சிற்றம்பலவர் கண்டார்; இப்பாட்டைக் கேட்டு இன்பத்தில் திளைக்கும் புலவர்களை வாளையாகவும், பாட்டு வழங்கும் தம்மைக் கமுகாகவும், தம்பாட்டைக் கமுகின் பாளையாகவும், பாட்டு வழங்கும் இன்பத்தைத் தேனாகவும் உள்ளுறுத்த குறிப்பை முதற்கண் புலப்படுத்தினார்; யாவரும் மகிழ்ந்தடங்கவும், வேதவனமுடையான் குடியைக் கமுகாகவும், அவனைப் பாளையாகவும், அவன் வழங்கும் கொடையைத்

தேனுகவும், அது பெற்று மகிழும் புலவர்களை வாளை யாகவும் உள்ளுறுத்தியதை வெளிப்படையாக விளக்கிக் காட்டினர்.

பின்னர், வேதவனமுடையான் பாவலர் பலர்க்கும் அவரவர் வரிசைக்கொப்பப் பரிசில் தந்து விடை கொடுத் தான்; பின்னர்ச் சோழர் கோவாகிய குலோத்துங்கனைக் கண்டு, அவனது ஆணை பெற்று, திருச்சிற்றம்பலப் புலவர் பாடிய வெண்பாவை அவ்வூர்த் திருப்பெருமான் ஆண் டார் கோவில் முதல் திருச்சுற்று வாயிலின் வலப்பக்கத்தே சுவரில் பொறிக்கும்படி ஏற்பாடு செய்தான். அஃது இப் போது நான்குபட்டி வட்டத்து மடத்துக் கோவிலில் இன்றும் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது. இதைப் பாடிய திருச்சிற்றம்பலவருக்கு வேதவன முடையான் ஒரு நல்ல பரிசு வழங்கினன். அவர் எப்போதும் பையூரி லேயே இருக்க வேண்டும் என்று அவன் கருத்துட்கொண் டான். அதனல் அவன் தன் காணியான இரும்பூதி என்னும் குடிக்காட்டை அவர்க்குப் பரிசளித்தான். அது பெற்ற அப்புலவர் அவன் கருத்தையும் தெரிந்து கொண்டார்.

கல்வெட்டுக் கவிஞர்

ஏனைப் புலவர்கட்குப் போலல்லாது தமக்கு வேதவன முடையான் குடிக்காடு நல்கியது, அவன்பால் விடை பெற்றுச் செல்லா வண்ணம் செய்வதொரு பெரிய கால் கட்டாயிற்று. அதனை அப்படியே விட்டுவிட்டுச் செல் வதும் நேர்மையன்று என்பதை அவர் நன்கு உணர்ந்தார். இந்நிலையில் அவருடைய மருதத்தூர்க்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பம் மிகுதலாயிற்று. வேதவனத் தின் அன்பு ஒருபாலும், மருதத்தூர்பால் எழுந்த விருப்பம் ஒரு பாலும் அவரை ஈர்த்தன.

இரண்டிற்கும் நடுநின்று நாளடைவில் தேய்புரிப் பழங்கயிறுபோல் சிந்தை நலிவுற்ற திருச்சிற்றம்பலப் புலவர் ஒரு புதுவழி கண்டார்; வேதவனத்தின் பெரு மனையிலும் திருப்பெருமானுண்டார் கோவிலிலும் தமது

நாளைக் கழிக்கலானார்; கோவில் வழிபாட்டில் அவரது பொழுது பெரிதும் கழிவது வழக்கமெனினும், இப்போது அது முன்னிலும் பெரிதாயிற்று. இதனால் வேதவன முடையான் தன்னைப் பிரிந்திருக்கும் பிரிவை மறத்தற்கு ஒரு வழியை உண்டுபண்ணினார்.

நாட்கள் பல கழிந்தன. திருச்சிற்றம்பலவர் ஒரு நாள் வேதவனத்தைக் கண்டு சொல்லாடியிருக்கையில், தமக்கு அவன் பரிசிலாகத் தந்த குடிக்காட்டைத் திருப் பெருமானாண்டார்க்கு வழங்கத் தாம் விரும்புவதாகத் தெரிவித்தார். அதன் கருத்தை நினையாத வேதவனம் அதற்கு உடன்பட்டான். இரண்டாங் குலோத்துங்கனது பதின்மூன்றாமாண்டு, கன்னி ஞாயிறு ஏழாந் தியதியும் திங்கட்கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாளன்று (3-9-1145 கி. பி.) தானத்தைக் குறிக்கும் கல்வெட்டு வெட்டப்பட்டது. அது, முன்பு வெட்டப்பட்ட புலவரது கவிக்குக் கீழ் வெட்டப்பட்டது.

பின்னர் ஒருநாள் திருச்சிற்றம்பலப் புலவர், வேத வனமுடையான் செய்த சிறப்புக்களோடு, அவன்பாலும் ஏனை நண்பர்பாலும் விடை பெற்றுக்கொண்டு, தமது தொண்டை நாட்டுக் களத்தூர்க் கோட்டத்து மருதத்தூர் சென்று சேர்ந்தார்.

அருஞ்சொற்பொருள்

இடைக்காலம் - ஏறத்தாழக் கி. பி. 800-1800. கல்வெட்டு - கல் எழுத்து. அண்மை - சமீபம். கூற்றம் - தாலுக்கா போன்ற நாட்டுப் பிரிவு. திருமறைக்காடு-வேதாரணியம். வேதவனமுடையான் - திருமறைக் காட்டிலுள்ள சிவபெருமானின் பெயர். வீறு - திறமை. இயற்றமிழ் - செய்யுள் நடையிலும் உரை நடையிலும் அமைந்த தமிழ். கர கம்பிதம் - கை தட்டல். சிரகம்பிதம் - தலையாட்டல். விளர்ப்பு - வெளுப்பு. முகத்தின்-முகம்போல. முதுக் குறைந்தது- அறிவு மிகுந்தது. உண்டோ - வேறு உண்டோ (இல்லை). தான்- முகம். முந்துறும் - முற்பட்டு நிற்கும். வாய்மையான் - சொல் தவறாதவன். பேரின்பம்×சிற்றின்பம். நலிவுற்ற - வருந்திய. துய்த்த - அநுபவித்த. வரிசை - தகுதி.

கேள்விகள்

1. கல்வெட்டுக்கள் உணர்த்தும் செய்திகள் எவை?
2. வேதவனமுடையான் நல்லியல்புகள் யாவை?
3. திருச்சிற்றம்பலமுடையார் யாவர்? அவர் இயல்புகள் யாவை?
4. புலவர் பாட்டைக் கேட்ட வேதவனமுடையான் முகம் வெளுக்கக் காரணம் யாது?
5. திருச்சிற்றம்பலவர் எப்படி வேதவனமுடையானது விருப்பத்தை நிறைவேற்றினர்?
6. திருச்சிற்றம்பலவர் பாடிய பாடல் எவ்வாறு புலவர்களை மகிழ்வித்தது?
7. திருச்சிற்றம்பலவர் பாடல் எவ்வாறு வேதவனமுடையானை மகிழ்வித்தது?
8. திருச்சிற்றம்பலவர் வேதவனமுடையானை விட்டுப்பிரியச் செய்த சூழ்ச்சி யாது?

பயிற்சி

1. கல்வெட்டுக்களின் பயனைப்பற்றிப் பதினைந்து வரிகள் எழுதுக.

2. வேதவனமுடையான் சிறப்பியல்புகளை 25 வரிகளில் எழுதுக.

3. திருச்சிற்றம்பலவர் புலமைத்திறனை 25 வரிகளில் வரைக.

4. 'வேதவனமுடையான் சிறந்த புலவன்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

5. கீழ்வருவனவற்றை வாக்கியங்களில் அமைக்கவும் :— நீர்வளமும் நிலவளமும், நிலைபெற்று, பேரன்பு, செம்மையாக, ஊக்கமும் உவகையும், பேரின்பம்.

2. பாண்டித்துரைத் தேவர்

வித்துவான் க. வெள்ளைவாரணர் அவர்கள்

[இவ்வாசிரியர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர்; மிக இனிய செந்தமிழ் நடை எழுதுவதில் வல்லவர். இவர் எழுதியுள்ள இக்கட்டுரை, கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடான "தமிழ்ப் பொழில்" என்னும் திங்கள் தாளிலிருந்து எடுக்கப் பட்டுள்ளது.]

தமிழ் வளர்த்த குறுநில மன்னர்களில் சேதுவேந்தர் தலைசிறந்தோராவர். இவ்வேந்தர் குடியிற் புகழுடன் தோன்றியவரும், சேதுநாட்டு அரசியல் வினைகளைச் சீர் பெற நிகழ்த்திய அரசியல் அறிஞரும் ஆகிய பொன்னுச் சாமித் தேவரவர்களின் இளம் புதல்வராக, இற்றைக்கு எண்பதாண்டுகளின் முன் தோன்றியவர், பாலவநத்தம் சமீந்தார் *பாண்டித்துரைத் தேவராவர்*. பாளையம்பட்டி சமீந்தார் சீமைச்சாமித் தேவரும் கோட்டைச்சாமித் தேவரும் தேவரவர்களின் உடன் பிறந்தோராவர். பாண்டித் துரைத் தேவர்க்கு மனைவியர் இருவரும், புதல்வர் ஒருவரும் உண்டு.

தேவரவர்கள், தம் தந்தையாரைப் போலவே, நிரம்பிய தமிழார்வமும், செந்தமிழ்ப் புலமையும் படைத்தவர்; திருவாவடுதுறை ஆதீனத்துப் பழனிக்குமாரத் தம்பிரான் சுவாமிகளிடம் அரிய தமிழ் நூல்களை முறையாகப் பயின்றவர்; ஆங்கிலத்திலும் போதிய பயிற்சி பெற்றுக் கலை வளர்ச்சியில் தலைசிறந்து விளங்கியவர்.

அறுபத்து நான்கு ஆண்டுகளின் முன்னர் மதுரையில் அரியதொரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. 1901ஆம் ஆண்டில் சென்னை மாகாணக் காங்கிரசு மாநாடு மதுரையில் கூடியது. அம்மாநாட்டில் தேவரவர்கள் வரவேற்புக் கழகத் தலைவராயிருந்தார். நாட்டுப் பணியில் ஈடுபட்ட அவரது உள்ளம், மூவேந்தராட்சியிலும் உரிமை

பெற்று விளங்கிய பழைய தமிழ் நாட்டின் உயர்வினை எண்ணியது. தாய்மொழி வளர்ச்சியே தாய்நாட்டு வளர்ச்சியாம் என்பதும் மொழிப்பற்றின்றி நாட்டுப்பற்று நிலைபெற முடியாதென்பதும் தேவரவர்கள் உள்ளத்தே நன்கு புலனாயின. தமிழரிற் பலர் தமிழ் மொழியில் பற்றின்றி, நாட்டு விடுதலையைமட்டும் எதிர்பார்த்து நிற்பதில் ஒரு பயனும் இல்லையெனத் தேவரவர்கள் தெளியவுணர்ந்தார்கள்.

"தற்காலத்தே நம்மவரது பாஷாபிமானத்தின் நிலை மிகவும் பரிதவிக்கத் தக்கதே. சுருங்கச் சொல்லின் தேச மொழியின் வளர்ச்சியின்றி நாம் பெருமையை எதிர்பார்த்தல், ஆடையின்றி அலங்கரித்தலை ஒக்குமன்றே," என்பது தேவரவர்கள் உய்த்துணர்ந்து கூறிய தெளிவுரை ஆகும். இவ்வாறாகத் தமிழ் வளர்ச்சியால் தமிழ் நாட்டு அரசியலை உருப்படுத்த எண்ணிய தேவரவர்கள், காங்கிரசு மாநாட்டிற்கு வந்த தமிழறிஞர்களையும் புலவர் பெருமக்களையும் ஒருங்கு கூட்டி, 1901 ஆம் ஆண்டு, மே மாதம், 24ஆம் நாள், மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவினார்கள். பாண்டியர்கள் நிறுவிய முதல், இடை, கடையென்னும் சங்கங்களுடன், இத்தமிழ்ச் சங்கமும் நான்காஞ் சங்கமென எண்ணப்பெறுஞ் சிறப்புடையதாயிற்று. செயற்கரிய இச்செயலைச் செய்தமை பற்றியே, தேவரவர்களை **உக்கிர பாண்டியன்** எனத் தமிழறிஞர் பாராட்டுவாராயினர்.

நம் தேவரவர்கள் சங்கத்தின் சார்பில், **செந்தமிழ்** என்னும் திங்களிதழைத் தொடங்கி நடத்தினார்கள்; பாஸ்கர சேதுபதி அவர்களின் ஆதரவு கொண்டு, 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை'யை நிறுவினார்கள்; சங்கத் தமிழ் நூல்களை நன்கு கற்ற புலவர்களைச் சோதித்துப் பட்டம் வழங்கப் பண்டிதத் தேர்வினை அமைத்தார்கள்; ஆண்டு தோறும் சங்க விழாக் கொண்டாடிப், புலவர்களை வரவழைத்து அவர்தம் பொருளுரைகளைப் பலருங் கேட்டுத் தெளிவுறச் செய்தார்கள்; ஊர்தோறும் சென்று அறிஞர்

பேரவையில் செந்தமிழ் நூல்களின் நயத்தினை விளக்கி நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினார்கள்; தமிழ்ப் புலவர்களை நன்கு மதித்து ஆதரித்தார்கள்.

தேவரவர்களால் வளர்க்கப்பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அமைப்பினையும் சங்கத் தலைவராகிய தேவரவர்களின் சால்பினையும் குலாம் காதர் நாவலரவர்கள், தாம் இயற்றிய மதுரைத் தமிழ்ச் சங்கப் *புலவராற்றுப் படை* என்னுஞ் செந்தமிழ்ப் பாட்டில், நயம்பெற விளக்கியுள்ளார்கள். தேவரவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட இப்புலவராற்றுப் படை, நாவலரவர்களின் புலமையினையும், தேவரவர்களின் பெருமை மாண்பினையும் இனிது விளக்குவதாகும்.

பாண்டித் துரையவர்களின் புலமைத் தொண்டு, நூற் பதிப்பு, ஆராய்ச்சி, செய்யுளியற்றல், சொற்பொழிவு செய்தல் எனப் பல திறத்தானும் இனிது நடைபெற்றது. அவர்கள் நற்பொருள்களைப் பற்றிப் புலவர் பலர் பாடிய செய்யுட்களைத் தேர்ந்தெடுத்துப், 'பன்னூற்றிரட்டி'னைத் தொகுத்து உதவினார்கள்: இவ்வாறே சைவ சமய ஒழுகலாறுகளைக் குறித்துச் 'சைவ மஞ்சரி' என்னும் நூலையும் தொகுத்தார்கள்; நாற்கவிராச நம்பி அகப்பொருள் முதலிய நூல்களைத் தாமே ஆராய்ந்து, திருத்தமுற வெளியிட்டார்கள்; புறப்பொருள் வெண்பாமாலை, மணிமேகலை என்ற நூல்கள் வெளிவருவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்கள்; 'அநுமான விளக்கம்' முதலியவற்றை அறிஞர்களைக் கொண்டு ஆக்குவித்தார்கள்; தேவரவர்கள் வரலாற்று முறையில் நின்று தமிழர் வாழ்வினைச் செப்பஞ் செய்ய எண்ணித் 'தமிழ்ப் பழஞ் சரிதம்' என்னும் ஆராய்ச்சியுரையினைச் 'செந்தமிழில்' வெளியிட்டார்கள்; கம்பராமாயணம் முதலிய காவியங்களில் திளைத்துத் தாம் கண்ட நயங்களைச் சொற்பொழிவு வாயிலாகப் பலரும் உணரச் செய்தார்கள்.

தமிழும் சைவமும் தழைக்கப் புலமைத் தொண்டு செய்த அறிவுப் பெருஞ் செல்வர் சிவஞான முனிவராவர்.

அம்முனிவரையே வழிபடுந் தெய்வமாகக் கொண்டவர் நம் பாண்டித்துரைத் தேவர். முனிவரவர்கள் தமிழ் வளர்ச்சியிலும் சமய வளர்ச்சியிலும் ஈடுபட்டுப் பாட்டும் உரையும் இயற்றித் தமிழ் மொழியினை எவ்வாறு வளர்த்து வந்தார்களோ, அவ்வாறே தேவரவர்களும் தம் புலமைத் திறத்தால் தமிழ் மொழியினை வளர்த்தார்கள்.

தேவரவர்கள் சிவஞான முனிவர்பால் வைத்த பேரன்பினுல், அம்முனிவரது நூற்றிருபதாவதாண்டுத் திரு நட்சத்திரத்தில், 'சிவஞான சுவாமிகள் இரட்டை மணி மாலை' என்னும் பிரபந்தத்தினைப் பாடி, மதுரைத் தெற்கு ஆடிவீதியில் தாம் நிறுவிய சைவப் பிரகாச சபையில் அரங்கேற்றினுர்கள்; மேலும், முனிவர்களைக் குறித்த பிற தனிப்பாடல்களும், சிவஞானபுரங் காவடிச் சிந்தும், வேறு சில பிரபந்தங்களும் இயற்றியுள்ளார்கள். இங்ஙனம் புலமைத் திறத்தாற் பாட்டும் உரையும் இயற்றிப் பண்டைப் பாண்டியர்போற் கவியரங்கேறிப், பெரும் புலவராய் விளங்கிய பாண்டித்துரைசாமித் தேவரவர்கள் பத்தாண்டுகளாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் பாது காத்துப் போற்றித், தமது நாற்பத்தைந்தாம் வயதில், தமிழர்கள் தவக்குறைவினுல், திடீரென இறைவன் திரு வடியிற் கலந்து மறைந்தார்கள். இவர்களது பிரிவினுல் உள்ளங் கலங்கிய புலவர் பெருமக்களின் இரங்கற்பாக்கள் கன்னெஞ்சத்தினரையும் கனிவிக்கும் நீர்மையன. தேவரவர்களின் வாழ்க்கையிற் காணப்படுஞ்சால்புகளை இனிது விளக்குஞ் சொல்லோவியமாகவும் இவ்விரங்கற் பாடல்கள் அமைந்துள்ளன. தேவரவர்களின் புகழுருவினைப் புலவரொருவர் பின்வருமாறு பாராட்டி உருகுகின்றுர்;

"சித்திரத்தில் நீயிருப்பாய்; சிந்தையுளே வீற்றிருப்பாய்;
சிறப்பாச் செய்த
புத்தகத்தில் நீயிருப்பாய்; புலவர்கள்தம் பாவிலெல்லாம்
புகழாய் நிற்பாய்;
பத்திரிகை தனிலிருப்பாய்; தமிழ்ப்பாண்டித் துரைவேந்தே!
பாரில் எங்கும்
நித்தியமாய் இருக்கும்நினை 'நிலங்கடந்தான்' என்றுலகர்
நிகழ்த்தல் என்னே!"

என இங்ஙனம் புலவர் பாடும் புகழுடைய பாண்டித் துரைத் தேவரவர்களின் தமிழ்த் தொண்டினை உளங் கொண்டு தமிழ்நாடு உய்தி பெறுவதாகுக.

அருஞ்சொற்பொருள்

உக்கிர பாண்டியன் - சங்ககாலப் பாண்டியருள் ஒருவன்; சிறந்த அறிஞன்; மதுரையிலிருந்த தமிழ்ச் சங்கத்தை ஆதரித்தவன். புலவர் ஆற்றுப்படை - பாண்டித்துரைமீது பாடப்பெற்ற சிறுநூல்; அவ்வள்ளலிடம் பரிசு பெற்ற ஒரு புலவன் மற்றொரு புலவனை அவ் வள்ளலிடம் வழிப்படுத்தியதாக (ஆற்றுப்படுத்தியதாக)ச் செய்யப் பட்ட நூல். பதிப்பித்தல் - ஒரு நூலைப் பிழையறப் பரிசோதித்து வெளிப்படுத்தல். தொகுத்தல்-பல நூற் பாடல்களைத் தாம் விரும்பிய வாறு சேர்த்தல். ஒழுகலாறு-நடைமுறை விதி. அகப்பொருள்-இல்லறம் (இன்பம்) பற்றிய செய்தி. அநுமான விளக்கம்-இஃதொரு நூல்; கருதலளவைபற்றிய நூல். இரட்டை மணிமாலை-நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை என்னும் இருவகைப் பாக்கள் அந்தாதியாகத் தொடர்ந்து வரப் பாடப்படும் சிறு நூல். கவியரங்கு-புலவர் சபை. இரங்கற்பா-வருத்தப்பாடல். சால்பு-பெருந்தன்மை. உய்தி-பிழைக்கும் வழி.

கேள்விகள்

1. தேவர் தெளிய உணர்ந்தவை யாவை?
2. தேவர் உய்த்துணர்ந்து கூறிய தெளிவுரை யாது?
3. தமிழறிஞர் தேவரை 'உக்கிரபாண்டியன்' என்று பாராட் டக் காரணம் என்ன?
4. குலாம் காதர் நாவலர் செய்த நூல் யாது? அந்நூற் பொருள் என்ன?
5. தேவர் பதிப்பித்த நூல்கள் எவை? தொகுத்த நூல்கள் எவை?
6. தேவர் சிவஞான முனிவர்பால் மிக்க மதிப்புடையவர் என் பதை எவ்வாறு அறியலாம்?
7. தேவர் மறைவு குறித்துப் புலவர் ஒருவர் பாடிய இரங்கற்பா வின் பொருள் யாது?

பயிற்சி

1. வாக்கியங்களில் அமைக்க :— சீர்பெற, உருப்படுத்த, மொழிப்பற்று, பரிதவிக்க, பேரவை, தெளிவுபெற, சால்பு, ஒழுகலாறு, புறப்பொருள், புலமைத் திறம், நிறுவிய, இரங்கல், உய்தி.

2. பிரித்துக் கூறுக :—நாற்பத்தாறு, நாட்டுப்பற்று, பற்றின்றி, பாஷாபிமானம், திங்களிதழ், சங்கத்தமிழ், இன்னிசை, செழுந்தமிழ், பன்னூற்றிரட்டு, புலமைத் தொண்டு, அரங்கேற்றினர், இயற்றி புள்ளார், கன்னெஞ்சம், அம்முனிவர், சொற்பொழிவு.

3. சிறு குறிப்பு வரைக :— பன்னூல் திரட்டு, நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, இரட்டை மணிமாலை.

4. தேவர் பிறப்பு, கல்வி கற்றமை, சங்கம் அமைத்தமை, செய்த தமிழ்த்தொண்டு, புலவர் பாராட்டு என்னும் குறிப்புக்களைத் துணையாகக்கொண்டு, இப்பாடப் பொருளை ஒரு கட்டுரையாக வரைக.

3. தமிழ் நாடகக் கலைஞர்

திரு. ஔவை டி. கே. சண்முகம் அவர்கள்

[திரு. ஔவை டி. கே. சண்முகம் அவர்கள் தமிழறிவும் நாடகப் புலமையும் நன்கு அமையப் பெற்றவர். இவர் நடிக்கும் 'ஔவையார்', 'மனிதன்', 'இராசராச சோழன்' என்பவை தமிழகம் இதுவரையில் காணாத மிகவுயர்ந்த நாடகங்களாகும்.]

வரலாறு

தவத்திரு சங்கரதாச சுவாமிகள், ஆங்கில மொழி மோகத்தால் தாய்மொழியிற் பேசுவதுகூட மதிப்புக் குறைவென்று கருதப்பட்ட காலத்தில், நாடக மேடையின் மூலம் தமிழை வளர்த்த பெரியார் ஆவர். அவர் இசையரங்குகளிலே தெலுங்குமொழி ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் நாடக மேடையில் தீந்தமிழ்ப் பாடல்களைப் பொழிந்து தமிழுலகை மகிழ்வித்தவர்.

1867 ஆம் ஆண்டில் ஆவணித் திங்கள் 22 ஆம் நாள் தமிழ் மாநிலம் இவரைத் தாங்கும் பேறு பெற்றது. தமிழர் வரலாற்றிலே அழியாத இடம் பெற்ற கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார், மகாகவி பாரதியார், வீரபாண்டியக் கட்டபொம்மன் முதலிய வீரர்களையும், புலவர்களையும் தந்த திருநெல்வேலி மாவட்டம்தான் நாடகப் புலவராகிய சங்கரதாச சுவாமிகளையும் நமக்குத் தந்தது. தென் பாண்டி நாட்டின் துறைமுக நகரங்களில் ஒன்றான தூத்துக்குடியிலே, வெள்ளையரை விரட்டியடித்த 'வெள்ளையத் தேவன்' பரம்பரையிலே, போரில் புறமுதுகு காட்டாத வீர மறக்குடியிலே, தாமோதரக் கணக்கப் பிள்ளை என்பாரின் செல்வத் திருமகனாகப் பிறந்தார் சங்கரதாச சுவாமிகள்.

தந்தையார் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய தமிழ்ப் புலவர். நகர மக்கள் அவரை 'இராமாயணப் புலவர்' என்ற சிறப்புப் பெயரிட்டு அழைத்தனர்.

“ தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்”

என்னும் தமிழ் மறையை நன்கறிந்த தாமோதரத் தேவர், தமது புதல்வனுக்குத் தாமே தமிழ்க் கல்வி புகட்டினர்.

அக்காலத்தில் ‘புலவரேறு’ என்று அறிஞர்களால் போற்றப்பட்ட பழனி தண்டபாணி சுவாமிகளிடம் இவர் பாடம் கேட்டுத் தமது தமிழறிவை வளர்த்துக்கொண்டார்.

தண்டபாணி சுவாமிகளிடம் தமிழ்ப் பாடம் கேட்ட போது இவரும் உடுமலைச் சரபம் முத்துசாமிக் கவிராயரும் உடன் மாணவராயிருந்தனர். கவிராயரவர்கட்கும் இவருக்கும் இருந்த அன்புத் தொடர்பு மிக நெருங்கியதாகும். சுவாமிகள் தூத்துக்குடி உப்புப் பண்டசாலையில் சில காலம் கணக்கராக வேலை செய்தார். இவர் தமது பதினரும் வயதிலேயே வெண்பா, கலித்துறை, இசைப் பாடல்கள் முதலியவற்றை எழுதத் தொடங்கினர். கவிதைப் புலமைக்கும் கணக்கு வேலைக்கும் போட்டி ஏற்படவே, சில ஆண்டுகளுக்குப் பின்பு இவர் தமது இருபத்து நான்காம் வயதில் நாடகத் துறையில் நுழைந்தார்.

முதன் முதலாக இவருடைய புலமையை அறிந்து பயன்படுத்திக்கொண்ட முதல் நாடக சபையில் இவர் முதலில் நடிகராகவும், பின்னர் ஆசிரியராகவும் சில ஆண்டுகள் பணியாற்றினர். இரணியன், இராவணன், எமதருமன், ‘நள தமயந்தி’யில் சனீசுவரன் முதலிய வேடங்கள் இவருடைய நடிப்புத் திறமையை எடுத்துக் காட்டிய சிறந்த பாத்திரங்கள் என்று கருதப்பட்டன.

திருவாளர் சாமி நாயடு அவர்களின் நாடக சபையில் சிலகாலம் சுவாமிகள் ஆசிரியராக இருந்தார்; அப்போது சூத்திரதாரராகவும் நடித்துவந்தார். சுவாமிகள் சூத்திர தாரராக வந்து நாடக நுணுக்கங்களைப் பற்றியும், நடைபெறவிருக்கும் நாடகத்தின் நீதிகளைப் பற்றியும் நிகழ்த்தும் விரிவுரையைக் கேட்க மக்கள் ஆவலோடு கூடுவார்கள்.

வள்ளி வைத்தியநாதய்யர், அல்லி பரமேசுவர ஐயர் ஆகியோர் நடத்திவந்த நாடக சபைகளில் இவர் சில ஆண்டுகள் ஆசிரியராய் இருந்தார். பி. எஸ். வேலு நாயர் அவர்களின் 'சண்முகாநந்த சபை' யிலும் நெடுங் காலம் இவர் பணி புரிந்தார். திரு. வேலு நாயர் அவர் களின் குழுவிலிருந்தபோதுதான் நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய 'மனோகரன்' என்ற நாடகத்திற்கு இவர் பாடல்கள் இயற்றினார்.

'சமரச சன்மார்க்க நாடக சபை' என்ற பெயரால் சுவாமிகள் தாமே ஒரு நாடக சபையையும் சில ஆண்டுகள் நடத்தினார். இந்த நாடகக் குழுவிலேதான் தமிழ் நாடக மேடையின் மங்காத ஒளி விளக்காகத் திகழ்ந்த எஸ். ஜி. கிட்டப்பாவும் அவர் உடன் பிறந்தா ரும் பயிற்சி பெற்றனர். இசைப் புலவராய் இன்று நம் மிடையே வாழும் மதுரை திரு. மாரியப்ப சுவாமிகளும் இந்த நாடகக் குழுவில் தோன்றியவரேயாவர்.

சுவாமிகள் ஆசிரியராக இருந்த முதல் சிறுவர் நாடகக் குழு திரு. சகந்நாத ஐயர் அவர்களின் 'பால மீனரஞ்சனி சங்கீத சபை' யேயாகும். திருவாளர்கள் பி. டி. சம்பந்தம், எம். எஸ். முத்துக்கிருட்டிணன், டி. பி. பொன்னுச்சாமி பிள்ளை, எம். வி. மணி, டி. பாலசுப்பிரமணியம், கே. சாரங்கபாணி, எஸ். வி. வேங்கடராமன், நவாப் டி. எஸ். இராசமாணிக்கம், எம். ஆர். இராதா முதலிய எண்ணிறந்த நடிகர்கள் அந்தச் சபையில் இருந்தவர் களே என்பது குறிப்பிடத்தக்கது.

சுவாமிகள் சிலகாலம் அந்தச் சபையில் இருந்த பின்பு திரு. சகந்நாதய்யர் அவர்களுடன் ஏற்பட்ட மனத் தாங்கலின் விளைவாக மதுரைக்கு வந்து, நண்பர் சிலரது கூட்டுறவோடு 1918ஆம் ஆண்டில் 'தத்துவ மீன லோசனி வித்துவ பால சபா' என்ற நாடகக் குழுவைத் தோற்றுவித்து, அதன் ஆசிரியராய் அமர்ந்தார். இந்தக் குழுவில்தான் டி. கே. எஸ். சகோதரர்கள் என்று குறிக் கப்படும் நாங்கள் சேர்க்கப்பட்டோம்.

இவ்வாறு ஆசிரியர்களுக்கெல்லாம் பேராசிரியராகவும் தமிழ் நாடக உலகின் தந்தையாகவும் பல ஆண்டுகளைக் கழித்த சுவாமிகள், இறுதிவரையில் திருமணமாகாதவராகவே இருந்து 1922ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் நாள் திங்கட் கிழமை புதுச்சேரி நகரில் தமது பூதவுடலை நீத்தார்.

தமிழ் நாடகத் தாய் பெறற்கரிய தனது புதல்வனை இழந்தாள் ; நடிகர்கள் தங்கள் பேராசிரியரை இழந்தனர் ; கலையுலகம் ஓர் ஒப்பற்ற கலைஞரை இழந்து கண்ணீர் வடித்தது.

சுவாமிகள் புலமை

ஒருநாள் மாலை சுவாமிகள் புத்தகக் கடைக்குச் சென்று அபிமன்யு சுந்தரி அம்மானைப்பாடல் படியொன்று வாங்கி வந்தார் ; இரவு உணவுக்குப் பின்பு ஓர் 'அரிக்கன்' விளக்கை அருகில் வைத்துக்கொண்டு எழுதத் தொடங்கினார். மறுநாள் பொழுது விடிந்து நாங்கள் எழுந்தபோது சுவாமிகள் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தார். அவரது படுக்கையருகே அபிமன்யு நாடகம் மங்களப் பாட்டுடன் முடித்து வைக்கப்பட்டிருந்தது. இது வெறும் கட்டுக்கதையன்று; உயர்வு நவிற்சியுமன்று; கண்கண்ட உண்மை.

நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள் !...... அவற்றிற் கேற்ற உரையாடல்கள் ! துவக்கத்திலிருந்து முடிவு வரை அடித்தல் திருத்தல் இல்லை ! ஒரு நூலைப் பார்த்து நகல் எடுக்கும் வேலையைக்கூட இவ்வளவு விரைவாகச் செய்ய முடியாது. ஆயின், சுவாமிகள் கற்பனையாக நான்கு மணி நேரம் நடைபெறக்கூடிய ஒரு நாடகத்தையே எழுதி முடித்துவிட்டார். அவருடைய புலமைத் திறனை என்னென்று கூறுவது !

சுவாமிகள் இங்ஙனம் ஒரே இரவில் இவ்வளவு விரைவாக எழுதி முடித்த 'அபிமன்யு' நாடகத்தில் உள்ள பாடல்களிலும் உரையாடல்களிலும் நிறைந்துள்ள கருத்

துக்கள் எண்ணி எண்ணி இன்புறுதற்குரியன. இங்குச் சுவை மிகுந்த ஒன்றைக் குறிப்பிடுகிறேன்:

"துந்துபிகளெல்லாம் *தும் தும் தும்* என்றும், சங்கங்களெல்லாம் *பம் பம் பம்* என்றும், தாள வகைச் சல்லரி மல்லரி கரடிகைகளோ *தீம் தீம் தீம்* என்றும், முரசு, பேரிகை, மிருதங்கங்களோ *தோம் தோம் தோம்* என்றும் தொனிக்கின்றன. ஆகவே, இவ்வகை வாத்திய ஒலிகள் எல்லாம் ஒன்று கூடித் *தும் பம் தீம் தோம்* தும்பம் தீந்தோம், துன்பம் தீர்ந்தோம், துன்பம் தீர்ந்தோம் என்னும் பொருளைக் கொடுக்கலாயின. ஆகா! நான் செய்த பாக்கியமே பாக்கியம்."

இந்த உரைநடையை அபிமன்னனை மணந்து கொள்ள இருந்த சுந்தரி பேசி முடித்ததும், அந்த நாளில் சபையோர் நீண்ட நேரம் கைதட்டித் தங்கள் பாராட்டைத் தெரிவிப்பது வழக்கம்.

கோவலன் நாடகத்தை முதன்முறை மதுரையில் அரங்கேற்றியபோது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி சுவாமிகளின் புலமைக்கு மற்றோர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. 'கோவலன்' நாடகக் கதை எல்லோருக்கும் தெரிந்திருப்பதால் விளக்கமாகக் குறிப்பிடவேண்டுவதில்லை. கண்ணகி கொடுத்த காற்சிலம்பை விற்றுவர மதுரை நகருக்குப் போவதாகக் கூறுகிறான் கோவலன். அப்போது கண்ணகியின் வாய்மொழியாக,

> "மாபாவியோர் கூடிவாழும் மதுரைக்கு
> மன்னா போகாதீர் இன்று"

என்ற பாடல் பாடப்படுகின்றது. மதுரை நகரில் அவர்கள் முன்னிலையிலேயே மாபாவியோர் கூடிவாழும் மதுரைக்குப் போக வேண்டா என்று பாடினால் அவர்கள் மனம் எப்படியிருக்கும்? இந்தப் பாடலைப் பாடத் தொடங்கியதும் சபையோர் கூச்சலிட்டு, "எங்கே சங்கரதாசர்? கொண்டு வா மேடைக்கு," என்று ஆரவாரம் செய்தார்கள்.

சுவாமிகள் மேடைக்கு வந்து பெருமிதத்துடன் நின்றார். சபையிலிருந்து கேள்விகள் சரமாரியாகக்

கிளம்பின. "மாபாவியோர் கூடி வாழும் மதுரை" என்று குறிப்பிட்டு எழுதியதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டுமென மக்கள் குழப்பம் செய்தனர். சுவாமிகள் தம் கைகளை உயர்த்தி அமைதியாக இருக்கும்படி வேண்டிக் கொண்டு, தமது கருத்தைக் கீழ்வருமாறு விளக்கத் தொடங்கினார்:

"*மா* என்ற சொல் திருமகளாகிய இலக்குமியையும், *பா* என்ற சொல் கலைமகளாகிய பாரதியையும், *வி* என்ற சொல் மலைமகளாகிய பார்வதியையும் குறிக்கின்றன" என்று கூறி, அதற்கு ஆதாரமாகப் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்திலிருந்து சில செய்யுட்களைப் பாடிக் கீழ் வருமாறு விளக்கம் தந்தார்:

"'மாபாவியோர் கூடி வாழும் மதுரை' என்றால், திருமகளும் கலைமகளும் மலைமகளும் சேர்ந்து வாழும் மதுரை என்று பொருள்படுகிறது. அதாவது, எல்லாச் செல்வங்களும் நிறைந்து விளங்கும் மதுரையில், செல்வம் கொழிக்கும் அத்திருநகரில், இந்தச் சிலம்பை வாங்க ஆள் கிடைக்காதே என்ற கருத்துப்பட, 'மாபாவியோர் கூடி வாழும் மதுரைக்கு மன்னா போகாதீர்' என்று மதுரை நகரைப் பெருமையாகக் குறிப்பிட்டிருக்கிறேனே தவிரச் சிறுமைப்படுத்தும் எண்ணம் எனக்கில்லை." இந்த விளக்கத்தைக் கேட்ட அவையோர் சுவாமிகளின் புலமையை வியந்து கைதட்டிப் பாராட்டினர்.

ஒருமுறை உடுமலைச் சரபம் முத்துசாமிக் கவிராயர் அவர்கள் சுவாமிகளை நோக்கி, "சங்கரதாச சுவாமிகளே! உம்முடைய பாடல்கள் முள்ளும் முரடும்போல் இருக்கின்றன," என்றாராம். உடனே சுவாமிகள் சிரித்துக் கொண்டே, "கவிராயர் பாடல்கள் கல்லும் கரடும்போல் இருக்கின்றனவே!" என்றாராம். புலவர்களின் விளையாட்டுப் பேச்சுக்களிலேகூட இனிமை சொட்டுவதைக் காண்கிறோம். முள்ளும் முரடும், கல்லும் கரடும் என்பவற்றை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் முரட்டுத்தனமான பாடலென்றும், கடினமான பாடலென்றுமே பொருள்

தோன்றும். ஆயின், உட்பொருள் அதுவன்று. முள்ளும் முரடும்போல் என்றால், பலாச்சுளையைப்போல் இனிக்கிறது என்றும், கல்லும் கரடும்போல் என்றால், கற்கண்டைப்போன்றது என்றும் பொருள்கொள்ளுதல் வேண்டும்.

நாடகத்துறையில் சுவாமிகள் தொண்டு

ஐம்பதாண்டுகளுக்கு முன்பு தமிழ் நாடக மேடையில் வசனங்கள் இல்லை; முழுமையும் பாடல்களே பாடப்பட்டு வந்தன. அக்காலத்தில் நாடகங்களை இயற்றிய ஆசிரியர்கள் எல்லா நாடகங்களையும் இசை நாடகமாகவே எழுதினார்கள். திருவாளர் அருணாசலக் கவிராயர் அவர்களின் 'இராம நாடகம்' இதற்குச் சான்று கூறும்.

சில ஆண்டுகளுக்குப் பின்பு இந்த நிலை மாறி நடிகர் நடிகையர் தமது திறமைக்கும் புலமைக்கும் ஏற்றபடி நாடகக் கதைக்குப் புறம்பாகப் போகாமல் கற்பனையாகவே பேசிக்கொள்ளும் முறை வழக்கத்தில் வந்தது. இவ்வாறு நடைபெறும் உரையாடல்கள் சில சமயங்களில் வரம்புமீறிப் போய்விடுவதும் உண்டு.

இந்தச் சமயத்தில்தான் நம் சுவாமிகள் தமிழ் நாடக உலகில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவ வழி கோலினார்; அந்தக் காலத்திலே நடைபெற்றுவந்த புராண, இதிகாச, கற்பனை நாடகங்களுக்கெல்லாம் பாடல்களும் உரையாடல்களும் எழுதி வரம்புக்கு உட்படுத்தியதோடு, புதிய நாடகங்கள் பலவற்றை இயற்றியும் உதவினார்.

கோவலன், வள்ளி திருமணம், பவளக்கொடி, அல்லி அர்ஜுனா, சீமந்தனி, சதியனுசூயா, மணிமேகலை, லவகுசா, சாவித்திரி, சதிசுலோசனா, பிரகலாதன், சிறுத்தொண்டர், பிரபுலிங்கலீலை, பார்வதி கல்யாணம், வீர அபிமன்யு முதலிய பல நாடகங்கள் சுவாமிகளால் இயற்றப்பெற்றவை.

தமிழ் நாடகத் தலைமையாசிரியர்

நாடகத் தமிழை வளர்த்த தந்தை அவர்; நாடகாசிரியர்கள் பலருக்குப் பேராசிரியர் அவர். சென்ற ஐம்பது

ஆண்டுகளுக்கிடையே அவர் பாடல்களையோ வசனங்களையோ பயன்படுத்தாத நடிக நடிகையர் தமிழ் நாடக உலகில் இல்லையென்றே சொல்லிவிடலாம். நாடக உலகம் அப்பெரியாரைத் *தமிழ் நாடகத் தலைமையாசிரியர்* எனப் போற்றியது. எளிமையும் இனிமையும் ததும்பும் பாடல்களாலும் தேன் சொட்டும் தீந்தமிழ் உரைநடைகளாலும் அப்பெருமகனுர் இயற்றி யருளிய நாடகங்களே தமிழ் நாடகக் கலை வளர்ச்சிக்கு அடிப்படைச் செல்வம் என்று கூறுதல் மிகையாகாது.

அவருடைய முழுப் பெயரையும் சொல்ல வேண்டியதில்லை; சுவாமிகள் என்றுலே போதும். தமிழ் நாடக உலகில் அது சங்கரதாச சுவாமிகள் ஒருவரைத்தான் குறிக்கும்.

அவ்ர் காலத்திலிருந்த மிகப்பெரிய புலவர்களும் நாடகாசிரியர்களுமான உடுமலைச் சரபம் முத்துசாமிக் கவிராயர், முத்தமிழாகரம் ஏகை-சிவசண்முகம் பிள்ளை, சித்திரக்கவி சுப்புராய முதலியார், குடந்தை வீராசாமி வாத்தியார் முதலியோர் சுவாமிகளின் புலமைக்குத் தலை வணங்கினர்; பாராட்டினர்.

சுவாமிகள் மறைந்தார். அவர் பாடல்கள் என்றும் மறையா; அழியா. சுவாமிகளின் திருப்பெயர் தமிழ் உலகம் உள்ளளவும் மங்காது நின்று ஒளி வீசுமாக!

அருஞ்சொற்பொருள்

அரங்கு-மேடை. தீந்தமிழ்-இனிய தமிழ். மாநிலம்-மாகாணம். பேறு - பாக்கியம். மாவட்டம் - ஜில்லா. தூத்துக்குடி - இதன் பழைய பெயர் தூதுக்குடி என்று செப்பேட்டில் காணப்படுகிறது. புலமை - அறிவு. புலவர் - அறிஞர். மறம் - வீரம். மறவர் - வீரர். நன்றி-உதவி. மறை-வேதம். புலவர் ஏறு-புலவருள் ஆண்சிங்கம். சரபம்-இது ஒரு பட்டம். வெண்பா-தமிழ்ப் பாடல்களில் ஒருவகை. கலித்துறை - தமிழ்ப் பாடல்களில் ஒருவகை. கவிதைப் புலமை - செய்யுள்செய்யும் அறிவு. சூத்திரதாரர்-நாடகத்தை நடத்துவோன். பம்மல் - ஓர் ஊரின் பெயர். இது சென்னைக்கு அருகிலுள்ள பல்லாவரத்துக்கு (பல்லவபுரத்திற்கு) இரண்டு கல் தொலைவிலுள்ளது.

குழு - கூட்டம். அபிமன்யு - அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் பிறந்த மகன். பெருமிதம் - கல்வியின் மேம்பாடு. திருநகர்-அழகிய நகரம். வரம்பு - எல்லை.

கேள்விகள்

1. "தந்தை மகற்காற்றும் நன்றி" என்று தொடங்கும் திருக்குறள் ஆளப்பெற்ற சந்தர்ப்பம் யாது?
2. புலவரேறு, உடுமலைச் சரபம் என்பன யாரைக் குறிக்கின்றன?
3. சங்கரதாச சுவாமிகள் எந்த எந்த நாடக சபைகளில் பணியாற்றினார்?
4. சுவாமிகள் எவ்வெவ் வேடங்களைத் தாங்கி நடித்தார்?
5. சுவாமிகளின் புலமையை விளக்க இரண்டு சான்றுகள் தருக.
6. மதுரையில் கோவலன் நாடகம் நடந்தபோது குழப்பம் உண்டாகக் காரணம் யாது?
7. சுவாமிகள் எழுதிய நாடக நூல்கள் எவை?
8. சுவாமிகள் நாடகத் துறையில் செய்த தொண்டுகள் யாவை?
9. சுவாமிகள் தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என்பது எவ்வாறு பொருந்தும்?

பயிற்சி

1. ஆசிரியரைக் கேட்டோ, நூல்களின் துணையைக் கொண்டோ கீழ்வரும் ஒவ்வொருவரைப்பற்றியும் குறிப்பு வரைக:—

வ. உ. சிதம்பரனார், மகாகவி பாரதியார்,
கட்டபொம்மன், பம்மல் சம்பந்த முதலியார்.

2. சங்கரதாச சுவாமிகளின் வரலாற்றை நாற்பது வரிகளுள் ஒரு கட்டுரையாக எழுதுக.

3. சங்கரதாச சுவாமிகளின் தமிழ்ப் புலமையை விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

4. கீழ்வருவனவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக:
மறக்குடி, புலவரேறு, நெடுங்காலம், பெருமிதம், அரங்கேற்றம், கீழ்வருமாறு, புறம்பாக, கட்டுப்பாடு.

பூம்பட்டினமும் ஆண்டுச் சேர்த்தெண்ணப்பட்டது. உறையூர் ஆண்டுக் கூறப்படவேண்டிய சிறப்பில்லா திருக்கவும், அதன் தொன்மை கருதியே ஆண்டு அதுவும் கூறப்பட்டதாகும்.

சோழன் நலங்கிள்ளி இங்ஙனம் சோழ நாட்டின் தொன்மை வாய்ந்த தலைநகராகிய உறையூரைத் தான் கைப்பற்றி அங்கிருந்து அரசாள விரும்பினன். அவன் எண்ணம் நிறைவேறுவதற்குச் சோழன் நெடுங்கிள்ளி உடன்பட்டுத் தன் தலைநகராகிய உறையூரை நலங் கிள்ளிக்குக் கொடுத்தல் வேண்டும்; அன்றி நலங்கிள்ளி யால் நெடுங்கிள்ளி வென்று ஒழிக்கப்படுதல் வேண்டும். நெடுங்கிள்ளி உறையூரைக் கொடுக்க உடன்பட்டிலன். ஆகவே, நலங்கிள்ளி மற்றொரு வழியை மேற்கொண் டனன்; போரினால் உறையூரைக் கைப்பற்ற எண்ணினன். நலங்கிள்ளி மிக்க போர் வலிமையும் படைப்பெருமையு முடையவன்; தன் படையோடு சென்று உறையூரை முற் றுகையிட்டனன். நெடுங்கிள்ளி, உடனே தானும் போர் மேற்கொண்டு புறப்படாமல் அரண் அமைத்துக்கொண்டு உள்ளிருந்தனன்; வேறு எவரையேனும் துணைவேண்டி அவர் வருகையை நினைந்தோ, வேறு எக்காரணத்தாலோ அங்ஙனம் உள்ளிருந்தனன். இம்முற்றுகையினால் உறையூர் வாழ்மக்கள் பெருந் துன்பத்திற்காளானார்கள்.

இந்நிலைமையில் புலவர் கோவூர் கிழார் ஆண் டெய்தினர்; முற்றுகையால் மக்கள் படுந்துன்பத்தைக் கண்ணுற்றனர்; இருவருக்கும் உள்ள பகைமையை ஒழித்து, முற்றுகையை அகற்றி, மக்கள் துன்பத்தையும் ஒழிக்க எண்ணினர்; முற்றுகையிட்டிருந்த நலங்கிள்ளி பாற்சென்று, சீரிய சில கருத்துக்களை அவன் மனங் கொள்ளுமாறு எடுத்துரைத்தனர்; "நலங்கிள்ளி, உன்னால் வளைக்கப்பட்டு உள்ளிருப்பவன், வேப்பமாலை யணிந்த பாண்டியனல்லன்; பனம்பூமாலை அணிந்த சேரனு மல்லன்; உன்னைப்போல ஆத்திப்பூமாலை அணிந் தவனே; நீ பிறந்த சோழர் குடியிற் பிறந்தவனே. இப்

போரில் நும்முள் யாரேனும் ஒருவர் தோற்றலின்றி இரு வரும் வெற்றி பெறுதல் இயலாது. யாவர் தோற்பினும் பிறரால் பழிக்கப்படுவது சோழர் குடியேயாகும். ' நாம் போரில் வென்றேம்; நம் பகைவன் தோற்றான்!' என்று நீ பெருமிதமாக எண்ணிக்கொள்ளலாம்; ஆனால், பிற மன்னர், 'சோழன் நலங்கிள்ளி வென்றான்; சோழன் நெடுங்கிள்ளி தோற்றான்,' என்று பிரித்துக் கூறார்; 'சோழன் ஒருவன் போரில் தோற்றான்,' என்றே கூறுவர்; அதனால், நின் குடியாகிய சோழர் குடி பழிப்படைதல் ஒருதலையன்றோ? ஆதலால், இப்போர் நும் குடிப் பெருமைக்கு ஏற்றதன்று; இப்போரைக் கைவிடுக," என்றெடுத்துக் கூறினர்.

அதுகேட்ட நலங்கிள்ளி, புலவர் சொற்களை மறுக்க இயலாதவனாகிப் போரை நிறுத்தினான். உறையூர் மக்கள் துன்பம் நீங்கினார்கள். இரு திறத்துப் படை மக்களுள் பலர் சாவாமல் வாழ்வெய்தினர். யானைகள், குதிரைகள் பல அங்ஙனமே சாவாமல் வாழ்வெய்தின.

அக்காலத்தில் சேரரும் பாண்டியரும் சோழரும் அடிக்கடி ஒருவரோடொருவர் பகைமையுற்றுப் போர் புரிந்தனராதலின், அம்மூவருள் ஒருவர்க்கு ஏனையோர் பகைவராகக் கருதப்பட்டனர். அதனால், புலவர் கோவூர் கிழார் நலங்கிள்ளியை நோக்கி, "நின்னால் வளைக்கப்பட்டு உள்ளிருப்பவன் பாண்டியனுமல்லன்; சேரனுமல்லன்; அவர்களாயின், நீ போருக்கெழுந்து வளைத்துக்கொள்ளு தல் முறையாகலாம்," என்பது தோன்ற எடுத்துக் கூறுவா ராயினர். இங்ஙனமன்றி, அரிதாக ஒரோவழி இம் மன்னர்கள் நட்புடையராய் விளங்கியவிடத்து, அத் தன்மை கண்டு புலவர்கள் மிகமிக மகிழ்ந்து, "இந்நட்பு இப்படியே நிலைத்து விளங்குவதாக!" என்று கூறி வாழ்த்தியுள்ளார்கள்.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவ னும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெரு வழுதியும் நட்பினராய் ஓரிடத்துச் சேர்ந்திருந்தனர்.

இத்தோற்றத்தைக் கண்ட காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் மிகமகிழ்ந்து அவ்விருவரையும் நோக்கி, "நீவிர் இங்ஙனமே நட்போடு வாழ்வீராக! வஞ்சகர் நும் செவிக்கும் நெஞ்சுக்கும் இனிமையாகத் தோன்றும்படி பேசி நும்மைப் பிரிக்க முயல்வர்; அவர் சொற்களை ஆராய்ந்து தெளிந்து, அவற்றைப் புறக்கணித்து, இங்ஙனமே நீடு வாழ்க!" என வாழ்த்தினர். சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன் கானப்பேர் கடந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஓரிடத்து நட்போடு ஒருங்கிருந்தனர். ஔவையார் இத்தோற்றத்தைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டு, "நீவிர் இங்ஙனமே ஒற்றுமையுடையீராய் நீடு வாழ்க!" என வாழ்த்தினர்.

சோழன் நலங்கிள்ளி முற்கூறியாங்குக் கோவூர்கிழாரிடத்துக் கண்ணோட்டமுடையவனாய், அவர் சொல்லை மறுக்க இயலாதவனாய்ப் போரை நிறுத்தி மீண்டானாயினும், தன் மனத்திருந்த பகையை ஒழித்தானல்லன். ஆவூர் என்ற ஊரின்கண் சோழன் நெடுங்கிள்ளி சென்றிருந்தபோது, நலங்கிள்ளி மீண்டும் படையோடு ஆண்டுச் சென்று, முற்றுகையிட்டனன். புலவர் கோவூர் கிழார் ஆண்டும் எய்தினர்; தளராமல் முன் முயற்சியை மீண்டும் மேற்கொண்டனர்.

இவ்விரண்டாம் முறையில் கோவூர்கிழார் சோழன் நலங்கிள்ளியை நோக்கி அறவுரை கூறினரல்லர்; முற்றுகையிடப்பட்டு உள்ளிருந்த நெடுங்கிள்ளியை நோக்கிக் கூறினர். அவர் முன்னொருமுறை நலங்கிள்ளிக்கு அறவுரை கூறினர். அவனும் ஏற்றுக்கொண்டு அப்பொழுதைக்குப் போரை நிறுத்தினனாதலின், மீண்டும் அவனுக்கே அறவுரை கூறப் புலவர் எண்ணங் கொண்டிலர் போலும்! நெடுங்கிள்ளிக்கு அறவுரை கூறிய புலவர், முன் நலங்கிள்ளிக்குக் கூறியதுபோல இன் சொற்களால் இனிய முறையிற் கூறுதலை விடுத்து, சில கடுஞ்சொற்களால் வன்மையான முறையில் அறவுரை கூறினர்:

"நெடுங்கிள்ளி, நின் பகைவன் போர் மேற்கொண்டு வந்து நிற்கவும், நீயும் போர் மேற்கொண்டு புறப்பட்டு அவனோடு போர் புரியாமல், அவனால் முற்றுகையிடப் பட்டு உள்ளிருத்தல் சிறிதும் தகாத செயலாகும். இச் செயலால் நின் படைகள் மிக்க துன்பம் அடைகின்றன. நகர மக்கள் வேண்டிய பொருள்கள் கிடைக்கப்பெறுமல் வாடுகின்றார்கள். இவை எல்லாவற்றையும் அறிந்தும் நீ மட்டும் இனிமையாய் உள்ளிருத்தல் பிறர் இகழத்தக்க செயலாகும். 'போர் புரிந்தால், இரு பக்கத்திலும் வீரர் களும் யானைகளும் குதிரைகளும் மிகுதியாக இறத்த லாகுமே!' என்றெண்ணுவையாயின், உடனே மதில் வாயிலைத் திறந்து, 'இந்நகர் நினது,' என்று கூறி, அவன் பால் விட்டுவிடுக. அன்றி வீரமே கருதும் எண்ண முடையையாயின், உடனே போர் முரசு முழங்கப் போர்க் கோலம் புனைந்து வெளிப்பட்டுப் பகைவனோடு போர் புரிக. அறம் மறம் இரண்டினையும் எண்ணுமல், இங்ஙனம் உள்ளிருத்தல் நாணுதற்குரிய செயலாகும்", என்று கூறினர் கோவூர்கிழார்.

இரு வழிகளை எண்ணிப் புலவர் ஈண்டு நெடுங் கிள்ளியை நோக்கிக் கடுஞ்சொற்களால் அறவுரை கூறினர் என்பது நினைத்தற்குரியது; "நெடுங்கிள்ளி நம் சொற்கேட்டுப் புறப்பட்டுப் போர்புரிவானாயின், அதனால் நகர மக்கள் துன்பம் ஒழியும். அவ்வாறு நிகழினும் நிகழ்க. அன்றி நலங்கிள்ளி இதனை உணர்ந்து, 'புலவர் முன்னொரு முறை, நமக்கு அறவுரை கூறிப் போரை நிறுத்துவித்த தனால், மீண்டும் நம்மை நோக்கியே அறவுரை கூற மனம் கூசி, நம் பகைவனை நோக்கி இவ்வாறு வன்சொற் கூறுவா ராயினர்,' என்றுணர்ந்து போரை நிறுத்துவானாயின், அதுவும் நன்றே; எவ்வாறாயினும், போர் ஒழிக; பலர் துன்பம் ஒழிக," என்று எண்ணிப் புலவர் இங்ஙனம் கூறினர் எனக் கொள்க.

ஈண்டு மற்றொன்றும் கருதற்குரியது: முதன் முறை நலங்கிள்ளி போர் மேற்கொண்டு வந்து இட்ட முற்றுகை

புலவர் முயற்சியால் தடுக்கப்பட்டவுடன், நலங்கிள்ளி மீண்டும் தன்மேற் படையெடாதவாறு அதற்கேற்ற வழிகளை ஆராய்ந்து நெடுங்கிள்ளி செய்திருத்தல் வேண்டும்; எவ்வகையிலேனும் நலங்கிள்ளியை நட்பினன் ஆக்கிக்கொள்ள முயன்றிருத்தல் வேண்டும்; இன்றேல், தன் வலிமையையும் தன் படை வலிமையையும் விரைவாகப் பெருக்கிக்கொள்ளுதல் வேண்டும்; அதனோடு தனக்குப் போர்த் துணையாகுமாறு வேற்றரசர் எவரையேனும் தனக்கு நட்பாக்கிக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு நெடுங்கிள்ளி ஒன்றும் செய்திலன். இதனால் புலவர் உள்ளத்தில் சிறிது வெறுப்புத் தோன்றியிருத்தல் கூடும். அவ்வெறுப்பினாலும் புலவர் வன்சொற் கூறுவாராயினர் எனக் கொள்க.

கோவூர்கிழார் எண்ணியவாறே அவர் நெடுங்கிள்ளியை நோக்கி வன்சொற்களால் அறவுரை கூறியதையுணர்ந்த நலங்கிள்ளி, தன்னை நோக்கி மீண்டும் அறவுரை கூற விரும்பாமல் நெடுங்கிள்ளியை நோக்கிக் கூறினர் என அறிந்தான். போர் நிறுத்துதற்குரியவன் முற்றுகையிட்டுள்ள தானேயாதலின், நெடுங்கிள்ளியை நோக்கிப் புலவர் கூறிய அறவுரைகள் தனக்கும் உரியனவேயாகும் என்று நலங்கிள்ளி உய்த்துணர்ந்து, இரண்டாம் முறையும் போரை நிறுத்தினன்.

இருமுறை புலவர் முயற்சியால் போர் நிறுத்தப்பட்டதாயினும், உள்ளப் பகைமைமட்டும் ஒழிந்திலது. நெடுங்கிள்ளி அதனை ஒழித்தற்கேற்ற முயற்சியை மேற்கொண்டிலன் போலும்! அன்றி நலங்கிள்ளி நெடுங்கிள்ளியோடு ஒன்றிவாழ விருப்பங்கொண்டிலன் போலும்! புறநானூற்றுப் பாடல் ஒன்றின் கீழ்க் குறிப்பில் நெடுங்கிள்ளி, 'காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி' என்று குறிப்பிட்டுள்ளான். அதனால் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் காரியாறு என்னுமிடத்தில் மீண்டும் போர் மூண்டது என்றும், அப்போரில் நெடுங்கிள்ளி இறந்தான் என்றும் அப்பாடற் குறிப்புக் கூறுகின்றது.

காரியாறு என்னுமிடத்தில் போர் தொடங்கியபோது அப்போரைத் தடுக்கக் கோவூர் கிழார் போன்ற புலவர் ஒருவரும் ஆண்டில்லை போலும்!

நெடுங்கிள்ளி இறந்தபின் நலங்கிள்ளி உறையூரி லிருந்து அரசாளத் தொடங்கினன். புறநானூற்றில் இப் போர் நிகழ்ச்சியைக் குறிக்கும் பாடல்களுக்குப் பின் உள்ள பாடல் ஒன்றில் நலங்கிள்ளி,

"உறந்தை யோனே குரிசில்
பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே"

என்று கூறப்பட்டுள்ளான். இதனாலும், கோவூர் கிழார் நெடுங்கிள்ளியை நோக்கி, "அறவையாயின் நினதெனத் திறத்தி," என்று கூறியதனாலும், நலங்கிள்ளிக்கும் நெடுங் கிள்ளிக்குமிடையே நிகழ்ந்த போர் உறையூரைப் பற்றியது என்பது புலனாகின்றது.

அருஞ்சொற்பொருள்

சான்றோர் - கல்வி கேள்வி ஒழுக்கங்களிற் சிறந்தவர். சிறு பாணாற்றுப்படை - நல்லூர் நத்தத்தனார் பாடிய (269 அடிகளைக் கொண்ட) பாட்டு; இது நல்லியக்கோடன் என்ற வள்ளலின் சிறப் பைக் கூறுவது. அகநானூறு - காதலர் செயல்களைக் கூறும் 400 பாக்களைக் கொண்ட நூல். கிள்ளி - சோழரைக் குறிக்கும் பெயர் களுள் ஒன்று. வன்சொல் X இன்சொல். காரியாறு-இது செங்கற் பட்டு மாவட்டத்தில் பாயும் சிற்றாறு. துஞ்சிய-இறந்த. குரிசில்- ஆண்களிற் சிறந்தவன்.

கேள்விகள்

1. உறையூர் முற்றுகையின்போது கோவூர்கிழார் நலங் கிள்ளிக்குக் கூறியன யாவை?
2. தமிழ்ப் புலவர் தமிழரசர் ஒற்றுமையையே விரும்பினர் என்பதை விளக்கும் சான்றுகள் யாவை?
3. ஆவூர் முற்றுகையின்போது கோவூர்கிழார் நெடுங்கிள்ளிக் குக் கூறிய அறவுரை யாது?

பயிற்சி

1. இப்பாடப் பகுதிகொண்டு கோவூர்கிழாரது போர்விலக்கல் முயற்சியைத் தெளிவுறுத்துக.

2. பிரித்துக் காட்டுக:—பாணாற்றுப்படை, மனங்கொள்ளு மாறு, குடிப்பெருமை, கண்ணோட்டம், இன்சொல், வன்சொல்.

3. சேர்த்துக் கூறுக:—நினைத்தற்கு+உரியது, நட்பு+ஆக்கி, முன்+ஒரு முறை, இ+செயல், பழிப்பு+அடைதல்.

4. வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:—சங்க நூல், ஒழிக்கப் படுதல், முற்றுகை, விளக்குவதாக, அறவுரை.

6. நெடுநல்வாடை

திரு. ந. பாலுசாமி அவர்கள், M.A., M.Litt.

[இக்கட்டுரை "தமிழக வேந்தர்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது. இதன் ஆசிரியர் மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்; பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் உடையவர்.]

தோற்றுவாய்

பகைவர்களோடு போர் புரியச் சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் அரசமாதேவிக்கு அவள் வருத்தம் நீங்கும்படி, 'பாண்டியன் பகை முடித்துக் கடிதில் மீளுவானாக' என்று கொற்றவையை வேண்டும் ஒருத்தி கூறியதாகப் பாண்டியன் நெடுஞ்செழியன்மீது மதுரைக் கணக்காயனார் மகனார் **நக்கீரனார்** பாடியது இது. தலைவனது பிரிவாற்றாமையால் இரங்கும் தலைவிக்கு வாடைக் காலத்தின் ஒரு பொழுது ஓர் ஊழி போலத் தோன்றி நெடிதாகிய வாடையாய் அமைந்ததாலும், அரசன் இல்லற வாழ்க்கையில் மனமற்று வேற்றுப் புலத்தில் தங்கி வெற்றி பெறுவதற்குக் காரணமான நல்லதாகிய வாடையாக அமைந்தமையாலும் இப்பாடல் **நெடுநல்வாடை** எனப் பெயர் பெற்றது. இப்பாட்டில் மழை பெய்யும் குளிர் கால நிலைமையும், கோப்பெருந்தேவியின் பிரிவாற்றாமையும், பாண்டியனது பாசறை நிலைமையும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

குளிர் காலம்

கார்காலத்து முகில்கள் தரை குளிரும்படி மழையைப் பொழிந்தன. கால்நடைகளை மேய்க்கும் கோவலர் மழை வெள்ளத்தை வெறுத்தனர்; தம் கால்நடைகளை மேட்டுப் பரப்பான முல்லை நிலத்தில் மேயவிட்டனர். அக் கோவலர் அணிந்திருந்த காந்தள் மலர் மாலைகள் மழைத் துளிகளால் அலைப்புண்டு அழகு ஒழிந்தன. குளிரால் ஒவ்வொருவர் உடலும் நடுங்கியது. அவர்தம் பற்கள்

பறையடித்தன. கால் நடைகள் மேய்தலை மறந்தன. மரங்களில் இருந்த குரங்குகள் குளிரால் வருந்தின. காற்றின் மிகுதியால் மரக்கிளைகள் ஒடிந்தன. அதனுல் பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன. கறவைகள் தம் கன்று கட்கும், ஆடுகள் தம் குட்டிகட்கும் பால் தர மறுத்து உதைத்துத் தள்ளின. மழை நீர் வெள்ளம் போலப் பரந்து சென்றது. கயல்கள் அவ்வெள்ள நீர்ப்போக்கினை எதிர்த்து நீந்திச் சென்றன. அப்பொழுது கருமணற் பரப்பில் துள்ளிவிழும் கயல்களைக் கொக்குகள் விழுங்கின.

பின்னர் வெண்ணிற முகில்கள் நீர்த்துளிகளைத் தூவின. அதனுல் வயல்களில் உயர்ந்து வளர்ந்த நெற்கதிர்கள் கவிழ்ந்திருந்தன. பாக்கு மரங்களில் இருந்த காய்கள் முற்றியிருந்தன. கிளைகளிலும் இலைகளி லும் மலர்களிலும் தங்கியிருந்த மழைநீர் காற்றின் அசை வால் துளித் துளியாகச் சிதறியது. தெருக்களில் ஆற்று வெள்ளம் போல மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. கட்குடியர் மழைக்கு அஞ்சாராய்த் தெருக்களில் திரிந் தனர். வானம் இருண்டிருந்ததால் இரவென்றும் பக லென்றும் அறியாது உயிர்கள் மயங்கின. வீட்டின்கண் வளரும் ஆண் புரு தன் பெடையுடன் மன்றிலே சென்று இரை தேடி உண்ணுமல் செயலற்றுக் கொடுங்கையைத் தாங்குதலையுடைய பலகைகளில் நின்றுகொண்டிருந்தது.

செல்வர் இல்லங்கள்

செல்வர் மனைகளில் வாழ்ந்த குற்றேவல் மகளிர் சாந்து அரைக்கும் அம்மியில் கத்தூரி முதலியவற்றை அரைத்தனர். மழையாலும் குளிராலும் மலர்களை மாலை யாகத் தொடுக்க முடியாமல், சில மலர்களைமட்டும் செல்வ மகளிர் தமது கூந்தலிற் செருகினர். பணிப்பெண் கள் சந்தனக் கட்டையை எரித்து, அந்த எரியில் அகிற் கட்டையையும் செவ்வரக்கையும் இட்டுப் புகைத்தனர். செல்வ மகளிரது பள்ளியறையின் சாளரங்களின் வழியே மெல்லிய பூங்காற்று வீசியது. ஆதலால் அச்சாளரங்கள் அடைக்கப்பட்டன. வாடைக் காற்றுச் சிறிய நீர்த்திவலை

களை எங்கும் பரப்பியது. குளிர் மிகுதியால் துன்புற்ற இளையரும் முதியரும் நெருப்பில் குளிர் காய்ந்தனர். யாழின் நரம்புகள் தொடமுடியாதபடி குளிர்ந்திருந்தன. அதனால் செல்வமகளிர் அவற்றைத் தமது உடம்பில் தேய்த்துச் சூடேற்றினர்.

பூந்தட்டில் இட்டு வைத்த பிச்சி மலர்கள் அலர்ந்தமையால் மாலைக் கால வருகையை அறிந்து விளக்கை ஏற்றினர்; நெல்லையும் மலரையும் தூவித் தாம் வழிபடு கடவுளரை வணங்கினர்.

அரண்மனைச் சிறப்பு

பாண்டியனது அரண்மனை கட்டப்படுவதற்குரிய நாளும் நல்லோரையும் குறிக்கப்பட்டன. குறித்த காலத்தில் சிற்பநூல் வல்லுநர் கயிறுகொண்டு திசைகளை அளந்து, அத்திசைகளுக்குரிய தெய்வங்களை வணங்கினர்; பின்னர் மன்னனுக்கு ஒப்ப மனைகளையும் மண்டபங்களையும் வாயில்களையும் வகுத்தனர்; அவ்விடங்களை எல்லாம் மதிலால் வளைத்தனர். அம்மதிலின் வாயிற் கதவுகள் இரும்பினால் இயைந்தவை. வாயில் நிலையைத் தாங்கும் சுவர்மீது திருமகள் சிலையும் அதன் இருமருங்கும் செங்கழுநீர்ப் பூவும் சுண்ணத்தால் வண்ணமுற அமைக்கப்பெற்றன. மலையை நடுவில் பிளந்தாலொத்த அகற்சியும் உயர்ச்சியும் உடைய வாயில் சிறந்த வேலைப் பாட்டுடன் விளங்கியது. அவ்வாயிலுள் வேழப்படை வெற்றிக் கொடியுடன் செல்ல வசதி இருந்தது.

மழை நீர் கீழே இறங்கும்படி நிலா முற்றத்தில் பொருத்தப்பட்டிருந்த குழை, மீனின் திறந்த வாய்போல் இருந்தது. அக்குழையிலிருந்து விழுந்த நீர் அருவிபோலப் பேரோசையைக் கிளப்பியது. அங்ஙனம் நீர் விழுந்து ஓசையிட்ட இடத்தில் மயில்கள் நின்று அகவி ஆரவாரம் செய்தன.

அரண்மனையின் அந்தப்புரம் அழகுறக் கட்டப்பட்டிருந்தது. சுவர்கள் உயர்ந்தவை; சிறந்த வேலைப்பாடு

கொண்டவை. அவற்றின்மீது செஞ்சாந்துகொண்டு பூங்கொடிகள் ஓவியங்களாக அமைக்கப்பட்டிருந்தன. அந்தப்புரத் தூண்கள் கருமையும் திரட்சியும் பளபளப்பும் பெற்றிருந்தன. அரசி இருந்த அறையில் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. அவை, யவனர் இயற்றிய பாவை விளக்குகள். அவை ஒளி மழுங்கும்பொழுது அழகிய பணிப்பெண்கள் நெய்யூற்றி ஒளிபெறச் செய்தனர்.

கட்டிலின் சிறப்பு

கோப்பெருந்தேவி பள்ளிகொள்ளும் கட்டில், நாற்பதாண்டுகள் நிறைந்து போர்க்களத்தில் மாண்ட களிற்றினது தந்தத்தைக்கொண்டு செய்யப்பட்டது. கைதேர்ந்த கம்மியரால் பொருத்துமிடம் தெரியாமல் பொருத்தி அமைக்கப்பட்டது; மிக நுண்ணிய உளிகொண்டு இலை முதலிய உருவங்கள் செதுக்கப்பெற்றது. சிங்கம் புலி முதலியவற்றை வேட்டையாடும் காட்சிகள் அமைந்த மெல்லிய தகடுகள் அதன்மீது அழுத்தப்பெற்றது. கட்டிற் கூரையிலிருந்து நாற்புறமும் முத்துமாலைகள் தொங்க விடப்பட்டிருந்தன. கட்டிற் கால்கள் அடியிற் குடம் போல் பருத்தும் மேற்பகுதி முழுவதும் சிறுத்தும் தோன்றும்படி செய்யப்பட்டிருந்தன. அக்கட்டில்மீது அன்னச்சேவலின் தூவி பரப்பப்பட்டிருந்தது. அப்பரப்பின்மீது கஞ்சி தோய்த்த வெண்துகில் விரிக்கப்பட்டிருந்தது. அத்துகிலின்மீது நறுமணம் உள்ள மலர்களின் இதழ்கள் பரப்பப்பட்டிருந்தன.

மாதேவியின் மனக்கவலை

இங்ஙனம் அரிய வேலைப்பாடுகொண்ட கட்டிலில் விரித்திருந்த மென்மையான படுக்கைமீது அரசமாதேவி படுத்திருந்தாள். ஆயினும் அழகிய வேலைப்பாடு கொண்ட அக்கட்டிலோ, மிகவும் மென்மை வாய்ந்த படுக்கையோ அவளுக்கு இன்பத்தைத் தரவில்லை. அவள் தன் உயிரன்ன காதலன் பிரிவை நினைந்து நினைந்து

துன்புற்ருள். அவளது மார்பின்மீது பின்னிவிடப்பட்ட அவளது கூந்தல் படிந்திருந்தது. அவள் தனது ஆடையையும் அணிகலன்களையும் வெறுத்தாள். கணவன் இருந்தபொழுது அவள் கைகளில் இருந்த பொன் வளையல்கள் அப்பொழுது இல்லை. வலம்புரிச் சங்கால் செய்யப்பட்ட வளையல்களே இருந்தன. அவளது மகரக் குழை அணிந்த காது அவ்வணியின்றி வறிதே காணப் பட்டது. கணவன் அரண்மனையில் இருக்கும்பொழுது அவள் பூவேலைப்பாடு அமைந்த பட்டாடைகளையே உடுத்துதல் வழக்கம்; கணவன் பிரிந்த பிறகு மாசேறிய தூசினையே உடுத்திருந்தாள். சுருங்கக் கூறின், கணவனது பிரிவால் அக்கோப்பெருந்தேவி புனையா ஓவியம் போலப் பொலிவற்றிருந்தாள்.

அப்பொழுது அவளது கவலையைப் போக்கத் தோழியர் தோன்றினர்; அரசர் பெருமான் விரைவில் வருவானென்று ஆறுதல் கூறினர். அவ்வாறுதல் மொழி அம்மாதேவியைத் தேற்றவில்லை. அவளது பார்வை கட்டிலின் மேற்கூரையில் தீட்டப்பட்டிருந்த ஓவியங்கள் மீது சென்றது. அவள் திங்களும் உரோகிணியும் ஒருசேர அமைந்த ஓவியத்தைப் பார்த்தாள்; தானும் உரோகிணியைப்போலத் தன் கணவனைவிட்டுப் பிரியாதிருக்க முடியாதோ என்று எண்ணி ஏங்கினுள். அவள் விழிகளிலிருந்து முத்துப்போன்ற நீர்த்துளிகள் வெளிப்பட்டன. அப்பெருமாட்டி அத்துளிகளைத் தனது சிவந்த விரலால் எடுத்து எறிந்தாள். பேரழகு வாய்ந்த பணிப்பெண்கள் கோப்பெருந்தேவிக்கு உறக்கம் வருவதற்காக, செம்பஞ்சு ஊட்டப்படாத அவளுடைய மெல்லிய அடிகளை மெல்ல வருடினர்.

கொற்றவையைப் பரவும் கோதை

அந்நிலையில் கொற்றவையைப் பரவும்கோதை ஒருத்தி கோப்பெருந்தேவி கேட்குமாறு கொற்றவையைப் பார்த்து, "அம்மையே! சேரன் செம்பியன் முதலிய எழுவருடன் போர் செய்ய அரசன் சென்றிருக்கிருன். நம் வீரர் பகைவ

ருடைய கரிகளை வெட்டி வீழ்த்தினர். அப்பொழுது பகைவரின் போர்க்கருவிகளால் தாக்குண்ட வீரர் பலர் புண்பட்டுக் கிடக்கின்றனர். வாடைக்காற்று வீசுந் தோறும் விளக்கில் எரிகின்ற சுடர்கள் தெற்கு நோக்கிச் சாய்ந்து எரிகின்றன. வேப்பமாலையை உச்சியில் தாங்கிய வேலையேந்திய படைத்தலைவன் வேந்தனுக்கு முன் போந்து, போரில் விழுப்புண்பட்ட பாண்டிய வீரரைக் காட்டுகின்றான். வேந்தன் அவ்வீரர் மனம் மகிழும்படி இன்சொல் இயம்புகின்றான். ஆங்காங்குக் கட்டப்பட்டு நிற்கின்ற பரிகள்மீது மழைத்துளிகள் விழுகின்றன. அப் பரிகள் அம்மழைத் துளிகளைத் தமது உடலை யசைத்து உதறுகின்றன; மன்னனது இடத் தோளிலிருந்து மேலாடை இழிகின்றது. அவன் அதனைத் தனது இடப் பக்கத்தில் தழுவிக்கொண்டு பாசறையின் ஒவ்வொரு பகுதியையும் பார்க்கின்றான். வெண்கொற்றக் குடை அவன்மீது மழைத்துளி படாமல் காக்கின்றது. இவ்வாறு உறக்கமும் ஓய்வும் இல்லாமல் போர்த்தொழிலில் கண்ணுங் கருத்துமாக இருக்கும் அரசனுக்கு நீ வெற்றி அளிப்பாயாக! எங்கள் மாதேவியின் தனிமைத் துன்பம் விரைவில் தணிவதாக!" என்று கூறிப் பரவினாள்.

அருஞ்சொற்பொருள்

கொற்றவை-துர்க்கை. கணக்காயனார்-பள்ளி ஆசிரியர். கயல்-கெண்டை மீன். பாசறை-போர்க்களத்தில் அரசனும் வீரரும் தங்கும் இடம். குற்றேவல்=குறுமை+ஏவல். ஓரை - முகூர்த்தம். வேழம் - யானை. களிறு - ஆண்யானை × பிடி - பெண்யானை. துகில் - ஆடை. பொலிவு - விளக்கம். கொடுங்கை - வீடு முதலியவற்றின் வெளிப் புறம் நீண்டு வளைந்துள்ள உறுப்பு. பளபளப்பு - இரட்டைக் கிளவி.

கேள்விகள்

1. 'நெடுநல்வாடை' என்பது யாது?
2. கார்கால மழை நிகழ்ச்சிகள் யாவை?
3. கார்காலத்தில் வீட்டு மக்கள் செய்தவை யாவை?
4. பாண்டியன் அரண்மனை எவ்வாறு கட்டப்பட்டது?

5. பாண்டிமாதேவியின் கட்டில் சிறப்பு யாது?

6. மாதேவியின் மனக்கவலை எங்ஙனம் வருணிக்கப்பட்டுள்ளது?

7. கொற்றவையைப் பரவிய கோதை கூறிய செய்தி யாது?

பயிற்சி

1. "நெடுநல்வாடையில் குளிர்காலம்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை (30 வரிகளில்) வரைக.

2. "பாண்டியன் அரண்மனை" என்னும் தலைப்பில் அரண்மனைச் சிறப்பையும் கட்டில் சிறப்பையும் விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

3. "நெடுஞ்செழியன் மனைவி" என்னும் தலைப்பில் மாதேவியின் மனக்கவலையும் கொற்றவையைப் பரவிய கோதையின் கூற்றும் சேர்த்து எழுதுக.

4. குளிர்காலத்தைப்பற்றி நீ அறிந்த செய்திகளைத் தொகுத்து ஒரு கட்டுரையாக எழுது.

5. பிரித்துக் காட்டுக:—பிரிவாற்றுமை, பெருக்கெடுத்து, வெண்ணிறம், பேரழகு, ஆங்காங்கு, இடப்பக்கம்.

6. சேர்த்துக் கூறுக:—மழை+துளி, தனிமை+துன்பம், துளி+துளி, மாலை+காலம், வாயில்+கதவுகள், பெருமை+ஓசை, மாசு+ஏறிய, வெண்மை+கொற்றம், கொற்றம்+குடை.

7. ஔவையார்—அரசியல் தூதர்

(நாடகம்)

திரு. சிவ. குப்புசாமி அவர்கள்

[இவ்வாசிரியர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்தவர்; பள்ளி ஆசிரியர்; சங்க நூல்களில் புலமை உடையவர்; சிறந்த எழுத்தாளர்; சங்க கால வள்ளல்களைப்பற்றி நாடகக் காட்சிகள் வரைந்துள்ளார்.]

இயல் 3—காட்சி 1

உறுப்பினர் :—ஔவையார், அதியமான்.

இடம் :—அதியமான் மாளிகை.

பொழுது :—மாலைப்பொழுது.

[அதியமான் ஔவையாரைத் தொண்டைமான்பால் தூது போக வேண்டுதல்.]

ஔவையார் : வெற்றி மிகும் தப்பாத வாளினை ஏந்தியவனே! போரில் பகைவர் மடியுமாறு அழித்த வீர வாள் மிளிரும் கைகளையுடையவனே! எதிர்த்தவரைப் போர் முனையிற் கொல்லும் வீரவாளும் பொன் மாலையும் அணிந்த அஞ்சிவேந்தே! நீ பழைய பெரிய மலையினில் எவரும் அடைய முடியாத உயரத்து இரு பிளவுகளின் இடையே தோன்றிய சிறு இலைகளைப் பெற்ற நெல்லியின் பழத்தை, அஃதுண்டவரடையும் பெருவாழ்வை உணர்த்தாது, பால் போன்ற பிறைநிலா நெற்றியின்மீது விளங்கும் திருமுடியையும், நீலமான அழகிய கழுத்தையுமுடைய, ஒப்பற்ற முதல்வனும் சிவபெருமானைப் போல நான் சாகாமலிருக்குமாறு எனக்குத் தந்து மகிழ்ந்தனையே!

அதியமான் : அம்மையே! ஒன்றுக்கும் பற்றாத யான் உண்டு உலகுக்குச் சுமையாவதினும், உலகு அவாவும் விழுமிய கல்விச் செல்வம் படைத்த தாங்கள் வாழுதல் சிறப்பன்றோ?

ஔவையார்: காவல் மதில் சூழும் பல அரண்களை வென்ற நெடுமான் அஞ்சி! பிள்ளையின் மழலை மொழி யாழ்போல இனிய ஓசையும் பெருது; இசைக்குரிய கால அளவும் கூடியிராது; பொருளும் உணர இயலாது; ஆயினும், தந்தைக்கு இன்பம் தருகிறது. அதுபோல, நீ அருள் புரிதலால் எனது வாய்ச் சொற்களும் அவ்வாறே அமைகின்றன. மேலும் என்னையொத்த புலவர்கள், தமது நெஞ்சை நோக்கி, 'உண்ண விரும்பும் நெஞ்சமே! நீ பரிசுக் காக வருந்தாதே; யாம் ஒருநாள்மட்டும் செல்லாது, இரண்டுநாள் மட்டும் போகாது எத்தனையோ முறை, பல நண்பர்களோடு சென்று பழகினலும், முதன் முறையாகப் பெற்ற அன்பைப்போலவே, அணிகள் பூணப்பெற்ற யானையையும், இயலும் தேரையும் உடைய அதியமான், எப்போதும் பெற்றுள்ளான். பரிசு பெறுகின்ற நாள் கூடினலும் குறைந்தாலும், யானை தன் பெரிய கொம்புகளின் நடுவே வைத்துள்ள ஒரு வாய் உணவுபோல, அப்பரிசு நமது கையிலிருப் பதேயாகும். அது பொய் அன்று. அவன் திருவடி வாழ்க' என நாளும் வாழ்த்தி வருவது பொய்க்குமா?

அதியமான்: அன்னய்! "எட்டுத் தேர்களை ஒரே நாளில் செய்யும் தச்சன், ஒரு திங்கள் முயன்று முடித்த ஒரு தேரின்கால்போன்ற வலிமையுள் ளவன் எனவும், 'சிறந்த வலிமையால் மேன்மை பெற்று விளங்கும் நீண்ட வேலினைப் பெற்ற மழவர் களின் பெருந்தலைவனும், ஒளிமிக்க, தொழில் நுட்ப முள்ள அணிகள் அழகு செய்யும் மார்பனும், போர்க் கள வேள்வியால் நல்ல சிறந்த போரினைப் புரியும் முழவம்போன்ற வலிமையான தோளைப் பெற்றவ னும் ஆய, என் தலைவனைக் காண்பதற்கு முன்ன தாகவே, எத்தகையவராக இருப்பினும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்' எனவும் பலவாறு என்னைத் தாங்கள் புகழ்ந்துரையாடினும், என் உள்ளம் அவற்றைக் கேட்டு அமைதியுறவில்லை. மலையன் ஒரு திசை

யிலும், மூவேந்தர் மற்ருெரு புறமும், திதியன், பொருநன், எருமையூரன், இருங்கோவேள் என்பவர்கள் இன்ெனுரு பக்கமும் என்மீது நாளும் அழுக்காறும் வஞ்சமும் கொண்டவர்களா யுள்ளனர். போதாக் குறைக்குக் காஞ்சித் தொண்டைமானும் என்னை வெறுக்கின்ருனும்.

ஔவையார்: 'பெரும! நீ ஊர்ச் சிறுவர்கள் தன் வெண்மையான கொம்புகளைக் கழுவுமாறு நீர்த்துறையினில் அடங்கியிருக்கும் பெரிய யானைபோலப் புலவர்களாகும் எங்கட்கு இனியவனுகின்ருய்; பின்னர் அவ்யானை பிறர் அணுக முடியாதவாறு பெற்ற மதங்கொண்ட நிலைமையைப்போல, உன் பகைவர்களுக்கு நீ கொடியவனுகின்ருய் என்ற செய்தி உலகமறிந்திருக்க, ஏனே இம்மன்னர் பொருட்டு நீ கவலையுற வேண்டும்?

அதியமான்: அம்மே! தாங்கள் என் சொலினும், என் திடங்கொண்ட நெஞ்சம் இதுபோது விடங்கொண்ட மீனைப்போலக் கலங்குகின்றது. எனக்கு உற்ற உழுவலன்பன் எனக் கருதப்பெற்ற, காஞ்சித் தொண்டைமானும் மாற்றலர்தம் கூட்டுறவால், சார்ந்ததன் வண்ணமாகி, எமது முன்னைய நட்பு மேன்மையையும் எவ்வாருே மறந்தனன். அவன் செயலே என்னைப் பெரிதும் வருத்துகின்றது.

ஔவையார்: "எழுமரம்போன்ற முழந்தாளினைத் தொடுகின்ற பெரிய கைகளை உடையாய்! தவருத வலிய கைகளையுடைய மழவர்களின் தலைவனே! முறிந்த வளைபோன்ற மலர்ந்த காந்தட்பூ, இலை மிக்க மல்லிகையோடு மணம் வீசும் மலைச் சரிவிலுள்ள கடும்புலி சீறினுல், அதனை எதிர்க்கும் மான் கூட்டங்களும் உண்டோ? ஞாயிறு வெப்பமுற்றுத் தோன்றும்போது மருண்ட வானத்தும் திசைகளிலும் செறிந்த இருள் நிறையுமோ? அச்சு உரசிப் பார்மீது படிய நகர்ந்த, பண்டம் நிறைந்த வண்டி யுருளையின்

அழுந்திய நிலையைப் பொருட்படுத்தாது, மணல் வரிகள் சிதறவும் கற்கள் பொடிபடவும் நடக்கும் பெருமிதங்கொண்ட வலிமைமிக்க எருதுகளுக்குச் செல்ல முடியாத வழிகளுமுண்டோ? அதுபோல நீ, போர்க்களம் புகுந்தால், பெரிய உலகமாகிய நிலத்தைப் பெற்று ஆரவாரஞ் செய்யும் வீரர்களும் உளரோ?" எனவே, மன்ன, நீ எதன்பொருட்டும் கவலற்க. உன் நெஞ்சம் விழைவதை என்பால் கூறின், யான் இயன்றன ஆற்றுவன்.

அதியமான்: எம்மனோர்க்கு உற்ற துணையாய தாயே! என்பொருட்டுத் தாங்கள், காஞ்சி வேந்தன் தொண்டைமான்பாற் சென்று, அவனது நட்பு எனக்கு என்றும் இருக்குமாறு செய்ய வேண்டும். எனது கருத்துக்கு இயைந்த அவனது கூட்டுறவு என்னை இன்னும் மிகுந்த வலிமை பெற்றவனாக்கும். இதுவே எனது உளம் நிறைந்த விருப்பமாம்.

ஔவையார்: அன்புடையாரோடு உண்டு உறவு பெற வல்லவனே, போர்முனையிலும் கொடைத் திறன் கெடாதவனே, அறிவில்லாதாரும் மகிழ்வோடு நின்னையே துணையாகக் கருதும் பெருநிலை படைத்த நெடுமான் அஞ்சியே, நீ வீட்டின் கூரையில் செருகப் பெற்ற தீக்கடைகோல்போல, நினது வலிமை வெளிப்பட வேண்டாத நாளில் அடங்கி வாழ வல்லவனாகின்றாய். இன்னும் அத்தீக்கடைகோலால் கக்கப்பட்டு வெளியாகும் காட்டுத்தீயையொப்ப, நீ விரும்பியபோது மிகவும் வலிமை பொருந்திய வீரனாகவும் விளங்குகின்றாய். ஆதலால் எம் நண்ப, நீ வலிமையிற் குறைந்தாயெனக் கருதி அஞ்சற்க. நின்னை வெல்வார் எவரும் ஈண்டில்லை; இஃது துறுதியே. யானும் இன்றே தொண்டைமான்பாற் சென்று, அவனும் நீயும் நேர்மையுற்ற நேசராக நெடிது வாழ முயலுவேன், கவலற்க; வாழ்க மன்ன! வாழ்க நின் கொற்றம்! விடை தருக.

அதியமான் : தாயே, வணக்கம். அவ்வாறே ஆகுக என்றும் நீங்கா என் நன்றியையும் அன்பினையும் ஏற்றருள்க.

இயல் 3—காட்சி 2

உறுப்பினர் :—காஞ்சிநகர் வேந்தன் தொண்டைமான் இளந்திரையன் ; ஔவையார்.

இடம் :—காஞ்சி மன்னன் மாளிகை.

பொழுது :—மாலைப்பொழுது.

[ஔவையார், தொண்டைமானை அஞ்சியின் நண்பனுக்குதல்.]

தொண்டைமான் : விறலியர் தலைவீ! தங்களது பெரும் பரப்புடைய நாட்டில் என்னோடு போரில் வெற்றி கொள்ளும் வீரர்களும் உளரோ ?

ஔவையார் : போர்ப்படை மிகுந்த வேந்தே, எமது நாடு, அடிக்கும் கோலுக்கு அஞ்சாமற் சீறி எதிர்த்து வரும் பாம்புபோல, வலிமை பெற்ற இளமை மிக்க பல வீரர்களைப் பெற்றது ஆகும். இன்னும் பொது மன்றத்தில் கொட்டுவாரற்றுத் தொங்கிக்கொண்டிருக்கும் முழவம் காற்றின் அசைவினுல் சிறிதளவு ஓசையை எழுப்பினும், போர்ப்பறையின் முழக்கம் அஃது எனக் கருதும் எம் தலைவனும் உள்ளான்.

தொண்டைமான் : நன்று, என் அன்னையே! தாங்கள் எளியனின் போர்க்கலக் கூடத்தைக் கண்ணுற்றீர்களோ ?

ஔவையார் : அன்ப, நன்கு கண்டு மகிழ்ந்தேன். படைக்கலக் கொட்டிலில் உள்ள உன் படைக்கலன்கள் யாவும் மயிற்றோகையால் அலங்கரிக்கப் பெற்றுள்ளன ; மாலைகள் சூட்டப்பெற்றுமுள. அவற்றின் உடலிடந் திரண்டுள்ள வலிய காம்புகள் அழகு பெற அமைக்கப்பெற்றுள்ளன ; இன்னும் நெய் தடவப்பெற்றுக் காவல் பெற்ற அகன்ற நகரத்தேயும் உள்ளன. ஆனுல் செல்வம் வந்தபோது உணவு

அளித்து, இல்லாத நாளில் தாம் பெற்றதைப் பலரோடுங்கூடி உண்ணும் வறிஞர்களின் உறவினர்க்குத் தலைவனுகிய எம் அதியமானின் கூர்மையான நுனியையுடைய வேல், பகைவர்களைக் குத்துவதால் கங்கு நுனி முறிந்து கொல்லனது சிறிய உலைக் களத்தில் கிடக்கின்றன.

தொண்டைமான் : தமிழ்ப் பெருமாட்டியே, நன்று கூறினீர்கள்! நும் அஞ்சி என்னினும் வலியன் ஆவனே? பல்லாண்டு போர்ப் பயிற்சியும் முதிர்ந்த தேர்ச்சியும் பெற்ற என்பால் அவனது திறமை என்ன ஆகும்?

ஔவையார் : அரசே, ஊர்ச் சிறுர்கள் ஆடுவதனுல் கலங்கக்கூடிய காலினது அளவேயுள்ள குறைந்த நீரினில், இழுக்கும் வலிமை பெற்ற முதலை, யானையைக் கொன்று வீழ்த்தும். அஃது ஒத்தவன் எம் தலைவன் அஞ்சி. அவனது நுணுக்கமான பல செயல்களைக் கருதிப் பாராது, 'இளைஞன் அவன்' என மதியாது போனுல், நீ வெல்வது அரிதாம்.

தொண்டைமான் : தமிழன்னுய்! அதியமான் நெடுமானஞ்சி, காஞ்சித் தொண்டைமானைவிடப் போர்ப் படை பெற்றவன் என்பதுதானே தங்கள் உள்ளக் கிடக்கை?

ஔவையார் : அன்பு கெழுமிய வேந்தே! வேற்றுமை நாடாது யான் கூறுவதன் பொருளைச் செவி மடுப்பாய்; அன்ப, உங்கள் இருவரையும் யான் நன்கு உணர்வேன். நீவிர் இருவீரும் ஒத்த நலனும் வலிமையும் கொண்டவர்கள் என்பது திண்ணம். ஆயினும் அஞ்சி, பேராற்றல் படைத்தவன்; நீயோ பெரும் படை கொண்டவன். ஆதலினுல் நீவிர் இருவீரும் உம்முள் எவர் வலியவர் என நாட விழைவது நலனன்று. அதற்கு மாருக யான் விரும்புவது ஒன்றுண்டு. நீ தடை செய்யாது, யாவர் நலனையும் கருதி உடன்படுவாயானுல், அதனைக் கூற ஆணை தருக.

தொண்டைமான்: தமிழ்ச் செல்வி! உலகு இன்புறு தற்கு ஏதுவாய ஒன்றினை, யான் என்றும் தடை செய்யேன். எனது இயல்புக்கு உரித்தாயின், யான் தங்களது ஆணையை மறுக்கேன். இஃதுறுதியே.

ஔவையார்: கற்றவரைக் காக்கும் காஞ்சித் தலைவ! நீ நெடிது வாழ்க! ஒரு நாள் யான் ஒரு சிறு சோலையை அடைந்தேன். அஃது ஓர் அரிய பாலை வெளியிலிருந்தது. அவண் வாழ்ந்த ஒரு விறலி எளிய நிலையிலிருந்தாள். அவள் கைகளில் சில வளையல்களே காணப்பெற்றன. இன்னும், பதலை யென்ற ஒலிப்பறை ஒருபாலும், முழவும் என்ற அகத் துளை பெற்ற மற்றொரு கருவி மற்றோரிடத்திலும் கொட்டி ஒலி எழுப்புவாரற்றுத் தொங்கிக்கொண் டிருந்தன. கொடுப்போரின்மையால் அவளது 'திரு வோடு' ஒன்றுமில்லாமற் கவிழ்ந்து கிடந்தது. 'என் பசிக்குரிய உணவால் இக்கடிஞையை நிரப்புவார் உண்டா?' என அவள் கூறியிருந்தாள். அஃதறிந்த யான் 'ஏ விறலி! மிக்க அருகிலுள்ள ஓர் ஊரில், பல வேற் படைஞருடன் அஞ்சி என்ற மன்னன் உள்ளான். போர்முனையில் பகைவர் ஊர்களைச் சுடுவதால் எழுகின்ற புகை, மலைகளைச் சுற்றி வரும் கரிய முகில்போன்று அவன் யானைகளைச் சூழ்ந்து வரப் பகைவரின் நாடுகளை வென்றவன் ஆவன். நீ, அவன்பாற் சென்று வழிபட்டால், என்றும் ஓயாமல் உண்ணுதற்குரிய கொழுப்புமிக்க உணவால் உனது திருவோடு தேனடைபோலப் பசையுற் றிருக்க, உலகம் வறண்டுபோகும் நாளினும் உன்னைப் புறக்கணியாது காப்பான். அவன்தன் திருவடி வாழ்க' என அவளை ஆற்றுப்படுத்தினேன். ஆதலால் பெரும! எம்போன்ற புலவர்கள் பாடுதற் குற்ற பெருமை பெற்றவனாய அவனது நற்றொடர்பு நினக்கு மிகவும் வேண்டற்பாலது எனவுணர்க.

தொண்டைமான்: தமிழ்த் தேவி! அதற்காக யான் என்ன செய்ய வேண்டும்? மிக்க புகழ் பெற்றவனாக

அவன் இருப்பின், யான் வலியச் சென்று அவ னுடன் சேரவேண்டுமோ?

ஔவையார் : அற்றன்று, அரசே! அவன் சிறந்தவன்; வீரன்; புகழால் மிக்கவன்; இன்னும் நட்புக்கு மிகவும் உரியவன். அத்தகைய அஞ்சி இதுபோது நின் நட்புப்பேற்றை நாடுகின்றான். நீ, ஏதேனும் அவன்பாற் சிறிது பிணக்கங்கொண்டிருப்பினும், இதுபோது அதனை அறவே நீக்கி, அவனுக்குற்ற உழுவலன்பினன் ஆகவேண்டும். இஃதொன்று தான் எனது உளங்கொண்ட வேண்டுகோளாகும்.

தொண்டைமான் : தமிழ்த்தாயே! தாய்சொல் தடுத்தல் சேயர்க்குத் தகுமோ! தங்கள் கருத்துப்படியே ஆகுக. எம் இருவரது நட்பும், நாளும் முற்பக்கத்து மதியம்போலப் பெருகி வளரத் தாங்களே துணைபுரிய வேண்டும். இனி எனக்கு என்ன குறை!

ஔவையார் : இனிய நன்மொழிகளும் இன்ப வாழ்வும் கொண்ட எம் வேந்தே! நின் இனிய தேன்போன்ற மொழிகள் எனது உள்ளத்தை மிகவும் களிக்கச் செய்கின்றன. இன்று இவ்வுலகில் என்னினும் பேறு பெற்றோர் எவரும் இல்லை என்பேன். வாழிய மன்ன! நினது வாழ்வு ஓங்குக! நின் புகழ் நிலை பெறுக! நீயும் நெடுநாள் பன்னலமுஞ் சூழ வாழ்வாயாக!

அருஞ்சொற்பொருள்

விழுமிய - சிறந்த. திங்கள் - மாதம். மாற்றலர் - பகைவர். சார்ந்த தன் வண்ணம் - சேர்ந்த பொருளினது நிறம். எழுமரம் - கணையமரம். கவலற்க - வருந்தாதே, வியங்கோள் வினைமுற்று. இயைந்த - பொருத்தமான. கொற்றம் - வெற்றி. உள்ளக்கிடக்கை—உள்ளத்தில் இருப்பது. கடிஞை - பிச்சைப் பாத்திரம். விறலி - நடன மகள். ஆற்றுப்படுத்தினேன் - வழிப்படுத்தினேன். பிணக்கம் - மாறுபாடு. உழுவல் அன்பினன் - சிறந்த அன்பினன். பேறு - பாக்கியம்.

கேள்விகள்

1. ஔவையார் அதியமானின் போர்த்திறனை எவ்வாறு பாராட்டியுள்ளார்?
2. ஔவையார் அதியமானின் கொடைத்திறத்தை எவ்வாறு பாராட்டியுள்ளார்?
3. தொண்டைமானது படைக்கலக் கொட்டிலைப் பார்த்த ஔவையார் கூறியன யாவை?
4. ஔவையார் விறலியை எவ்வாறு ஆற்றுப்படுத்தினார்?
5. ஔவையார் யாது கூறித் தொண்டைமானது உள்ளத்தை மாற்றினார்?
6. ஔவையாரைப்பற்றி உனது கருத்து யாது?

பயிற்சி

1. அதியமானது போர்ச் சிறப்பினைப்பற்றி 20 வரிகளில் எழுதுக.

2. அதியமானது கொடைச் சிறப்பினைப்பற்றி 15 வரிகளில் எழுதுக.

3. தொண்டைமானைப்பற்றிய உன் கருத்தைப் பதினைந்து வரிகளில் வரைக.

4. ஔவையார் குண நலன்களை 30 வரிகளில் எழுதுக.

8. மனோன்மணீயம்

(உரையாடல்)

திருவாட்டி மா. ரா. தமிழரசி, M.A., B.T.

[இக்கட்டுரை ஆசிரியர் தமிழ்நாட்டுக் கதைகள், தமிழரசர் மூவர், தமிழகப் புலவர், நம் ஒப்பற்ற தலைவர் ஆகிய நூல்களை எழுதியுள்ளவர். சென்னை மேரி அரசி கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருப்பவர்.]

சீவகன் என்பவன் பாண்டிய நாட்டு மன்னன். அவனது அமைச்சன் *குடிலன்* என்பவன். *சகடன்* என்பவன் பாண்டிய நாட்டுப் பிரபுக்களில் ஒருவன். அவன் மகள் *வாணி* என்பவள். அவள் சிறந்த படிப்புடையவள்; பேரழகு உடையவள்; வியத்தகு ஒழுக்கமுடையவள். இப்பெண்மணி பாண்டியன் மகளான *மனோன்மணியின்* உயிர்த்தோழி. இவள் *நடராசன்* என்ற இளைஞன்மீது காதல் கொண்டாள். நடராசன் சிறந்த அழகன்; நற்குணங்களுக்கு உறைவிடமானவன்; எதையும் எண்ணிப் பார்த்துச் செய்யும் ஆற்றலுடையவன்; பொறுமையில் மிக்கவன். இவனும் வாணியும் அடிக்கடி தனியே சந்தித்துப் பேசுதல் வழக்கம். ஒருவர் உள்ளத்தில் மற்றவர் குடி கொண்டுவிட்டனர்.

வாணியின் தந்தையான சகடன் பணம் படைத்தவன்; பொய்யான கௌரவத்தை விரும்பியவன்; அதனால் குடிலன் மகனான பலதேவனுக்குத் தன் மகளை மணம் முடிக்க விரும்பினான்; இதனைத் தன் மகளிடமும் தெரிவித்தான். எதிர்பாராத தந்தையின் முடிவு கேட்ட வாணி, இடியோசை கேட்ட நாகம்போல நடுங்கினாள். அவள் அஞ்சா நெஞ்சினள்; ஆதலால் தன் தந்தையை நோக்கி, "அப்பா, என் உள்ளங் கவர்ந்தவர் நடராசனே யாவார். ஆதலால், இனி ஒருவரையும் என் சிந்தையாலும் தொடேன். இது உறுதி," என்று ஆத்திரத்துடன் அறைந்தாள்.

உரையாடல் I

மனோன்மணியும் வாணியும்

ஒருநாள் அரண்மனையின் கன்னிமாடத்தில் அரசன் மகளான மனோன்மணியும் அவள் தோழியான வாணியும் கழல் ஆடிக்கொண்டிருந்தனர். அவர்கள் அவ்விளையாட்டின்போது காமதேவனின் இயல்பைப்பற்றிப் பாடினர். மன்மதன் சிவபெருமான் சீற்றத்தினால் தன் உருவத்தை இழந்தான் என்று மனோன்மணி கூறிக் கழல் ஆடினாள். அதற்கு வாணி,

> "உருவங் கரந்தாலென் ஓர்மல ரம்பினால்
> அரையுரு வானாரென் றுடாய் கழல்
> அந்நட ராசரென் றுடாய் கழல்"

என்று பாடிக் கழலாடினாள். இப்பாடலில் 'நடராசர்' என்னும் பெயர் வந்ததும் மனோன்மணிக்கு வாணியின் காதலனாகிய நடராசன் நினைவு வந்தது. பின்பு அவ்விருவருக்கும் கீழ் வருமாறு உரையாடல் நடைபெற்றது.

மனோன்மணி : வாணி, நடராசன் பெயரைக் கூறியதுமே பெருமூச்சு விடுகிறாயே! அப்பெயரைக் கூறியதும் திருமணம் ஆனவள்போலவே நாணம்கொள்ளுகிறாயே!

வாணி : ஏதம்மா நீ சூது நினைக்கிறாய். உரத்த குரலில் பாடுவோர் பெருமூச்சு விடுதல் இயல்பேயாகும். நான் எந்த உட்பொருளையும் வைத்து அப்பாடலைப் பாடவில்லை.

மனோன்மணி : பிறை பழிநுதலாய், உண்மையை மறையாதே. நீ அப்பெயரைச் சொன்னபோது உன் முகம் மலர்ந்ததைக் கண்டேன். உன் காதலன் நேற்று உன்னிடம் யாது கூறினான்?

வாணி : அம்மா, 'எருது ஈன்றது' என்பதற்கு முன்னே, 'என்ன கன்று?' என்று கேட்பவரைப் போல் நீ கேட்கிறாய். நான் அவரைக் கண்டு நான்கு அல்லது ஐந்து நாட்கள் ஆகின்றன.

மனோன்மணி: என்னடி, உங்கள் காதல் கதை முடிந்துவிட்டதா? 'ஒருவரையொருவர் காணாமல் ஒரு பொழுதும் இரோம்' என்று கூறியது வீணாயிற்றோ? இவ்வாக்கின்படி நடவாமல் பிழைத்தவர் யாவர்?

வாணி: நான் எதனைக் கூறுவேன்! என் தலைவிதி அப்படி இருக்கிறது. நாம் தொடர்ந்து விளையாடுவோம், வா.

மனோன்மணி: வாணி, மனத்தில் எதனையும் மறைக்காதே. நடந்ததைத் தெளிவாகச் சொல்.

வாணி: அம்மா, நான் உனக்கு எவ்வாறு சொல்லுவேன்? தலைவிதி தடுத்து நிறுத்தத் தகுவதோ? அது நம்மை ஆட்டி வைத்த பிறகன்றோ அகலும்? எனது வீட்டில் என் பெற்றோர் என் காதலுக்கு மாறாக இருக்கின்றனர். அவர்கள் என் மனத் துன்பத்தைச் சிறிதும் நினைக்கவில்லை; என் காதலர்க்கும் துன்பம் இழைத்தனர். அவர்கள் எண்ணியபடியே முதலையின் பிடிபோல் முடிக்கத் துணிந்துள்ளனர். இந்நிலையில் நான் யாரோடு நோவேன்? எனது துன்ப நிலையை யாருக்குச் சொல்லுவேன்? யான் இத்துன்ப உலகில் வாழவிரும்பவில்லை. யான் இறப்பது திண்ணம்.

மனோன்மணி: பாவாய், நீ நின் பெற்றோர் அறிவுரைப்படி பலதேவனையே மணந்துகொள்வதில் என்ன தடை உளது?

வாணி: அம்மையே, நீ கூறியது கொடிய சொல். அதனை இனியொருமுறை கூறாதே. நான் நஞ்சுக்கு அஞ்சவில்லை; நின் சொல்லுக்கு அஞ்சினேன். நான் இறப்பதாயினும் குடிலன் மகனான பலதேவனை மணக்க இசையேன். என் உள்ளங் கவர்ந்த கள்வராகிய நடராசரே என்னைத் துறக்கினும், என் மனம் அவரையே நாடி நிற்கும். எனது உள்ளம் வேறு எந்த ஆடவரையும் நினையாது.

மனோன்மணி: பெண்ணே, உன்னைப் பேய் பற்றிக் கொண்டதோ? உனக்குப் பயித்தியம் பிடித்துளதோ?

பாண்டிய நாட்டு அமைச்சன் குடிலன். அவன் மிக்க செல்வாக்குடையவன். அவன் மகன் பலதேவன் மிக்க வலிமை உடையவன்; என் தந்தையாகிய மன்னனுக்கு இனியவன். அத்தகையவன் உன் காதலனாகிய நடராசனைவிட உயர்ந்தவன் அல்லனோ? பேய் கொண்டவள்போலப் பிதற்றுதே.

வாணி: அம்ம, நீ ஒன்றும் அறியாதவள். பெண்ணின் உள்ளம் ஒருவன்மீதுதான் செல்லும்; இருவர்மீது செல்லாது. அதுதான் காதலின் உயிர்நாடி. இதனை நீ தெரிந்துகொள்வது நல்லது.

மனோன்மணி: காதலாவது, கத்தரிக்காயாவது! பயித்தியக்காரி. அவ்விருவருள் எவன் சிறந்தவன் என்று எண்ணிப் பார்த்துச் சிறந்தவனை மணந்துகொள்வதே சீரிய செயல்.

வாணி: எனது உள்ளம் நடராசன்பால் முன்பே கட்டுண்டது. இனி அதனை மீட்க இயலாது.

மனோன்மணி: நங்காய், நீ பிதற்றுகிறாய். நாம் நமது உள்ளத்தை அதன் போக்கில் விடாமல் தடை செய்வதே சிறந்தது.

வாணி: ஒருவன்பால் சென்று படிந்த உள்ளத்தை மீண்டும் திருப்புதல் என்பது இயலாது. காதல் என்பது நீர்வழிச் செல்லும் மிதவைபோலவும் நாண்வழிக் காசு போலவும் அன்பின்வழிச் செல்லும் இயல்புடையது. அந்த அன்புக்குரியவரே காதலர். இதுதான் அறிஞர் கருத்து.

மனோன்மணி: மங்காய், நீ சொல்லும் காதல் எனக்குப் புரியவில்லை. யான் காதலைவிடத் தவத்தையே சிறந்ததாகக் கருதுகிறேன். என் உள்ளம் துறவையே நாடுகிறது.

வாணி: உனது உள்ளத்து உறுதியைச் சில நாட்களில் காண்பேன்.

மனோன்மணி: பெண்ணே, நீ நினைப்பது தவறு. காதல் என்பது பூதமா? பேயா? வெருட்டினால் நாய்

போல் ஓடிவிடும். நாம் அஞ்சினால் அது நம்மை நீண்ட தொலைவு துரத்தும். நம் சுந்தர முனிவரிடம் சமய நூல்களைப் பாடம் கேட்பின், மனம் ஒருவழிப்படும். நீயும் என்னுடன் வந்து பாடம் கேள்.

வாணி: நூலறிவு என்ன செய்யும்? என் நெஞ்சம் நீறுகிறது. நின் தந்தையார் நாளை என்னுடன் இதுபற்றிப் பேசுவதாகக் கூறியுள்ளார். யான் அவர் கட்டளையை எவ்வாறு மறுப்பேன்?

மனோன்மணி: பாவாய், உன் எண்ணமும் உன் தந்தையின் கருத்தும், மன்னன் உன்னுடன் திருமணம் பற்றிப் பேச இருப்பதும் உன் காதலனுக்கு உரைத்தாயா?

வாணி: அம்மையே, அதுதான் என் உள்ளத்தை அறுக்கின்றது. அவர் திருமணத்தை விரும்பவில்லை; வாழ்க்கையையும் விரும்பவில்லை; யான் அவரை விரும்புவது உண்மையா என்று கேட்டார். நான் 'ஆம்' என்று சொல்லுவதற்கு வெட்கி வாளாவிருந்தேன். நான் பாவி! நான் இனி என்ன செய்வேன்? அவர் என்ன நினைத்தாரோ? எங்கள் வீட்டுப்பக்கம் வரலாகாது என்று என் அன்னை அவரிடம் உரைத்தாள். இவ்வூருள் வரலாகாதெனக் குடிலனும் கூறினான். இந்நிலையில் அவரை எங்குக் கண்டு என் உள்ளக் கருத்தை உரைப்பேன்? எனது கருத்தை அவரிடம் யார் போய் உரைப்பர்?

மனோன்மணி: தோழி, வருந்தாதே. கருணைக் கடவுள் நீ கருதியதை முடிப்பார்.

உரையாடல் II

மன்னனும் வாணியும்

வாணியின் தந்தையான சகடன் அரசனைக்கொண்டு தன் மகளுக்கு அறிவுரை கூறத் துணிந்தான். அரசன் அவன் பேச்சைக் கேட்டு வாணியைச் சந்தித்தான். அவ்விருவருக்கும் கீழ்வருமாறு உரையாடல் நடைபெற்றது.

மன்னன் : வாணி, நீ, நலத்திலும் குலத்திலும் சிறந்த குடிலன் மகனான பலதேவனை மணக்க மறுப்பது ஏன்? பித்தனான நடராசனை மணக்க விரும்புகின்றாயே! உன் செயல் நகைப்புக்கு இடமாகும்.

வாணி : பெருமானே, நாட்டை யாளும் மன்னனாகிய உன்னிடம் என் மன நிலையை விரித்துக் கூற, என்னிடம் இயல்பாக உள்ள நாணம் தடை செய்கிறது. ஆயினும், கூறுவேன், கேட்டருள்க; காதல் வயப்படாத திருமணம் வாழ்க்கையின் அழிவுக்குத்தான் காரணமாகும்.

மன்னன் : பெண்ணே, நீ கூறுவது புதுமையாக இருக்கின்றது. பெற்றோர் தம் பெண்ணுக்கு மணம் முடித்து வைப்பர். அப்பெற்றோர் சொற்படி நடந்து கொள்வதே பெண்கள் கடமை; பெற்றோர்க்கு மாறாக நடத்தல் அறமாகாது.

வாணி : ஐயனே, காதல் என்பது நாமாக ஆக்கிக் கொள்ளும் பொருளன்று. துன்பம் நிறைந்த இந்த உலகில் துன்புறும் ஆடவர் நெஞ்சம் குளிரச் செய்தும், தொழிலில் உண்டாகும் கவலையை ஆற்றியும், அவர்தம் நெறிமுறை காத்தும், முயற்சியில் சோர்கின்றபொழுது ஊக்கம் ஊட்டியும் நற்றொண்டு செய்வது காதல். இக் காதல் இவ்வுலக இன்பத்துக்கு அளவுகோலாகும்; இல்லறம் என்பதற்கு நல்லுயிராகும். இரும்பும் காந்தமும் பொருந்தும் தன்மைபோல் இருவர் சிந்தையும் இயல்பாய் உருகி ஒன்றுபடுவதே காதலின் தன்மை. இக்காதல் ஒருவரால் ஆக்கப்படும் பொருள் ஆகாது.

மன்னன் : இவையெல்லாம் யானறியேன்; பிஞ்சில் பழுத்த பேச்சை விடு; மிஞ்சாதே; தந்தை சொற்படி நட.

வாணி : அங்ஙனம் நடவாவிடின்?

மன்னன் : என்றும் நீ கன்னியாயிருப்பாய்.

வாணி : சம்மதம்.

மன்னன் : கன்னியாயிருப்பின் உன் அழகு பாழாகும். அரைக்கின் அன்றோ சந்தனம் கமழும்?

வாணி : அச்சந்தனக் கட்டையைக் கரையான் அரித்தால் மணக்குமா?

மன்னன் : நீ பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று சாதித்தால் என் செய்வது?

வாணி : இப்பிடிவாதம் பெற்றோரிடம் இருந்தால் பெண்கள் எவ்வாறு பிழைப்பர்?

மன்னன் : சகடன் சொற்படி நாம் திருமணத்தை நடத்துவோம். ஆயினும் உன் கருத்தை யறிய ஐந்து நாள் தவணை கொடுக்கிறோம்.

வாணி : பெருமானே, யான் இறப்பதாயிருந்தாலும் இத்திருமணத்திற்கு இசையேன். யான் மறுத்துக் கூறிய அனைத்தும் பொறுத்தருள வேண்டுகிறேன்.

அருஞ்சொற்பொருள்

அறைந்தாள் - சொன்னாள். காமதேவன் - மன்மதக் கடவுள். கரந்தால் - மறைந்தால். மலர் அம்பு - மலராகிய அம்பு. இருபெயரொட்டுப் பண்புத்தொகை. மன்மதனுக்கு வில் கரும்பு; தாமரை மலர் முதலிய மலர்கள் அம்புகள் என்று நூல்கள் கூறும். கழல் - கழற்சிக்காய்கள். பெண்கள் இருவர் ஏதேனும் ஒரு பொருள்பற்றிப் பாடிக்கொண்டே கழற்சிக்காய்களை மேல் எறிந்து பிடித்து விளையாடுவர். ஒருத்தி கூறிய செய்திக்கு மற்றவள் உடன்பட்டோ, மறுத்தோ பாடி ஆடுவள். பிழைத்தவர் - தவறியவர். மாறாக - எதிராக. மிதவை-தெப்பம். நாண்-நூல். பிஞ்சில் பழுத்த பேச்சு - இளமைப் பருவத்தில் அநுபவசாலிகள்போலப் பேசும் பேச்சு. கன்னி - மணமாகாதவள்.

கேள்விகள்

1. வாணி காதலின் சிறப்பினை மன்னனுக்கு எவ்வாறு விளக்கினாள்?
2. 'பிஞ்சிற் பழுத்த பேச்சு' யாது?
3. இடஞ்சுட்டி விளக்குக :—
   (1) "நான் நஞ்சுக்கு அஞ்சவில்லை; நின் சொல்லுக்கு அஞ்சினேன்."
   (2) "சந்தனக் கட்டையைக் கரையான் அரித்தால் மணக்குமா?"

பயிற்சி

1. மனோன்மணிக்கும் வாணிக்கும் நடைபெற்ற உரையாடற் கருத்தை மனோன்மணி கூறுவதுபோலக் கூறுக.

2. மனோன்மணிக்கும் வாணிக்கும் நடைபெற்ற உரையாடற் கருத்தை வாணி எழுதுவதுபோல எழுதுக.

3. அரசனுக்கும் வாணிக்கும் நடைபெற்ற உரையாடற் கருத்தை மன்னன் கூறுவதுபோலக் கூறுக.

4. அரசனுக்கும் வாணிக்கும் நடைபெற்ற உரையாடற் கருத்தை வாணி எழுதுவதுபோல எழுதுக.

5. இப்பாட அறிவைக் கொண்டு வாணியைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

9. எங்கள் சொற்பயிற்சி மன்றம்

திரு. சுப. அண்ணாமலை அவர்கள், M.A., M.Litt.

[இக்கட்டுரை ஆசிரியர் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராய் இருப்பவர்; சிறந்த எழுத்தாளர்; உயர்ந்த பேச்சாளர்.]

நான் நல்லூரில் இருக்கும் வள்ளலார் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பிற் படிக்கும் மாணவன். என் பெயர் அமுதன். என் சொந்த ஊர் நல்லூரிலிருந்து இரண்டு கல் தொலைவில் உள்ள திருவருட்பட்டி. அங்கிருந்து நான் நாள்தோறும் நடந்தே பள்ளிக்கு வந்து மீளுவேன். நடப்புக் கல்வியாண்டு முடியப்போகிறது. இறுதித் தேர்வு நெருங்கிக்கொண்டிருக்கிறது. ஆதலால் நன்கு படித்து வருகிறேன்.

எங்கள் வகுப்புச் சொற்பயிற்சி மன்றத்தில் நானும் ஓர் உறுப்பினனாய் இருந்தேன். அந்த மன்றம் நடப்புக் கல்வியாண்டின் தொடக்கமாகிய சூன் மாதத்திலிருந்து சென்ற வாரம் வரை வெற்றியுடன் நடைபெற்று இனிது முடிந்தது. சூன் மாதம் 20ஆம் நாள் வகுப்புக்கள் முடிந்தவுடன், எங்கள் வகுப்பாசிரியர் திரு. தாமரைக் கண்ணனார் தலைமையில் அம்மன்றத்தின் தேர்தல் நடைபெற்றது. எங்கள் வகுப்பு மாணவர்களில் உயரமானவரும் இனிமையாகப் பேசுபவருமான திரு. வளவன் தலைவராகவும், எறும்புபோல் சுறுசுறுப்பாக இருக்கும் திரு. நாவலன் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மற்ற மாணவர் அனைவரும் மன்ற உறுப்பினராரோம். எங்கள் வகுப்பாசிரியரே மன்றத்தின் பொறுப்பாசிரியராக அமர்ந்தார்.

எங்கள் சொற்பயிற்சி மன்றத்தின் பெயர் 'செந்நாப் போதார் சொற்பயிற்சி மன்றம்' என்பது. மன்றத்தின் முதற் கூட்டம் சூன் மாதம் 28ஆம் நாள் மாலை 5 மணிக்குத் தொடங்கி நடைபெற்றது. திரு. வளவன்

தலைமை ஏற்றார். 'நாட்டுப்பற்று' என்னும் பொருள் பற்றி மாணவர் நால்வர் பேசினர். அவர்களில் ஒருவர் நன்றாகப் பேசினார். ஆனால் அவர் அடிக்கடி கைகளை ஆட்டியதையும் ஒரு நிலையில் நில்லாமல் அசைந்து ஆடியதையும் நெற்றியை அடிக்கடி துடைத்துக்கொண்டதையும் பார்த்து மாணவர்கள் சிரித்தனர். மற்றொரு மாணவர் என்ன பேசினார் என்பதே பலருக்குத் தெரியாது. ஏன் எனில், அவர் பேச்சுப் பலருக்குக் கேட்கவில்லை. இன்னுமொரு மாணவர் தலை குனிந்துகொண்டே பேசினார். அவர் பேசியது தமிழ்மொழிதானா என்பதே பலருக்கு ஐயமாக இருந்தது. பொதுவாக அந்த நால்வரின் பேச்சினின்று நாம் நமது நாட்டைத் தாயாக நினைத்து வணங்க வேண்டுமென்று தெரிந்துகொண்டோம்.

பேச்சு நடைபெற்றபொழுது அவையினரில் ஒருவராய் அமர்ந்திருந்த பொறுப்பாசிரியர் மேடையை நோக்கி நடந்தார். நாங்கள் ஆவலுடன் நிமிர்ந்திருந்து செவிகளைக் கூர்மையாக்கிக்கொண்டோம். அவர் பேச்சின் சுருக்கம் வருமாறு:—

'அன்புள்ள மாணவர்களே, இன்று பேசிய நால்வரும் நாட்டுப் பற்றைக் குறித்தே பேசினர். அவர்கள் பேச்சால் உங்களுக்குப் புதிய உணர்ச்சி உண்டாகவில்லை. நாட்டுப் பற்றை அறியாத மாணவர்கட்கு இப் பேச்சைக் கேட்டவுடன் புதிய உணர்ச்சி உண்டாகவில்லை. இதுவரை நீங்கள் அறியாத கருத்து எதையும் பேச்சாளர்கள் கூறவில்லை. 'ஆசிரியர் பேசச் சொல்கிறார்; ஏதேனும் பேச வேண்டுவது நம் கடமை' என்று கருதிப் பேசியதுபோல் அவர்கள் பேச்சுக்கள் இருந்தன. மேடையில் பேசுவது கடமைக்காக அன்று. அவையிற் கூடியிருக்கும் மக்களுக்குத் தெரியாத செய்திகளை அவர்கள் மனங்கொள்ளுமாறு எடுத்துரைத்து, அவர்கள் கொண்டுள்ள தவறான எண்ணங்களை நயமாக மாற்றித் தன் கருத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதே பேச்சாளனின் வேலை. 'அவையினர் அவன் கருத்தை உடனே ஏற்றுக்

கொள்ளாவிடினும் அதைப்பற்றி எண்ணிப் பார்க்கும் ஆவலையேனும் அவர்கள் மனத்தில் அவன் உண்டாக்க வேண்டும். அதற்கு அவன் செய்ய வேண்டுவது என்ன ?

'மேடையிற் பேசவிருக்கும் செய்திகளைப்பற்றிப் பேச்சாளன் இரண்டு மூன்று நாட்களேனும் சிந்திக்க வேண்டும். உயர்நிலைப்பள்ளி மாணவர்களாகிய உங்களுக்கு ஒரு பொருளைப்பற்றிச் சொந்தமாக எண்ணிப் பார்க்கும் திறமை இன்னும் வளரவில்லை. அவ்வாறு எதிர்பார்க்கவும் இயலாது. ஆதலால் நீங்கள் பள்ளி நூலகத்திற்குச் சென்று, குறிப்பிட்ட ஒரு பொருளைப்பற்றி, உதாரணமாக 'நாட்டுப் பற்று' என்னும் பொருளைப் பற்றி அண்ணல் காந்தியடிகள், திரு. வி. க., பண்டித நேரு, இராஜாஜி போன்ற அறிஞர்கள் என்ன எழுதியுள்ளார்கள் என்பதைத் தெரிந்து குறிப்பு எழுதிக்கொள்ள வேண்டும். இக்குறிப்பை வைத்து, மக்கள் எவ்வாறு நடந்துகொண்டால் நாடு நலமடையும் என்பதைப்பற்றி நீங்கள் ஒரு முடிவிற்கு வரவேண்டும். அதன் பிறகு நீங்கள், பேசவேண்டும் செய்திகளை முறைப்படுத்திப் 'பேச்சுக் குறிப்பு' எழுத வேண்டும். 'நாட்டுப்பற்று' என்னும் பொருளைப்பற்றிய பேச்சுக் குறிப்புப் பின்வருமாறு அமையலாம்:—

1. தாய் நாடு என்பதன் விளக்கம்: தாய் தந்தையர் பிறந்து வாழ்ந்த நாடு—தாய் தந்தையர் கையாளும் மொழியைப் பேசும் பல மக்கள் வாழும் நாடு—உணவு, உடை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றில் தாய் தந்தையரை ஒத்த மக்கள் வாழும் நாடு.

2. நாட்டுப் பற்றின் இன்றியமையாமை: தாய் போலச் சிறந்தது தாய்நாடு. இந்த மண்ணில் ஊறிய பண்பாடும் அறிவுமே நம்மிடம் அமைகின்றன—நாட்டின் வளமும் தாழ்வும் அதன் மக்களைப்பொறுத்தவை—பகைவரிடம் சிக்கி நாடு அடிமைப்படாமல் காத்தல்—படைப் பயிற்சி—கொடி வணக்கம்—நாட்டைப் பிறர் பழித்தால் அவர்க்குத் தக்க படிப்பினை கற்பித்தல்.

3. நாட்டுப் பற்றுக்கொண்டு வாழ்ந்த பெரியார்கள்: வ. உ. சி., காந்தியடிகள், திலகர், பாரதியார், ஆபிரகாம் லிங்கன்—அவர்கள் அடைந்த புகழுக்குக் காரணம் நாட்டுப் பற்றே.

4. நாட்டுப் பற்றினல் விளையும் நன்மைகள்: சுதந்திர நல்லாட்சி—எண்ணவும் பேசவும் எழுதவும் உரிமை—மக்களின் நல்வாழ்வு—தொழில் வளம் பெருகுதல்—எங்கள் நாடு என எண்ணுவதால் உண்டாகும் ஊக்கம் நாட்டின் நல்வாழ்வுப் பயிருக்குப் பாய்ச்சும் நீராகும்.

இவ்வாறு எழுதிய குறிப்பைக் கையில் வைத்துக்கொண்டு, குறிப்புக்களை விளக்கிக் குறித்த நேரத்தில் பேசி முடிக்க வேண்டும். பேச்சுக்கு அழகு சுருக்கமே. சில சொற்களில் கருத்தை விளக்கத் தெரியாதவர் பேச்சாளர் அல்லர். பொருளுக்குத் தொடர்பில்லாதவற்றைப் பேசுவதையும், குறித்த நேரத்தில் முடிக்காமல் அரை குறையாக விட நேருவதையும் 'பேச்சுக் குறிப்பு' வைத்துக் கொள்ளும் பழக்கத்தால் தடுக்கலாம். பேச்சை எழுதி வைத்துப் படிக்கலாகாது. பேச்சாளன் தான் சொல்லும் சொற்களைத் தெளிவாக ஒலிக்க வேண்டும். மொழியின் பயன் ஒலியில்தான் அமைந்திருக்கிறது. 'நாட்டுக்கு உழைக்க வேண்டும்; நல்லவர்களைக் கண்டுகொள்ள வேண்டும்' என்பதைச் சொல்லும் ஒருவன், 'கொள்ள' என்ற சொல்லைக் 'கொல்ல' என ஒலித்தால் எவ்வளவு தவறு நேரிடும்? சொற்களைச் செவ்வையாக ஒலிக்க அறியாதவன் மேடையில் வாய் திறவாமல் இருப்பதே நலம்.

பேச்சாளன் அவையினரைப் பார்த்து மலர்ந்த முகத்துடன் நின்று பேச வேண்டும். தலை குனிந்து தரையைப் பார்ப்பதோ, கூரையையும் வானத்தையும் கூர்ந்து பார்ப்பதோ, பரக்க விழிப்பதோ கூடாது. ஒரு நிலையில் நின்று கண்களை மட்டும் அவை முழுவதும் செலுத்துவது முறையே தவிர, உடலை நான்கு புறமும் திருப்பி நடனம் ஆடுவது அழகன்று. கையையும் ஆட்டாமல் 'எழுது

சித்திரம்போல்' நின்று, குரலில் ஏற்ற இரக்கம் காட்டிப் பேசுவதே சிறந்த பேச்சாளனின் பண்பு. பேச்சினிடையே அவையினரைச் சிரிக்க வைக்கலாம். ஆயின் பேசுபவன் சிரித்தலாகாது. குறுநகை தவிரப் பெருநகை அவனிடம் தோன்றலாகாது. அவன் பேச்சு அவையினர் அனைவருக்கும் கேட்க வேண்டும். அவர்கள் அவன் முகத்தையன்றி வேறு எங்கும் நோக்காதவாறு சொல்லென்னும் கயிற்றால் கட்டுப்படுத்த வேண்டும். கிணற்றினுள் இருந்து பேசுவதுபோல் சொற்பொழிவு செய்வதில் பயனில்லை. தெளிவான, கரகரப்பில்லாத குரல் பேச்சாளனின் வெற்றிக்குச் சிறப்பான காரணமாகும். உணர்ச்சிக்குத் தக்க வேகம் பேச்சுநடையில் அமையவேண்டும். சிறு பிள்ளை பாடம் படிப்பதுபோல மிகமெதுவாகப் பேசுவதும், மூன்றும் வகுப்பு மாணவி பெருக்கல் வாய்பாடு ஒப்பிப்பது போல விரைவாகப் பேசுவதும் கூடா.

ஆசிரியரின் அறிவுரை முடிந்தது. செயலாளர் நன்றியுரையோடு கூட்டம் முடிந்தது. அடுத்து, வாரமொரு முறை எங்கள் சொற்பயிற்சி மன்றம் கூடியது. 'உடல் நலம் காத்தல்,' 'திரைப்படங்கள்,' 'தமிழ் மொழி வழிக் கல்வி,' 'பெண்கள் கல்வி,' 'விஞ்ஞானத்தின் விளைவுகள்' முதலிய பொருள்களைப்பற்றிப் பேச்சுக்கள் நிகழ்ந்தன. வாரத்திற்கு வாரம் உறுப்பினரின் பேச்சில் முன்னேற்றம் காணப்பட்டது. 'செந்தமிழும் நாப்பழக்கமே' யன்றோ? இவ்வாறு இவ்வாண்டில் பத்தொன்பது கூட்டங்கள் நடைபெற்றன. மாணவர் தலைவரே பெரும்பாலானவற்றிற்குத் தலைவராய் அமர்ந்தார். சிலவற்றிற்கு உறுப்பினர் அவ்வப்போது தெரிந்தெடுக்கும் மாணவரும், பொறுப்பாசிரியரும் தலைமை தாங்கினர்.

நவம்பர் மாதம் 26ஆம் நாள் கூடிய சொற்பயிற்சி மன்றக் கூட்டத்தில் நானும் மற்றும் மூன்று மாணவரும் 'சமுதாயமும் மாணவர்களும்' என்ற பொருள்பற்றிப் பேசினோம். பொறுப்பாசிரியரும் உறுப்பினர்களும் என் பேச்சை மிகவும் பாராட்டினர். என் பேச்சின் சுருக்கம் வருமாறு:—

'சமுதாயம் என்பது, மக்கள் சாதி மதங்களின் அடிப்படையிலன்றி இன அடிப்படையிலோ மொழி அடிப்படையிலோ ஒன்றுபட்டு, ஒருவர்க்கு ஒருவர் உதவியாக வாழ்ந்து வரும் கூட்டமைப்பு ஆகும். இந்தக் கூட்டமைப்பில் உள்ள ஒவ்வொரு சிறு பிரிவினரும் தாம் செய்யும் தொழிலின் வாயிலாக மற்றப் பிரிவினர்க்கு உதவி, அவர்கட்கு இன்றியமையாதவராக உள்ளார்கள். சமுதாயம் ஓர் உடலைப் போன்றது. கை, கால், தலை முதலிய உறுப்புக்களைத் தனித்தனியே பிரித்துவிட்டால் உடல் இல்லை. அதுபோல் மக்கட் பிரிவு ஒவ்வொன்றும் தனித்தனியே பிரிந்தால் சமுதாயம் இல்லை. கையும் காலும் போன்ற எல்லா உறுப்புக்களும் தனித்தனி வகையாக உழைப்பதால் உடல் முழுவதும் வளர்ச்சி பெறுவதுபோலச் சமுதாய உட்பிரிவினரின் தனித்தனி உழைப்பால் சமுதாயம் முழுதும் நன்மையடைகிறது. ஒரு பிரிவினர் தமது தொழிலைச் செய்யாமல் நிறுத்தி விடின், மற்றப் பிரிவினர் வாழ்க்கைத் தேவைகள் நிரம்பாமல் அல்லற்பட நேரிடும். மனிதன் காட்டிலும் குகையிலும் இருந்த நிலையினின்று வளர்ந்து நாகரிகமாக வாழக் கற்றுக்கொள்ளத் தொடங்கிய நாள் முதல் மற்ற மக்களோடு சேர்ந்து சமுதாயம் அமைத்தே வாழ்கின்றான். அவனது முன்னைய நிலையை வாழ்க்கையென்று கூறல் பொருந்தாது. சமுதாயக் கூட்டமைப்பில் ஓர் உறுப்பினனாக இருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும்போதே, அதன் மற்ற உறுப்பினருக்கு உதவியாக வாழ்வதையே வாழ்க்கையெனலாம். 'Man is a social animal' என்றார் ஓர் ஆங்கில அறிஞர். சமுதாயத்திலிருந்து விலகி வாழ எந்த மனிதனாலும் முடியாது. அதில் வாழும் மனிதனின் செயல்களை இரண்டு வகையில் அடக்கலாம். அவன் சிலவற்றைச் சமுதாயத்திற்குக் கொடுக்கிறான்; சில வற்றை அதனிடமிருந்து எடுத்துக்கொள்கிறான். வேறு வகையாகக் கூறினால், அவன் சமுதாயத்தை வளர்க்கிறான்; சமுதாயத்தில் வளர்கிறான் எனலாம். யார் யார் தமது உழைப்பையோ அறிவையோ செயல் திறனையோ

தம் சமுதாயத்திற்குப் பயன்படுத்தவில்லையோ அவர்கள் அதற்குச் சுமையாக—விரலுக்கு வேண்டாத வீக்கமாக—மரத்தை உண்ணும் புல்லுருவியாக இருக்கிறார்கள். அவர்கள் ஒன்றும் கொடுக்கவில்லை; நிறைய எடுத்துக் கொள்கிறார்கள். கொடுக்காமல் எடுத்துக்கொள்பவரை மக்கள் என்ன பெயரிட்டு அழைக்கிறார்கள்? அதை யான் சொல்ல வேண்டா.

ஒரு சமுதாயத்தில் ஆசிரியர், இரும்புத்தொழிலாளர், கணக்கர், நகர சுத்தியாளர், மர வேலையாளர், கொத்தர், உழவர், சலவைத் தொழிலாளர், பொறியியக்குவோர், வாணிகர், முடி திருத்துவோர், நகரக் காவலர், உடை தைப்போர், தோட்ட வேலையாளர், அலுவலகச் செயலாளர், அமைச்சர், மாணவர் முதலிய பல துறையினர் இருக்கிறார்கள். இவர்களில் மாணவர் தவிர ஒவ்வொரு துறையினரும் மற்றவர்க்குத் தேவையானவரே. ஆதலால் யாரை உயர்ந்தவர் என்பது? யாரைத் தாழ்ந்தவர் என்பது? திருவள்ளுவர் ‘சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையால்’ என்று கூறியது, மேலே சொன்ன பலவகைத் தொழில்களைப்பற்றியதன்று. நற்செய்கை, தீயசெய்கை என இருவகைப்படும் செய்கைகளைக் குறித்ததேயாகும்.

மாணவர்கள், சமுதாயம் தரும் நன்மைகளைப் பெற்றுக்கொண்டு கல்வி கற்கிறார்கள். மாணவ நிலையில் அவர்கள் சமுதாயத்திற்கு ஒன்றும் கொடுப்பதில்லை. இதற்குச் சமுதாயம் உரிமையளித்திருக்கிறது. ஏன்? அவர்கள் கல்வியால் தொழிலறிவும், செயல் திறனும் மிகுதியாகப் பெற்றுப் புதிய, நல்ல முறைகளைக் கையாண்டு சமுதாயத்திற்கு எதிர்காலத்தில் உதவ வேண்டும், அதை மேன்மேல் முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணமே காரணம். விளக்கை ஏற்றி வைத்தால் அழகாக இருக்கும்; அதைத் துலக்கிவிட்டு ஏற்றி வைத்தால் பின்னும் அழகாக இருக்கும். மாணவர் பள்ளியில் தொழிலைமட்டும் கற்கவில்லை; இலக்கியமும், பிற கலைகளும் கற்கின்றார்கள்: ஆசிரியரைப் பல கேள்விகள்

கேட்டு ஐயத்தைப் போக்கிக்கொள்கிருர்கள். சமுதாயத்திற்கு மகிழ்ச்சி நல்கவும், உணர்ச்சி யூட்டவும், நல்லறிவு புகட்டவும், அன்பால் ஒன்றுபட்டு வாழச் செய்யவும் இவை பயன்படுகின்றன. வெறும் தொழில் முன்னேற்றம் உயிரற்றது: கொடுமையானது.

இன்றைய மாணவர்கள் நாளைய சமுதாய உறுப்பினர்கள். அந்நிலையில் நன்கு வாழ்வதற்காகப் பெற்றுக்கொள்ளும் பயிற்சியே பள்ளிக் கல்வி. ஆதலால் மாணவர்கள் கருத்தோடு கல்வி பயில வேண்டும். அறிவையும் ஆற்றலையும் ஒழுக்கத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். சுறுசுறுப்பாக விளையாடியும், சத்துணவு உண்டும் உடலை வளர்த்துக்கொள்ள வேண்டும். நாளை இவையெல்லாவற்றையும் சமுதாய நல்வாழ்விற்காக அர்ப்பணிக்க வேண்டும். அதுவே படைப்பின் நோக்கம். நண்பர்களே, ***எடுத்தே வாழ எண்ணுமல் கொடுத்தும் வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.*** நாம் வாழ்வது சமுதாயத்தால்; ஆகவே நம் உழைப்புச் சமுதாயத்திற்கே!—இதை மறை மந்திரமாகக் கொள்ளுங்கள்.

என் பேச்சு முடிந்தவுடன் பொறுப்பாசிரியர் எழுந்து வந்து என் முதுகைத் தட்டி மிகவும் பாராட்டினுர். மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். ஆசிரியர் தமது கருத்துரையில் என் பேச்சைப்பற்றிக் குறிப்பிட்டு, அமுதன் பேச்சுச் செவிக்கமுதாக அமைந்தது. அவர் தம் கருத்துக்களை ஒழுங்காக வகைப்படுத்தித் தெளிவாகப் பேசினுர். சிந்தனைத் தெளிவும், அதிக உணர்ச்சிக்கு ஆளாகாமல் அமைதியாகப் பேசியமையுமே பேச்சின் வெற்றிக்குக் காரணம் என்று கூறினுர்.

பெப்ருவரி மாதம் 25ஆம் நாள் எங்கள் சொற்பயிற்சி மன்றத்தின் இறுதி விழா நடைபெற்றது. நகர மன்ற ஆணையாளர் தலைமையில், நகர அறிஞர், சொல்லின் செல்வி திரு. மணிமேகலை அம்மையார் அவர்கள் உறுப்பினர்களை வாழ்த்தியதோடு, “குடியரசில் பேச்சாளரின் தொண்டு” என்ற பொருள்பற்றிச் சொன்மாரி பொழிந்

தார்கள்; மன்றக் கூட்டங்களில் பேசிய உறுப்பினர்கட்கு நற்சான்றிதழ்களும், நன்கு பேசியவர்கட்குப் பரிசுகளும் வழங்கிஞர்கள்.

செந்நாப்போதார் சொற்பயிற்சி மன்றத்தால் நானும் மற்ற மாணவரும் நாநலம் பெற்ருேம்; அவையில் அஞ்சாமல் முறைப்படி பேசும் திறமை பெற்ருேம்; எல்லாவற்றிற்கும் மேலாக நல்லறிவு பெற்ருேம்; இந்தியக் குடியரசில் வாழும் தகுதியும், ஆளும் தகுதியும் பெற்ருேம்.

கேள்விகள்

1. சிறந்த பேச்சாளனின் பண்புகள் யாவை?
2. சமுதாயம் என்பதன் பொருள் யாது?
3. சமுதாய உறுப்பினர்களின் கடமைகள் யாவை?
4. 'சமுதாயம் ஓர் உடலைப்போன்றது'-இதன் பொருத்தத்தை விளக்குக.
5. மாணவர்கட்குச் சமுதாயம் அளித்துள்ள உரிமை யாது?
6. மாணவர்கள் சமுதாயத்திற்குச் செய்ய வேண்டும் கடமைகள் யாவை?

பயிற்சி

1. 'நாட்டுப்பற்று' என்பதுபற்றிய குறிப்புக்களைத் துணையாகக் கொண்டு சிறு கட்டுரை ஒன்று வரைக.

2. 'சமுதாயமும் மாணவர்களும்' என்னும் பொருள்பற்றி அமுதன் பேசியதைச் சுருக்கி வரைக.

10. செல்வமும் வறுமையும்

டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள்,
M.A., Ph.D., M.L.C.

[இவ்வாசிரியர், மதுரை - தியாகராசர் கல்லூரி முதல்வர்; நூலாசிரியர்; சிறந்த பேச்சாளர்; ஆராய்ச்சி அறிஞர். இப்பாடப் பகுதி இவர் எழுதியுள்ள "தமிழ் காட்டும் உலகு" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.]

பழந்தமிழ்ப் புலவர்களுக்குச் செல்வத்தின் சிறப்பையும் வறுமையின் வாட்டத்தையும் நன்றாக வருணிக்கக் கூடிய ஆற்றல் இருந்தது. ஒருவர் செல்வத்தின் பெருமையை நன்றாகப் படம் பிடித்துக் காட்டுதற்குத் தகுதியுடையவராகவும், இன்மையின் அல்லலை எடுத்துக் காட்டுதலில் வல்லவர் அல்லராகவும் இருத்தல் இயலும். அங்ஙனமே, வறுமையின் இடும்பையால் வருந்தி இருப்போரின் நிலையைச் செவ்வனே காட்ட வல்ல ஒருவர் செல்வச் செருக்கினைச் செம்மையாக எடுத்துக் காட்டுதல் இயலாதவராக இருத்தல் கூடும். எனினும், பழங்காலக் கவிஞர்கள் இவ்விரு திறத்தினையும் நன்றாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவராய் இருந்தார்கள். அதற்குப் பல சான்றுகள் பத்துப்பாட்டிலும் புறநானூற்றிலும் உண்டு. அறிஞர் ஒருவர் (நக்கீரர்) மதுரை அரண்மனையைப்பற்றி வருணிக்கின்ற விதத்தை ஒரு பாட்டில் காண்கின்றோம்.

சிற்ப நூல் வல்லவர்கள் கூர்ந்து ஆராய்ந்து எழுப்பிய அரண்மனை அது. அந்த அரண்மனைக்கு உள்ளே பல மனைகளும், வாயில்களும், மண்டபங்களும் உண்டு. தாழோடு சேர்க்கப்பட்டிருந்த பெருங்கதவுகள் நடுநிலையில் சேர்க்கப்பட்டிருந்தன. அந்த வாசல் வழியே பிடித்த கொடிகளோடு யானைகள் நிமிர்ந்தபடி உள்ளே செல்லத்தக்க அளவு உயரமாக அவ்வாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. கவரிமான்களும் அன்னங்களும் அவ்வாசலில் விளையாடித் திரிந்தன. அந்த அரண்மனை வாசலில் ஒரு பெரிய நிலாமுற்றம் உண்டு. அந்த

முற்றத்தில் நிலா வெள்ளித்தகடேபோல் பரவுவது உண்டு. அந்த நிலாமுற்றத்தின் ஓரமாகச் செயற்கை நீரருவி ஒன்று வைக்கப்பட்டிருந்தது. பக்கத்தில் மயில்களுடைய ஆரவாரம் கேட்டுக்கொண்டிருந்தது. அருவிநீர் ஓசைகளும் கேட்டுக்கொண்டிருந்தன. குதிரைகள் நிரம்பிய புல்லைத் தின்று குதட்டும் குரல் இன்னொரு பக்கம் கேட்டுக்கொண்டிருந்தது.

இவ்வாறு அமைந்த அரண்மனையினுள்ளே பல இடங்களில் நிறைய விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. அவ்விளக்குகளிற் பல, யவனர்களின் பாவை விளக்குகள். அவ்விளக்குகளில் பருத்த திரிகள் போடப்பட்டிருந்தன. அடிக்கடி நெய்யை வார்த்துத் தூண்டிவிடும் மகளிர் இருந்தனர். அரண்மனையிலுள்ள நெடுஞ்சுவரிலெல்லாம் வெள்ளியை ஒத்த சாந்து பூசப்பட்டிருந்தது. அங்கு நின்ற தூண்களோ நீல மேனியை ஒத்த நிறமும் வடிவமும் உடையன. சுவர்களோ செம்பினால் வார்க்கப்பட்டவைபோல் தோன்றின. சுவர்களில் பல்வேறு பூங்கொடிகளின் உருவங்கள் அழகாக வரையப்பட்டிருந்தன.

பருத்த அழகிய வலிய யானைகளினின்று தாமே விழுந்த கொம்புகளைக்கொண்டு, வல்ல தச்சர்கள் கூரிய உளியினால் செய்தமைத்த இலை வேலையோடு கூடிய கட்டில் ஒன்று அவ்வரண்மனையில் இருந்தது. அந்தத் தந்தக் கட்டிலில் அழகிய வேலைப்பாடுகள் அமைந்த தகடுகள் சேர்க்கப்பட்டிருந்தன. அந்தத் தகடுகளில் சிங்கம் முதலிய விலங்குகளை வேட்டையாடுவதுபோன்ற காட்சிகள் பொறிக்கப்பட்டிருந்தன. பொறிக்கப்பட்டிருந்த புலிகள் உண்மைப் புலிகள் என்று தோன்றுவதற்குரிய வகையில் புலி மயிர்களை உள்ளே கொடுத்து, புலியின் உடம்பில் உள்ள கோடுகள் தெரியும்படி செய்யப்பட்டிருந்தன. முல்லைப் பூக்களின் காட்சியும் பிற பூக்களின் காட்சியும் அழகுபடுத்தின. தகடுகள் ஆணிகளாலே வைத்துக் கோக்கப்பட்டிருந்தன. கட்டிலைச் சுற்றி நாற்புறமும் தொங்கும்படி முத்துவடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அந்தக் கட்டிலின் கால்கள் நல்ல உருட்சி உடையன வாக இருந்தன. கட்டில் கால்களின் நடு இடங்கள் மெல்லியனவாய்த் திரண்டு இருந்தன. அந்தக் கட்டிலின் மேல் இரட்டை இரட்டையாய்ப் போடப்பட்ட மெத்தை கள் இருந்தன. அந்த மெத்தை ஒன்றில் அன்னத்தின் தூவிகள் பரப்பப்பட்டிருந்தன. அவற்றிற்குமேல் தலை யணைகள் போடப்பட்டிருந்தன. கஞ்சி போட்டுக் கழுவிய தூய துகில் மடிகள் விரிக்கப்பட்டிருந்தன. அவற்றிற்கு மேல் பல பூக்கள் சொரியப்பட்டிருந்தன. அத்தகைய கட்டிலில் ஒருத்தி படுத்திருந்தாள் என்று நக்கீரர் நெடுநல்வாடையில் வருணித்துள்ளார். செல்வத்தின் செழிப்பினை வருணித்ததற்கு ஓர் எடுத்துக்காட்டு இது.

வறிய மக்களின் நிலையை உள்ளவாறு வருணித்த தற்கு ஓர் எடுத்துக்காட்டு நத்தத்தனார் பாடிய சிறுபா ணாற்றுப்படையிற் காணப்படுகின்றது: வறுமையால் வாட்டமுற்ற ஒரு வீடு இவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டில் அடுப்பு மூட்டிப் பல நாட்கள் ஆயின போலும்! அதனால், அடுப்பங்கரையில் நாய் குட்டி போட்டுள்ளது. குட்டிகளோ இப்பொழுதுதான் அண்மை யில் ஈனப்பட்டன போலும்! இவை இன்னும் கண்கூடத் திறக்கவில்லை. இந்தக் குட்டிகள் தாய் மடியைக் கவர்ந் தன. மடியைத் தொடுதலைக்கூடப் பொறுக்கவில்லை தாய் நாய். காரணம் பால் இல்லாமையே. ஒருவரும் பாலினைக் கறந்துகொள்ளவில்லை. ஆயினும் பால் இல்லை. பல நாட்கள் சாப்பிடாத வீட்டில் உள்ள தாய் நாய் தீனி எவ்வாறு பெற்றிருத்தல் இயலும்? வேறு வீடுகளிற் போய்ச் சுற்றிப் பார்த்து வருவதற்கும் இளங்குட்டிகளைப் பிரிந்துபோக அந்நாய்க்கு மனமில்லை போலும்! எனினும், குட்டிகளின் வாய் மடியில் பட்டவுடன் குரைக்கும் அளவு வறுமையுடையதாகிவிட்டது தாய் நாய் என்று காட்டும் ஆற்றல் மிக்க கவிஞர், அந்த வீட்டின் பேரிடும்பையையே எடுத்துக் காட்டியவராகிவிட்டார்.

அந்த வீட்டின் சுவர்களோ மிகப் பழைய சுவர்கள். கூரையில் உள்ள குச்சிகள் எல்லாம் முன்னரே விழுந்து

அடுப்புக்கு உதவிவிட்டன. எஞ்சிக் கிடந்த துரும்பு களைப்பற்றிய நீரின் துணையால் கறையான்கள் தோன்றி விட்டன. இவை அரித்த பாகம் போக எஞ்சிய சுவரின் பாகத்திற் காளான்கள்கூட முளைத்துவிட்டன. குப்பை களில் விளைந்த வேளைக்கீரையைத் தவிர வேறு ஒன்றும் பெறமாட்டாத நிலையில் உள்ள அந்த வீட்டின் தலைவி, அந்தக் குப்பைக் கீரையைப் பறித்து அரைகுறையாய் வேக வைத்து எடுத்துத் தன் சுற்றத்தாரோடு ஒருங்கு கூடி மிசைகின்ற மிக்க பசிக் காட்சியைப் படமாக வரைந் துள்ளார் நத்தத்தனார்.

புறநானூற்றிலும் இது போன்ற காட்சி காட்டப்பட் டுள்ளது. பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் பெரும் பாலும் இதனை ஒத்த காட்சியைத் தாம் பாடிய பாட்டுக் களுள் ஒன்றில் அமைத்து வைத்துள்ளார் (புறம். 164). பெருஞ்சித்திரனார் என்ற புலவர் பாட்டிலும் இல்லாளின் இன்மை நிலை எடுத்துக் காட்டப்பட்டுள்ளமை காண்கின் றோம்; அவ்வீட்டில் வயது முதிர்ந்த கிழவி ஒருத்தி உண்டு. "எனக்குக் காலம் வரவில்லையே!" என நொந்து நொந்து பலவாறு புலம்பிக்கொண்டு, கையிலே பிடித்த தடிக்கம்பு காலாக அவளுக்கு உதவ, அவள் மெல்ல மெல்ல நடந்து, வீட்டினுள் ஒதுங்கிக் கிடக்கும் காட்சியை அளிக்கின்ற கவிஞர், அவள் தலை மயிர், நூலை விரித்தால் ஒப்ப இருந்ததாகக் கூறியதிலிருந்து, அவ ளுடைய முதுமையும் வறுமையும் நன்கு அறியப்படும். அந்த வீட்டிலுள்ள மற்றொரு பெண்மகள் பசந்த மேனியோடு "இக்குழந்தைகளை எப்படியாவது காப் பாற்ற வேண்டும்!" என்று நினைத்து வருந்தியவளாய் உள்ளாள். அவள் இடுப்பிலும், கையிலும், தோளிலும் பல குழந்தைகள் உள்ளன. ஒவ்வொரு குழந்தையும் அத்தாயை "ஏதாவது தா," என்று வதைத்துத் தின்று கொண்டிருந்தது.

அந்தக் குழந்தைகளில் ஒருவன், "இந்த வீட்டில் தான் ஒன்றும் இல்லையே" என்று கோபித்து வீட்டை

விரும்பானுய் வெளியே சென்றுள்ளான். எனினும், சிறிது நேரம் பொறுத்து, "இப்பொழுது வீட்டில் ஏதாவது இருக்கிறதா?" என்று கருதி உள்ளே நுழைந்தவன், பானைகளையும் சட்டிகளையும் திறந்து திறந்து பார்த்துக் கூழோ சோருே இல்லாமையைக் கண்டு அழத்தொடங்கி விட்டான். அவனது பசியைத் தணிக்க முடியாவிட்டாலும், அவனது வருத்தத்தைத் தணிக்கக் கருதிய பெற்றேேள், "வானத்தில் உள்ள அம்புலியைப் பார்; எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று சொல்லிப் பார்த்தாள். புதல்வன் கேட்கவில்லை. "உன் தந்தையின் முகம் எப்படி இருக்கிறது? காட்டு," என்று அவனைக் கேட்டு வேடிக்கை விளைக்கப் பார்த்தாள். அதுவும் பயன் தரவில்லை. "இன்னும் அழுதுகொண்டிருந்தாயானுல் புலி வரும்; பிடித்துக் கொடுத்துவிடுவேன்" என்று அச்சுறுத்தினுள் அன்பே உருவான அத்தாய். "வறுமைப் புலியை விட நீ சொல்லும் மறப்புலி பெரியதா?" என்று கேட்பவனைப்போல, அதற்கும் அசையாதவனுய் அச்சிறுவன் இருந்துவிட்டான். செல்வம் இல்லாமையால் இவ்வாறெல்லாம் அல்லற்பட்ட குடும்பம் அது என்று காட்டியுள்ளார் பெருஞ்சித்திரனுர்.

நம் காலத்தில் வாழ்ந்த கவிமணி தேசிக விநாயகமும் செல்வ மக்களின் களிப்பினையும் வறிய மக்களின் மனப் புழுக்கத்தையும் அழகுபட எடுத்துக் காட்டியுள்ளார்; செல்வச் சிறுமியர்கள் நல்ல பாகமாகச் செய்த பண்டம் உண்டலையும், பக்குவமான பழங்கள் உண்டலையும், நேரத்திற்கு நேரம் உடைகளை மாற்றி அணிதலையும், சீவிச் சிணுக்கெடுத்து மலர் சூட்டி அழகு செய்துகொள்ளுதலையும் கூறினுர். "பத்துப் பசுக்களெம் வீட்டிலுண்டு—நல்ல பாலுக்கு யாதொரு பஞ்சமுமில்லை" என்று பெருமிதத்தோடு அந்தச் சிறுமியர்கள் களித்ததாக அவர் கூறினுர். அதற்கெதிரே ஏழை வீட்டுச் சிறுமியர்கள், "அன்னப்பால் காணுத ஏழைகட்கு நல்ல ஆவின் பால் எங்கே கிடைக்குமம்மா?" என்று கதறினுர்கள் என்றுர்; இட்டிலி என்றுல் அது எந்த எலி என்று

கேட்கக்கூடிய நிலையில் உள்ள ஆயிரக் கணக்கான வறியர்களுக்காக இரங்கினர்; நேரத்திற்கு நேரம் காப்பி காப்பி என்று கத்துகின்ற பெருமக்களை நோக்கி ஏழை மக்கள், "காப்பி என்பது சட்டையா? தொப்பியா? உணவுதானு?" என்று கேட்பதுபோல எழுதி வைத்தார்; தாம் சுற்றுவது ஒரு முழத் துணி என்றும், அதில் தோன்றிய பீறல் ஆயிரம் என்றும், அக்கந்தையிலுள்ள அழுக்கினைப் போக்க முயன்ருல் அது பஞ்சு பஞ்சாகப் பறந்து போய்விடுமென்றும் ஏழைச் சிறுமியர் சொல்லிய தாக அமைத்தார். பல மாதங்களாக எண்ணெய் கிடைக்கமாட்டாமையால் கூந்தல் ஈருக்கும் பேனுக்கும் இடமாயிற்றென்றும், அது ஈந்தஞ் செடிபோல் ஆயிற் றென்றும், வாரி முடிக்க வகையில்லை என்றும் அச்சிறுமி யர் கூறுவதாக அமைத்திருப்பது உள்ளம் உருக்குவது ஒன்றன்றே?

இவ்வாறு பழந்தமிழ்ப் புலவரும், இக்காலப் புலவரும் செல்வம் நிரம்பியவர் சிறந்து விளங்கும் வகையையும், செல்வம் இல்லாதார் அல்லலுற்று வருந்தும் நிலையையும் ஒத்த ஒத்த வகையான் உயிரோவியங்களாகத் தீட்டி யுள்ளார்கள் என்பது அறியப்படும்.

அருஞ்சொற்பொருள்

இடும்பை - துன்பம். செவ்வன் - செவ்வையாக, தெளிவாக. துகில் - ஆடை. புறநானூறு - அறம், பொருள், வீடு என்ற மூன் றைப்பற்றிய நானூறு பாக்கள் கொண்ட நூல். அண்மை-சமீபம். அண்மை × சேய்மை.

கேள்விகள்

1. மதுரை அரண்மனை எவ்வாறு நக்கீரரால் வருணிக்கப் பட்டுள்ளது?
2. பாண்டிமா தேவியின் கட்டிலின் சிறப்பு யாது?
3. நத்தத்தனர் வறுமையால் வாட்டமுற்ற வீட்டை எவ்வாறு வருணித்துள்ளார்?

4. பெருந்தலைச் சாத்தனார் தமது வறிய நிலையை எவ்வாறு கூறியுள்ளார்?

5. தேசிக விநாயகம் பிள்ளை ஏழைச் சிறுமிகளின் நிலையை எப்படிக் கூறியுள்ளார்?

பயிற்சி

1. நக்கீரர் கூறிய அரண்மனைச் சிறப்பையும் கட்டிலின் சிறப்பையும் உன் சொந்த வாக்கியங்களில் எழுதிக் காட்டுக.

2. சிறுபாணாற்றுப்படையில் காணப்படும் வறுமையுற்ற வீட்டின் நிலையை 20 வரிகளில் எழுதுக.

3. பெருஞ்சித்திரனார் குடும்ப நிலையை 15 வரிகளில் வரைக.

4. எதிர்ச்சொல் கூறுக:—பழைமை, வறுமை, நிமிர்தல், பெரிய, பல, அண்மை, வேண்டும், சிறுவன்.

5. வாக்கியங்களில் பயன்படுத்துக:—இடும்பை, தகுதி, அடிக்கடி, அறைகுறை, மறப்புலி, பக்குவம், அல்லல், உயிரோவியம்.

11. தம்பிக்குக் கடிதம்

டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள், M.A., M.O.L., Ph.D.

[இவ்வாசிரியர் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்; பெயர் பெற்ற பல நூல் ஆசிரியர்; ஆராய்ச்சி அறிஞர். இவர் எழுதியுள்ள "தம்பிக்கு" என்னும் கடித நூலிலிருந்து ஒரு கடிதம் இங்குத் தரப்பட்டுள்ளது.]

அன்புள்ள தம்பி,

இனி எந்த முயற்சி செய்தாலும், தமிழராகிய நாம் சிறுபான்மையோர் என்பது நினைவில் நிற்க வேண்டும். கிணற்றுக்குள் இருக்கும் தவளை கடலில் வாழ்வதாக எண்ணுமாம். அதுபோல வடவேங்கடம் தென்குமரி எல்லைகளைப் பார்த்துக்கொண்டு நாம் பெரிய இனம் என்று இறுமாப்புக்கொண்டால் அது வீழ்ச்சிக்கு வித்தாகிவிடும். அந்த எண்ணம் நீராவி கண்டுபிடிக்கப் படுவதற்கு முன்பு இருந்திருக்கலாம்; தவறு இல்லை. அந்தக் காலத்தில் போக்குவரவு குறைவு; ஒரு நாட்டுக்கும் மற்ற நாடுகளுக்கும் தொடர்பு குறைவு. வடவேங்கடம் தென்குமரி என்ற எல்லைகளைமட்டும் அன்று பார்த்துப் பெருமிதம் கொண்டிருந்ததால் தீங்கு ஒன்றும் இல்லை. இன்று நிலைமை முற்றிலும் மாறியுள்ளது. வடதுருவத்தையும் தென் துருவத்தையும் ஆப்பிரிக்காவையும் அமெரிக்காவையும் பார்த்து, நாம் சிறுபான்மையோர் என்று உணர்வதற்கு, உலகத்தைப் பார்க்கத் தவறினுலும் இந்தியாவைப் பார்த்தால் போதும். இந்தியர் முப்பத்தைந்து கோடி, தமிழர் மூன்று கோடி; சிறுபான்மையோர்தானே?

சிறுபான்மையோர் எந்த முயற்சி செய்தாலும் ஒற்றுமையும் கட்டுப்பாடும் கட்டாயம் தேவை. இந்த இரண்டும் இருந்திருந்தால் தமிழர் வல்லமையான இனம் என்ற எண்ணம் உலகுக்கு ஏற்பட்டிருக்கும். அதற்கு மாருகவே இப்போது உள்ளது.

அதற்கு ஏற்றாற்போலவே, நாம் நம்முடைய பொதுத் தேவைகளுக்காக ஒன்றுபட்டுப் போராடுவதில்லை. ஆனால் நமக்குள் இருக்கும் கட்சி வேறுபாடுகளுக்காகப் பிரிந்தும் பிளந்தும் போராடுவதில்மட்டும் வீரம் காட்டி வருகிறோம். இந்த வேறுபாடுகளும் இருக்கலாம்; ஒரு மூலையில் இருக்கலாம்; மேடையில் இருக்க வேண்டியதில்லை. இங்கிருக்கும் பத்திரிகைகளும் பொதுப் போராட்டங்களுக்கு விளம்பரம் தருவதில்லை; சில்லரைப் பூசல்களையே விளம்பரப்படுத்துகின்றன; சேர்ந்து தாளமும் போடுகின்றன.

தமிழர்களிடையே பொதுவாகப் பிரிக்கும் ஆற்றல் வளர்ந்துவிட்டிருக்கிறது; பிணிக்கும் ஆற்றல் வளரவில்லை. ஒரு மேடையில் இரண்டு கட்சிகள் சேர்ந்து பொதுத் தேவைபற்றிப் பேசுவது தமிழகத்தில் கண்டு வியக்கும்படியான புதுமையாகவே உள்ளது. அது என்றைக்குப் பழக்கமான—இயல்பான—நிகழ்ச்சியாகப் பெருகுமோ, தெரியவில்லை.

தேர்தல் காலங்களில் தமிழரைக் கண்டு மற்றவர்கள் சிரிக்கிறார்கள். ஓர் இடத்திற்குப் பத்துப் பதினைந்து பேர் நின்று போட்டியிடுவார்கள். மற்றத் தமிழரை வீழ்த்தியது பற்றிய வீணான வீரவுணர்ச்சியே தோன்றுகிறது. தன் இரண்டு கண்களும் போனாலும் சரி, தன் எதிரியின் ஒரு கண்ணாவது போக வேண்டும் என்று ஒருவன் முயன்றதாகக் கதையில் படித்திருப்பாய். அத்தகைய வீண் வீரம்—வீரம் அல்ல, ஆணவம்—தமிழரிடையே மிகுதியாக உள்ளதே!

இவற்றை எல்லாம் எண்ணிப் பார். தமிழன் பொதுவாகத் தன்னலம் மிகுந்தவன் என்று உணரலாம். தனித் தனியே தன்னலம் நாடிப் பொதுநலம் மறக்கும் கூட்டம் எப்படி ஒற்றுமை அடைய முடியும்? எப்படி முன்னேற முடியும்? மற்ற இனத்தாரைவிடத் தமிழர்க்குள் தன்னலம் மிகுதியா என்று நீ கேட்கலாம். ஆம் என்றே மறுமொழி சொல்லத் தோன்றுகிறது.

எண்ணிப் பார்: நான் தோற்றாலும் சரி, நம்மவன் எவனாவது வெற்றி பெறட்டும் என்ற உயர்ந்த எண்ணம் எத்தனை தமிழரிடையே காண முடியும்? என் சொந்தக் கொள்கை புறக்கணிக்கப்பட்டாலும் சரி, தமிழினம் வளர்ந்து செழிக்கட்டும் என்ற உயர்ந்த நோக்கம் எத்தனை தமிழரிடையே காண முடியும்? என் கட்சி அழிந்தாலும் சரி, தமிழ்நாடு வாழ்ந்து விளங்கட்டும் என்ற உயர்ந்த குறிக்கோள் எத்தனை தமிழரிடை காண முடியும்? தமிழரிடையே தன்னலம் மிகுதியா, பொது நலம் மிகுதியா என்று ஆராய்ந்து அறிவதற்கு இந்த மூன்று 'பரீட்சை' வைத்துப் பார். நான் சொல்வதன் உண்மை தானாகவே விளங்கும்.

விதிவிலக்கு உண்டு. உயர்ந்தவர்கள் தமிழினத்தில் இல்லாமற் போகவில்லை. ஆனால் அத்தகையவர்கள் மிகச் சிலரே; ஒரு சிலரே. அவர்களால்மட்டும் நாடு முன்னேறிவிட முடியுமா? ஒற்றுமை ஏற்பட முடியுமா? பொதுவாக மக்களின் மனம் சீர்ப்பட்டால்தானே முடியும்?

பொதுவாகத் தமிழன் முதலில் தன்னை நினைக்கிறான்; தன்னையே நினைக்கிறான்; பிறகுதான் சில வேளைகளில் மேற்போக்காக மொழியையும் நாட்டையும் நினைக்கிறான். இவ்வளவு தன்னலம் முதிர்ந்திருப்பதால்தான், மிகப் பழங்காலத்திலிருந்தே பண்பாடு மிக்க இனமாக விளங்கியிருந்தும், தமிழினம் இன்று தாழ்வான நிலையில் கிடக்கின்றது.

தன்னலம் மிகுந்தவனாக—முதலில் தன்னையே நினைப்பவனாக—தமிழன் இருக்கிறான் என்பதற்கு இன்னொரு சான்று சொல்லட்டுமா? தமிழன் ஒருவன் அதிகாரி ஆனால், தான் அதிகாரி என்ற எண்ணமே அவனுக்கு எப்போதும் இருக்கிறது. அலுவலகத்தைவிட்டு வெளியே வந்த பிறகும், மாலை 6 மணிக்குப் பிறகும், ஞாயிற்றுக் கிழமை முதலிய விடுமுறை நாட்களிலும், கோயில்

முதலிய பொது இடங்களிலும், விருந்து முதலிய பொது நிகழ்ச்சிகளிலும், அதிகாரி என்ற எண்ணமே நிறைந்து, மற்றவர்களிடமிருந்து விலகி உயர முயல்கின்றான்; குடும்பத்தில் மனைவி மக்களின் முன்னும் அதிகாரியாகவே விளங்குவான்போலும்! ஆங்கிலேயன் அப்படி அல்ல என்பது சொல்லாமலே அறிவாய். அலுவலகத்தில் ஆங்கிலேயன் கடுமையாக நடந்துகொள்வான்! மாலை 5 மணிக்குப்பின் விளையாட்டுக் கழகத்தில் தோழன்போல் பழகுவான்; விருந்தில் களித்து மகிழ்வான்; கோயிலில் அமைந்து ஒழுகுவான். காரணம் என்ன? அவன் மனம் இடத்திற்கும் வேலைக்கும் சூழ்நிலைக்கும் நெகிழ்ந்து மாறி அமைகின்றது. அவன் உள்ளத்திலும் தன்னலம் உண்டு; ஆனால் குறைவு. அதனால்தான் அவன் நெகிழ்ந்து தோழனாக, மனிதனாக, அன்பனாக மாறி அமைய முடிகின்றது. தமிழனுடைய தன்னலமோ, இடம் வேளை சூழ்நிலை மொழி நாடு எதுவும் ஊடுருவி இடம் பெறாத வாறு இறுகியுள்ளது. அதனால் தமிழரில் அதிகாரி, எங்கும் அதிகாரியாகவே இருக்கிறான்; கட்சி ஆள் எங்கும் (பொது மேடையிலும் பொது இடங்களிலும்) கட்சி ஆளாகவே இருக்கிறான்.

தமிழனைத் தனியே பெயர் சொல்லிப் பழித்துப் பார். உடனே சீறி விழுவான். ஆனால், அவனுடைய நாட்டையும் மொழியையும் இனத்தையும் பழித்துச் சொல்; பொறுமையோடு கேட்பான். ஆங்கிலேயனைத் தனியே பழித்துப் பார்; உன்னைப் புறக்கணிப்பான். அவனுடைய நாட்டையும் மொழியையும் பழித்துச்சொல்; பகையுள்ளம் கொள்வான். காரணம் மேலே சொன்னதுதான். மொழியைவிடத் தன் நாட்டைவிடத் தானே முக்கியம் என்ற எண்ணம் தமிழனிடம் அவனை அறியாமல் ஊறிக் கிடக்கிறது. அதுமட்டுமல்ல; கட்சிப் பற்று மிகுந்தவனாய்த் தோன்றும் தமிழனும், நெருக்கடி நேருமானால், கட்சி நலத்தைவிடத் தன்னலத்தையே பெரிதாக நாடுவான்; கட்சி சீர்குன்றினாலும் தான் வாழ வேண்டும் என்று முயலவும் முயல்வான். இந்நிலையில் இவனுடைய

நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் என்ன என்று சொல்வது!

உண்மையான நாட்டுப் பற்று இருக்குமானால், நாட்டை நினைக்கும்போதாவது தன்னை—தன்னலத்தை—மறக்க வேண்டாவா? அவ்வாறு மறக்கும் பண்பு இருந்தால் நாட்டின் பொதுத் தேவைகளுக்காகப் போராடும்போது ஒற்றுமை தானே ஏற்படாதா? ஒற்றுமை இல்லாதிருப்பதற்குக் காரணம் இப்போது விளங்கும் என எண்ணுகிறேன். பொதுத் தேவையை முதன்மையாக எண்ணும் மனம்தான் பலரையும் பிணைக்க முடியும்; தன்னையே முதன்மையாக எண்ணும் மனம் சேர்ந்தவர்களையும் பிரிக்க முயலும்.

தேர்தல் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகிறது. அன்றுமட்டும் திடீரென்று ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் உரிய வகையில் கடமையைச் செய்ய முடியுமா? எதுவும் பழக்கத்தில் வந்திருந்தால்தான் முடியும். ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் உரிய வகையில் பல நாளும் பழகியிருந்தால், ஒரு நாள் கூத்தாக நடைபெறும் தேர்தலிலும் அவ்வாறு நடந்து வெற்றி காண முடியும்.

ஒரு கதை சொல்வார்கள்; இரும்பைப் பொன்னாக்கும் கல் ஒன்று ஒரு மலையோரத்தில் இருப்பதாக ஒரு மந்திரவாதி சொன்னானும். ஒரு சிறு இரும்புத்துண்டைக் கையில் வைத்துக்கொண்டு அங்கிருக்கும் கற்களை ஒவ்வொன்றாக எடுத்து அதன்மேல் வைத்துப் பார்க்கச் சொன்னானும். எந்தக் கல்லை வைத்தவுடன் அந்த இரும்பு பொன்னாகிறதோ அதுவே மந்திரக்கல் என்றானும். கேட்டவன் அவ்வாறே மலையோரத்தில் நின்றுகொண்டு ஒவ்வொரு கல்லாக எடுத்து இரும்பின்மேல் வைத்து, அது பொன் ஆகாதது கண்டு உடனே வீசி எறிந்து வந்தானும். வீசிய கற்கள் குவியல் குவியலாகக் குவிந்தனவாம். அவனும் இரவு பகலாகக் கற்களை எடுத்து எடுத்து எறிந்து களைத்துவிட்டானும். கடைசியில் ஒரு நாள் திடீரென இரும்புத்துண்டு பொன்னாக ஒளி வீசியதாம். ஆனால், பாவம், அதற்குள் பொன்னாக்கிய அந்தக்

கல் கையைவிட்டுப் போய்விட்டதாம். எறிந்து எறிந்து பழகிய பழக்கத்தால் உடனே அந்த மந்திரக்கல்லையும் கை எறிந்துவிட்டதாம். அவன் கதி என்ன ஆயிற்று? அப்படித்தான் தேர்தலிலும் பிரிக்கும் ஆற்றல் வளர்வதைக் காண்கிறோமே தவிரப் பிணைக்கும் ஆற்றலைக் காணோம். காரணம் பழக்கம்தான். மற்றக் காலங்களில் பிறர்மேல் பொறாமைகொண்டும், பிறர் மனத்தைப் புண் படுத்தியும், சேர்ந்தவர்களைப் பிரித்தும் தமிழர் வாழ்கின்றனர். இந்தப் பழக்கம் அன்றாட வாழ்க்கையில் ஊறிப் போன பிறகு, திடீரென ஒரு நாள் காலையில் மாற்றிவிட முடியுமோ? முடியாது. அதனால் தேர்தலிலும் பொறாமை, இடையூறு, பகை இவைகளே விளைகின்றன. மந்திரக்கல் தேடியவனைப்போல் களைத்துச் சோர்வடைவதே கண்ட பயன்.

உன் அன்புள்ள,
வளவன்.

கேள்விகள்

1. தமிழ் இனம் பெரிய இனம் என்று எண்ணுவது தவறு என்பதை ஆசிரியர் எவ்வாறு விளக்குகின்றார்?
2. தமிழரிடம் பிரிக்கும் ஆற்றல் வளர்ந்திருக்கிறது என்பதற்குச் சான்று யாது?
3. தமிழன் தன்னலம் மிகுந்தவன் என்பதை எவ்வாறு உணரலாம்?
4. தமிழன் தன்னலத்தைவிட நாட்டுப் பற்றுக் குறைந்தவன் என்பதற்குச் சான்று யாது?
5. இரும்பைப் பொன்னாக்கும் கல்லின் கதை யாது? அது எதை விளக்கக் கூறப்பட்டது?

பயிற்சி

1. தமிழன் ஒன்றுபடாததற்குக் காரணங்கள் யாவை என்பதை விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

2. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—ஏற்றாற்போலவே, வல்லமையான, விளம்பரம், பொதுவாக, புறக்கணிக்க, தன்னலம், தேவைகள், நெருக்கடி, திடீரென.

3. உன் ஊரில் நடைபெற்ற தேர்தல் ஒன்றைப்பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

4. உன் ஊர் மக்களிடம் காணப்படும் குணங்களையும் குறைகளையும் விளக்கி உன் அயலூர் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

12. ஓவியக்கலை

டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள்
M.A.L.T., M.O.L., Ph.D.

முன்னுரை

நாம் கண்ணால் காணும் பொருள்களை அழகுபெற எழுதும் கலையே ஓவியக்கலை. பண்டை மனிதன் தான் பார்த்தவற்றையே படமாக எழுதிக் காட்டினான். பின்பு அறிவு வளர வளர, தன் மனத்தால் பல உருவங்களையும் காட்சிகளையும் முடிவு செய்து அவற்றைப் படங்களாக வரைந்தான்; எண்ணும் ஆற்றலில் சிறந்த புலவர் பெருமக்களுடைய கருத்து ஓவியங்களுக்கு உருவங்களை அமைத்தான். இவ்வாறு ஓவியக்கலையில், காணும் பொருளிலிருந்து எண்ணும் செய்திகள் வரையிலும் உருவம் தரும் முறை வளர்ச்சி பெற்றது. சுருங்கக் கூறின், ஓவியக்கலை, வீடு கட்ட அறியாத மனிதன் குகையில் வாழ்ந்தபோதே தோற்றமெடுத்தது என்று கூறலாம். பழைய மக்கள் வாழ்ந்த குகைகளில் சிறுசிறு ஓவியங்கள் இன்றும் காணப்படுகின்றன.

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகப் பொருள்களில் ஓவியம் தீட்டப் பெற்ற மட்பாண்டங்கள் பலவாகும்; தாயித்துக்கள் பல வாகும். இவ்வாறே சுமேரியர், எகிப்தியர் புதைபொருள் களிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன. எனவே, ஓவியம் வரையும் வழக்கம் மனிதனது வாழ்வுத் தொடக் கத்திலிருந்தே வளர்ந்துவந்திருக்கிறது என்று கூறுதல் பொருத்தமாகும்.

சங்க காலத்தில்

இன்றுள்ள தமிழ் நூல்களில் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல். போரில் விழுப் புண்பட்டு வீரர்கள் இறந்த இடத்தில் அல்லது அவர் களைப் புதைத்த இடத்தில் அல்லது அவர்களது உடற்

சாம்பலை அடக்கம் செய்த இடத்தில் ஒரு கல் நடப்படும். பின்னர் அதற்குப் பூசை நடத்தப்பெறும். அதற்கு 'நடுகல்' என்பது பெயர். அது வீரராலும் இறந்தவன் மரபினராலும் தொழப்படும். கல்லில் இவ்வாறு ஓர் உருவம் செதுக்கப்படுவதற்கு முன்பு அவ்வுருவத்தை ஓவியமாக வரைந்துகொள்ளுதலே வழக்கமாகும். அந்த ஓவிய உதவி கொண்டே கல்லில் உருவம் செதுக்கப்படும். எனவே, தொல்காப்பியர் காலத்திலேயே (ஏறத்தாழ 2300 ஆண்டுகளுக்கு முன்பே) ஓவியம் தீட்டும் வழக்கம் தமிழரிடம் இருந்துவந்தது என்பது தெளிவாகும். சங்க கால நடன மகளிர் நடனக் கலைக்காகப் பல்வேறு கலைகளையும் கற்றனர். அவற்றுள் ஓவியக்கலையும் ஒன்று என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது.

> "நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
> ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்
> கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை."

இவ்வடிகளை நோக்க, ஓவியக்கலைபற்றிய சிறந்த நூல் ஒன்று சங்க காலத்தில் இருந்தது என்பது தெளிவாதல் காண்க. மாதவியின் நடன அரங்கேற்றம் நிகழ்ந்த அரங்கின் மேற்கூரையில் கண்கவர் ஓவியங்கள் பல தீட்டப்பட்டிருந்தன. அக்கூரை 'ஓவிய விதானம்' எனப் பெயர் பெற்றது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது கோப்பெருந்தேவி படுத்திருந்த கட்டிலின் மேற்கூரையிலும் பலவகை ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன. அவற்றுள் திங்களின் பக்கத்தில் உரோகிணி இருப்பதுபோன்ற ஓவியமும் ஒன்றாகும். கணவன் பிரிவால் வாடிய கோப்பெருந்தேவி அவ்வோவியத்தைக் கண்டு, 'உரோகிணியைப்போல நானும் என் கணவனோடு என்றுமே இணைந்திருக்க முடியாதோ!' என்று எண்ணிப் பெருமூச்சுவிட்டாள். இது நெடுநல்வாடை தரும் செய்தியாகும். செல்வர் வாழும் வளமனைச் சுவர்கள்மீதும்

மாடங்கள்மீதும் தேவர் முதல் எல்லா உயிர்களையும் குறிக்கத்தக்க ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன என்னும் செய்தி மணிமேகலையில் கூறப்பட்டுள்ளது. தெருக்களில் சென்றவர் அக்கண்கவர் ஓவியங்களைக் கண்டு நின்றனர் என்று ஆசிரியர் கூறுகின்றனர்.

"சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்."

மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்தில் முருகப் பெருமான் திருக்கோயிலில் மண்டபங்கள் பல இருந்தன. அவற்றில் புராண இதிகாசக் கதைகள் பல ஓவியங்களாகக் காட்சி யளித்தன. அவற்றுள் கதிரவன், திங்கள், கோள்கள், இரதி, மன்மதன், அகலிகை, பூனை, கௌதமன் என்னும் உயர்திணை அஃறிணைப் பொருள்களைக் குறிக்கும் ஓவியங்கள் எழுதப்பெற்றிருந்தன என்று பரிபாடல் பகர்கின்றது. காதலன் தான் விரும்பிய பெண்ணை மணக்க முடியாத நிலையில் ஒரு துணியில் அவள் உருவத்தை ஓவியமாக வரைந்து மடல் ஏறுதல் வழக்கம் என்று அகப்பொருள் நூல்கள் கூறுகின்றன. நிறங்கள் தீட்டப்பெறாது மேலோட்டமாக வரையப் பெற்ற ஓவியம் 'புனையா ஓவியம்' எனப்பட்டது.

ஓவியங்களை அமைத்து, ஆடை நெய்தல் சங்க காலத் தமிழகத்தில் வழக்கமாயிருந்தது. ஆடைகளில் ஓவியங்களை அமைத்தல் எளிதான செயலன்று. அங்ஙனம் அமைத்தவர் மிகச் சிறந்த ஓவியத் திறனுள ராக இருந்திருத்தல் வேண்டுமல்லவா? காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த உவவனம் சிறந்த ஓவியரால் ஓவியங்கள் அமைத்துச் செய்யப்பெற்ற ஆடைபோலக் காட்சியளித்தது என்று மணிமேகலை ஆசிரியர் குறித்துள்ளார்:

"வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்."

இவ்வாறு சுவர்களிலும் மண்டபக் கூரைகளிலும் ஆடைகளிலும் கண்கவர் ஓவியங்களைத் தீட்ட வல்லவர் மிகச் சிறந்த ஓவியக்காரராக இருக்க வேண்டுமல்லவா? அக்கலைவாணரைக் 'கண்ணுள் வினைஞர்' என்று மதுரைக் காஞ்சி செப்புகிறது. மதுரைக் காஞ்சிக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், 'கண்ணுள் வினைஞர்—நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர்' என்று கூறியுள்ளார். அஃதாவது, பார்ப்பவர் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கத்தக்க ஓவியங்களைத் தீட்டுவோர் என்பது பொருள். எனவே, சங்க காலத்தில் ஓவியக்கலை நன்முறையில் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதை, இதுகாறும் கூறப்பெற்ற விவரங்களைக் கொண்டு நன்கு தெளியலாம்.

இடைக் காலத்தில்

சங்க காலத்திற்குப் பிற்பட்ட பல்லவர் காலத்தில் (கி. பி. 300-900) குடைவரைக் கோவில் பாறைச்சுவர்களின் மேற்கூரையில் ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன. மாமண்டூர்க் குகைக் கோவில், காஞ்சி கைலாசநாதர் கோவில் முதலியவற்றின் சுவர்களில் பல நிறங்கள் காணப்படுகின்றன. அங்கு வரையப்பட்ட ஓவியங்கள் காலப்போக்கில் அழிந்துபட்டன. அழியாமல் இன்றளவும் நாம் பார்க்கத்தகும் நிலையில் இருப்பவை சிற்றன்னவாசல் ஓவியங்களேயாகும். சிற்றன்னவாசல் புதுக்கோட்டைக்கு மேற்கே பத்துக்கல் தொலைவில் இருக்கின்றது. அங்குள்ள குன்றுகள் ஒன்றில் குடைவரைக் கோவில் இருக்கின்றது. அதனைக் குடைவித்தவன் மகேந்திரவர்மன். அதன் முன்மண்டபத்தில் நான்கு தூண்கள் இருக்கின்றன. நடுத்தூண்கள் இரண்டில் நடன மாதர் இருவரின் உருவங்கள் தீட்டப்பெற்றுள்ளன. அவர்தம் கூந்தல் அமைப்பு, ஆடை அமைப்பு, அணிவகைகள், நடனமாடும் நிலையில் கைகள் வைத்துள்ள முறை முதலியன, அவற்றை எழுதிய ஓவியர் திறமையை உலகறியச் செய்கின்றன. அவ்வோவியங்களைக்கொண்டு,

இக்காலத் தமிழகத்து நடனமாதர்தம் கூந்தல் அமைப்பு, ஆடை அமைப்பு, அணிவகைகள் முதலியவற்றை நாம் ஒருவாறு அறியலாம்.

வலப்புறத் தூணின் உட்பகுதியில் அரசன் அரசியர் தலைகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. மணிகள் பதிக்கப்பெற்றுச் சிறந்த வேலைப்பாடு கொண்ட மகுடம் ஒன்று அரசன் முடிமேல் காட்சி அளிக்கிறது. அவன் காதுகளில் குண்டலங்கள் தொங்குகின்றன. கழுத்தில் மணிகள் பதித்த மாலைகள் காணப்படுகின்றன. அரசியின் தலைமீது ஒருவகை மகுடம் அழகு செய்கின்றது. அவள் காதுகளில் வளையல்கள் காண்கின்றன. இருவர் உருவங்களும் அழகாக எழுதப்பட்டுள்ளன. மேற் கூரையில் பெரிய ஓவியம் ஒன்று காணப்படுகின்றது. அது ஒரு தாமரைக் குளத்தைக் குறிக்கின்றது. தாமரை இலைகள், மலர்கள், பேரரும்புகள் என்பன இக்குளத்தை அழகு செய்கின்றன. சமணப் பெரியோர் சிலர் தாமரை மலர்களைப் பறிக்கின்றனர். குளத்தில் எருமைகளும் மீன்களும் காணப்படுகின்றன. கண்ணையும் கருத்தையும் தன்பால் இழுக்கும் அவ்வோவியம் ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பெற்றதாயினும், இன்று நாம் கண்டு களிக்கும் நிலையில் இருக்கின்றது என்பதை எண்ண, அதனை எழுதிய ஓவியர் திறமையை என்னென்பது!

பல்லவர்க்குப் பிற்பட வந்த சோழர்கால ஓவியங்களுள் இன்று நாம் காணுமாறு இருப்பவை தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்களேயாகும். அவை தஞ்சைப் பெரிய கோவில் கருவறையின் புறச்சுவர்கள்மீது எழுதப் பட்டன. பல நூற்றுண்டுகளுக்குப் பின்பு அவை மறைக் கப்பட்டு, அவற்றின்மீது நாயக்கர் கால ஓவியங்கள் எழுதப்பட்டன. இன்று அவ்விருவகை ஓவியங்களும் நமக்குக் கிடைத்துள்ளன.

சோழர்கால ஓவியங்கள் கி. பி. 11ஆம் நூற்றுண்டில் வரையப்பெற்றவை. சுந்தரர் சிவபெருமானுல்

தடுத்தாட்கொள்ளப்பட்ட வரலாறு தஞ்சைப் பெரிய கோவிலில் அழகிய ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. சிவபெருமான் கிழ வேதியராகத் திருமண மண்டபத்தில் வந்து நிற்கிறார். அவரது ஒரு கையில் ஒரு தாழங்குடையும் மற்றொரு கையில் பனை ஓலையும் காணப்படுகின்றன. மணமண்டபத்தில் மறையவர் பலர் கூடி இருக்கின்றனர். மணமகனுரான சுந்தரர் தமது மணத்தைத் தடுக்க வந்த கிழவரை வியப்போடும் வெறுப்போடும் பார்க்கின்ற பார்வை அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஓவியம் கயிலைக் காட்சியைக் குறிக்கின்றது. சிவபெருமான் புலித்தோல்மீது அமர்ந்திருக்கிறார். அவரைச் சுற்றிலும் தேவரும் பூதகணங்களும் காணப்படுகின்றனர். இக்காட்சிக்கு அடியில், சுந்தரர் வெள்ளானைமீது இவர்ந்து செல்லுதலும், சேரமான் பெருமாள் நாயனர் குதிரைமீது செல்லுதலும் ஓவியங்களாகக் காட்டப்பட்டுள்ளன. யானையின்மீதுள்ள அணிவகைகள் பார்க்கத் தக்கவை. சுந்தரர் தலைமுடியும் தாடியும் வைத்துள்ளார்; அணிகள் பல அணிந்துள்ளார்; கைகளில் தாளத்தை வைத்துள்ளார். அவரது யானை விரைந்து செல்லுகிறது. அதன் கால் அடியில் கடல் நீர் காணப்படுகிறது. கடலின் அடியில் மீன்கள் காட்சி யளிக்கின்றன. சேரநாட்டுத் தலைநகரான கொடுங்கோளூரைவிட்டு, அதன் அரசரான சேரமான் பெருமாள் நாயனருடன் சுந்தரர் கடல் ஓரமாகக் கயிலை நோக்கிச் செல்லும் காட்சியே அங்கு ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. சேரமான் அணிந்துள்ள அணிகளும் அவரது முடி அழகும் குதிரையின் அணி விசேடமும் பார்க்கத்தக்கவை. இவ்வோவியங்கள், இடைக்கால அணி வகைகளையும், உடைச் சிறப்பு முதலியவற்றையும் நன்கு உணர்த்துவனவாகும்.

இவ்வோவியங்களை அடுத்து, சோழர்கால நடனமகளிரைக் குறிக்கும் ஓவியங்கள் எழுதப்பட்டுள்ளன. அம்மகளிருடைய கூந்தல் ஒப்பனையும், அணிவகைகளும், உருவ அமைப்பும், அவர்கள் கைகளிலுள்ள இசைக் கருவிகளும் நாம் கவனிக்கத்தக்கவை. இவ்வோவியம்

பழுதுபட்டிருப்பினும், மிகச் சிறந்த முறையில் அக்காலத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. துர்க்கை எருமைத்தலை அசுரனைக் கொல்லும் ஓவியம் அழகானது. இவ்வோவியங்கள் சோழர்கால ஓவியக் கலை வளர்ச்சியை நமக்குத் தெரிவிக்கின்றன. இவை அரசாங்கப் புதைபொருள் அலுவலரால் செப்பனிடப் பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன.

பிற்காலத்தில்

மேலே கூறப்பெற்ற சோழர்கால ஓவியங்களுக்கு மேல் சுண்ணாம்புப்படை பூசப்பெற்று, அப்படைமீது நாயக்கர் கால ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன. அவையும் மதுரை மீனாட்சியம்மன் கோவில் சுவர்கள்மீதுள்ள ஓவியங்களும் ஏறத்தாழ ஒன்றாக இருக்கின்றன. மதுரையில் சிவபெருமான் செய்த அறுபத்துநான்கு திருவிளையாடல்களும் பொற்றாமரைக் குளத்திற்கு எதிரிலுள்ள சுவர்களில் ஓவியங்களாகக் காட்சி யளிக்கின்றன. நாயக்கர் கால மக்களுடைய உடை, கூந்தல் ஒப்பனை, அணி வகைகள், உடை வகைகள் முதலியவற்றை இவ்வோவியங்களைக் கொண்டு நாம் அறியலாம்.

திருக்குற்றாலத்திலுள்ள சித்திர சபையில் (ஓவிய அரங்கில்) உள்ள ஓவியங்கள் நாயக்கர் காலத்தவை. தில்லையில் சிவகாமியம்மன் திருமுன்பு உள்ள மண்டபக் கூரையில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களும் நாயக்கர் காலத்தவை.

இக்காலத்தில்

நாம் வாழும் இருபதாம் நூற்றாண்டிலும் ஓவியக்கலை வளர்ந்துவருகிறது. பள்ளிகளில் ஓவியக்கலை கற்பிக்கப் படுகிறது. கோவிற் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்படுகின்றன. தில்லையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள முருகர் கோவிலில் எழுதப்பட்டுள்ள ஓவியங்கள், இக்கால ஓவியக்கலை அறிவிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஓவியக்கலை கண்ணையும் கருத்தையும் ஈர்த்து ஒருநிலைப்

படுத்துவதாகும்; உள்ளத்துக்கு உணர்ச்சி ஊட்டுவதாகும். இத்தகைய சிறப்புடைமையாற்றான் இது நுண்கலைகளுள் ஒன்று என்று அறிஞரால் பாராட்டப்படுகிறது.

அருஞ்சொற்பொருள்

ஓவியம்-சித்திரம். வளரவளர-அடுக்குத் தொடர். சுமேரியர்-அரேபியாவில் யூப்ரடிஸ், டைக்ரிஸ் என்னும் இரண்டு ஆறுகளுக்கு இடையில் ஏறத்தாழ 6,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நாகரிக மக்கள். அதே சமயத்தில் எகிப்தில் வாழ்ந்தவர் 'எகிப்தியர்' என்று இங்குக் கூறப்பட்டுள்ளனர். நடுகல்-வினைத்தொகை. பொற்றொடி-பொன்னாலாகிய வளையல். நங்கை-மாதவி. அரங்கு-மேடை. செரு-போர். திங்கள்-சந்திரன். சுடுமண்-செங்கல். மைஅறு-குற்றமற்ற. படிவம்-உருவம். சுதை-சுண்ணாம்பு. வித்தகர்-ஓவியர். கவர் ஓவியம்-வினைத்தொகை. புனையா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். படாம் - ஆடை. மதுரைக்காஞ்சி – மதுரையைப்பற்றிப் பேசும் காஞ்சித் திணைப் பாடல். காஞ்சி-நிலையாமை. நச்சினார்க்கினியார்-தொல்காப்பியம், சிந்தாமணி, கலித்தொகை முதலிய நூல்களுக்கு உரை எழுதியவர்; இவர் கி. பி. 14ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர்.

கேள்விகள்

1. சங்க காலத்தில் ஓவிய நூல் இருந்தது என்பதற்குச் சான்று யாது?
2. உரோகிணி குறிக்கப்பெற்ற சந்தர்ப்பம் யாது?
3. ஓவியங்களைப்பற்றி மணிமேகலை கூறும் செய்தி யாது?
4. பரிபாடல் நூலில் ஓவியங்கள்பற்றி யாது கூறப்பட்டுள்ளது?
5. 'புனையா ஓவியம்' என்பது யாது?
6. உவவனம் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டது?
7. கண்ணுள் வினைஞர்—பொருள் யாது?
8. சிற்றன்னவாசல் ஓவியங்களைப்பற்றி யாது அறிவாய்?
9. தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்கள் குறிக்கும் செய்திகள் யாவை?
10. நாயக்கர் கால ஓவியங்கள் எங்கு உள்ளன? அவற்றால் நாம் அறியத்தகுவன யாவை?

பயிற்சி

1. 'சங்க காலத்தில் ஓவியக்கலை' என்னும் பொருள் பற்றி 30 வரிகளில் ஒரு கட்டுரை எழுதுக.

2. 'பல்லவர் காலத்தில் ஓவியக்கலை' என்னும் தலைப்பில் 25 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

3. 'சோழர் காலத்தில் ஓவியக்கலை' என்னும் தலைப்பில் 25 வரிகளில் ஒரு கட்டுரை எழுதுக.

4. முன்னுரை—சங்க காலம்—பல்லவர் காலம்—சோழர் காலம்—நாயக்கர் காலம்—இக்காலம்; இக்குறிப்புக்களின் துணையைக் கொண்டு ஓவியக்கலையைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

13. குடும்பக்கலை

வித்துவான் து. கண்ணம்மாள் அவர்கள்

[இவர் மதுரைப் பாத்திமா கல்லூரியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றியவர்; பல கட்டுரைகள் எழுதிவருபவர்.]

ஒவ்வோர் ஆணும் பெண்ணும் தக்க வயது அடைந்தவுடன் குடும்பப் பொறுப்பு ஏற்று நடத்துவது இயல்பு. குடும்பம் நடத்துவது என்பது ஒரு கலை. ஓவியம், சிற்பம், நாட்டியம், இசை, கூத்து முதலியவை எங்ஙனம் கலைகள் என்று கருதப்படுகின்றனவோ, அங்ஙனமே குடும்பம் நடத்திச் செல்வதும் ஒரு தனிக் கலையேயாகும்.

குடும்பத்தை வெற்றியுடன் நடத்திச் செல்பவர், வாழ்க்கையைக் கவலையற்று இன்பமாகக் கழிப்பர். குடும்பக்கலையை யறியாமல், குடும்பத்தை நடத்துபவர் பல அல்லல்களுக்கு ஆளாகிச் "சம்சாரம் சாகரம் துக்கம்" எனக் கூறிக்கொண்டு, 'இக்குடும்பத் தொல்லை என்று நீங்குமோ' என்று காலமெல்லாம் துன்புற்று வாழ்க்கையை வெறுத்து என்றும் முணுமுணுத்துக்கொண்டிருப்பர்.

> "ஆன முதலில் அதிகம் செலவானால்
> மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
> எல்லார்க்கும் கள்ளனாய், ஏழ்பிறப்பும் தீயனாய்
> நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

என்று கூறப்பட்டிருக்கும் தமிழ்ச் செய்யுள், குடும்பத்தை நடத்தும் பொறுப்பு ஏற்றுக்கொள்பவனுக்கு முதற் பாடமாயிருக்கிறது. இது போலவே திருவள்ளுவப் பெரியார்,

> "மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

என்று கூறியிருப்பதன் மூலம், மகளிர் தம் கணவருடைய வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்தல் வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

'வருவாய்க்கு ஏற்ற செலவு' என்னும் முதற் பாடமே, குடும்பக்கலையை வெற்றியடையச் செய்யும் பாடமாகும். இதனைக் கருத்திற்கொண்டே குடும்பத்தின் தேவைகளைக் கவனித்தல் வேண்டும். மனித வாழ்க்கைக்குத் தேவைப் படும் பொருள்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று வாழ்க்கைக்கு இன்றியமையாமல் தேவைப்படுபவை. மற்றொன்று ஆடம்பரமானவை.

சத்து மிகுந்த எளிய உணவு, தூய எளிய உடை, சுகாதாரத்தோடு கூடிய தேவைக்குரிய அளவு வீடு, கல்வி, மருத்துவ வசதி முதலியவை முதலினத்தில் சேரத் தக்கவை.

ஆடம்பர உணவு, தேவைக்கு மேற்பட்ட அகன்ற இடமுடைய வீடு, பட்டாடைகள், பகட்டான உடைகள், அணிகலன்கள், விலை உயர்ந்த கலங்கள், பிற பொருள்கள், அடிக்கடி படக்காட்சி பார்த்தல், விருந்துகள் நடத்துதல், பிரயாணங்கள் செய்தல், வேலைக்காரர்களை வைத்துக்கொள்ளுதல் முதலியவை இரண்டாம் இனத்தில் சேரத்தக்கவை.

தேவைக்கு மேற்பட்ட பொருள்களை வாங்கிச் சேர்த்தல், தேவையற்ற செயல்களில் ஈடுபடுதல் முதலியவை நாகரிகத்தின் பெயரால் பல குடும்பங்களில் நடைபெறுகின்றன. இதனால் பொருட் செலவு மிகுந்து, இன்றியமையாத செலவுக்குப் பொருள் முட்டு ஏற்படுகின்றது; குடும்ப வாழ்வு தொல்லையாக மாறுகின்றது.

நம் நாட்டில் செல்வந்தர் மிகச் சிலரே; ஏழைகளே பெரும்பாலோர். இவர்கள் போதிய வருமானம் அற்றிருக்கையில், எது வாழ்வுக்குத் தேவை, எது தேவையில்லை என்பதைப் பகுத்தறிந்து, வாழ்க்கை நடத்துவாராயின், வாழ்க்கையில் உள்ள பல தொல்லைகள் அகன்று, வாழ்க்கைத் துன்பம் இன்பமாக மாறும்.

இறைச்சி, மீன், முட்டை, நெய், பால் முதலியவற்றை நிறைய உண்டு வந்தாலன்றி, உடல் உரத்துடன் இருக்க முடியாதென்று சிலர் கருதுகின்றனர். இதன் பயனாக,

வருமானக் குறைவுள்ளோர் இவற்றை வாங்கி உண்பதற்காகத் தங்கள் வருவாய்க்கு மீறிய செலவு செய்கின்றனர்.

பட்டாடைகள்போன்ற பகட்டான உடைகள் உடுத்திச் செல்வதுதான் மதிப்பிற்குரியது என்று கருதிச் சிலர், அவற்றை வாங்குவதில் பெரும்பொருள் செலவிட்டுக் கடன்படுகின்றனர்.

இவ்வண்ணமே, வீட்டை அமைத்தல், வீட்டுக்குரிய தட்டுமுட்டுப் பொருள்களை வாங்குதல் முதலியவற்றிலும் சிலர் பெரும்பொருளைச் செலவழித்துக் கடன்பட்டு அல்லலுறுகின்றனர்.

உடலை உரமுடையதாக வைத்திருக்கக்கூடிய வன்மை காய்கறி, கீரை, பருப்பு முதலியவைகளுக்கும் உண்டு என்பதை இவர்கள் உணரவேண்டும்; எவ்வுடையாயினும் தூய உடைக்கே மதிப்புண்டு என்பதையும், சிறு குடிலாயினும் துப்புரவாக இருத்தலே சிறந்தது என்பதையும் நினைவிற்கொள்ள வேண்டும்; பணத்தைச் செட்டாகவும், செம்மையாகவும், பயனுடையதாகவும் செலவிட வேண்டும். இவ்வண்ணம் ஒழுகின், வாழ்க்கை வளமுடையதாகும்.

எனவே, குடும்பப் பொறுப்பு ஏற்குமுன்பு வருவாய்க்குத் தக்க செலவு செய்வது என்று முதலில் திட்டப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வண்ணம் திட்டம் வகுக்கையில், உணவுக்கு முதலிடமும், உடைகளுக்கும் உறைவிடத்திற்கும் இரண்டாவது இடமும் கொடுத்துச் செலவை வரையறுத்துக்கொள்ளுதல் வேண்டும். இதனை ஒழுங்காக முடிக்கக் குடும்பப் பொறுப்பேற்பவர் தத்தம் வீட்டிற்குரிய வரவு செலவுத் திட்டங்களை ஆயத்தம் செய்துகொள்ளுதல் வேண்டும். பெரும்பாலான குடும்பத்தவர்களுக்கு மாத வருவாயே கிடைக்கிறபடியால், ஒரு மாதத்துக்குரிய வரவு செலவுத் திட்டத்தை வகுத்துக் கொள்வது நலம்.

இதனை எவ்வாறு வகுப்பது? மாத வருமானத்தையும் வீட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கையையும் கணக்கில் வைத்துக்கொள்ளல் வேண்டும்; உண்ண உள்ளோர் தொகை அதிகமாயும் வருமானம் குறைவாயும் இருந்தால், முதலில் உணவுக்காக வருவாயில் பெரும் பங்கை ஒதுக்கி விட வேண்டும்; உணவையும் கூடிய வரையில் காய்கறி உணவாக ஆக்கிக்கொள்ளல் வேண்டும். திரைப்படக் காட்சி, பிரயாணம், விருந்து செய்தல் முதலியவற்றை அடியோடு நீக்குதல் வேண்டும். ஒரு சிறு பகுதியை உடைக்கென மிச்சம் பிடித்தல் வேண்டும்; பின்பு வீட்டு வாடகை, கல்விபோன்றவற்றைக் கவனித்தல் வேண்டும்; எஞ்சிய தேவைகளை வருமானம் உயர்கையில் பார்த்துக் கொள்ளலாம் என விடுத்தல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் செலவிடும் பணத்தைத் தவருமல் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். வீட்டில் அன்ருடம் நடைபெறும் செலவின் கணக்கு வைத்திராத குடும்பம் சீர்குலையும். ஆகையால், கணக்கு ஒவ்வொரு குடும்பத்திலும் இருத்தல் வேண்டும். நாள்தோறும் படுக்கைக்குப் போகுமுன்பு அன்று ஏற்பட்ட செலவை எழுதிக் கையிருப்புத் தொகையை மீதி இருப்பாகக் கட்ட வேண்டும். மாத முடிவில் செலவு செய்த தொகைகளைக் கூட்டி வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், 'நம் செலவு வருவாய்க்குள் அடங்குகிறதா? கடன் வாங்கிச் செலவு செய்ய வேண்டிய தேவை என்ன ஏற்பட்டது? கடன் வாங்காமல் அதைச் சரிப்படுத்தியிருக்க முடியாதா?' என்பனபோன்ற யோசனைகளுக்கு இடமேற்பட்டு, அடுத்த மாதச் செலவுத் திட்டத்தைக் கருத்தோடு செய்ய இடமளிக்கும்.

"ஆற்றில் கொட்டினுலும் அளந்து கொட்டு."

என்னும் பழமொழியை எண்ணிக் குடும்பக் கணக்கு வைக்கும் பழக்கத்தை ஒவ்வொருவரும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

குடும்பச் செலவு வருமானத்திற்குமேல் போகாமல் இருக்கவேண்டுமாளுல், எப்பொருளையும் 'தேவையானது

தானு?' என்று கவனித்துக் கையிற் காசு கொடுத்து வாங்கும் வழக்கத்தை மேற்கொள்ளுதல் வேண்டும். இதனுல், அவ்வப்போது மாறுதலுக்கு உள்ளாகும் விலைகளின் விவரம் தெரிந்து, விலைகளுக்கேற்ப, சில பொருள்களைக் குறைத்தும் கூட்டியும் வாங்கிக்கொள்ளலாம்; விலை மலிவாக உள்ள காலங்களில் பருப்பு வகைகள். புளி, விறகு, பயறு வகைகள், மிளகாய், மிளகு, கடுகு போன்ற பொருள்களை மிகுந்த அளவில் வாங்கி வைத்துக் கொள்ளலாம்.

கையிற் காசு கொடுத்து வாங்காமல் கடன் வாங்கும் வழக்கத்தை மேற்கொண்டால், நாளடைவில் குடும்பம், கடனுக்குள்ளாகி அல்லலுறும் என்பதில் ஐயமில்லை.

குடும்பப் பொறுப்பேற்போர், வீட்டினுள் வேண்டாத பொருள்களைப் போட்டு நிரப்பி இடத்தை அடைத்து விடுதல் கூடாது; அசுத்தங்களும், மூலைகளில் குப்பை கூளங்களும், உத்தரத்தில் ஒட்டடை, பூச்சி, புழுக்கள் முதலியவைகளும் சேராவண்ணம், அடிக்கடி கவனித்துத் துப்புரவாக வைத்துக்கொள்ளுதல் வேண்டும். ஈ, கரப்பான், எலி, வண்டு முதலியவை சேருவதற்கு இடமில்லாமல் மூலைமுடுக்குகளில் சாமான் அடைப்பின்றி வைத்திருத்தல் வேண்டும். வீட்டுப் பாத்திரங்கள், துணிகள் முதலியவற்றை அன்ருடம் துப்புரவு செய்து அவற்றிற்குரிய இடங்களில் வைத்திருத்தல் வேண்டும்; பிள்ளைகள் புழுதியில் புரளாதவாறு கவனித்துக்கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம் சுகாதார விதிகளைக் கைக்கொண்டு நடந்தால், நோயின்றிக் குடும்பத்தைக் காப்பாற்றிவிடலாம். இதனுல் மருந்துச் செலவு ஏற்படாமலிருக்கும்.

உணவு, உடை, உறைவிடம் முதலியவற்றில் துப்புரவாக இருக்குமாறு கவனித்து, இன்றியமையாது தேவைப்படுபவைகளைமட்டும் வாங்கி, வருவாய்க்கேற்பச் செலவிட்டு, வீட்டுக் கணக்கு வைத்து, செட்டாக நடத்தப்படும் குடும்பம் நாளடைவில் நன்னிலை எய்தல் இயலும். இவ்வாறு குடும்பத்தை நன்னிலையில் நடத்தும் வாழ்க்கையே இன்ப வாழ்க்கையாகும்.

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை"

என்னும் திருவள்ளுவப் பெருமானின் திருவாக்கு இங்கு மனத்திற் பதிக்கத் தக்கதாகும்.

அருஞ்சொற்பொருள்

ஓவியம்-சித்திரம். சிற்பம்-கல், மரம் முதலியவற்றில் அமைக்கும் உருவம். அல்லல்-துன்பம். சாகரம்-கடல். தன்கொண்டான்-தன்னை மணம் செய்துகொண்ட கணவன். வளம்-செல்வம். வாழ்க்கைத் துணை-மனைவி. உரம்-வலிமை. துப்புரவு-தூய்மை; பரிசுத்தம். குடில்-குடிசை வீடு.

கேள்விகள்

1. கலைகள் எனக் கருதப்படுபவை எவை?
2. வருவாய்க்குமேல் செலவு செய்பவருக்கு வரும் தீமைகள் யாவை?
3. இல்வாழ்க்கையில் கடன் உண்டாகாதிருக்க மனைவி யாது செய்தல் வேண்டும்?
4. ஆடம்பர வாழ்க்கை என்று எதனைக் கூறலாம்?
5. நாள்தோறும் வீட்டுச் செலவுக் கணக்கை எழுதல் வேண்டும்.—ஏன்?
6. குடும்பம் நடத்துவோர் கடன்படுவதற்குக் காரணம் யாது?
7. வீட்டை எப்படி ஒழுங்குபடுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்?

பயிற்சி

1. "குடும்பத்தின் வரவு செலவு" என்பதுபற்றி ஒரு கட்டுரை (20 வரிகளில்) எழுதுக.

2. "கடன் வாங்கிக் குடும்பம் நடத்தலாகாது" என்பதுபற்றி ஒரு கட்டுரை (20 வரிகளில்) எழுதுக.

3. இப்பாடப் பொருளை உன் நண்பனுக்கு ஒரு கடிதமாக எழுதிக் காட்டுக.

4. வாக்கியங்களில் பயன்படுத்துக:—தேவைப்படுபவை, ஈடுபடுதல், குடும்பத்தொல்லை, மதிப்பிற்குரியது, குடும்பப்பொறுப்பு, முதலியவற்றை, சரிப்படுத்தி.

14. நாட்டு நலத் திட்டங்கள்

திரு. மா. ரா. இளங்கோவன் அவர்கள், M.A.

[இக்கட்டுரை ஆசிரியர் 'சுதேசமித்திரன்' துணை ஆசிரியர்; ஆராய்ச்சி நூல்களும் கட்டுரை நூல்களும், நாவல்களும் எழுதி வருபவர்.]

முன்னுரை

ஒரு நாட்டு மக்கள் வறுமையின்றி வாழ்வது 'வாழ்வு' எனப்படும். அவ்வாழ்விற்கு நல்லரசு உயிர்நாடியாகும். அரசு தன் ஆட்சிக்குட்பட்டுள்ள குடிமக்களின் வாழ்வுக்குரிய தேவைகளை உணர்ந்து செயலாற்ற வேண்டும். அந்நிலையில்தான் அது 'நல்லரசு' எனப்படும்.

நாட்டு நலத் திட்டங்கள்

தனி மனிதன் தன் வாழ்வுக்குத் தேவையானதைப் பாடுபட்டுப் பெறுகிறான். ஆனால் சமுதாய வாழ்வுக்கு அச்சமுதாயத்தை ஆளும் அரசுதான் பாடுபடவேண்டும். இஃது அரசியலின் அடிப்படைப் பாடமாகும். நாட்டு விளைச்சலுக்கேற்ப நீர் வசதிகளைப் பெருக்குதல், சிற்றூர்களுக்கும் பேரூர்களுக்கும் தொடர்பை உண்டாக்கும் நல்ல பாதைகளை அமைத்தல், பெரிய கைத்தொழில்களைப் பெருக்குதல், சிறிய கைத்தொழில்களுக்கு உதவி புரிதல், பயிர்த்தொழிலுக்கும், கைத்தொழிலுக்கும் மின்சார வசதியை அளித்தல், வாணிகத்தைப் பெருக்க உதவி புரிதல், போக்கு வரவு வசதிகளைப் பெருக்குதல், மக்கள் நல்வாழ்வுக்கான பலவகை மருத்துவமனைகளைச் சிற்றூர்களிலும் பேரூர்களிலும் அமைத்தல், வேலையில்லாமையால் வாழ வழியில்லாமல் துன்புறும் குடிமக்களுக்கு அவரவர் திறமைக்கேற்ப வேலைகளைத் தந்து காத்தல், ஒவ்வொரு சிற்றூரிலும் பள்ளிகளை அமைத்தல் முதலியன நல்லரசு மேற்கொள்ளத்தகும் திட்டங்களாகும்.

அரசின் ஆவல்

நமது நாடு ஆங்கிலேயர் ஆட்சியில் ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகள் இருந்தது; 1947ஆம்

ஆண்டில் விடுதலை பெற்றது. இப்பொழுது நாமே நம்மை ஆளுகின்றோம்; அஃதாவது, நம்மால் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களே நம்மை ஆளுகின்றனர். அதனால் நமது நாடும் மக்களும் விரைவில் முன்னேறவேண்டும் என்பது அரசின் அவாவாக இருப்பதில் வியப்பில்லை அன்றோ?

உரிமை பெற்றபோது நாட்டின் நிலைமை

நமது நாடு பயிர்த்தொழில் நாடு. நமது நாட்டில் மலைகளையடுத்துப் பெருங்காடுகளும் குறுங்காடுகளும் உண்டு. நிலக்கரிபோன்ற சில பொருள்கள் கிடைக்கக் கூடிய இடங்களும் இருக்கின்றன. நமது நாடு உரிமை பெற்றபொழுது பஞ்சு ஆலைகள், இரும்பு உருக்கு ஆலைகள் முதலிய பெரிய கைத்தொழில் தொடர்பான ஆலைகள் சில இயங்கிவந்தன. இரசாயன மருந்துகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மிகச் சிலவே இருந்தன. எண்ணெய் ஆட்டுதல் போன்ற ஆலைகளும் சில இருந்தன. கிராமத் தொழில்களான நெசவு, கருப்பட்டி தயாரித்தல், தேனீ வளர்ப்பு முதலியனவும் ஓரளவு நடை பெற்றுவந்தன. நாட்டில் போக்குவரவுப் பாதைகள் சிலவே இருந்தன. சில சிற்றூர்களுக்குப் போக்குவரவு வசதியே அமைக்கப்படவில்லை. மீன் பிடிக்குந் தொழில் ஓரளவு நடைபெற்றுவந்தது. பால்பண்ணைகள் சிலவே இருந்தன. தனியார் சிலர் முதலீடு செய்து சில கைத் தொழில்களை வளர்த்துவந்தனர். அஞ்சல் அலுவலகங்கள் பல சிற்றூர்களில் இல்லை. பல லட்சம் ஏக்கர் நிலங்கள் மண் அரிப்பால் பாதிக்கப்பட்டுக் கிடந்தன. தரிசு நிலங்கள் ஒரு பயனும் இன்றியிருந்தன. மருத்துவ மனைகள் போதிய அளவு இல்லை. இருந்த மருத்துவ மனைகளிலும் படுக்கை, மருத்துவ வசதிகள் போதிய அளவு இல்லை. எல்லாச் சிற்றூர்களிலும் பள்ளிக்கூடங்கள் இல்லை. அரிசனங்கள் போன்ற தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்குத் தக்க வசதிகள் தக்க அளவு அமைய வில்லை. நூல் நிலையங்களும் படிப்பகங்களும் பல விடங் களில் நிறுவப்படவில்லை. கால்நடை, மருத்துவ மனைகள்

மிகச் சிலவே அமைந்திருந்தன. உள்நாட்டுக் கைத் தொழில், வாணிகம், பயிர்த்தொழில் என்பனவும் போதிய அளவு வளர்ச்சி பெறவில்லை.

ஐந்தாண்டுத் திட்டங்கள்

ஒரு நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயிர்த் தொழில், கைத்தொழில், வாணிகம், புதியனவாக வந்து கொண்டே இருக்கும் இயந்திர சாதனங்கள் ஆகியவை இன்றியமையாதவையாகும். இவற்ருேடு மக்கள் நலனுக் குரியவையென மேலே கூறப்பெற்ற கல்வி முதலியனவும் மக்கள் தொகைக்கு ஏற்ப வளர்ச்சிபெறல் வேண்டும். இந்த எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியை உண்டாக்குவ தற்காகவே இந்திய அரசு *ஐந்தாண்டுத் திட்டங்களை* அரும்பாடுபட்டு அமைத்துள்ளது. இப்பொழுது மூன்ரும் ஐந்தாண்டுத் திட்டம் செயற்பட்டுவருகின்றது.

பயிர்த்தொழில் வளர்ச்சி

பயிர்த்தொழிலுக்கு நீர்வசதி உயிர் போன்றது. அதனுல் இந்திய அரசு தக்க இடங்களில் பேரணைகளைக் கட்டிப் பல மாநிலங்களில் நீர் வசதியை உண்டாக்கி யுள்ளது; இன்றும் உண்டாக்கிவருகின்றது. நமது தமிழ் மாநிலத்தில் கீழ்ப் பவானித் திட்டம், மணிமுத்தாற்றுத் திட்டம், மலம்புழா நீர்த்தேக்கத் திட்டம், வையை நீர்த் தேக்கத் திட்டம் என்பவை அமைந்துள்ளன. இவை யல்லாமல் மேட்டூர்க் கால்வாய்கள் திட்டம், அமராவதித் திட்டம், சாத்தனூர்த் திட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம், ஆரணியாற்றுத் திட்டம், வாலையாற்று நீர்த் தேக்கத் திட்டம், மங்களம் நீர்த்தேக்கத் திட்டம் என்பன செயல்பட்டுள்ளன.

மிகுந்த மழையினுலும், ஆற்று வெள்ளத்தாலும், ஏரி களின் உடைப்பினுலும் பாதிக்கப்பட்ட நிலங்கள் அவ்வப் போது செப்பனிடப்படுகின்றன. பயிர்த்தொழிலுக்குத் தேவையானகலப்பைகள், உரங்கள், விதைகள் முதலியன உழவர்க்குக் கடனுக உதவப் பல நிறுவனங்கள் அரசின ரால் அமைக்கப்பட்டுள்ளன. உழவர்க்கு அத்தொழிலின்

பொருட்டுக் கடன் கொடுக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. வேளாண்மைக் கல்லூரிகளும் எண்ணிக்கையில் பெருகியுள்ளன. வேளாண்மை பற்றிய ஆராய்ச்சியும் வளர்ந்துவருகிறது.

கால்நடை வளர்ச்சி முதலியன

கால்நடை வளர்ச்சி பயிர்த்தொழிலுக்கு உறுதுணையாகும். ஆதலால் கால்நடை மருத்துவ மனைகள் மிகுதியாக அமைக்கப்பட்டுள்ளன. பசுக்கள், எருதுகள், பன்றிகள், செம்மறியாடுகள் ஆகியவை ‘கால்நடை’ என்னும் பெயரில் குறிக்கப்படுகின்றன. கால்நடை மருத்துவக் கல்லூரிகளும் எண்ணிக்கையில் பெருகியுள்ளன. ***பால் பண்ணைகளும் பால் வழங்கும் அமைப்புக்களும்*** இப்பொழுது பெருகியுள்ளன. அரசாங்கமே ***மீன் பிடிக்குந் தொழிலையும் மீன் வாணிகத்தையும்*** வளர்க்க முனைந்துள்ளது; அதற்காக அது மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துள்ளது; புதிய யந்திரப் படகுகளை உதவியுள்ளது; மீன் பிடிக்க உதவும் வலைகளையும் வழங்குகிறது; மீனை உலர்த்திப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யவும் முன்வந்துள்ளது. இத்துறையில் புதிய ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசு, பல இலட்சம் ஏக்கர் பரப்புள்ள தரிசு நிலங்களையும், குறுங்காடுகளையுஞ் செம்மைப்படுத்தித் தீக்குச்சி மரங்களையும் சவுக்கு மரங்களையும் மரக்கூழ் தயாரிக்க உதவும் மரங்களையும் பயிராக்கிவருகின்றது; காடுகளில் வண்டிகள் செல்லும் பாதைகளை அமைத்துவருகிறது.

ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் நீர்ப்பிடிப்பு இருப்பது இயற்கை. உவர்மண், களர்மண் நிலங்களும் பயிர் செய்ய ஏற்றவையல்ல. இத்தகைய நிலங்களையும் நீர்ப்பிடிப்பு நிலங்களையும் செம்மைப்படுத்தும் வேலை நடைபெற்றுவருகிறது.

ஊராட்சி முதலியன

ஒவ்வொரு சிற்றூரிலும் உள்ள வயல்களுக்கு வேண்டும் நீரைக் கொண்டுவர வாய்க்கால்களை வெட்

டுதல், அவற்றிற்குக் கரைகளை அமைத்தல், குளங்களைத் தோண்டுதல், வாய்க்கால்களையும், குளங்களையும் பாதுகாத்தல், சிற்றூரில் விறகுக்குரிய மரக்காட்டை வளர்த்தல், உர வசதிகளைப் பெருக்குதல், பள்ளிகளைத் திறந்து நடத்துதல் முதலியவற்றை நேரில் இருந்து கவனிக்கவே *ஊராட்சி மன்றம்* இப்போது அமைக்கப்பட்டுள்ளது. பல ஊராட்சி மன்றங்களின் இணைப்பு *ஊராட்சி ஒன்றிப்பு* எனப்படும். ஒவ்வோர் ஒன்றிப்பிலும் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் முதலியவற்றைக் கவனிக்க அரசாங்க அலுவலர் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்திய நாடு பல இலட்சம் சிற்றூர்களைக் கொண்டது. ஆதலால் இச்சிற்றூர்களின் முன்னேற்றமே நாட்டு முன்னேற்றமாகும். ஆதலால் சிற்றூர் மக்களை ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றுவது இன்றியமையாதது. ஒவ்வொரு சிற்றூரிலும் *அரிசனங்கள்* உள்ளனர். அவர்கள் நீண்ட காலமாகப் பொருள் வசதியும், கல்வி வசதியும் இல்லாதவர்கள்: ஆதலால் அரசு அவர்களுக்குக் கல்வி வசதியுந் தொழில் வசதியும் மிகுதியாக அளித்துவருகிறது; அலுவல் துறையிலும் சலுகை அளிக்கின்றது.

இந்திய அரசு சமீந்தார், சாகீர்தார், இனும்தார் ஆகியோர் பொறுப்பிலிருந்த பெரும்பாலான நிலங்களை மீட்டு உழவர்க்கு வழங்கியுள்ளது. இது மிகப் பெரிய நன்மையாகும். வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் நிலவருவாயில் பெரும்பகுதி நிலத்தின் உரிமையாளருக்கும், சிறு பகுதியே உழவனுக்கும் கிடைத்துவந்தது. இப்பொழுது உழுபவனுக்கு நூற்றுக்கு அறுபது விழுக்காடும் நில உரிமையாளருக்கு நாற்பது விழுக்காடும் பங்கிடப்படுகிறது. தனிப்பட்ட உழவுத் தொழிலாளிகள் தனிப்பட்டவர் நிலங்களில் உயர்ந்த கூலிக்கு வேலை செய்கின்றனர்.

பல சிற்றூர்களில் கைத்தறி, கதர் இராட்டை, பட்டுத் தொழில், கயிறு திரித்தல், கைக்குத்தலரிசியைத் தயாரித்தல், தச்சுத்தொழில் முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. மின்சார வசதியும் நீர் வசதியும் போக்குவரவு

வசதியும் அமைந்துள்ள சிற்றூர்களுக்குப் பக்கத்தில் புதிய தொழில் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்தகைய தொழிற் பண்ணைகள் முந்நூறு அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

தொழிற்சாலைகள்

இரும்பு உருக்கு ஆலைகள், அலுமினியப் பொருள்களைச் செய்யும் ஆலைகள், செம்பு துத்தநாகப் பொருள்களைச் செய்யும் ஆலைகள், பலவகை இயந்திரங்களைச் செய்யுந் தொழிற்சாலைகள் ஆகியவற்றை நாட்டின் பல பகுதிகளில் அமைக்கும் முயற்சி நடைபெற்றுவருகிறது. கப்பல் கட்டுந் தலங்கள் விசாகப்பட்டினம், கொச்சி முதலிய துறைமுகங்களில் அமைக்கப்படுகின்றன, மோட்டார் வண்டிகளின் பகுதிகள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், மூவுருளை வண்டிகள் ஆகியவற்றைச் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இரசாயன மருந்து வகைகளைத் தயாரிக்குந் தொழிற்சாலைகளும் அமைக்கப்படுகின்றன. ரேயான் பட்டு, நார்ப்பட்டு, காகிதம், சர்க்கரை போன்றவற்றைத் தயாரிக்குந் தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. பலவகை எண்ணெய்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் பெருகி வருகின்றன. நிலக்கரி, மண்ணெண்ணெய் முதலிய கனிப்பொருள்கள் எங்கெங்கு இருக்கின்றன என்பது பற்றிய ஆராய்ச்சியும் நிகழ்ந்துவருகின்றது. இவை கிடைக்கும் இடங்களில் இயந்திரங்களை அமைத்து இவற்றை எடுத்தும் வருகின்றனர்.

போக்கு வரவு முதலியன

நாடெங்கும் நெடுவழிகளும் குறுவழிகளும் விரிவு படுத்தப்படுகின்றன. இருப்புப்பாதைகள் சில இடங்களில் புதியனவாய் அமைக்கப்படுகின்றன. உள்நாட்டு நீர்நிலைப் போக்கு வரவும், கப்பல் போக்குவரவும், வான ஊர்திப் போக்கு வரவும் மிகுதிப்பட்டுள்ளன. அஞ்சல் அலுவலகங்கள் பல சிற்றூர்களில் திறக்கப்பட்டுள்ளன.

சிற்றூர்களுக்கும் பேரூர்களுக்கும் உந்து வண்டிகளின் போக்கு வரவும் மிகுதிப்பட்டுள்ளது. பல சிற்றூர்களில் வானொலி வசதி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் சிற்றூர் மக்கள் உலகச் செய்திகளை ஒவ்வொரு நாளும் அறிவ தற்கு வசதி ஏற்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு, சிக்கன வாழ்க்கை, குடும்பச் சிறு தொழில் வளர்ச்சி போன்றவற்றைக் கிராம மக்களுக்கு உணர்த்தக் கிராமச் சேவகர்களும், சேவகிகளும் அமர்த்தப்பட் டுள்ளனர். மருத்துவமனை இல்லாத சிற்றூர்களில் தாதிமார் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் வீடுதோறும் சென்று பெண்களுடன் உறவு கொண்டு பிள்ளைப்பேறு முதலியன பற்றிய நலன்களைக் கவனித்துவருகின்றனர். நாட்டில் மருத்துவக் கல்லூரிகள் பெருகிவருகின்றன. அவற்றின் பயனாய் மருத்துவர் தொகை பெருகிவரு கின்றது.

வீட்டு வசதி முதலியன

குறைந்த வருமானம் உடையவர், தொழிலாளர் ஆகியோருக்கு வீட்டு வசதி அமைக்க முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் வழி வகுத்தது. அரிசனங்கள், தோட்டத் தொழிலாளர் ஆகியோருக்கு வீட்டு வசதி யளிக்க இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வசதி செய்யப்பட்டது. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் இப் பணிகள் தொடர்ந்து விரிவான முறையில் நடைபெறு கின்றன. புறம்போக்கு நிலங்கள் இக்குடியிருப்புகளுக்கு வழங்கப்படுகின்றன. இந்திய அரசு மலைவாழ் மக்களை யும் மறக்கவில்லை; அவர்களுக்கும் கல்வி, மருத்துவம், கைத்தொழில் முதலிய வசதிகளை அமைத்துவருகிறது.

பாகிஸ்தான் ஏற்பட்ட பின்பு இந்தியாவுக்குள் குடி புகுந்த இலட்சக் கணக்கான மக்களுக்கு நம் அரசு நிலம் வழங்கியுள்ளது; குடியிருப்பு, கல்வி, சுகாதார வசதிகளை அளித்துவருகிறது; தொழில்களை நடத்தப் பணம் உதவுகிறது.

கல்வி வசதி முதலியன

கல்வி மக்களுக்குக் கண்போன்றது ஆதலால் இந்திய அரசும் மாநில அரசுகளும் கல்வி வளர்ச்சியில் கருத்தை மிகுதியாகச் செலுத்துகின்றன; நமது மாநில அரசு எல்லாச் சிற்றூர்களிலும் தொடக்கநிலைப் பள்ளிகளையும், பேரூர்களில் உயர்நிலைப் பள்ளிகளையும், நகரங்களில் கல்லூரிகளையும் திறந்துவருகின்றது. இந்திய அரசு தக்க மாணவர்க்கு உதவித் தொகையும் அளிக்கின்றது: உயர் கல்வி கற்க மேனாடுகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கும் பொருள் உதவி புரிகின்றது. நமது தமிழ் மாநிலத்தில் முதல் பதினொரு வகுப்புக்கள் வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. மாநில அரசே ஆசிரியர்க்குத் திங்கள்தோறும் சம்பளம் அளிக்கின்றது. தொழில் நுட்பக் கல்லூரிகளும் பெருகிவருகின்றன. அவற்றில் பயிலும் மாணவர் தொகை ஆண்டுதோறும் பெருகிவருகின்றது. அறிவியல் ஆராய்ச்சித் துறையும் விரிவடைந்துவருகிறது. முதியோர்க்கு எழுத்தறிவிக்கும் முயற்சியும் நடைபெறுகிறது.

'அழகுக் கலைகள்' என்று போற்றப்படும் ஓவியம், சிற்பம், நடனம், நாடகம், இசை ஆகியவற்றைப் போற்றி வளர்க்கும் கலைக்கூடங்கள் ஆங்காங்கு நிறுவப்பெற்றுள்ளன. இவை பல்கலைக் கழகங்களிலும் இடம்பெற்றுள்ளன; தனி முறையிலுந் தோன்றி வளர்ந்துவருகின்றன. அரசு இத்துறைகளுக்கும் பொருளுதவி புரிகின்றது.

திட்டங்களின் பயன்

உரிமை பெற்ற நமது நாட்டில் நாட்டு நலத் திட்டங்கள் நன்முறையில் பயனளித்துவருகின்றன. இருண்டு கிடந்த பல சிற்றூர்கள் இப்பொழுது மின் விளக்குகளால் பொலிவுற்று விளங்குகின்றன. பள்ளிகள் இல்லாத சிற்றூர்கள் பள்ளிகளைப் பெற்றுத் திகழ்கின்றன. அங்குச் செல்வர் வீட்டுப் பிள்ளைகள் முதல் பண்ணையாட்களின் பிள்ளைகள் வரையில் எல்லோரும் கல்வியறிவு

பெறுகின்றனர். அக்காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் நல்விருந்து அளிப்பதாகும்.

தண்ணீர் வசதியில்லாத பெரிய கிராமங்களில் பெரிய பொதுக் கிணறுகள் பல வெட்டப்பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து உயரமுள்ள தொட்டிகளில் குழைகளின் மூலம் நீர் கொண்டு செல்லப்பட்டுத் தேக்கப்படுகிறது. பின்னர் அது குழைகள்மூலம் கீழே கொண்டுவரப்பட்டுப் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. பல சிற்றூர்களில் நூலகமும் படிப்பகமும் திறக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் செய்தித்தாள்களைப் படிக்க நாள்தோறும் படிப்பகங்களுக்குச் செல்கின்றனர். படித்தவரும் மாணவரும் நூலகத்திலுள்ள நூல்களைப் பயன்படுத்துகின்றனர். இவ்விரண்டாலும் வானொலியினுலும் சிற்றூர் மக்களுக்கு உலக அறிவு வளர்ந்துவருகிறது. பலவகைக் கைத்தொழில்களால் மக்களின் வருவாயும் ஓரளவு பெருகியுள்ளது.

முடிவுரை

இங்ஙனம் நாட்டின் ஆட்சியுரிமை ஏற்பட்ட பின்பு நமது நாட்டில் ஒவ்வொரு துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த நலன்களைப் பயன்படுத்திக்கொள்வது மக்கள் கடமையாகும். மக்கள் நலனுக்காகப் பாடுபடும் அரசுடன் ஒத்துழைத்து நாட்டு முன்னேற்றத் துறைகளில் ஊக்கத்தோடு உழைத்தல் நமது கடமையாகும்.

அருஞ்சொற்பொருள்

வறுமை – பொருளில்லாமை. சிற்றூர் – கிராமம். பேரூர்–பெரிய ஊர். நகரம் – பட்டினம். போதிய அளவு – வேண்டும் அளவு. நிறுவ – அமைக்க. பொருளாதாரம் – செல்வ நிலை. இன்றியமையாதவை – இருந்தே தீரவேண்டுபவை. பவானி – கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஊர். மணிமுத்தாறு – திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஓர் ஆறு. மலம்புழா–பாலக்காடு வட்டத்தில் உள்ள ஆற்றின் பெயர். ஏற்றுமதி × இறக்குமதி. ஏற்றுமதி – கப்பல்களில் சரக்குகளை ஏற்றுதல். இறக்குமதி – கப்பல்களில் வரும் வெளியூர்ச் சரக்குகளை இறக்குதல். தரிசு நிலம் – விளைச்சலுக்குப் பதப்படுத்தப்

படாத நிலம். ஊராட்சி மன்றம் - கிராமப் பஞ்சாயத்து. இணைப்பு - சேர்க்கை. அரிசனங்கள் - தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் காந்தியடிகள் கொடுத்த பெயர்; கடவுளின் மக்கள் என்பது பொருள். சமீந்தார் - குடிகளிடம் தாமே வரி வசூலித்துக்கொண்டு சர்க்காருக்கு மொத்த வரி செலுத்திப் பூமியை ஆள்வோர். ஜாகீர் - அரசாங்க ஊழியத்தின்பொருட்டு ஒரு நிலத்தின் வருவாயைப் பரம்பரையாக ஒருவர் அநுபவிக்கும்படி முகம்மதியராட்சியில் விடப்பட்ட நில மானிய வகை. இப்படி அநுபவிப்பவர் ஜாகீர்தார் எனப்பட்டனர். இனும்தார் - வரி கட்டாமல் நிலத்தின் வருவாயை அநுபவிப்பவர். பழைய அரசர், சிலருக்கு இவ்வாறு வரி நீக்கி நிலங்களை அளித்தனர். அவரும் அவர் வழியினரும் 'இனும்தார்' எனப் பெயர் பெற்றனர். திங்கள் - மாதம். பண்ணையாள் - உழவன். நூலகம் - நூல் நிலையம். அலுவலர் - உத்தியோகஸ்தர். விழுக்காடு - வீதம். மாநிலம் - மாகாணம். குறுங்காடு - சிறிய காடு.

கேள்விகள்

1. எது 'நல்ல அரசு' என்று சொல்லப்படும்?
2. நல்லரசு மேற்கொள்ளத்தகும் திட்டங்கள் யாவை?
3. நமது நாடு உரிமை பெற்றபோது நாட்டின் நிலைமை எங்ஙனம் இருந்தது?
4. ஐந்தாண்டுத் திட்டம் என்பது யாது?
5. ஐந்தாண்டுத் திட்டங்களினால் பயிர்த்தொழிலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி யாது?
6. ஐந்தாண்டுத் திட்டங்களினால் கால்நடை, பால் பண்ணைகள், மீன் பிடிக்கும் தொழில், காடு வளர்ப்பு ஆகியவை எந்நிலையில் உள்ளன?
7. ஊராட்சி மன்றத்தின் பணிகள் யாவை?
8. சமீந்தார், சாகீர்தார், இனும்தார் என்பவர் யாவர்?
9. ஐந்தாண்டுத் திட்டங்களினால் சிற்றூர்கள் அடைந்துவரும் நலன்கள் யாவை?
10. ஐந்தாண்டுத் திட்டங்களினால் எவ்வெத் தொழிற்சாலைகள் பெருகிவருகின்றன?
11. ஐந்தாண்டுத் திட்டங்களினால் போக்கு வரவு, அஞ்சல் துறை, கிராம சுகாதாரம் ஆகியவை எந்த நிலையில் உள்ளன?
12. ஐந்தாண்டுத் திட்டங்களினால் கல்வித்துறை எங்ஙனம் வளர்ச்சியடைந்துள்ளது?

பயிற்சி

1. நாட்டு நலத் திட்டங்கள் சிற்றூர்களுக்கு எவ்வாறு பயன் படுகின்றன என்பதை விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

2. ஐந்தாண்டுத் திட்டங்களினால் எவ்வெத் துறைகள் வளர்ச்சி அடைந்துள்ளன என்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

3. கீழ்வருவனவற்றை வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:— ஓரளவு, தேவையான, பதப்படுத்தி, சலுகை, விழுக்காடு, மாநிலம், ஆங்காங்கு, பல்கலைக் கழகம்.

4. நிலக்கரி, மண்ணெண்ணெய் பற்றிய விவரங்களைப் பள்ளி நூலகத்திலுள்ள நூல்களைப் படித்து ஒரு கட்டுரையாக எழுதுக.

5. பிரித்துக் கூறுக:—சிற்றூர், கைத்தொழில், முதலீடு, பேரணை, குறுங்காடு, முந்நூறு, மண்ணெண்ணெய், ஆங்காங்கு, நூலகம்.

6. கிராம சேவகன், கிராம சேவகி ஆகியோர் வேலைகளைக் கேட்டறிந்து ஒரு கட்டுரை எழுதுக.

15. ஆஸ்திரேலியாவில் கல்வி நிலை

திரு. சு. இராமசாமி நாயடு அவர்கள்

[இவ்வாசிரியர், சென்னை 'மேயர்' பதவியும், 'ஷெரீப்' பதவியும் வகித்துத் தொண்டாற்றியவர்; ஜப்பான், ஆஸ்திரேலியா முதலிய கீழை நாடுகள் அனைத்திற்கும் சென்றுவந்தவர்; செந்தமிழ் நடையில் சொற்பொழிவாற்றும் ஆற்றல் உடையவர்; தமிழ் உரைநடை எழுதும் வல்லமையுடையவர். இவர் எழுதிய "நான் கண்ட ஆஸ்திரேலியா" என்னும் நூலிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது.]

தொடக்கப் பள்ளிகள்

ஆஸ்திரேலியாவில் நடைபெறும் கல்விமுறை நம்மவர் கருத்தூன்றிப் படித்து உணரத்தக்கது. அங்கு ஒவ்வொரு குடிமகனும் பதினன்கு ஆண்டுவரை இலவசக் கட்டாயக் கல்வி கற்க வசதி இருக்கின்றது. அங்கு நடைபெறும் தொடக்கப் பள்ளிகள், பிள்ளைகள் விரும்பும் இன்பப் பூங்காக்களாக இலங்குகின்றன. பள்ளியில் பிள்ளைகளுக்கு முற்பகலில் பாலும் இடைவேளையில் உணவும் அரசாங்கம் உதவுகின்றது. அங்கு நான்கு விதத் தொடக்கப் பள்ளிகள் பணியாற்றுகின்றன. இவற்றுள் அரசாங்கப் பள்ளிகள் என்பன ஒருவகை. இவை அரசினரால் நடத்தப்படுகின்றன. பிள்ளைகளை உயர்நிலைப் பள்ளிக்குரிய மாணவராகச் செய்வது இவற்றின் வேலையாகும். இப்பள்ளிகளுள் ஒவ்வொன்றும் அஃது அமையப்பெற்ற ஊரிலுள்ள பெற்றோர்—குடிமக்கள் சங்கத்தின் மேற்பார்வையில் இருந்து வருகின்றது. ஏறத்தாழ எண்பது பிள்ளைகள் உள்ள ஒவ்வோர் ஊரிலும் இப்பள்ளி அமைந்துள்ளது.

அரசாங்க உதவி பெறும் பள்ளிகள்

இப்பள்ளிகள் பிள்ளைகளின் பெற்றோர் ஒத்துழைப்பால் அமைந்தவை. இத்தகைய ஒரு பள்ளியின் மாதச் செலவின் ஒரு பகுதியை அரசினர் ஏற்கின்றனர்;

எஞ்சிய பகுதியை ஊரார் ஏற்றுக்கொள்கின்றனர். இப்பள்ளி ஆசிரியரது சம்பளம் குறைவானது. அதனால் அவருக்கு ஊரார் இலவச உணவு அளிக்கின்றனர். இக்கூட்டுறவால் பிள்ளைகளின் பெற்றோரும் ஆசிரியரும் நெருங்கிப் பழகுகின்றனர். நிலமுடையவரும் பணமுடையவரும் இவ்வாசிரியருக்குப் பல வழிகளில் உதவுகின்றனர்.

அஞ்சல் முறைப் பள்ளிகள்

ஆஸ்திரேலியாவில் பண்ணைகள் மிகுதியாக இருக்கின்றன. அவை ஒன்றுக்கொன்று பல கற்கள் தொலைவில் உள்ளன. அதனால் அப்பண்ணைகளில் வாழும் பிள்ளைகள் ஓரிடத்தில் சென்று சேருவதில்லை. எனவே, ஒவ்வொரு பண்ணையிலுமுள்ள பிள்ளைகளுக்கும் தனிப்பட்ட முறையில் கல்வி கற்பிக்க வேண்டும். ஆயின், ஒவ்வொரு பண்ணையிலும் பள்ளி வைக்கத்தக்க அளவில் பிள்ளைகள் இல்லை. ஆஸ்திரேலிய அரசாங்கக் கல்வித் துறையினர் இப்பண்ணைப் பிள்ளைகளுக்கு அஞ்சல் வாயிலாகக் கல்வி கற்பிக்கின்றனர். ஒவ்வொரு பண்ணையிலும் ஒரு பள்ளிக் கூடக் கட்டடம் அமைந்திருக்கிறது. அப்பண்ணையில் உள்ள பிள்ளைகள் அங்குக் கூடுவர். அப்பிள்ளைகள் ஓர் ஆசிரியரின் மேற்பார்வையில் கல்வி கற்பர். கடிதங்கள், ஒலிப்பதிவுத் தட்டுக்கள், படங்கள், திரைப்படங்கள், வானொலி இவற்றின் வாயிலாகப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இவர்களுக்குத் தேர்வுகளும் விடுமுறை நாட்களும் உண்டு.

கைத்தொழில் பள்ளிகள்

பன்னிரண்டு வயது முதல் பதினைந்து வயது வரையுள்ள மாணவர் கைத்தொழில் பள்ளிகளில் கல்வி கற்கின்றனர். கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், தோல் பதனிடுதல், தச்சுத்தொழில், கொல்லத்தொழில், தாவரங்களைப் பயிரிடுதல், சாலைகளை அமைத்தல், அணை கட்டுதல் முதலிய பலவகைத் தொழில்கள் இங்குக் கற்பிக்கப்

படுகின்றன. இங்குக் கல்வி கற்கும் மாணவர்க்குப் பகலுணவும் போக்கு வரவு வசதிகளும் பள்ளிச் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இப்பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் வீடுகள் கட்டுவதிலும் பயிற்சி பெற்றுள்ளனர்.

உயர்நிலைப் பள்ளிகள்

இப்பள்ளிகள் இரண்டு வகைப்படும்; ஒன்று மாணவரைக் கல்லூரிப் படிப்பிற்குத் தகுதி உடையவராகச் செய்வது; மற்றொன்று, அவர்களைத் தொழில் துறைகளில் தகுதியுடையவராகச் செய்வது. குடும்ப வாழ்க்கைக்கு உரிய பாடங்கள், பெண்களுக்குச் சிறப்பாகக் கற்பிக்கப் படுகின்றன. ஆங்கிலம், கணிதம், இசை, வரலாறு, மொழி, வாணிகம் முதலிய பாடங்கள் அனைவருக்கும் பொதுவானவை.

தொழிற் பயிற்சி பெறும் மாணவருக்கு ஒவ்வொரு தொழிலைக் கற்பிக்க, அவ்வத்துறையில் வல்ல தொழிலாளர் பக்கத்துத் தொழிற்சாலையிலிருந்து வருவர். இங்ஙனம் குறித்த நேரத்தில் அவர்கள் வரவேண்டும் என்பதும், அவர்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் கால அளவு அவர்கள் தொழில் செய்யும் நேரமாகக் கருதப் படல் வேண்டுமென்பதும் அரசாங்கத்தின் கட்டளையாகும். தலைமை யாசிரியருக்குப் பள்ளி எல்லைக்குள்ளேயே வீடு கொடுக்கப்படுகிறது. மாணவர் விடுதிகள் மிகச் சிறந்த முறையில் நடைபெறுகின்றன.

கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும்

ஆஸ்திரேலியாவில் இருபத்தைந்து கல்லூரிகள் இருக்கின்றன; ஆறு பல்கலைக் கழகங்கள் பணியாற்றுகின்றன. ஒவ்வொரு கல்லூரிக்கும் நூறு ஏக்கர் பரப்புள்ள பூங்காவும் விளையாடுமிடமும் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு கல்லூரிக்கும் தேர்வு நடத்திப் பட்டம் கொடுக்கும் உரிமை உண்டு. மாணவர்க்கு இடமில்லை என்று எந்தக் கல்லூரியும் சொல்லலாகாது என்பது அரசாங்க ஆணையாகும்.

பல்கலைக் கழகங்களும் கல்வி கற்பிக்கும் நிலையங்களாக இருக்கின்றன. அவை தேர்வு நடத்திப் பட்டம் வழங்குகின்றன. கிராமப் பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் ஆசிரியர், நகரப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் ஆசிரியரைவிட மிகுந்த ஊதியம் பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வூதிய மிகுதியால் ஆசிரியர் பலர் கிராம வாழ்க்கையையே விரும்பிச் செல்கின்றனர். எனவே, கிராமப் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் ஆசிரியர் பஞ்சம் ஏற்படுவதில்லை.

நான் சிட்னியிலுள்ள பல்கலைக் கழகத்தைக் காணச் சென்றேன். அங்கு மருத்துவக் கல்வி சிறந்த முறையில் கற்பிக்கப்படுகின்றது. அங்கு இந்திய மாணவர் மருத்துவக் கல்வி கற்கின்றனர். அவர்கள் என்னைக் கண்டதும் தாயைக் கண்ட சேய்கள்போல என்னை நோக்கி மலர்ந்த முகத்துடன் ஓடி வந்து, நமது தாய்நாட்டைப்பற்றி விசாரித்தனர். இந்தியர் பலர் ஆஸ்திரேலியப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்க ஆஸ்திரேலிய அரசியலார் சில ஏற்பாடுகளைச் செய்துள்ளனர் என்று சிட்னிப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் என்னிடம் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவின் தலைநகரான கான்பராவில் தேசியப் பல்கலைக் கழகம் ஒன்று இருக்கின்றது. இது ஆஸ்திரேலியாவின் பண்பாட்டை வளர்க்கவும், பட்டம் பெற்றவர் ஆராய்ச்சியில் ஈடுபடவும் துணை செய்கின்றது. கான்பராவில் உள்ள மக்கள் தொகை ஏறத்தாழ 17,000 ஆகும். இங்ஙனம் இருந்தும், அங்கு ஒரு பல்கலைக் கழகம் ஏற்பட்டிருத்தல், அம்மக்கள் கல்வியில் கொண்ட ஆர்வத்தினை நன்கு உணர்த்துவதாகும் அன்றோ?

கல்வி நிலை

ஆஸ்திரேலியாவில் இன்று ஏறத்தாழ 15,000 தொடக்கநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அரைநாட் பள்ளிகள், பிரயாணப் பள்ளிகள் (ஒரே ஆசிரியர் பல ஊர்களுக்கும் சென்று பள்ளிகள் வைத்துப் பாடம் கற்பித்தல்) என்னும் பலவகைப் பள்ளிகள் ஆஸ்தி

ரேலியாவில் கல்விப் பணி ஆற்றுகின்றன. பெரிய நூல் நிலையங்கள் கல்வியைப் பரப்பி வருகின்றன. உயர்நிலைப் பள்ளிகள் மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளும் ஏற்படுத்தப்பெற்றுள்ளன. எளிய மாணவர்க்கு அரசாங்கம் பொருளுதவி செய்து வருகிறது. சிறந்த முறையில் அமைந்த பொருட்காட்சிச் சாலைகள், நூல் நிலையங்கள், நுண்கலைக் காட்சிகள் முதலியவை பெரிய நகரங்களில் அமைந்துள்ளன. கல்விக்காக ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆண்டுதோறும் ஏறக்குறைய ஒரு கோடியே இருபது லட்சம் பவுன் செலவு செய்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. பள்ளி மாணவர்களுக்கு உணவு வசதிகளும் சுகாதார வசதிகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

ஆஸ்திரேலிய மொழிகள்

ஆஸ்திரேலியா முழுவதிலுமுள்ள பழங்குடிகள் பல திறப்பட்டவர்; ஆதலால் அவர்கள் பேசும் மொழிகளும் பல திறப்பட்டனவாக இருக்கின்றன. அவற்றை வடபகுதி மொழிகள் என்றும், தென்பகுதி மொழிகள் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இவ்விருவகை மொழிகளும் ஏறத்தாழ முப்பதுக்கு மேற்பட்டுள்ளன. இவற்றுள் சில, பழங்குடிகளுள் கறுப்பு நிறத்தவர் பேசுவனவாகும்; வேறு சில செந்நிறத்தவர் பேசுவனவாகும்; சில பழுப்பு நிறத்தவர் பேசுவன. இப்பழங்குடி மக்களின் மொழிகளை ஆஸ்திரேலியரும், ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற பாதிரிமாரும் நன்கு ஆராய்ந்து நூல்களை எழுதியுள்ளனர்.

இலக்கியம்

ஆங்கிலேயர் குடியேற்றத்திற்கு முற்பட்ட கால இலக்கியம் ஆஸ்திரேலியாவில் இல்லை. ஆங்கிலேயர் குடியேறிய பின்பும், அவர்கள் நகரங்களை அமைத்து வளமுற வாழத் தொடங்கியதற்குப் பின்னருமே இலக்கியம் தோற்றமெடுத்தது. புதிய கண்டம் காணும் வேட்கையில் மக்கள் முனைந்திருந்ததாலும், பழங்குடி

களைப்பற்றிய விவரங்களை அறிய வேண்டிய தேவை ஏற்பட்டதாலும், ஆஸ்திரேலியாவின் இயற்கை அமைப்பையும், பழங்குடிகளின் வரலாறுகளையும், மொழிகளையும் பற்றிய நூல்களே ஆஸ்திரேலியாவில் முதலில் வெளியிடப்பட்டன. வில்லியம் சார்லஸ் வென்ட்வொர்த் என்பவர் 1819ஆம் ஆண்டில் புதிய தென்வேல்ஸ் பற்றிய விவரங்கள் அடங்கிய நூலை வரைந்தார். எட்வர்ட் கிப்பன் வேக்பீல்ட் (Edward Gibbon Wakefield) என்பவர் "சிட்னியிலிருந்து கடிதங்கள்" என்னும் நூலை 1819ஆம் ஆண்டில் வெளியிட்டார். அவரே 1834ஆம் ஆண்டில் தென் ஆஸ்திரேலிய மாகாணம் பற்றிய நூல் ஒன்றை வெளிப்படுத்தினார். அதே ஆண்டில் ஜான் டன்மூர் லாங்கு (John Dunmoor Lang) என்பவர் புதிய தென் வேல்ஸ் பற்றிய நூல் ஒன்றை வெளியிட்டார். ஜார்ஜ் வில்லியம் ரஸ்டன் என்பவர் 1883ஆம் ஆண்டில் 'ஆஸ்திரேலிய வரலாறு,' 'நியூஜிலாந்து' என்னும் இரண்டு நூல்களை வெளிப்படுத்தினார். இவ்வாறு செய்யுள் நூல்களை இயற்றிய புலவரும் பலராவர்.

மார்க்ஸ் கிளார்க், ஹென்றி கிங்ஸ்லி என்பவர்கள் நாவல் ஆசிரியருள் குறிப்பிடத்தக்கவர். ஜார்ஜ் லூயிபெக், ஹென்றிலாசன், பார்பரா பைய்ண்டன் (Barbara Baynton), திருமதி ஏனியஸ் கன் (Mrs. Aeneas Gun) முதலியோர் சிறு கதை நூல்கள் எழுதிய ஆசிரியராவர். இலக்கிய ஆய்வு என்னும் துறையில் திரு. ஏ. டி. ஸ்டிராங்கு (A. T. Strong), டி. ஜி. டக்கர் (T. G. Tucker) என்பவர் பாராட்டத்தக்க ஆசிரியராவர். இந்நூல்களுள் சில பிரெஞ்சு, ரஷ்ய மொழிகளிலும் வெளியாகியுள்ளன.

கேள்விகள்

1. ஆஸ்திரேலியாவில் தொடக்கப்பள்ளிகள் எப்படி நடைபெறுகின்றன ?
2. ஆஸ்திரேலியாவில் அஞ்சல் முறைப் பள்ளிகள் எப்படி நடைபெறுகின்றன ?
3. ஆஸ்திரேலியாவில் கைத்தொழில் பள்ளிகள் எவ்வாறு நடைபெறுகின்றன ?

4. ஆஸ்திரேலியாவில் கல்லூரிகள் எவ்வாறு அமைந்திருக்கின்றன ?

5. பல்கலைக் கழகங்கள் எவ்வாறு பணியாற்றுகின்றன ?

6. ஆஸ்திரேலியாவில் கல்வி வளர அரசாங்கம் செய்துள்ள ஏற்பாடுகள் எவை ?

7. ஆஸ்திரேலியாவில் இலக்கிய வளர்ச்சி எப்படி இருக்கிறது?

பயிற்சி

1. "ஆஸ்திரேலியாவில் கல்வி நிலை" என்னும் பொருள் பற்றி (40 வரிகளில்) ஒரு கட்டுரை எழுதுக.

2. பிரித்துக்காட்டுக:-இருபத்தைத்து, ஏறத்தாழ, ஒலிப்பதிவு, பல்கலைக்கழகம், மருத்துவக்கல்வி, உயர்நிலைப்பள்ளி, பழங்குடி.

3. சேர்த்துக் கூறுக:— இன்பம்+பூங்கா, கல்வி+துறை, பண்ணை+பிள்ளைகள், தொழில்+ஆலை, பரப்பு+உள்ள.

4. வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:— பழங்குடி, ஏறத்தாழ, ஆராய்ச்சி, துணைவேந்தர், குறிப்பிடத்தக்க, குறித்த நேரத்தில், மேற்பார்வை, கருத்தூன்றி.

16. சிறு சேமிப்புத் திட்டங்கள்

திரு. அ. ஞானசுந்தரம், B.A., B.T.

[இக்கட்டுரை ஆசிரியர் சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணிபுரிபவர்; தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றவர்; பல கட்டுரைகளை எழுதிவருபவர்.]

பொருள்

வானளாவிய கோவில் கோபுரங்கள், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அணைத்திட்டங்கள், விண்ணை அளாவும் மாளிகைகள் ஆகியவை அனைத்தும் சிறு கற்களைக் கொண்டே அமைந்துள்ளன என்பது கண்கூடு. ஆதலால் உலகில் காணப்படும் பருமை அனைத்தும் சிறுமையின் கூட்டே எனல் மிகையன்று. அச்சிறுமை பலகூடிப் பருமையில் முகிழ்த்துள்ள சிறப்பினை உன்னுந் தோறும் உள்ளம் இறும்பூதெய்துகின்றது.

இது போலவே அரசாங்கம் முதல் ஒரு சிறு குடும்பம் வரையில் சிறப்புற இயங்க வேண்டும் எனின், ஒருமித்த மனப்பண்புடைய கூட்டு முயற்சி வேண்டற்பாலது. ஒரு நாடோ, ஒரு குடும்பமோ சிறப்புற இயங்க இன்றியமையாதது பொருள்.

'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை'

என்னும் பொன்மொழி இக்கூற்றினை வலியுறுத்தும்.

பண்டமாற்று முறை

ஒருவனுக்கு வேண்டும் பொருள்கள் பலப்பல திறத்தன. எல்லாப் பொருள்களையும் ஓரிடத்திலிருந்தோ அன்றி ஒருவரிடமிருந்தோ பெறுதல் என்பது எளிதன்று. ஆதலால் ஒருவரிடமுள்ள பண்டத்தை அதை வேண்டும் மற்றையோருக்கு ஈந்து அவரிடமிருந்து வேண்டும் பண்டத்தைப் பெறுதல் பண்டைய நாளில் வழங்கிய பண்டம் மாற்றுமுறை. இன்றும் நகர்ப்புறங்களில் அரிசி கொடுத்துக் கறிவேப்பிலை வாங்குவதும், சிறு கிராமங்களில்

நெல் கொடுத்து வேண்டும் பொருள்களைக் கடையிலிருந்து பெறுவதும் ஆகியவை வழக்கில் இருந்து வருவதை நாம் அறிவோம். பிற்காலத்தில் மனிதனின் தேவைப் பொருள்கள் பலதிறத்தனவாய் விரிவடைந்தமையின், இப்பண்டம் மாற்றுமுறை முழுப்பயன் அளிக்கவில்லை.

நாணயங்கள்

இப்பண்டம் மாற்றுமுறையில் இன்னொரு சிக்கலும் உண்டு. ஒரு பொருளின் நிலையான மதிப்பைக் கணக்கிடல் முடியாது. சான்றாக, எத்துணை மாம்பழங்களின் விலை மதிப்புச் சேர்ந்து ஒரு பேனாவின் விலை மதிப்புக்குச் சமம் ஆகிறது என்று கூறமுடியுமா? இதுபோலவே பிற பொருள்களின் மதிப்பையும் சரியாகக் கணிக்க முடியாது. மேலும் நமக்கு வேண்டும் பொருளைப் பெற்றிருப்போர்க்கு நம்மிடமுள்ள பொருள் தேவைப்பட வேண்டும். அதை ஏற்று அதற்கு ஈடாக அவரிடமுள்ள பொருளை நமக்குத் தரவும் அவர் இசைய வேண்டும். ஆதலால் எப்பொருளையும் வாங்க உதவும் அடிப்படை மாற்றுச் சாதனமாகிய *நாணயங்கள்* இன்றியமையாதனவாயின. இந்த நாணயங்கள் பண்டுதொட்டுப் பழக்கத்தில் இருந்து வந்தன என்பதை நாம் வரலாற்றின் வாயிலாக உணருகிறோம். செம்பு நாணயங்கள், வெள்ளி நாணயங்கள், தங்க நாணயங்கள் முதலியன பண்டே பழக்கத்தில் இருந்தன என்பதை நம் நாட்டில் ஆங்காங்குத் தோண்டி எடுக்கப் படும் புதைபொருள்களால் அறிதல் முடிகிறது.

பணம் வாழ்க்கையின் பல நலன்களையும் துய்க்கப் பயன்படுகிறது என்பதை உணர்ந்து பல்லாற்றானும் ஈட்டப்படுகின்றது. நகரவாசி தன் தகுதிக்கேற்பப் பொருளீட்டித் தன் உணவு, உடை, உறையுள், மின்னமைப்பு, வானொலி, போக்கு வரவு சாதனங்கள் இன்னோரன்ன பிறவற்றிற்குச் செலவிடுகிறான். இவ்வாறே சிறு கிராமங்களில் வாழ்பவனும் தன் உழைப்பின் விளைவினை விற்றுத் தனக்கு வேண்டும் பிற பொருள்களைப் பெறுகிறான்.

எனவே நாணய மாற்றுமுறை வாழ்க்கைக்கு உயிர்நாடியாகிவிட்டது.

இப்பொழுது காகித நாணயங்களும் உலவி வருகின்றன. உலோக நாணயங்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டு செல்வது எளிதன்று. ஐந்தாயிரம் ரூபாய்களுக்குப் பல்வேறு நாணயங்களை மூட்டையாகக் கட்டிக்கொண்டு எடுத்துச் செல்வது எளிதா, ஐந்து ஆயிரம் ரூபாய் நோட்டுக்களைக் கொண்டு செல்வது எளிதா என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். காகித நாணயங்கள் தீயினுலோ அன்றி நீரினுலோ சேதமுறக் கூடியன ஆயினும், வசதியாகக் கொண்டு செல்லக் கூடுவனவாம். ஆதலின் அவை மக்களால் வரவேற்கப் படுகின்றன.

ஈட்டுதலும் செலவிடுதலும்

பலர் பொருள் ஈட்டுதலிற் பல வழிகளைக் கையாளுகின்றனர். ஆயின் அம்முறைகள் நேரியனவாக இருத்தல் வேண்டும்.

> " அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
> தீதின்றி வந்த பொருள்."

என்னும் வள்ளுவரின் வளமார்ந்த வாக்கினை உன்னுங்கள். பிறர் மனம் வருந்த வஞ்சித்தோ, அன்றிக் கையூட்டு முதலியவற்றினுலோ ஈட்டும் பொருள் தீதின்றி வந்த பொருளாமோ? அன்று, அன்று. உறுதியும் உழைப்புங்கொண்டு தனக்கும் பிறருக்கும் நலம் பெருகும் ஆற்றில் ஈடுபட்டு ஈட்டும் பொருளன்றோ பொருள்! அதுவன்றோ அறனும் இன்பமும் ஈனும். இச்செம்மொழியை உணர்ந்து தீதற்ற வழியில் பொருள் ஈட்டமுற்படுதலே நன்மக்கள் செயற்பாலது.

ஈட்டும் பொருளைச் செலவிடல் மிகவும் சிக்கலானதொன்று. செலவிடுதல் அரிதோவென ஐயுறலாம். ஆம், அரிது அரிது என்று பன்முறையுங் கூறலாம். நாம் ஈட்டிய பொருளை நம் மனம் போனபடி செலவிடுதல்,

நம்மையும் நம் சமூகத்தையும் பாதிக்கும் என்பது திண்ணம். பலர் தீபாவளிக்குப் பட்டாசு வாங்க விரும்புகின்றனர்; பணம் கொடுத்து வாங்குகின்றனர். அதனுல் பட்டாசுகள் உற்பத்தி செய்யும் முயற்சியிலும் விற்கும் முயற்சியிலும் எத்துணை முதலாளிகள், எத்துணைத் தொழிலாளிகள், எத்துணை வணிகர்கள் ஈடுபடுகின்றனர்! இவர்கட்கெல்லாம் தொழில் நாம் பணத்தைச் செலவிடுவதாலன்ருே ஏற்படுகிறது?

பொருள்களின் தேவை, நெருக்கடி, வாணிகம் ஆகியவை நாம் செலவிடுவதாலேயே ஏற்படுகின்றன அல்லவா? எனவே, செலவிடுவதில் கவனமாகவும் சிக்கனமாகவும் இருக்க வேண்டும்; வருவாய்க்கு ஏற்ப ஒழுங்கான முறையில் செலவிட்டு மீதமுள்ளதைச் சேமித்து வைக்கவும் பழக வேண்டும். அளவின்றிச் செலவிட்டால் கடனுளியாகி இன்னலுறல் நேரிடும். இக்கருத்தைக்கொண்டே வள்ளுவர் பெருந்தகை,

> "ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
> போகா றகலாக் கடை."

என அறிவுறுத்தியுள்ளார்.

சேமிப்பு

மழைக்காலம் வருமென்று உணர்ந்த எறும்பினங்கள் அரிதின் முயன்று உணவுப்பொருள்களைத் திரட்டித் தம் வளையுள் சேமித்து வைப்பதை நாம் அறிவோம். தேனீக்கள் திரட்டிய தேனைத் தம் கூடுகளில் சேர்த்து வைக்கின்றன அல்லவா? நாம் முதியவராகுங் காலத்து இளமைப் பருவம்போல ஓடியாடி உழைத்துப்பொருளீட்டல் முடியாதன்ருே? அக்காலத்துக்கும் பயன்படும் வண்ணம் இப்போதே சேமித்து வைக்கவில்லையாயின் நம் நிலை அப்போது என்னுகும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

செலவு போக எஞ்சியுள்ள பொருளைச் சேமித்து வைப்பதற்காக அஞ்சல் அலுவலகங்கள், வங்கிகள் போன்ற பல வாய்ப்புக்கள் உள்ளன. இவற்றிற் சேமித்து

வைப்பதால், சேமித்த பொருள் நாம் வேண்டுங்காலத்துப் பயன்படுவதன்றி ஒரு சிறிது வட்டித் தொகையும் கூடி வருகிறது.

ஒரு குடும்பத்தில் பொதுவாக மூவகைச் செலவுகள் ஏற்படும். அவை உடனடியாக ஏற்படும் செலவுகள், சின்னாட்களில் ஏற்படத்தகும் செலவுகள், எதிர்பாராத செலவுகள் என்பன. குடும்பத்துக்கு இன்றியமையாத அன்றாடத் தேவைகட்காகச் செலவிடுதல் உடனடிச் செலவுகள். வீட்டிற்காக மரச்சாமான்கள், தையல் இயந்திரம், வானொலிப்பெட்டி முதலியன வாங்குதல், பிள்ளைகளின் படிப்பு, திருமணம்போன்றவைகட்குச் செலவிடுதல் ஆகியவை சின்னாட்களில் ஏற்படத்தகும் செலவுகள். திடீரென நோயுற்றதொன்று நிகழும் மருத்துவச் செலவுகள்போன்றவை எதிர்பாராத செலவுகள். இவைகட்காகச் சேமிப்புத் தொகை பயன்படுமன்றோ?

விலை ஏற்றம் பெற்றுள்ள இற்றைநாளொன்று 'சேமிப்பது எங்ஙனம்?' என்னும் வினா எழலாம். திட்டமிட்ட செலவே சேமித்தற்கு வழிகோலும் என்பதில் ஐயமில்லை. 'எனது மாத வருவாய் எவ்வளவு? அவ்வருவாயில் எத்துணைப் பகுதி செலவிடலாம்? எவ்வெவற்றிற்குச் செலவிடலாம்? இன்றியமையாச் செலவுகளான வீட்டு வாடகை, உணவு, உடைபோன்றவைகட்கு எவ்வளவு செலவிடலாம்? பின்பு எவ்வளவு சேமிக்கலாம்?' என்பவைகளை ஆராய்ந்து திட்டமிட்டுச் செலவிடலே சிறப்புடைத்தாகும்.

நமது குடும்பச் செலவுக்குப் பணம் தேவைப்படுதல் போல நாட்டின் முன்னேற்றத் திட்டங்களைத் திறம்பட நிறைவேற்றுதற்கும் பொருள் வேண்டுமன்றோ? எடுத்துக்காட்டாகப் பள்ளிக்கூடங்கள் கட்டுதல், மருத்துவமனைகள் அமைத்தல், மின் அமைப்புக்கள் நிறுவுதல், அணைத் திட்டங்கள், சாலைகள் ஏற்படுத்துதல்போன்ற பொதுத் திட்டங்கட்குப் பொருள் தேவையாகும். இவற்

றைச் செயற்படுத்தவே ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், மாநில அரசு, இந்திய அரசு ஆகியவை பலவித வரிகள் மூலம் பொருள் திரட்டுகின்றன. இத்துடன் நாட்டின் தொழில் முன்னேற்றம், உற்பத்திப் பெருக்கம், அந்நியப்படை எடுப்பினின்று நாட்டைப் பாது காத்தல் போன்ற பெருங் கடமைகள் அரசின் பொறுப்பில் உள்ளன. பலவகை வரிகள் வாயிலாகத் திரட்டப்பெறும் பொருள் மட்டும் மேற்கூறிய திட்டங்களைச் செயல்படுத்தப் போதவில்லை. ஆதலின் வங்கிகளில் சேமிக்கும் பொருள் கள், ஆயுள் நிதியில் திரட்டப்பெறும் செல்வம், தனிப் பட்டவர்கள் சேமிக்கும் பொருள் ஆகியவை அரசாங்கச் செலவுகட்கு மறைமுகமாக உதவுகின்றன.

ஐந்தாண்டுத் திட்டங்கள்

ஒரு குடும்பம் உயர்வுறத் திட்டமிட்ட செலவுகள் செய்யவேண்டும் என்று மேலே கூறினோம். அது போலவே பொறுப்புள்ள ஆட்சியாளரும் திட்டமிட்டுச் செலவிடல் வேண்டும். இவ்வாறு திட்டமிடும் முறையில் உருவானவையே ஐந்தாண்டுத் திட்டங்கள். நம் நாட்டில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 3360 கோடியும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 6750 கோடியும் செலவிடப்பட்டன. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டமும் ரூ. 11600 கோடி செலவிடத் திட்டமிடப் பட்டுச் செயற்பட்டு வருகின்றது. இவ்வளவு பொருளும் நமது இந்திய அரசுக்கு எங்ஙனம் கிடைக்கிறது என்பதை நாம் அறிவது நல்லது அன்றோ?

முதல் ஐந்தாண்டுத் திட்டச் செலவில் நூற்றுக்குப் பதினொன்று விழுக்காடு சிறு சேமிப்புகளின் வாயிலாகப் பணம் கிடைத்தது என்பதை நோக்கச் சேமித்தலின் சிறப்பு விளங்குகின்றதன்றோ? நாம் சேமிக்கும் ஒவ்வொரு சிறு தொகையும் நம் நாட்டின் சமூக—பொருளாதார—கைத்தொழில்—வாணிகத் திட்டங்கட்கு உதவுகின்றது என்பது தெளிவாகிறது. இவ்வாறு நாட்டின் நலனுக்கு உதவும் சேமிப்புத் திட்டங்கள் பலப்பலவாகும். அவற்றை

அறிந்து சேமித்து, நமக்கும் நமது தாயகத்துக்கும் உதவ முயல்வது நமது சிறப்புக் கடமையாகும்.

1. பன்னீராண்டுத் தேசியப் பாதுகாப்புப் பத்திரங்கள்[1]

இவை சேமிப்புப் பகுதி இயங்கும் எல்லா அஞ்சல் அலுவலகங்களிலும் விற்கப்படுகின்றன. நாம் சேமிக்கும் பணத்துக்கு நூற்றுக்கு ஆறேகால் விழுக்காடு தனி வட்டியோ அன்றி நூற்றுக்கு நான்கே முக்கால் விழுக்காடு கூட்டுவட்டியோ கிடைக்கின்றது. இம்முறையில் பத்து ரூபாய்க்கு வாங்கப்பட்ட தேசியப் பாதுகாப்புப் பத்திரம் பன்னீராண்டுகளுக்குப் பின்பு ரூ. 17-50 மதிப்புடையதாகின்றது. பதினெட்டு வயதுக்கு உட்பட்ட பள்ளிச் சிறுவரும் சிறுமியரும் தங்கள் பெயர்களில் இச் சேமிப்புப் பத்திரங்களை வாங்கலாம்.

2. சேமிப்பு முத்திரைச் சீட்டுக்கள்[2]

மிக்க பணம் சேமிக்க முடியாத பள்ளிச் சிறுர்களுக்கு ஓர் அரிய திட்டம் உள்ளது. இருபத்தைந்து பைசே, ஐம்பது பைசே, ஒரு ரூபாய் மதிப்புடைய அரசின் முத்திரைச் சீட்டுக்களை வாங்கி, அவற்றை அஞ்சல் நிலையங்களில் இலவசமாகக் கொடுக்கப்படும் அழகிய அட்டைகளில் ஒட்டி வைத்து, அவைகளின் மதிப்பு ஐந்து ரூபாய் அல்லது பத்து ரூபாய் ஆனவுடன், அவற்றை அஞ்சல் நிலையத்தில் கொடுத்து அவற்றுக்கு ஈடாகத் தேசியப் பாதுகாப்புப் பத்திரங்களைப் பெறலாம்.

3. பரிசுச் சீட்டுக்கள்[3]

இது சேமிப்பின் மற்றொரு வகையாகும். ஐந்து ரூபாய், பத்து ரூபாய், நூறு ரூபாய், ஆயிரம் ரூபாய் மதிப்புடைய பரிசுச் சீட்டுக்கள் அஞ்சல் நிலையங்களில் விற்கப்படுகின்றன. நம் நண்பர் உறவினர் ஆகியோர்க்குத்

---

[1] 12—year National Defence Certificates.
[2] Savings Stamps
[3] Gift Coupons

திருமணம் போன்ற நல்ல நிகழ்ச்சிகளில் தரும் மொய்ப் பணம், பரிசுப்பணம் ஆகியவற்றிற்கு மேற்கண்ட மதிப்புடைய பரிசுச் சீட்டுக்களை வாங்கி வழங்குவோமாயின், அவர்கள் அச்சீட்டுக்களைப் பெற்றுப் பன்னீராண்டுத் தேசீயப் பாதுகாப்புப் பத்திரங்களை வாங்கிப் பயன் பெறலாம்.

4. தொடர் கட்டணச் சேமிப்புத் திட்டம்[4]

தொடர் கட்டணச் சேமிப்பு என்பது மற்றொரு சேமிப்புத் திட்டம் ஆகும். இத்திட்டம், சிறு சேமிப்புக்கள் வாயிலாகப் பெருந்தொகை சேர்க்க உதவுகிறது. எடுத்துக்காட்டாக, மாதம் ஐந்து ரூபாய் தொடர்ந்து சேமிக்கும் ஒருவர் ஐந்து ஆண்டுகளில் ரூபாய் முந்நூற்று இருபத்தைந்து பெறலாம்; பத்து ஆண்டுகளில் ரூபாய் எழுநூற்று இருபத்தைந்து பெறலாம். இது போலவே மாதம் 5, 10, 20, 50, 100, 200 ரூபாய்கள் வரை இத் தொடர் கட்டணச் சேமிப்புத் திட்டத்தில் பணத்தைச் சேமித்து வரலாம். அவை கீழ்க்கண்ட அளவுப்படி மிகுந்த பொருளீட்டும்;

திங்கள் தோறும் சேமிப்பது	ஐந்து ஆண்டுகளில் கிடைக்கும் தொகை	பத்து ஆண்டுகளில் கிடைக்கும் தொகை
ரூ. 5	ரூ. 325	ரூ. 725
ரூ. 10	ரூ. 650	ரூ. 1450
ரூ. 20	ரூ. 1300	ரூ. 2900
ரூ. 50	ரூ. 3250	ரூ. 7250
ரூ. 100	ரூ. 6500	ரூ. 14500
ரூ. 200	ரூ. 13000	

இந்த முறையில் மிகுந்த அளவு பன்னீராயிரம் ரூபாய்கள் வரையில் முதலீடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

[4]Cumulative Time Deposit Scheme

5. அஞ்சல் நிலையத்துச் சேமிப்பு வங்கி [5]

மேற்கூறிய சேமிப்பு முறைகளைத் தவிர ஒவ்வோர் அஞ்சல் நிலையத்திலும் சேமிப்பு வங்கி அமைக்கப் பட்டுள்ளது. சிறுவர் சிறுமியர் இதனிற் பணத்தைச் சேமிப்பது எளிது. இதனில் இரண்டு ரூபாயில் தொடங்கி மாதம் ஒரு ரூபாயும் சேமிக்கலாம். ஓராண்டு இறுதியில் குறைந்த அளவு ஐந்து ரூபாயாவது சேமிக்கப்படல் வேண்டும். பதினெட்டு வயதுக்கு உட்பட்ட சிறுவர் சிறுமியரும் இதனில் தம் பெயர்களில் சேமித்து வரலாம். ஒரு ரூபாய்க்குக் குறைந்த சேமிப்பாயினும் அதன் மதிப் புக்கு ஏற்பச் சேமிப்பு முத்திரைச் சீட்டுக்களை வாங்கி அஞ்சல் நிலையத்தில் கொடுத்துத் தங்கள் கணக்கில் வரவு வைத்துக்கொள்ளலாம். இதற்காக அஞ்சல் நிலையத்தார் ஒரு கணக்குப் புத்தகம் இலவசமாக வழங்குவர். அதனில் சேமிக்கப்படும் தொகை, அதிலிருந்து திரும்பப் பெறும் தொகை ஆகியவை ஒழுங்காகப் பதிவு செய்யப்படும். சேமிக்கப்படும் தொகைக்கு ஆண்டுக்கு நூற்றுக்கு நான்கு விழுக்காடு வட்டியும் சேர்த்துத் தரப்படும்.

6. ஊக்கப் பரிசுப் பத்திரங்கள் [6]

இப்பத்திரங்கள் அஞ்சல் அலுவலகங்கள் அனைத் திலும் கிடைக்கும். இவை இரண்டு வகைப்படும். ஒன்று ஐந்து ரூபாய்ப் பத்திரம்; மற்றொன்று நூறு ரூபாய்ப் பத்திரம். இப்பத்திரங்களை வாங்குவோர் பரிசு பெறத் தகுதி வாய்ந்தவராவர். ஐந்து ரூபாய் வீதம் கட்டுவோர்க் குரிய முதற் பரிசு பதினையாயிரம் ரூபாய்; நூறு ரூபாய் வீதம் கட்டுவோர்க்கு உரிய முதற் பரிசு ஐம்பதாயிரம் ரூபாய். ஐந்து ரூபாய் வீதம் கட்டுவோர்க்கு மேற்கூறிய முதற்பரிசு அல்லாமல் ஐந்நூற்று அறுபத்தேழு வேறு பரிசுகளும் உள்ளன. நூறு ரூபாய் வீதம் கட்டுவோர்க்கு இருநூற்று நாற்பத்திரண்டு வேறு பரிசுகளும் உள்ளன.

[5] Post Office Savings Bank
[6] Premium Prize Bonds

பரிசு பெறுதவர் பத்திரம் வாங்கிய ஐந்து ஆண்டுகட்குப் பின்பு தாம் கட்டிய பணத்தைச் சிறிது வட்டியுடன் பெற லாம். ஐந்து ரூபாய் கட்டியவர் ஐந்தாண்டுகட்குப் பின்பு ஐந்தரை ரூபாய் பெறுவர்; நூறு ரூபாய் கட்டியவர் ஐந்து ஆண்டுகட்குப் பின்பு நூற்றுப் பத்து ரூபாய் பெறுவர்.

மேற்கூறப்பட்ட சேமிப்புத் திட்டங்கள் ஒன்றிலோ அல்லது பலவற்றிலோ நீங்கள் பணத்தைச் சேமித்து வரலாம். இந்நற்பழக்கம் இளமை தொட்டே உங்கள் சிக்கன வாழ்வுக்கு அடிகோலும்; அத்துடன் 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பது போலப் பெருகி உங்கள் தாய் நாட்டு முன்னேற்றப் பணிகட்கும் உதவியாகும். ஆதலின் நாட்டுப் பற்றும் நல்லறிவுமுடைய நீங்கள் இன்று முதலே மிகச் சிறிய தொகையையும் பொன்னேபோல் மதித்துச் சேமிப்புத் திட்டங்களில் சேர்த்து வைப்பது நல்லது.

அருஞ்சொற்பொருள்

பருமை-பெரிய பொருள். சிறுமை-சிறிய பொருள். அளாவிய-பரவியுள்ள. அளாவும்-பரவும், எட்டும். கண்கூடு - உண்மை, தெளிவு. முகிழ்த்துள்ள-மலர்ந்துள்ள. உன்னுந்தோறும்-நினைக்குந் தோறும். இறும்பூது - மகிழ்ச்சி. எய்துகின்றது - அடைகின்றது. இன்றியமையாதது - இல்லாமல் முடியாதது. துய்க்க - அநுபவிக்க. பல்லாற்ருனும்-பல வழிகளிலும். ஈட்டுதல்-சம்பாதித்தல். உன்னுங்கள்-நினையுங்கள். கையூட்டு-இலஞ்சம். அரிது அரிது-அடுக்குத் தொடர். தீபாவளி-தீப+ஆவளி=விளக்குகளின் வரிசை. இன்னல்-துன்பம். ஆகாறு-ஆகு+ஆறு=பொருள் வருகின்ற நெறி. அளவு இட்டிதாயினும்-அளவு சிறியதாயிற்று ஆயினும். போகு ஆறு-போகின்ற நெறியளவு. அகலாக்கடை-அளவிற் பெருகாதாயின். சேமித்து-சேர்த்து. எஞ்சியுள்ள-மிகுந்துள்ள. வங்கி-பாங்கு (Bank). வாய்ப்பு-வசதி. ஞான்று-பொழுது. இற்றை ஞான்று-இப்பொழுது. திறம்பட-நன்ருக. அடிகோலும் - அடிப்படையை அமைக்கும். பண்டு-பழைய காலம். இன்னோரன்ன-இவை போன்ற. செம்மொழி-பொருள் சிறந்த மொழி.

கேள்விகள்

1. பண்டம் மாற்று முறை என்பது யாது?
2. பண்டம் மாற்று முறை இக்கால வாழ்க்கை முறைக்கு ஏன் பொருந்தாது?

3. நாணயச் செலாவணி பொதுவான மாற்று முறை ஆவது எங்ஙனம் ?

4. சிக்கன வாழ்க்கை என்பது யாது ? அஃது சிறப்பானது என்பது எவ்வாறு பொருந்தும் ?

5. பணம் எவ்வாறு ஈட்டப்படல் வேண்டும் ?

6. பொருள் சேமித்தலின் தேவை யாது ?

7. நாம் சேமிக்கும் பணம் நாட்டுக்குப் பயன்படுவது எங்ஙனம் ?

8. ஆட்சி மன்றங்களுக்குப் பொருள் மிகுதியாகத் தேவைப் படுவதேன் ? அப்பொருள் எவ்வாறு திரட்டப்படுகிறது ?

9. இளைஞர்களும் பணத்தைச் சேமிக்கும் வகையில் அரசினர் செய்துள்ள ஏற்பாடுகள் யாவை ?

பயிற்சி

1. உன் பெற்ரேருடன் கலந்து உன் குடும்பத்திற்கான ஒரு மாதச் செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துக் காட்டுக ; உன் தந்தையார் மேற்கொண்டுள்ள சேமிப்புத் திட்டம் பற்றிய விவரத்தைக் கூறுக.

2. நீ வாழும் மாவட்டத்தில் ஐந்தாண்டுத் திட்டத்தை ஒட்டி நடைபெறுவனவற்றை விளக்குக.

3. உன் தாய் மாமன் உனது பிறந்தநாள் பரிசாக உனக்குப் பதினைந்து ரூபாய் தருகிருர். நீ அதனை எவ்வகைச் சேமிப்புத் திட்டத்தில் சேர்த்து வைப்பாய் என்பதைத் தக்க காரணம் காட்டி விளக்குக.

4. இப்பாடத்தில் கூறப்பட்டுள்ள சேமிப்புத் திட்டங்களுள் நீ எதனை விரும்புகிருய் என்பதைக் காரணத்துடன் விளக்குக.

MADHIVALAR MALAI

STANDARD NINE

BY

Dr. M. RAJAMANIKKANAR, M.A., L.T., M.O.L., Ph.D.

THE NATIONAL PUBLISHING CO.
6, KONDI CHETTY STREET, MADRAS-1

Copyright]

[Price Rs. 2